# பாவாணர் தமிழ்க் களஞ்சியம்

த. சத்தியராஜ் (நேயக்கோ)
முனைவர் பட்ட ஆய்வாளர்,
இந்திய மொழிகள் பள்ளி,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்-613 010.

1

## திருக்குறள் தமிழ் மரபுரை – I

உரையாசிரியர்
மொழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர்

தமிழ்மண் அறக்கட்டளை
சென்னை - 600 017

## நூற் குறிப்பு

நூற்பெயர் : **பாவாணர் தமிழ்க் களஞ்சியம் - 1**

உரையாசிரியர் : மொழி ஞாயிறு ஞா.தேவநேயப்பாவாணர்

பதிப்பாளர் : கோ. இளவழகன்

முதல் பதிப்பு : 1967

மறுபதிப்பு : 2009

தாள் : 16 கி வெள்ளைத்தாள்

அளவு : 1/8 தெம்மி

எழுத்து : 11 புள்ளி

பக்கம் : 22 + 242 = 264

நூல் கட்டமைப்பு : இயல்பு (சாதாரணம்)

விலை : உருபா. **165/-**

படிகள் : 1000

நூலாக்கம் : பாவாணர் கணினி
தி.நகர், சென்னை - 17.

அட்டை வடிவமைப்பு : வ. மலர்

அச்சிட்டோர் : ஸ்ரீ வெங்கடேசுவரா
ஆப்செட் பிரிண்டர்சு
இராயப்பேட்டை, சென்னை - 14.

வெளியீடு

**தமிழ்மண் அறக்கட்டளை**
“பெரியார் குடில்”
பி.11 குல்மொகர் குடியிருப்பு,
35 செவாலிய சிவாசி கணேசன் சாலை. தியாகராயர் நகர்,
சென்னை - 600 017. தொ.பே. 2433 9030

மின்னஞ்சல் : tm_pathippagam@yahoo.co.in
இணையதளம் : www.tamilmann.in

# பதிப்புரை

தமிழுக்கும் தமிழருக்கும் வளமும் வலிமையும் சேர்க்கக் கூடிய பழந்தமிழ் நூல்களையெல்லாம் தேடியெடுத்துத் தமிழ் கூறும் உலகிற்கு வழங்கும் தொலைநோக்குப் பார்வையுடன் **தமிழ்மண் பதிப்பகம்** தொடங்கப்பட்டது. அதன் வாயிலாக மொழிஞாயிறு பாவாணரின் நூற்றாண்டு நினைவாக அவர் எழுதிய நூல்கள் அனைத்தையும் சேர்த்து அவருடைய மறைவுக்குப் பிறகு 2000-த்திலும், பல்வேறு இதழ்களிலும், மலர்களிலும் வெளிவந்து, நூல் வடிவம் பெறாத பாவாணரின் அரிய கட்டுரைகளை எல்லாம் தொகுத்து 2001- லும் ஒருசேர வெளியிட்டு உலகெங்கும் உள்ள தமிழர்களுக்கு வழங்கினோம். பாவாணர் வழி நிலை அறிஞர்களான முதுமுனைவர் **இரா. இளங்குமரனார்** அவர்களும், மருத்துவர் **கு.பூங்காவனம்** அவர்களும் இவ்வரிய கட்டுரைப் புதையல்கள் நூல் வடிவம் பெறுவதற்கு மிகவும் உறுதுணையாக இருந்தனர். இப்பெருமக்களை நன்றியுணர்வுடன் நினைவுகூர்கிறேன்.

"சொல்லாராய்ச்சித் துறையில் தேவநேயர் ஒப்பற்ற தனித் திறமையுடைவர் என்று **மறைமலையடிகளும்,** நாவலந் தீவுக்கு நந்தமிழே தாயென்று **பாவேந்தரும்,** தமிழுக்கும் தமிழ் நாட்டுக்கும் நற்றொண்டு ஆற்றியவர் பாவாணர் என்று **பேரறிஞர் அண்ணா** அவர்களும், வெட்ட வெட்டக் கிடைக்கும் தங்கச் சுரங்கம் போன்றவர் என்று தமிழறிஞர் **இராசமாணிக்கனாரும்,** தமிழகம் மொழித்துறையிலே பாவாணர் போன்ற ஒரு அறிஞரை இன்னும் பெற்றுத் தரவில்லை என்று **பன்மொழிப் புலவர் அப்பாத்துரையரும்,** குறைமதியர் தேக்கிவைத்த கரையிருளை நீக்க வந்த மறைமலையார் வழிவந்த நிறைமலையார் பாவாணர் என்று மேனாள் பேரவைத்தலைவர் **தமிழ்குடிமகன்** அவர்களும், தமிழர் யார்? எதிரிகள் யார்? என்று ஆய்ந்து அறிந்து காட்டியவர் பாவாணர் என்று பேராசிரியர் **இளவரசு** அவர்களும், ஓராயிரம் ஆண்டுகள் ஓய்ந்து கிடந்தபின் வாராது போல வந்த மாமணி" பாவாணர் என்று முதுமுனைவர் **இளங்குமரனார்** அவர்களும் குறிப்பிட்டுள்ள பெருமைகளுக்குரிய பேரறிஞரின் நூல்களை மீள்பதிப்பக வெளியிடுவதில் பெருமை கொள்கிறேன்.

"பாவாணர் நூல்கள் அத்தனையும் தமிழ்மொழிக்கு ஏற்றம் உரைப்பன. தமிழை ஆரிய இருளினின்று மீட்டுக் காப்பன. வீழ்ந்து பட்ட தமிழனுக்கு விழிப்பூட்ட வல்லன. ஆயிரமாயிரம் ஆண்டுகளாக அடிமைப்பட்டுக்கிடக்கும் தமிழ்மொழியை மீட்கவல்லது" என்று பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் கூற்றை இக் களஞ்சிய வெளியீட்டில் பதிவு செய்வது எமது கடமையாகும்.

பாவாணரைத் தூக்கிப் பிடித்தால்தான் தமிழினம் உருப் படமுடியும் - உயரமுடியும். பாவாணர் கொள்கைகள் தமிழர் உள்ளமெல்லாம் நிலைத்து நிற்பதற்கும், பாவாணர் நூல்கள் தமிழர் இல்லமெலாம் இடம் பெறுவதற்கும் முன் குறிப்பிட்ட 2000 - 2001 காலக்கட்டத்தில் வெளியிடப்பட்ட பாவாணரின் அறிவுக் கருவூலங்களையெல்லாம் ஒட்டு மொத்தமாக சேர்த்து ஒரே வீச்சில் **பாவாணர் தமிழ்க் களஞ்சியம்** எனும் தலைப்பில் எம் அறக்கட்டளை வெளியிடுகிறது.

மறைக்கப்பெற்ற மாபெரும் வரலாற்றையும், சிதைக்கப் பெற்ற ஒப்புயர்வுயற்ற மொழியையும் கொண்ட தமிழினத்தின் முன்னேற்றம் கருதி இவ்வருந்தமிழ் புதையல்களை தமிழ் கூறும் நல்லுலகிற்கு வழங்க முன் வந்துள்ளோம். தமிழ் மொழியை மூச்சாகவும், பேச்சாகவும், செயலாகவும் கொண்டு ஒருநாளின் முழுப்பொழுதும் தமிழாகவே வாழ்ந்த செம்புலச்செம்மல், தனித்தமிழ்க் கதிரவன் மொழிஞாயிறு பாவாணர் நூல்களை வாங்கிப் பயன் கொள்வீர்.

இளமையிலேயே பொதுத்தொண்டிலும், தனித்தமிழ் இயக்கத் தொண்டிலும் நான் ஈடுபாடு கொள்வதற்குக் காரணமாக இருந்தவர்கள் **பெரும்புலவர் நக்கீரன்** அவர்களும், அவர்தம் இளவல் **புலவர் சித்திரவேலன்** அவர்களும் ஆவர். இவர்களை இவ்வெளியிட்டின் வாயிலாக நன்றியுணர்வோடு நினைவு கூறுகிறேன். தந்தை பெரியாரின் தன்மதிப்பு இயக்கக் கொள்கை களாலும், மொழிஞாயிறு பாவாணரின் தனித்தமிழ் இயக்கக் கொள்கைகளாலும் ஈர்க்கப்பட்டவன். அத்தகு பின்புலத்தோடு பதிப்புப்பணியில் என் காலடிச் சுவடுகளைப் பதித்து வருகிறேன்.

**கோ. இளவழகன்,**
**பதிப்பாளர்.**

# வான்மழை வளச்சுரப்பு

ஆழத்துள் ஆழமாய் அகழ்ந்து தங்கம் ஏன் எடுக்கப்படுகிறது? ஆழ்கடலுள் சென்று, உயிரைப் பணயம் வைத்து முத்துக் குளிக்கப் படுவது ஏன்? பவழப் பாளங்களை எடுப்பது ஏன்? வயிரம் முதலாம் மணிக்குலங்களை இடையறாமல் தேடித் தேடி எடுப்பது ஏன்?

அணிகலப் பொருள்கள் என்பதற்கு மட்டுமா? வீட்டிற்கு மட்டுமன்றி நாட்டுக்கும் ஈட்டுதற்கு அரிய வைப்பு வளமாக இருந்து, நாட்டின் பொருளியல் மேம்பாட்டுக்கு அடிமனை யாகவும் இவை இருப்பதால் தானே!

இவற்றினும் மேலாம் வைப்பு வளமும் உண்டோ? உண்டு! உண்டு! அவை சான்றோர் நூல்கள்

காலம் காலமாக அள்ளிக் கொண்டாலும் வற்றா வளமாய்த் திகழும் அறிவுக் கருவூலமாம் நூல்கள்!

ஒன்றைக் கற்றால் ஒரு நூறாய் ஓராயிரமாய்ப் பல்கிப் பெருகத் தக்க பெறற்கரிய தாய் நூல்களாம் பேறமைந்த நூல்கள்! சேய்நூல்களை ஈனவல்ல செழு நூல்கள்!

நுண் மாண் நுழைபுலத் தாய் நூல்களாய் இருப்பினும்! அவற்றைத் தாங்கிய தாள்கள், எத்தகைய பேணுதல் உடையவை எனினும் கால வெள்ளத்தில் அழியக் கூடியவை தாமே!

கல்லெழுத்தே, கதிர் வெப்பாலும் கடலுப்பாலும் காத்துப் பேணும் கடப்பாடில்லார் கைப்படலாலும் அழிந்து பட்டமை கண்கூடு தானே!

ஏட்டு வரைவுகள், நீரே நெருப்பே நீடித்த காலமே புற்றே போற்றா மடமையே என்பவற்றால் அழிந்து பட்டமைக்கு அளவு தானும் உண்டோ? மக்களுக்கு மாணப் பெரிய பயனாம் நூல்கள், கற்கும் மக்கள் பெருக்கத்திற்கும், பிறந்து பெருகிவரும் மக்கள் பெருக்கத்திற்கும் தக்க வகையில் அவர்களுக்குப் பாட்டன்

பாட்டியர் வைத்த பழந்தேட்டென்ன அந்நூல்கள், மீளமீளத் தட்டில்லாமல் கிடைக்கச் செய்ய வேண்டுவது **நூற்பதிப்பர்** தவிராக் கடமையல்லவோ!

அக்கடமையை அவர்கள் காலந்தோறும் கடப்பாடாகக் கொண்டு செய்ய, ஆளும் அரசும் வாழும் அறிவரும் அருந்துணையாதல் தானே கட்டாயத் தேவை! இவ்வாறு பதிப்பரும் அறிவரும் ஆன்றரும் **தத்தம் மூச்சுக் கடனாக, நூற்கொடை புரிதலுக்கு மேற்கொடை இல்லையாம்!**

மொழிஞாயிறு பாவாணர் நூல்கள் ஒன்றா இரண்டா? நமக்கு எட்டாதவை போக எட்டிய நூல்கள் **32**. கட்டுரை பொழிவு முதலாம் வகையால் கிட்டிய திரட்டு நூல்கள் **12**. இன்னும் **எட்டாத தொகுப்பும்** அங்கொன்றும் இங்கொன்றும் வர வாய்ப்புண்டு!

கடித வரைவு பா வரைவு என மேலும் பெருகவும் வாய்ப்புண்டு!

இவற்றை எல்லாம் ஆயிரம் அச்சிட்டு அவ்வளவில் நின்று விட்டால், தேடுவார்க்குத் தேடும் பொழுதில் வாய்க்கும் திருவாகத் திகழக் கூடுமோ?

ஆதலால், சேய் நூல்களுக்கு மூலமாம் தாய்நூல்கள், **காலம் தோறும் வான்மழை வளச் சுரப்பாக வெளிப்பட வேண்டும் கட்டாயம் உணர்ந்து கடமை புரியும் வீறுடையார் வேண்டும்! மிக வேண்டும்!**

இத்தகைய விழுமிய வீறுடையார் - இனமானச் செம்மல் - தமிழ்ப் போராளி - திருத்தரு கோ. **இளவழகனார்**, தாம் முந்து முழுதுறக் கொணர்ந்த பாவாணர் படைப்புகளை மீளமீளத் தமிழுலாக் கொள்ள வைக்கும் முன் முயற்சியாய், இம் **மீள்பதிப்பை வழங்குகிறார்!** தமிழுலகம் பயன் கொள்வதாக! பயன் செய்வதாக!

வாழிய நலனே! வாழிய நிலனே!

இன்ப அன்புடன்

**இரா. இளங்குமரன்.**

# சான்றிதழ்

பண்டித ஞா. தேவநேயனார், பிஓ.எல். பொதுவாக மொழிநூல் ஆய்வு முறைகளைப் பின்பற்றித் தமிழ்ச்சொல் ஆராய்ச்சிபற்றி எழுதிய நூல்கள் தமிழ்மொழியின் நீண்டகாலத் தேவையினை நிறைவு செய்தன. தம்முடைய இளந்தைக் காலத்திலே தலைமைக் கண்காணியார் தவத்திரு திரஞ்சு (Trench) எழுதிய 'சொல்லாராய்ச்சி', பேராசிரியர் மாக்கசு முல்லர் எழுதிய 'மொழியறிவியல்', பேராசிரியர் சாய்சு எழுதிய 'ஒப்பியல் மொழிநூல்' முதலிய ஆங்கிய நூல்களை யாமே பெருவிருப்புடன் படித்துக்கொண்டிருக்கும்போது அந்த முறையில் தமிழ்ச் சொற்களை ஆராய வேண்டுமென்று விரும்பினேம். தமிழ்ப் பேரறிஞர்கட்குப் புலப்படாமல் மறைந்து கிடந்த விரிவாகவும் வியப்பாகவுமுள்ள தமிழ்மொழியறிவுப் பரப்பு, பண்டாரகர் கால்டுவெல் எழுதிய 'திராவிட மொழி களின் ஒப்பியல் ஆய்வு' நூலால் புலப்படலாயிற்று. எனினும் பண்டாரகர் கால்டுவெல், அறியப்படாத வட்டாரத்தில் செய்த தொரு முயற்சியாதலால் தமிழ்ச்சொற்களை யெல்லாம் விடாமல் நிறைவாக எடுத்தாராய்ந்துள்ளனர் என்று எதிர்பார்ப்பதற் கில்லை. இதுவே மொழியியலை ஆராய வேண்டு மென்று எம்மைத் தூண்டியது. எனவே 'ஞானசாகரம்' (அறிவுக்கடல்) என்னும் எம்முடைய இதழின் முதல் தொகுதியில் அத் துறையில் ஒன்றிரண்டு கட்டுரைகளை எழுதி வெளியிட்டேம். ஆனால் அப்போது சமயம், மெய்ப்பொருளியல், இலக்கிய வரலாறு ஆகிய துறைகளில் எம்முடைய மொழியாராய்ச்சித் துறையில் தொடர்ந்து ஈடுபடக் கூடவில்லை. ஆயினும் தகுதியுடைய அறிஞர் யாராவது இத் துறையில் ஆராய்வதற்கு முன்வரக்கூடுமா என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தேம். அப்போது யாழ்ப்பாணம் திருத்தந்தை ஞானப்பிரகாசர்தாம் எகிபதிய மொழியியல் ஆராய்ச்சி நூலை எமக்கு அனுப்பிவைத்தார். அது ஓரளவு எமக்கு மனநிறைவு அளித்தது. எனினும் மொழியியல் ஆராய்ச்சித் துறை மிகவும் விரிவும் ஆழமு முடையதாதலால் பழந்தமிழ் இலக்கியங்களைக் கற்று அவற்றைக் கொண்டு நன்கு

புரிந்துகொள்ளும் வகையில் மேலும் மொழியியல் ஆராய்ச்சி நூல்கள் வெளிவருதல் வேண்டுமென்று கருதினேம். அந்த நேரத்தில் திரு. தேவநேயனார் யாம் எதிர்பார்த்ததை ஏறத்தாழ முற்றும் நிறைவேற்றியது கண்டு பெருமகிழ்வுற்றேம். அத் துறையில் அவர் மிகவும் உழைப்பெடுத்து ஆராய்ந்து எழுதியிருப்பவற்றைத் தமிழ் அறிஞர்கள் நன்றாக நம்பலாம்.

சொல்லாராய்ச்சித் துறையில் திரு. தேவநேயனார் ஒப்பற்ற தனித் திறமையுடையவர் என்றும், அவருக்கு ஒப்பாக இருப்பவர் அருமையாகும் என்றும் யாம் உண்மையாகவே கருதுகின்றேம்.

மேலும் திரு. தேவநேயனார் பதியச் சொல்லும் ஆசிரியரும் இன்புறுத்தும் சொற்பொழிவாளருமாவர். பல தமிழ்க் கழக ஆண்டு விழாக்களில் எமது தலைமையின்கீழ் அவர் சொற் பொழிவுகள் ஆற்றியுள்ளார். அவை கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய் அமைந்து அவையோரைக் கிளர்ச்சியுறச் செய்து மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தின. அவர் வருந்தியுழைத்து ஆராய்ச்சி செய்துவரும் அறிஞர் ஆதலால் அவரைப் பணியில் அமர்த்தும் எந்த நிலையத்துக்கும் அவரால் பேரும் புகழும் கிடைக்கப் பெறும் என்று யாம் முழு நம்பிக்கையோடு கூறுகின்றேம்.*

**- மறைமலையடிகள்**

* மறைமலையடிகளார் ஆங்கிலத்தில் எழுதிய சான்றிதழின் தமிழாக்கம்.

# முகவுரை

*“ ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி*
*யேங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும் - ஆங்கவற்றுள்*
*மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது*
*தன்னே ரிலாத தமிழ்.”*

(தண்டியலங்கார வுரைமேற்கோள்)

வரலாற்றிற் கெட்டாத தொன்முது பழங்காலத்திற் குமரிக்கண்டத் தென்கோடியில் தோன்றியதும், நாகரிக மாந்தனூலைத் (Cultural Anthropology) தொடங்கி வைத்ததும் உலக முதற்றா யுயர்தனிச் செம்மொழியுமான ஒண்டீந் தமிழி லெழுந்த முதலிரு கழக நூல்களும் ஆரியரா லழியுண்டபின், எஞ்சியுள்ள பண்டைத் தமிழ நாகரிகத்தையும் பண்பாட்டையும் தாங்கிநிற்கும் இருபெருந் தூண்கள், ஒல்காப் பெருமைத் தொல்காப்பியமும் தருக்கற மறையாந் திருக்குறளுமாகும். இவற்றுள், முன்னது கற்றோர்க்கன்றி மற்றோர்க்கு ஏலாமையின், பின்னதே பொதுமக்கட்கும் புலமக்கட்கும் ஒப்பவேற்கும் முழுமுதல் விழுநூலாம்.

இந் நூற்குப் பதினான்காம் நூற்றாண்டிற்குமுன் உரைவரைந்த ஆசிரியர் பதின்மர்.

*“ தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்*
*பருதி பரிமே லழகர் - திருமலையர்*
*மல்லர் பரிப்பெருமாள் காலிங்கர் வள்ளுவர்நூற்*
*கெல்லையுரை செய்தா ரிவர்.”* (தனிப்பாடல்)

இவருள் மணக்குடவர், பருதி, பரிப்பெருமாள், காலிங்கர், பரிமேலழகர் என்னும் ஐவருரையே இன்று நமக்குக் கிடைப்பன. மணக் குடவரை மணக்குடியர் என்றும், பருதியைப் பரிதியென்றும், காலிங்கரைக் காளிங்கர் என்றுங் குறிப்பர்.

இவ் வைவருள்ளும் காலத்தாற் கடைப்பட்டவரும் உரைத்திறத்தால் தலைசிறந்தவரும் பரிமேலழகரே யாவர். இவரையும் இவருரையையும் சிறப்பித்துக் கூறும் பாக்கள் வருமாறு:

*“ வள்ளுவர்சீ ரன்பர்மொழி வாசகந்தொல் காப்பியமே*
*தெள்ளுபரி மேலழகர் செய்தவுரை - ஒள்ளியசீர்*

*தொண்டர் புராணந் தொகுசித்தி யோராறும்*
*தண்டமிழின் மேலாந் தரம்."* (உமாபதி சிவாசாரியார்)

" *திருந்திய தமிழில் தெய்வப் புலமை*
*அருந்திறல் வள்ளுவன் ஆய்ந்துதன் வாக்கால்*
*அறம்பொரு ளின்பம் வீடென நான்கின்*
*திறந்தெரிந் துரைத்த செவ்விமுப் பாலுக்கு*
*ஓருரை யின்றி யொன்பது சென்றும்*
*ஐயுற வாக நையுறு காலை*
*வள்ளுவன் மீளவும் வந்துதித் துலகோர்க்*
*குள்ளிய பொருளை யுரைத்தன னென்ன*
*எழுத்து முதல இலக்கண வகையும்*
*வழுத்துவே தாகம வகையதன் பயனும்*
*தங்கிய குறட்பாத் தமிழ்மனு நூலிற்*
*கிதுவே யுரையென் றியாவரும் வியப்பப்*
*பொழிப்பக லத்தொடு நுட்ப வெச்சம்*
*விழுப்பொருள் தோன்ற விரித்தினி துரைத்தனன்*
*வடநூற் றுறையுந் தென்றிசைத் தமிழும்*
*விதிமுறை பயின்ற நெறியறி புலவன்*
*அன்பரு ணாணொப் புரவுகண் ணோட்டம்*
*நன்றறி வாய்மை நற்றவ முடையோன்*
*இத்தகை யன்றி ஈசன தருளால்*
*உய்த்துணர் வுடையவோ ருண்மை யாளன்*
*பரிமே லழகன் எனப்பெயர் படைத்துத்*
*தரைமே லுதித்த தலைமை யோனே."*
(பெருந்தொகை, 1542)

" *திருத்தகுசீர்த் தெய்வத் திருவள் ளுவர்தங்*
*கருத்தமைதி தானே கருதி - விரித்துரைத்தான்*
*பன்னு தமிழ்தேர் பரிமே லழகன்எனு*
*மன்னு முயர்நாமன் வந்து."* (மேற்படி 1544)

" *பாலெல்லா நல்லாவின் பாலாமோ பாரிலுள்ள*
*நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ - நூலிற்*
*பரித்த வுரையெல்லாம் பரிமே லழகன்*
*றெரித்தவுரை யாமோ தெளி."* (மேற்படி 1545)

“ தெய்வப் புலமைத் திருவள்ளு வர்குறளில்
உய்விக்கு நூலெல்லா முள்ளதெனச் - செய்வித்தான்
தத்துவமெல் லாமுடம்பிற் றந்துணர்வார் போலுலக
மொத்தபரி மேலழகன் ஓர்ந்து.” (மேற்படி1546)

“ விரைத்தா ரலங்கல் திருவள்ளு வர்முன்னம் வெண்குறட்பா
நிரைத்தார் மிகுபொருள் நான்கும் விளங்க நெறிப்புலவர்
உரைத்தார் பலரும் அதற்குரை தன்னை யுலகறியக்
கருத்தான் வகுத்தமைத் தான்கலை தோஓக்கை காவலனே.”
(மேற்படி1547)

“ வள்ளல் சிலைப்பெரு மாள்நச்சர் சாத்தர் வழுதிமுதல்
தள்ளுவ னார்க்குந் தலையான பேரையும் தன்னுரையை
விள்ளுவ னார்க்குந் திருக்காஞ்சி வாழ்பரி மேலழகன்
வள்ளுவ னார்க்கு வழிகாட்டி னான்றொண்டை மண்டலமே.”
(தொ.ம. சத. 41)

இதுபோது திருக்குறள் முப்பது மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அவையுட்பட அந் நூலுரைகள் ஏறத்தாழ நூறுள்ளன. ஆயினும், இன்னும் பரிமேலழக ருரையே தலைசிறந்த தெனவும் எவ்வுரையாலும் வீழ்த்தப் படாத தெனவும் பொதுவாகக் கருதப்பட்டு வருகின்றது. அது பெரும்பாலும் ஏனை யுரைகளெல்லாவற்றினுஞ் சிறந்த தென்பதும், சில குறள்கட்கு ஏனை யுரையாசிரியர் காணமுடியாத உண்மைப்பொருளைப் பரிமேலழகர் நுண்மை யாக நோக்கிக் கண்டுள்ளார் என்பதும், உண்மையே. ஆயின், பெறுதற்கரிய அறுசுவை யரசவுண்டியில் ஆங்காங்குக் கடுநஞ்சு கலந்து படைத்துள்ள தொப்ப, உண்மைக்கு மாறானதும் தமிழுக்குந் தமிழர்க்குங் கேடு பயப்பதுமான ஆரிய நச்சுக் கருத்துகளை, முதலும் இடையும் முடிவுமாக நெடுகலும் குறிக்கோளாகக் கொண்டு புகுத்தியிருப்பது, இவ் வுரையை நடுநிலையுடன் நோக்கும் எவர்க்கும் புலனாகாமற் போகாது. இனி, சில குறள்கட்கு முழுத் தவறாகவும் சில குறள்கட்கு அரைத் தவறாகவும் பொருள் கூறியுள்ளார் சில தென்சொற்களை வடசொல்லாகக் காட்டியிருப்பதுடன், சில சொற்கட்குத் தவறான இலக்கண வமைதியுங் கூறியுள்ளார்.

## பரிமேலழகர் வழுவியுள்ள வழிகள்

### 1. ஆரிய வழிகாட்டல்

எ-டு: “தத்துவ மிருபத்தைந்தினையுந் தெரிதலாவது... சாங்கிய நூலுளோதியவாற்றான் ஆராய்தல்” (27ஆம் குறளுரை).

"இவர் பொருட் பாகுபாட்டினை அறம்பொரு ளின்பமென வடநூல் வழக்குப்பற்றி யோதுதலான்" *(களவியல் முகவுரை).*

## 2. பொருளிலக்கணத் திரிப்பு

எ-டு: வடநூலுட் போசராசனும்... யாங் கூறுவ தின்பச்சுவை யொன்றனையுமே யென இதனையே மிகுத்துக் கூறினான். இது புணர்ச்சி பிரிவென விருவகைப்படும்." *(மேற்படி)*

தமிழ் அகப்பொருள் நூல்களும் திருக்குற ளின்பத்துப்பாலும் கூறுவது இன்ப வாழ்க்கையே யன்றி இன்பச்சுவை மட்டுமன்று. இவ் வாழ்க்கை களவு கற்பு என்றே இருவகைப்படும்.

## 3. ஆரியவழிப் பொருள் கூறல்

எ-டு: "பிதிரராவார் படைப்புக் காலத்து அயனாற் படைக்கப் பட்டதோர் கடவுட்சாதி" (குறள். 43, உரை).

## 4. ஆரியக் கருத்தைப் புகுத்துதல்

எ-டு:

*" இயல்புளிக் கோலோச்சு மன்னவ னாட்ட*
*பெயலும் விளையுளுந் தொக்கு"* *(குறள். 545)*

*" முறைகோடி மன்னவன் செய்யி னுறைகோடி*
*யொல்லாது வானம் பெயல்"* *(குறள். 559)*

என்று, உடன்பாட்டு வடிவிலும் எதிர்மறை வடிவிலும் செங்கோலே மழை வருவிக்குமென்று ஆசிரியர் கூறியிருப்பவும், "பசுக்கள் பால் குன்றியவழி அவியின்மையானும், அது கொடுத்தற்குரியார் மந்திரங் கற்பமென்பன ஓதாமையானும் வேள்வி நடவாதாம்; ஆகவே வானம் பெயலொல்லா தென்பதாயிற்று" என்று பரிமேலழகர்,

*"ஆபயன் குன்று மறுதொழிலோர் நூன்மறப்பர்*
காவலன் காவா னெனின்" *(குறள். 560)*

என்னுங் குறளுரையில் தலைகீழாய்க் கருமகத்தைக் கரணகமாகக் கூறியிருத்தல் காண்க.

## 5. தென்சொல்லை வடசொன் மொழிபெயர்ப் பெனல்

எ-டு: 'உழையிருந்தான்' எனப் பெயர் கொடுத்தார், அமாத்தியர் என்னும் வடமொழிப் பெயர்க்கும் பொருண்மை அதுவாகலின் (குறள். 156, உரை). குடங்கர் என்பது குடங்கமென்னும் வடசொற்றிரிபு (830, உரை).

## 6. தென்சொற்கு வடமொழிப் பொருள் கூறல்

எ-டு: அங்கணம் = முற்றம்

## 7. சொற்பகுப்புத் தவறு

எ-டு: பெற்றத்தால் - 'பெற்ற' வென்பதனுள் அகரமும், அதனா னென்பதனுள் அன்சாரியையும் தொடைநோக்கி விகாரத்தாற் றொக்கன." (குறள். 524, உரை).

## 8. சொல் வரலாற்றுத் தவறு

எ-டு: அழுக்காறென்பது ஒரு சொல் - அச் சொற் பின்னழுக்காற்றைச் செய்யாமை யென்னும் பொருள்பட எதிர்மறை யாகாரமும் மகர வைகார விகுதியும் பெற்று அழுக்காறாமை யென நின்றது. (அழுக்காறாமை யதிகார முகவுரை).

## 9. சொற்பொருள் தவறு -

எ-டு: இனிது = எளிது (குறள். 103).

## 10. அதிகாரப் பெயர் மாற்று

எ-டு: மக்கட் பேறு = புதல்வரைப் பெறுதல்.

## 11. சுட்டு மரபறியாமை

எ-டு: *"அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும்"* (குறள்.49)

அஃதும் = ஏனைத் துறவறமோ வெனின்:

## 12. இரு குறளைச் செயற்கையாக இணைத்தல்

எ-டு: 631, 632. இங்ஙனம் இவர் இந் நூற்கு ஆரியச் சார்பான உரை வரைந்திருப்பதற்கு, தமிழகப் பிராமணர் தொன்றுதொட்டுத் தமிழ் நூலாசிரியரும் நுவலாசிரியரும் உரையாசிரியருமாகி ஆரியக் கருத்து களைத் தமிழிலக்கியத்திற் புகுத்தி, தமிழரை அடிமைப்படுத்தி யிருப்பதே அடிப்படைக் கரணியமாம்.

பரிமேலழக ருரையினும் இவ் வுரை திருந்தியுள்ள வகைகள்

## 1. உரைத்திருத்தம்

எ-டு: முற்றும் - குறள். 913

ஒரு மருங்கு - குறள். 1030

## 2. உரைவிளக்கம்

எ-டு: குறள். 235, 338

## 3. சொல்விளக்கம்

எ-டு: குறள். 127

4. கொளு விளக்கம்

எ-டு: குறள். 1069, 1225

5. மூலச்சொல்லையே உரையில் ஆளாமை

எ-டு: குறள். 1113, 1328

இனி, இவ் வுரையைக் குறள்தொறும் பரிமேலழக ருரையொடு ஒப்பு நோக்கினும், பலவிடத்துப் பல வகையில் திருத்தமும் வேறுபாடுங் கண்டு இப் புத்துரையின் தேவையை உணரலாம். ஆயின், பரிமேலழக ருரையால் ஒரு பெரு நன்மையும் இல்லையோவெனின் உண்டு, அது எதுவெனின் அவருரைத் தொடர்பால் திருக்குறள் இதுவரை அழிக்கப்படாதிருந்ததே யென்க: எதுபோல வெனின், முதலிரு கழகத்தும் வழங்கிய இயற்றமி ழிலக்கணம் முழுதும். அதன் தொகுப்பாசிரியராகிய தொல்காப்பியரது தொல்காப்பியம் என்னும் பிண்ட நூலான் போற்றப்பட்டு வந்திருப்பது போன்று என்க.

*"தாமரைச் செல்வன் தமிழ்நூ லுலகெங்கும்*<br>
*காமரு கட்டடங் கணகுளிரப் - போமுறை*<br>
*யச்சிட்ட சுப்பையா வாய்ந்தேயும் மெய்ந்நூற்கும்*<br>
*மெச்சுற்றுப் பார்த்தனன் மெய்ப்பு."*

*"இவ்வுரை யச்சீட் டிறுதி தனிநின்று*<br>
*செவ்வகை பார்த்த செயல்நோக்கின் - எவ்வண்*<br>
*சுழன்றுந் தமிழுலகம் சுப்பையா பின்னாம்*<br>
*உழந்தும் அவனே தலை."*

சேர்ப்பு: இத் திருக்குறள் தமிழ் மரபுரைக்குப் பிழைதிருத்தப்பட்டியும் அருஞ்சொல் அகரமுதலியும் தொகுத்த திரு. இராசிபுரம் சேயோனுக்கும். அதிகார அகரமுதலியும் குறள் முதற்குறிப் பகரமுதலியும் தொகுத்த திரு. ஆரணிச் செல்வராசனார்க்கும் என் நன்றி உரித்தாம்.

*"முப்பால் தமிழ்மரபு முன்னிய விவ்வுரையை*<br>
*எப்போதும் போல இனிதாகத் - தப்பாமல்*<br>
*அச்சிட்டுத் தந்தான் அழகிய பாரிப்பேர்*<br>
*அச்சகத்தான் நாரா யணன்."*

*"கார்வாழி யோர்வாழி கன்னித் தமிழ்வாழி*<br>
*சீரார்பல் செல்வருஞ் சிறந்துதவப் - பார்நீடு*<br>
*பேரோங்கப் பாரிப் பெயர்தாங்கும் அச்சகத்தான்*<br>
*நாரா யணன்வாழி நன்கு."*

*மேலைத் தாம்பரம், சென்னை - 45,* *ஞா. தேவநேயன்*<br>
*18, கன்னி, 2000 4-10-1969*

# தேவநேயப் பாவாணரின்
# திருக்குறள் தமிழ் மரபுரைச் சிறப்புப் பாயிரம்

பத்துரைக்கு மேலும் பரிமே லழகரோ
டொத்தவுரை நூறுசெய்தும் ஒன்றாமே – மெத்ததிரு
வள்ளுவனார் நூலுக்கு வாய்மை உரைசெய்தார்
தொள்ளுதமிழ்ப் பாவாணர் தேர்ந்து. 1

நுண்ணிய நூலறிவும் நுண்மாண் நுழைபுலமும்
திண்ணிய கேள்வியுந் தீர்தலால் – எண்ணிய
தெய்வத் திருக்குறட்குத் தேவநே யன்செய்நூல்
உய்யக் கிடைத்த வுரை. 2

ஆர்ந்த தமிழ்மொழியோ டாரியமும் ஆங்கிலமும்
ஏர்ந்த பிறமொழியும் ஏய்வுறவே – ஊர்ந்தமதித்
தேவநே யன்செய் தெளிந்த குறளுரையால்
காவனே ருற்றதெனக் காண். 3

சொல்லும் பொருளுந் தொகவாய்ந்து தொல்வரலா
றொல்லும் பலவகையா லோர்ந்துணர்ந்து – வெல்லும்
படியுரைத்த பாவாணர் பாரித்த வாற்றற்
கடியுரைத்தல் யார்க்கும் அரிது. 4

இனம்பேணற் கென்றெழுந்த வின்குறட்குத் தந்தம்
மனம்போன வாறு மயங்கிப் – புனைந்துரைத்த
பான்மை தவிர்த்துநூற் பாங்குரைத்தார் பாவாணர்
மேன்மை பிறங்கிற்று மேல். 5

நரிசூ லுறவரிமா நல்கிதென்றே யற்றைப்
பரிமே லழகர் பயந்துரைத்தார் – ஒற்றைப்
புரிமேல் கரிநடந்த பொய்யைப்பா வாணர்
எரிமே லெறிந்தா ரிகழ்ந்து. 6

*வல்லார்ந்த செந்தமிழில் வாய்ந்த திருக்குறள்போல்*
*சொல்லார்ந்த மற்றவற்றில் சொல்லரிதாம் – சொல்லார்ந்த*
*செந்தமி ழுள்ளுஞ் செயவரிதாம் பாவாணர்*
*முந்துரை செய்நூன் முறை.* 7

*செந்தமிழுஞ் செங்கதிரால்; சீர்சால் திருக்குறளும்*
*அந்தமிழால் வீசும் அணிமதியால்; – அந்தமதிக்*
*கெட்டிநடை யிட்டவறி வேற்றமே பாவாணர்*
*ஒட்டிநடை யிட்ட உரை.* 8

*செப்பா லடித்தவொரு காசுக்குச் செந்தமிழை*
*எப்பாலும் விற்கும் இழிஞரிடை – முப்பாலுக்*
*கொத்த மரபுரையொன் றோதினார் பாவாணர்க்*
*கொத்த கடனென் றுணர்ந்து.* 9

*தேவநே யன்என்னுந் தேர்ந்தமதிப் பாவாணர்*
*தேவத் திருக்குறட்குத் தீர்ந்தவுரை – மேவியபின்*
*மற்றோர் உரைசெயவும் மானுவரோ? மானுவரேல்*
*கற்றோர் நகைப்பர் கலித்து.* 10

# சில சிறப்புக் குறிப்புகள்

### வடசொல் நேர் தென்சொற்கள்

உபசரித்தல் என்னும் வடசொல் சார்த்திக் கூறுதல் என்னுந் தென் சொல்லாலும், காரணம் என்னுஞ் சொல் கரணியம் அல்லது கரணகம் என்னும் வடிவினாலும், காரியம் என்னுஞ் சொல் கருமகம் அல்லது கருமியம் என்னும் வடிவினாலும், குறிக்கப்பட்டுள.

### ஒருபொருட் பலசொற்கள்

மன்னன் என்பது குறுநில வரசனையும் வேந்தன் என்பது அவனை யடக்கியாளும் பெருநில வரசனையும் சிறப்பாகக் குறிக்குஞ் சொற்களேனும், இவ் விரண்டும் மோனையெதுகை தளைநோக்கி வேறுபாடின்றியே பல குறள்களிலும் ஆளப்பட்டுள்ளன.

### இலக்கணக் குறிப்புகள்

அன்னது, பாலது என்னும் சொற்கள் ஈற்றின் அகர முதல் கெடின் அற்று பாற்று எனத் திரிந்து நிற்கும். இறந்தகால வினையெச்ச வடிவோடு 'அற்று'க் கூடி 'வருமிடமெல்லாம் பெயரெச்சம் + அற்று என்றே உரை நெடுகலும் பிரிக்கப்பட்டுள்ளது.

எ - டு: நிறைந்தற்று = நிறைந்த அற்று. உவமையின் இரு கூறுகளும் உவமம் (உவமானம்) பொருள் (உவமேயம்) என்றே குறிக்கப்பட்டுள்ளன.

'இன்' என்னும் நீக்க வேற்றுமையுருபிற்கு உறழ்பொருளேயுரியதெனினும், அது பொருந்தாத இடங்களிலெல்லாம் செய்பொருள் வேற்றுமைக்குரிய ஒப்புப் பொருளே கொள்ளப்பட்டுள்ளது.

ஆகுபெயர் போன்று ஆளப்பட்டுள்ள பெயர்களையெல்லாம் ஆகு பெயரென்றே பரிமேலழகர் குறித்துள்ளார். அவை இங்கு ஆகுபொருளி (இலக்கணை) என வேறுபடுத்தப்பட்டுள்ளன. இடைச்சொல்லாக ஆளப்பட்டு வரும் மன்னோ, மாதோ என்னுஞ் சொற்கள் முதற்காலத்தில் முறையே அரசே, பெண்ணே என்று பொருள்பட்டு ஆடூஉ முன்னிலையாகவும் மகடூஉ முன்னிலையாகவும் இருந்தன வேனும், இங்கு உரையாசிரியன்மார் கருத்திற் கேற்ப மன் + ஓ, மாது + ஓ யென்றும் பிரிக்கப்பட்டுப் பொருந்துமிடமெல்லாம் இடைச்சொற் பொருள் கூறப்பட்டுள்ளன.

பரிமேலழகருரையில் அதிகார முகவுரையைத் தொடங்கும் 'அஃதாவது' என்னுஞ் சொல், இவ் வுரை முழுதும் 'அதாவது' என்றே ஆய்தமின்றிக் குறிக்கப்பட்டுள்ளது. இவ் வடிவம் வழாநிலையே.

அளபெடை வடிவம் செய்யுள் நடையால் ஏற்பட்ட திரிபாதலின் உரை கூறுவதற் கெடுத்துக்கொண்ட மூலத் தொடர்களிலெல்லாம் அளபெடைச் சொற்கள் அளபெடை நீக்கியே குறிக்கப்பட்டுள்ளன.

# குறுக்க விளக்கம்

| | |
|---|---|
| அதி. - அதிகாரம் | த.வி. - தன்வினை தெ. தெலுங்கு |
| ஆ.பா. - ஆண்பால் | திருமந். - திருமந்திரம் |
| இடை. - இடையியல் | தெலுங்கு |
| இ-ரை. இதன் தொடருரை | தொமசத. - தொண்டை மண்டல சதகம் |
| இ.வே. - இருக்கு வேதம் | தொ . - தொகாப்பியம் |
| எ-டு. - எடுத்துக் காட்டு | நன். - நன்னூல் |
| ஒ.நோ: - ஒப்பு நோக்க | நாலடி. - நாலடியார் |
| க. - கன்னடம் | நான்மணி - நான்மணிக்கடிகை |
| கம்பரா - கம்பராமாயணம் | பி.வி. - பிறவினை |
| கலித். - கலித்தொகை | புறம். - புறநானூறு |
| கள. - களவியல் | பெ. பா. - பெண்பால் |
| சச் - சச்சிதானந்த சிவம் | பொதுப்பா - பொதுப்பாயிரம் |
| சி.சி. - சிவஞான சித்தியார் | ம. - மலையாளம் |
| சிலப். - சிலப்பதிகாரம் | மணிமே. - மணிமேகலை |
| சீவக. - சீவக சிந்தாமணி | மலைபடு. - மலைபடுகடாம் |
| சொல். - சொல்லதிகாரம் | முல்லை. - முல்லைப்பாட்டு |
| | வ. - வடசொல் |
| AF - Anglo French | ME - Middle English |
| E - English | MHG - Middle High German |
| F - French | OE - Old English |
| G - German | OF - Old French |
| Gk - Greek | OHG - Old High German |
| L - Latin | OS - Old Saxon |
| LL - Late Latin | Skt - Sanskrit |

# அதிகார அகரவரிசை

## அறத்துப்பால் - 1


1. அடக்கமுடைமை ...................... 103
2. அருளுடைமை ........................ 158
3. அவாவறுத்தல் ........................ 220
4. அழுக்காறாமை ........................ 119
5. அறன்வலியுறுத்தல் .................. 58
6. அன்புடைமை ........................ 79
7. இல்வாழ்க்கை ........................ 63
8. இனியவை கூறல் ..................... 90
9. இன்னா செய்யாமை ................ 190
10. ஈகை ................................ 142
11. ஊழ் .................................. 226
12. ஒப்புரவறிதல் ........................ 138
13. ஒழுக்கமுடைமை ...................... 108
14. கள்ளாமை ............................ 177
15. கூடாவொழுக்கம் ...................... 172
16. சொல்லாமை .......................... 194
17. செய்ந்நன்றி யறிதல் ................ 94
18. தவம் ................................ 166
19. தீவினையச்சம் ........................ 134
20. துறவு ................................ 207
21. நடுவுநிலைமை ........................ 98
22. நிலையாமை .......................... 200
23. நீத்தார் பெருமை ...................... 50
24. பயனில சொல்லாமை ................ 131
25. பிறனில் விழையாமை ................ 111
26. புகழ் .................................. 148
27. புலான்மறுத்தல் ........................ 162
28. புறங்கூறாமை ........................ 127
29. பொறையுடைமை ...................... 115
30. மக்கட்பேறு .......................... 74
31. முதற் பகவன் வழுத்து ............ 37
32. மெய்யுணர்தல் ...................... 212
33. வாய்மை .............................. 182
34. வாழ்க்கைத் துணை நலம் ........ 70
35. வான் சிறப்பு .......................... 44
36. விருந்தோம்பல் ...................... 84
37. வெகுளாமை .......................... 186
38. வெஃகாமை .......................... 123

# உள்ளடக்கம்


பதிப்புரை

வான்மழை வளச்சுரப்பு

சான்றிதழ்

முகவுரை

சிறப்புப் பாயிரம்

சில சிறப்புக் குறிப்புகள்

குறுக்க விளக்கம்

அதிகார அகரவரிசை

## அறத்துப்பால் – 1

முன்னுரை

1. தமிழ நாகரிகம் ஆரியர் வருகைக்கு முற்பட்டமை
2. தமிழர் வாழ்க்கைக் குறிக்கோள்
3. தமிழிலக்கியப் பல்வேறு பொருட்பாகுபாடு
4. திருவள்ளுவர் வரலாறு
5. திருவள்ளுவர் காலக் குமுகாய (சமுதாய) நிலை
6. திருவள்ளுவர் காலச் சமய நிலை
7. திருவள்ளுவர் திருக்குறளியற்றிய நோக்கம்
8. திருக்குறட் சிறப்பு
9. திருக்குறள் நூல்வகை
10. பாயிர விளக்கம்
11. திருக்குறள் நூற்பகுப்பு
12. பரிமேலழகர் நச்சுக் கருத்துகள்

## I. அறத்துப்பால்

1. பாயிரவியல்

(1) முதற்பகவன் வழுத்து (அதி. 1)

(2) வான் சிறப்பு (அதி. 2)

(3) நீத்தார் பெருமை (அதி. 3)

(4) அறன்வலியுறுத்தல் (அதி. 4)

2. இல்லறவியல்

(1) இல்வாழ்க்கை (அதி. 5)

(2) வாழ்க்கைத் துணைநலம் (அதி. 6)

| | | | | |
|---|---|---|---|---|
| (3) | மக்கட் பேறு | (அதி. 7) | ... | 74 |
| (4) | அன்புடைமை | (அதி. 8) | ... | 79 |
| (5) | விருந்தோம்பல் | (அதி. 9) | ... | 84 |
| (6) | இனியவை கூறல் | (அதி. 10) | ... | 90 |
| (7) | செய்ந்நன்றி யறிதல் | (அதி. 11) | ... | 94 |
| (8) | நடுவு நிலைமை | (அதி. 12) | ... | 98 |
| (9) | அடக்கமுடைமை | (அதி. 13) | ... | 103 |
| (10) | ஒழுக்கமுடைமை | (அதி. 14) | ... | 108 |
| (11) | பிறனில் விழையாமை | (அதி. 15) | ... | 111 |
| (12) | பொறையுடைமை | (அதி. 16) | ... | 115 |
| (13) | அழுக்காறாமை | (அதி. 17) | ... | 119 |
| (14) | வெஃகாமை | (அதி. 18) | ... | 123 |
| (15) | புறங்கூறாமை | (அதி. 19) | ... | 127 |
| (16) | பயனில சொல்லாமை | (அதி. 20) | ... | 131 |
| (17) | தீவினையச்சம் | (அதி. 21) | ... | 134 |
| (18) | ஒப்புரவறிதல் | (அதி. 22) | ... | 138 |
| (19) | ஈகை | (அதி. 23) | ... | 142 |
| (20) | புகழ் | (அதி. 24) | ... | 148 |
| 3. | துறவறவியல் | | | |
| (1) | அருளுடைமை | (அதி. 25) | ... | 158 |
| (2) | புலான் மறுத்தல் | (அதி. 26) | ... | 162 |
| (3) | தவம் | (அதி. 27) | ... | 166 |
| (4) | கூடாவொழுக்கம் | (அதி. 28) | ... | 172 |
| (5) | கள்ளாமை | (அதி. 29) | ... | 177 |
| (6) | வாய்மை | (அதி. 30) | ... | 182 |
| (7) | வெகுளாமை | (அதி. 31) | ... | 186 |
| (8) | இன்னாசெய்யாமை | (அதி. 32) | ... | 190 |
| (9) | கொல்லாமை | (அதி. 33) | ... | 194 |
| (10) | நிலையாமை | (அதி. 34) | ... | 200 |
| (11) | துறவு | (அதி. 35) | ... | 207 |
| (12) | மெய்யுணர்தல் | (அதி. 36) | ... | 212 |
| (13) | அவாவறுத்தல் | (அதி. 37) | ... | 220 |
| 4. | ஊழியல் | | | |
| (1) | ஊழ் | (அதி. 38) | ... | 226 |
| | அருஞ்சொற்பொருள் அகரவரிசை | | ... | 232 |
| | பாட்டு முதற்குறிப்பு அகரவரிசை | | ... | 238 |

# திருக்குறள்
# தமிழ் மரபுரை

## I அறத்துப்பால் - 1

# திருக்குறள் தமிழ் மரபுரை

## முன்னுரை

### 1. தமிழ நாகரிகம் ஆரியர் வருகைக்கு முற்பட்டமை

தமிழன் பிறந்தகம் குமரிநாடென்பதும், தமிழ நாகரிகம் ஆரியர் வருகைக்குப் பல்லாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டதென்பதும், இன்னும் சரிவர அறியப்படாமையால், தமிழரின் முன்னோர் கிரேக்கநாட்டுப் பக்கத்தினின்று வந்தவரென்றும், ஆரிய நாகரிகத்தைப் பின்பற்றியவ ரென்றும், தமிழ் பன்மொழிக் கலவையென்றும் வடஇந்தியாவிலுள்ளவ ரெல்லாரும் ஆரியரென்றும், வடஇந்தியாவிலும் சமற்கிருதத்திலு முள்ளவையெல்லாம் ஆரியர் கண்டவை யென்றும், உண்மைக்கு நேர்மாறாகச் சொல்லப்பட்டும் எழுதப்பட்டும் வருகின்றன.

உலகில் மிகப் பழைமையானது குமரிக்கண்டத் தமிழ்நாடென்பதை யும், முதன்முதல் தோன்றியது தமிழ நாகரிக மென்பதையும், தமிழ் உலகமுதல் உயர்தனிச் செம்மொழி யென்பதையும், அறிந்தாலொழிய, தமிழ்மொழியிலக்கிய நாகரிகப் பண்பாட்டின் உண்மையான இயல்பையும் உயர்வையும் உணரமுடியாது.

### 2. தமிழர் வாழ்க்கைக் குறிக்கோள்

உலகில் இன்பத்தை நுகரவேண்டுமென்பதே பொதுவாக எல்லா மாந்தர்க்கும் இயல்பான நோக்கம். அவ் வின்பத்திற்குப் பொருள் இன்றியமையாதது. பொருள் சிறந்தபின், "தனக்கு மிஞ்சித் தானம்", "பாழாய்ப் போகிறது பசுவின் வாயிலே" என்னும் நெறிமுறைப்படி, தான் நுகர்ந்ததுபோக எஞ்சியதை உழைக்க வியலாதவரும் துறவியருமான பிறர்க்கு அளிப்பதும் இயல்பே. இதுவே அறமெனப்படுவது. இங்ஙனம் இன்பம், பொருள், அறம் என்னும் முக்குறிக்கோள் இயற்கையாகத் தோன்றின. அறத்தைச் சிறப்பாக நோக்காது இன்பத்தையே நோக்கும் இன்பநூல்களும் இலக்கண நூல்களும் இம் முப்பொருளையும் இம் முறையிலேயே குறிக்கும்.

*"இன்பமும் பொருளும் அறனு மென்றாங்கு*
*அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்*
*காமக் கூட்டங் காணுங் காலை"* (களா. 1)

என்று தொல்காப்பியங் கூறுதல் காண்க.

தமிழர் புறநாகரிகத் துறைகளில் மட்டுமன்றி அகநாகரிகமான பண்பாட்டுத் துறையிலும் மறுமைக்குரிய சமயத்துறையிலும் தலைசிறந்திருந் ததினால், சமயநூலாரும் அறநூலாரும் அறத்திற்கே சிறப்புக் கொடுத்து அறம்பொரு ளின்பம் எனத் தலைமாற்றிக் கூறினர்.

*"அந்நிலை மருங்கின் அறமுத லாகிய*
*மும்முதற் பொருட்கு முரிய வென்ப"* (செய். 105)

என்று தொல்காப்பியமும்,

*"அறனும் பொருளும் இன்பமு மூன்றும்*
*ஆற்றும் பெருமநின் செல்வம்",* (28)

*"சிறப்புடை மரபிற் பொருளு மின்பமும்*
*அறத்துவழிப் படூஉந் தோற்றம் போல"* (31)

என்று புறநானூறுங் கூறுதல் காண்க. அறவழியிற் பொருளை யீட்டி அதைக் கொண்டு அறவழியில் இன்பம் நுகர வேண்டுமென்பது கருத்து. இன்பம் என்பது முதற்கண் இவ்வுலக வின்பத்தையும் பின்பு அதனொடு விண்ணுலக வின்பத்தையும் அதன்பின் அவற்றொடு வீட்டுலக வின்பத்தையுங் குறித்தது.

இது சமயத்துறைபற்றிய நாகரிக வளர்ச்சியைக் காட்டும். வீட்டின்பம் பலவகையில் ஏனை யிரண்டினும் வேறுபட்டதாதலின், பின்னர் அறம்பொரு ளின்பம் வீடு எனப் பிரித்துக் கூறப்பட்டது. ஆயினும் வீடென்பது அறம் என்னும் வாயில் வகையிலும் காதலின்பம் என்னும் உவமை வகையிலு மன்றி வண்ணனை வகையிற் கூறப்பட வியலாதாதலின், நாற்பொருளும் நூலளவில் என்றும் முப்பாலாகவே இருக்கும். அதனாலேயே திருக்குறட் கும் முப்பால் என்று பெயர். நாற்பொருளும், மாந்தர்க்கு நன்மைசெய்தல் பற்றி உறுதிப் பொருள் என்றும், சிறப்புடைமைபற்றி மாண்பொருள் என்றும் கூறப்படும். கல்வியின் பயன் கடவுள் திருவடியடைதல் என்னுங் கருத்தெழுந்தபின், நாற்பயனே நூற்பயன் என்றாயிற்று.

*"அறம்பொரு ளின்பம்வீ டடைதல்நூற் பயனே"* (நன். 10)

என்பது நன்னூற் பாயிரம்.

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்சொல்லையும், முறையே தர்ம, அர்த்த, காம, மோக்ஷ என மொழிபெயர்த்தனர் வடமொழியாளர். ஆயின், தமிழில் அறம் என்பது நல்வினையையும், வடமொழியில் தர்ம என்பது வருணாச்சிரம தருமம் என்னும் குலவொழுக்கத்தையுமே குறிக்கும்.

## 3. தமிழிலக்கியப் பல்வேறு பொருட்பாகுபாடு

தமிழிலக்கியத்தின் இயல்பை அறியாத ஆரியவழியினரும் ஆராய்ச்சியில்லாரும், பொருளிலக்கணப் பாகுபாடொன்றையே தமிழர் பொருட்பாகுபாடென்று கொண்டு, அறம்பொரு ளின்பம் வீடென்னும் அறநூற் பாகுபாட்டை ஆரியரதென்றும் தமிழர் அதைத் தழுவினரென்றும், முறையே துணிந்தும் மயங்கியும் கூறுவராயினர். பொருட்பாகுபாடு பெரும்பாலும் நூல்தொறும் வேறுபடுவதாகும்.

பொருள், குணம், கருமம், பொது, சிறப்பு, ஒற்றுமை, இன்மை எனப் பொருள் ஏழென்பது ஏரண (தருக்க) நூல்.

*"பொருள்குணங் கருமம் பொதுச்சிறப் பொற்றுமை*
*இன்மை யுடன்பொரு ளேழென மொழிப"*

என்பது அகத்தியத் தருக்க நூற்பா.

இறை (பதி), உயிர் (பசு), தளை (பாசம்) எனப் பொருள் மூன்றென்பது சிவனியக் கொண்முடிபு (சைவசித்தாந்த) நூல்.

அறம், பொருள், இன்பம், வீடு எனப் பொருள் நான்கென்பது அறநூல்.

இலக்கண நூலில் அதிகாரந்தொறும் பொருட்பாகுபாடு வேறுபடும்.

உயிர், மெய், உயிர்மெய் (பிராணி) எனப் பொருள்களை மூன்றாகப் பகுப்பது எழுத்ததிகாரம்; பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என ஆறாகவும், உயர்திணை, அஃறிணை என இரண்டாகவும் பகுப்பது சொல்லதிகாரம்; அகம், புறம் என இரண்டாகப் பகுப்பது பொருளதிகாரம்.

*"அன்பே அறனே இன்பம் நாணொடு"* (பொருள். 21)

*"அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்"* (கற். 51)

*"ஒன்றாப் பொருள்வயின் ஊக்கிய பாலினும்"* (அகத். 41)

*"பொருளென மொழிதலும் வரைநிலை யின்றே"* (பொருள். 20)

*"எல்லா வுயிர்க்கும் இன்பம் என்பது"* (பொருள். 29)

என அறம்பொரு ளின்பங்கள் தனித்தனியாகவும், "மூன்றன் பகுதியும்" (அகத். 41) எனத் தொகுத்தும், அகப்பொரு ளிலக்கணத்திற் கூறப்பட்டிருப் பதால், எல்லார்க்கும் பொதுவான இருவகை வாழ்க்கைக்குமுரிய அறநூற் பாகுபாடும் புலவரே செய்யும் இலக்கண ஆராய்ச்சிக்குரிய பொருளதிகாரப் பாகுபாடும், வெவ்வேறு நூலன வென்றும் வெவ்வேறு பயனோக்கியன வென்றும் அறிந்துகொள்க. மூன்றன் பகுதியாவது அறத்தாற் பொருளீட்டி அப் பொருளால் இன்பம் நுகர்வேன் எனல். இதனால் அறநூற் பாகுபாடு தமிழரதே என்று தெளிக.

தமிழ நாகரிகத்தின் சிறந்த கூறுகளையெல்லாம் தழுவிக்கொண்டு அவற்றைத் தமவெனக் கூறல், ஆரியரின் தொன்றுதொட்ட வழக்கமே. அறம்பொரு ளின்பம் வீடெனத் தமிழற நூலார் வகுத்த பொருட்பாகுபாட் டையே இலக்கண நூலார் இன்பம் அகமென்றும் ஏனை மூன்றும் அஃதல் லாத புறமென்றும் இரண்டுள் அடக்கி மாற்றி வகுத்தனர் என்க. இதை யுணர்த்தற்கே,

*"இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு*
*..........................................*
*காமக் கூட்டங் காணுங் காலை"* (1038)

என்று தொல்காப்பியங் கூறியதும் என அறிக. முழுத் தமிழிலக்கணந் தோன்றியது தலைக்கழகக் காலம் (கி.மு. 10,000). அது தோன்றிய போதே முத்தமிழாகத் தோன்றிற்று. அவற்றுள் அடிப்படையான இயற்றமிழ் இலக் கணமும் மூவதிகாரப் பிண்டமாகவே தோன்றிற்று. இதனால் பொருளதிகார அகப்புறப் பொருட்பாகுபாட்டிற்கு மூலமான அறநூற் பொருட்பாகுபாடு, தலைக்கழகத்திற்கும் முந்தியதென அறிக. அது ஆரியம் என்னும் பேரும் இனமுந் தோன்றாத முதுபண்டைக் காலம். அகம் புறம் என்பதே தமிழர் பொருட்பாகுபாடென்பது, பொருளிடங் காலஞ் சினைகுணந் தொழில் என்பதே தமிழர் பெயர்ப்பாகுபாடென்பது போன்றதே.

## 4. திருவள்ளுவர் வரலாறு

**பெயர்:** இவர் பெயர் வள்ளுவன் என்பதே. வள்ளுவர் என்பது உயர்வுப் பன்மை. இவரது இறைப்பற்றொடு கூடிய ஒழுக்கத்தின் உயர்வும்

இவர் நூலின் மறைத் தன்மையும், இவருக்குத் திருமை (தெய்வத்தன்மை) யுண்டாக்கியதினால், இவர் பெயர்க்கு முன் திரு என்னும் அடைமொழி சேர்க்கப்பெற்றது. தேவர், தெய்வப் புலவர், பொய்யில் புலவர், முதற்பாவ லர், பெருநாவலர், செந்நாப்போதார், நாயனார் முதலிய பிற பெயர்களெல் லாம், இவரைப் பாராட்டிக் கூறிய புலவர் ஆண்ட புகழ்ச் சொற்களேயன்றி வேறல்ல.

வள்ளுவன் என்பது இயற்பெயராகவு மிருக்கலாம்; தொழில்பற்றிய பெயராகவுமிருக்கலாம். திருவள்ளுவர் பெயர் இவற்றுட் பின்னதென்பதே பெரும்பான்மைப் பொருத்தமாம்.

வள்ளுவன் என்பான், அரசன் கட்டளையைப் பறையறைந்து அறிவிப்பவன் என்று பெருங்கதையும், அரசர்க்கு உள்படு கருமத் தலைவன் என்று பிங்கல நிகண்டும், புள்ளுவன் (நிமித்திகன்) என்று சீவக சிந்தாமணியும் கூறுகின்றன.

வள் என்னும் அடிச்சொற்குள்ள பல பொருள்களுள் மூன்று, கூர்மை வலிமை வண்மை என்பன. ஆதலால், வள்ளுவன் என்னும் சொற்கு, கூர்மதியன், வல்லவன், வள்ளியோன் என்று முப்பொருளும் கொள்ளலாம்.

*"ஏற்றுரி போர்த்த விடியுறழ் தழங்குகுரற்*
*கோற்றொழில் வேந்தன் கொற்ற முரசம்*
*பெரும்பணைக் கொட்டிலு ளரும்பலி யோச்சி*
*முற்றலை காட்டிக் கொற்றவை பழிச்சித்*
*திருநாள் படைநாள் கடிநா ளென்றிப்*
*பெருநாட் கல்லது பிறநாட் கதையாச்*
*செல்வச் சேனை வள்ளுவ முதுமக"* (பெருங். 2 : 28 – 34)

என்று பெருங்கதை கூறுவதால், வேத்தியல் விளம்பர அதிகாரியான வள்ளுவன் பெருமை விளங்கும். (முதுமகன் முப்பதாண்டிற்கு மேற்பட்ட வன்.) இவனையே பிங்கல நிகண்டு,

*"வள்ளுவன் சாக்கை யெனும்பெயர் மன்னர்க்*
*குள்படு கருமத் தலைவர்க் கொன்றும்"* (5: 118)

என்று உள்படுகருமத் தலைவருள் ஒருவனாகக் குறிக்கும். வள்ளுவன் அரசன் கட்டளையையே முரசறைந் தறிவிப்பவன்; சாக்கையன் அரசர்க்கே

நாடகம் நடிப்பவன். ஆதலால் இவ் விருவரும் அரசர் தொடர்பே கொண்ட அரண்மனைப் பணியாளராவர். சிலர் கருதுகின்றவாறு, வள்ளுவன் அரசன் பள்ளியறைக் கண்காணிப்பாளனான மாளிகை நாயகம்(Chamberlain) அல்லன்.

பெருங்கணி குறித்த நன்னாளிலேயே வள்ளுவன் பறையறைய வேண்டியிருந்ததினாலும், வள்ளுவனைப் புள் (நிமித்தம்) அறிவிப்பவன் என்று சிந்தாமணி கூறுவதனாலும், வள்ளுவர் என்பார் இன்றும் கணியரா யிருந்து வருவதனாலும், பண்டை வள்ளுவனும் கணியம் அறிந்தவனே என்று கருத இடமுண்டு. நாள்கோள்களின் இயக்கத்தை யறிந்து ஐந்திறம் (பஞ்சாங்கம்) வகுத்தற்கும் அரசர்க்குப் பிறப்பியம் (சாதகம்) எழுதுதற்கும் நுண்மாண் நுழைமதி வேண்டியிருத்தலின், கணியருள் ஒரு பிரிவார் வள்ளுவர் எனப்பட்டதாகத் தெரிகின்றது.

நாஞ்சில் வள்ளுவனைப் பாடிய ஒருசிறைப்பெரியனார், மருதனிள நாகனார், ஒளவையார், கருவூர்க் கதப்பிள்ளை ஆகிய நால்வரும் அவனை நாஞ்சிற் பொருநன் என்றே குறிக்கின்றனர். பொருநன் போர்மறவன் அல்லது படைத்தலைவன்.

*"பொருந ரென்ப பெரும்போர்த் தலைவர்"* (பிங். 5: 119)

என்பது பிங்கலம்,

பாண்டிநாட்டிற்கும் சேரநாட்டிற்கும் இடைப்பட்ட நாட்டை யாண்ட தினால், ஒருகாற் பாண்டியனுக்கும் மற்றொருகாற் சேரனுக்கும் படைத் தலைவனாக இருந்ததாகத் தெரிகின்ற நாஞ்சில் வள்ளுவனை, வலிமையிலும் வண்மையிலும் சிறந்தவனாக மருதனிளநாகனாரும் ஒளவையாரும் கதப்பிள்ளையும் பாடியிருத்தலால், அவன் பெயர் வலிமையாலோ வண் மையாலோ வந்ததாகவு மிருக்கலாம்; இயற் பெயராகவு மிருக்கலாம்.

வல்லப என்னும் வடசொல், வேரில்லாததாகவும் காதலன், நண்பன், கணவன், மேலோன், கண்காணி என்றே பொருள்படுவதாகவும் இருத்த லால், அது வள்ளுவன் என்னும் தென்சொற்கு மூலமாயிருத்தல் முடியாது. கல்வெட்டுகளில் வரும் வள்ளுவன், வல்லுவன் என்னும் சொற்களும், தூய தென்சொற்களேயன்றி வல்லப என்னும் வடசொல்லின் திரிபாகா. உண்மை யெதுவெனின், வல்லவன் என்னும் தென்சொல் வடமொழியில் வல்லப என்று திரிந்துள்ளது என்பதே. வகரம் பகரமாவது வடமொழிக் கியல்பே.

ஆண்மகன் என்னும் சொல் கணவனையும் ஆண்டகையென்னுஞ் சொல் சிறந்த தலைவனையுங் குறித்தல் போன்றே, வல்லவன் என்பதன் திரிபான வல்லப என்பதும் வடமொழியில் கண்காணிப்புத் தலைவனையும் கணவனையும் காதலனையும் நண்பனையும் முறையே குறித்ததென்க.

***குடி:*** திருவள்ளுவர் அரசனின் முரசறை விளம்பரத் தலைவராயிருந்தாரெனின், அவர் பிறந்த குடி வள்ளுவக் குடியென்றே கொள்ளலாம். கடைக்கழகக் காலத்திற் பிராமணர் தம்மை மேன்மேலுயர்த்தத் தமிழரைப் படிப்படியாய்த் தாழ்த்தி வந்தாரெனினும், கடைப்பட்ட வகையில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்க்கு இக்காலத்திற்போல் அக்காலத்தில் இழிவு இருந்ததில்லை. அதனால், இக்கால நிலைமைபற்றித் திருவள்ளுவரை வள்ளுவக் குடியினரென்று கொள்வது அவருக் கிழுக்காகும் என்று கருதுவது, அறியாமையின் விளைவேயாம்.

***"அறம்பொரு ளின்பம்வீ டென்னுமந் நான்கின்***
***திறந்தெரிந்து செப்பிய தேவை – மறந்தேயும்***
***வள்ளுவன் என்பானோர் பேதை யவன்வாய்ச்சொற்***
***கொள்ளா ரறிவுடை யார்"***

என்று மாமூலர் பெயரிலுள்ள திருவள்ளுவமாலைப் பாவும், திருவள்ளுவரைத் தெய்வப் பிறப்பினரென்றே கொள்ளவேண்டுமென்றும், மறந்தும் மக்கட் பிறப்பினராகக் கொள்ளக்கூடாதென்றும் கூறுகின்றதேயன்றி, அவர் குடி எள்ளளவேனும் இழிவுள்ளதாகக் கருதுவதன்று.

***காலம்:*** திருவள்ளுவர் காலம் இன்ன நூற்றாண்டென்று திட்டமாய்த் தெரியாவிடினும், தொல்காப்பியர் காலமான கி.மு. ஏழாம் நூற்றாண்டிற்கும் கடைக்கழக முடிவான மூன்றாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்டதென்று கொள்வது, எவ்வகையினும் இழுக்காகாது.

கடைக்கழக முடிவிற்கு முற்பட்ட தென்பதற்குச் சான்றுகள்:

(1) ***"பிறர்க்கின்னா முற்பகற் செய்யின் தமக்கின்னா***
***பிற்பகற் றாமே வரும்"*** (319)

என்னுங் குறள்,

***"முற்பகற் செய்தான் பிறன்கேடு தன்கேடு***
***பிற்பகற் காண்குறூஉம் பெற்றிய காண்"*** (21: 3–4)

என்று கி.பி. 2ஆம் நூற்றாண்டினதான சிலப்பதிகார அடிகளில் அமைந் திருத்தல்.

(2) அதே நூற்றாண்டினதான மணிமேகலையில்,

*"தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்*
*பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்றவப்*
*பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்"* (22 : 59–62)

என்று, சீத்தலைச் சாத்தனார் சதுக்கப் பூதத்தின் கூற்றாக 55ஆம் திருக்குறளை யெடுத்துக்கூறி அதன் ஆசிரியரையுங் குறித்தமை.

(3) மணிமேகலைக்கு முந்திய புறநானூற்றில், சோழன் குளமுற்றத் துத் துஞ்சிய கிள்ளிவளவனை ஆலத்தூர்கிழார் பாடிய பாட்டில்,

*"ஆன்முலை யறுத்த வறனி லோர்க்கு*
*மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்*
*குரவர்த் தப்பிய கொடுமை யோர்க்கும்*
*வழுவாய் மருங்கிற் கழுவாயு முளவென*
*நிலம்புடை பெயர்வ தாயினு மொருவன்*
*செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென*
*அறம்பா டிற்றே ஆயிழை கணவ"* (புறம். 34)

என்று,

*"எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை*
*செய்ந்நன்றி கொன்ற மகற்கு"* (110)

என்னும் குறளும், காக்கைபாடினியார் நச்செள்ளையார் பாடிய பாட்டில்,

*"ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனனே"* (புறம். 278)

என்று 99ஆம் குறளிலுள்ள "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும்" என்னும் தொடரும், குறிக்கப்பட்டுள்ளமை.

சான்றோன் என்னும் பெயர் அமைந்த ஒழுக்கமுள்ள மறவனையும் குறித்தலால்,

*"செங்களந் துழவுவோள் சிதைந்துவே றாகிய*
*படுமகன் கிடக்கை காணூஉ*
*ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே"* (புறம். 14: 12)

என்னும் புறப்பாட்டுப் பகுதி, "தன்மகனைச் சான்றோனெனக் கேட்ட தாய்" என்னுங் குறட்பகுதியொடும் முற்றும் பொருந்துவதே.

(4) கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் இயற்றப்பெற்ற திருச்சிற்றம்பலக் கோவை 400 துறைகளும் 25 கிளவித்தொகைகளுங் கொண்டிருக்க, திருக்குறட் கோவையாகிய இன்பத்துப்பால் 25 தலைப்பின்கீழ்க் கிளவித் தொகைப் பாகுபாடின்றித் துறைகளே கொண்டிருத்தல்.

தொல்காப்பியத்தில் ஏறத்தாழ 400 துறைகள் குறிக்கப்பட்டுள. அவற் றுட் சில திருக்கோவையில் இல்லாதன; சில பெயர் குறிக்கப் பெறாதன; சில நுண்வேறுபாடுகளைக் கொண்டன. திருக்கோவைக்குப் பிற்பட்டவற்றில் ஏறத்தாழ 45 துறைகள் கூடியுள்ளன. திருவள்ளுவர் அறநூன்முறையில் ஒருமனை மணம்பற்றிய இன்றியமையாத துறை களையே கூறினாரேனும், அவற்றின் சுருக்கமும் பெயர் முறையும் திருக்குறளின் முன்மையைத் தெளிவுறக் காட்டுவனவாம்.

(5) திருவள்ளுவரின் பிற்காலத் தொழிலாகத் தெரிகின்ற நெசவிற்கு நூலுதவினதாகச் சொல்லப்பெறும் ஏலேலசிங்கர் என்னும் சோணாட்டுக் கடல் வணிகர் காலம் கி.மு. இரண்டாம் நூற்றாண்டாயிருந்தமை.

(6) கிறித்துவிற்குப் பிற்பட்ட நூல்களை அல்லது நிகழ்ச்சிகளைப் பற்றித் திருக்குறளில் யாதொரு குறிப்புமின்மை.

கடைக்கழகச் செய்யுள்களில் கூறப்பெறும் யவனரைப்பற்றித் திருக்குறளில் ஒரு குறிப்புமின்மை கவனிக்கத்தக்கது.

தொல்காப்பியர் காலத்திற்குப் பிற்பட்ட தென்பதற்குச் சான்றுகள்:

(1) தொல்காப்பிய நூற்பாக்களையும் மக்கட் பகுப்பையும் திருவள்ளு வர் தழுவியிருத்தல்.

> ***"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த***
> ***மறைமொழி தானே மந்திரம் என்ப"*** **(1434)**

என்னும் தொல்காப்பிய நூற்பா,

> ***"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து***
> ***மறைமொழி காட்டி விடும்"*** **(28)**

என்னுங் குறளில் தழுவப்பெற்றுள்ளது.

> ***"எத்திணை மருங்கினும் மகடூஉ மடல்மேற்***
> ***பொற்புடை நெறிமை யின்மை யான"*** **(981)**

என்னும் தொல்காப்பிய நூற்பா,

*"கடலன்ன காம முழந்து மடலேறாப்*
*பெண்ணிற் பெருந்தக்க தில்"* (1137)

என்னுங் குறளில் தழுவப்பெற்றுள்ளது.

*"மாவும் மாக்களும் ஐயறி வினவே"* (1531)

*"மக்கள் தாமே ஆறறி வுயிரே"* (1532)

என்று தொல்காப்பியர் வகுத்ததற்கேற்பவே, திருவள்ளுவரும் மாந்தருட் பண்பட்டவரை மக்கள் என்றும் படாதவரை மாக்கள் என்றும் பிரித்துக் கூறியுள்ளார்.

எ-டு:

*"மரம்போல்வர் மக்கட்பண் பில்லா தவர்"* (997)

*"மக்களே போல்வர் கயவர்"* (1071)

*"கொலைவினைய ராகிய மாக்கள்"* (329)

*"செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்"* (420)

(2) *"இல்லதெ னில்லவள் மாண்பானா லுள்ளதெ*
*னில்லவள் மாணாக் கடை."* (53)

என்னுங் குறளில் வந்துள்ள ஆனால் என்னும் சொல்வடிவம் தொல்காப்பியர் காலச் செய்யுள் நடைக்கு ஏற்காமை.

(3) *"ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்*
*ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும்*
*வழக்கி னாகிய உயர்சொற் கிளவி*
*இலக்கண மருங்கிற் சொல்லா றல்ல"* (510)

என்னுந் தொல்காப்பிய நெறியீடு, கடைக்கழகச் செய்யுளிற் போன்றே திருக்குறளிலும் கைக்கொள்ளப் பெறாதிருத்தல்.

எ-டு:

*"நெருநற்றுச் சென்றாரெங் காதலர் யாமு*
*மெழுநாளே மேனி பசந்து."* (1278)

இவ் வுயர்வுப் பன்மை யாட்சியே 'மற்றையவர்கள்' (293) என்னும் இரட்டைப் பன்மையாட்சிக்கும் இடந்தந்தது.

(4) ***“எஞ்சா மண்நசை வேந்தனை வேந்தன்***
***அஞ்சுதகத் தலைச்சென் றடல்குறித் தன்றே.”*** (1002)

***“வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்***
***நாற்பெய ரெல்லை யகத்தவர் வழங்கும்***
***யாப்பின் வழிய தென்மனார் புலவர்”*** (1316)

என்று மூவேந்தரும் தலைமை குன்றாத தொல்காப்பியர் கால நிலைமைக்கு மாறாக,

***“பல்குழுவும் பாழ்செய்யு முட்பகையும் வேந்தலைக்குங்***
***கொல்குறும்பு மில்லது நாடு”*** (735)

என்று வேளிருங் கோசருமான குறும்பரால் மூவேந்தரும் அலைக்கப்பட்ட நிலைமையைத் திருக்குறள் குறிப்பாகக் கூறுதல்.

(5) ***“தினற்பொருட்டாற் கொல்லா துலகெனின் யாரும்***
***விலைப்பொருட்டா லூன்றருவா ரில்”*** (256)

என்று திருவள்ளுவர் புத்தமதக் கொள்கையைக் கண்டித்தல்.

புத்தர் கி.மு. ஆறாம் நூற்றாண்டினராயினும், புத்தமதம் அசோகனால் இந்தியாவிலும் வெளியிலும் பரப்பப்பட்ட காலம் கி.மு. 273- 236 ஆகும். அசோகனின் மகனும் (அல்லது உடன்பிறந்தானும்) வேறு நால்வரும் இலங்கைக்கு வந்து புத்த மதத்தைப் பரப்பின காலம் கி.மு. 247 - 207. அதன் பின்னரே அம் மதம் அங்கிருந்து தமிழகத்திற்கு வந்திருத்தல் வேண்டும். ஆதலால், கி.மு. 2ஆம் நூற்றாண்டிலேயே திருவள்ளுவர் அதைக் கண்டித் திருக்கக் கூடும்.

(6) திருவள்ளுவர் தம் நூலின் முதலதிகாரமாகிய முதற்பகவன் வழுத்தில், ‘மலர்மிசை யேகினான்’ (பூமேல் நடந்தான்), ‘பொறிவாயி லைந்த வித்தான்’ என்னும் அருகன் பெயர்களைக் கடவுட்கு ஆண்டிருத்தல்.

ஆருகதம் என்னும் சமணமதம் புத்தமதத்திற்குப் பின்னரே தமிழகத்துட் புகுந்தது.

மேற்காட்டிய இருவகைச் சான்றுகளால், திருவள்ளுவர் காலம் கி.மு. 2ஆம் நூற்றாண்டென்று கொள்வதே பொருத்தமாம். எனினும், 5ஆம் நூற்றாண்டு வரை கொள்ளவும் இடமுண்டாம்.

*பிறந்தவூர்:* இது இன்னதென்று தெரியவில்லை.

**பெற்றோர்:** இவர் இன்னாரென்று தெரியவில்லை. திருவள்ளுவர் யாளிதத்தன் என்னும் பிராமணனுக்கும் ஒரு சண்டாளப் பெண்ணிற்கும்

பிறந்தாரென்று கி.பி. 6ஆம் நூற்றாண்டினதாகச் சொல்லப்படும் ஞானாமிர்த மும், பகவன் என்னும் பிராமணனுக்கும் ஆதியென்னும் புலைச்சிக்கும் பிறந்தவரென்று பிற்காலத்துக் கபிலர் அகவலும் கூறுவன கொள்ளத்தகாத கட்டுக்கதைகளாகும்.

திருக்குறள் உலகம் போற்றும் ஒப்புயர்வற்ற பொது அறநூல் என்ப தைக் கண்டு பொறாது மனம் புழுங்கிய சில பிராமணர், முதற் குறளிலுள்ள ஆதிபகவன் என்னும் தொடரைப் பயன்படுத்திக்கொண்டு திருவள்ளுவரை ஒரு பிராமணனுக்குப் பிறந்தவராகவும் அதே சமையத்தில் ஓர் இழி குலத்தாராகவுங் காட்டல் வேண்டிக் கட்டிய கதைகளே மேற்கூறியவை என்க.

முதன்முதற் கடவுளைக் குறித்த பகவன் என்னும் சொல் பிற்காலத்திற் பெருந்தேவர்க்கும் சிறுதெய்வங்கட்கும் முனிவர்க்கும் பிராமணர்க்கும் வழங்கப்பட்டுத் தன் முதற்பொருள் குன்றியமையால் அதை நிறைவு படுத்தற்கு ஆதி என்னும் அடை கொடுக்க வேண்டியதாயிற்று. இதை ஆதிசங்கராச்சாரியார் என்பது போலக் கொள்க. முதற் சங்கராச்சாரியார் ஆதியென்னும் புலைச்சியை மணந்தவரல்லர்.

ஆதிபகவன் என்பது, ஆதியாகிய பகவன் என்றாவது ஆதிப் பகவன் என்றாவது விரியும்.

யாளிதத்தனின் மனைவி, அவனால் முன்பு வெட்டுண்டு கிணற்றிலே தள்ளப்பட்ட ஓர் அறிவில்லாத சண்டாளப் பெண் என்றும் பின்பு ஒரு பிராமணன் அவளை எடுத்துக் கொண்டுபோய் உத்தரதேசத்தில் வளர்த்து அவளை மீண்டும் யாளிதத்தனுக்கே பிராமண மனைவியாகக் கொடுத்தா னென்றும், ஞானாமிர்த வுரை கூறும், கபிலர் அகவலோ, பகவன் மனைவி யாகிய ஆதி யென்னும் புலைச்சி கருவூர் மாநகரத்தாள் என்று குறிக்க, அதன் உரையான கதை, அவளும் அவனால் முன்பு வெட்டுண்டா ளென்று குறிப்பினும், பலநாட் பின்னர் அவளை அவன் கருவூர்ச் சத்திரத்தில் ஓரிர விற் கண்டு அடையாளந் தெரியாமல் அவளைத் தானே மனைவியாகக் கொண்டான் என்று கூறும். இவ் வேறுபாடே இவற்றின் கட்டுத்தன்மையைக் காட்டுதல் காண்க.

***உடன்பிறந்தார்:*** இவருக்கு உடன்பிறந்தார் இருந்ததாகத் தெரிய வில்லை.

யாளிதத்தனின் மனைவி பிராமணத்தியாயிருந்து பிள்ளைகளைப் பெற்றாளென்று ஞானாமிர்த வுரையும், ஆதியென்னும் புலைச்சி மறுநாட்

பகலில் அடையாளங் கண்டுபிடிக்கப்பட்டபின், பிறக்கும் பிள்ளைகளை யெல்லாம் உடனுடன் விட்டுவிட்டு வரவேண்டுமென்னும் நிலைப்பாடு பற்றியே நிலையான மனைவியாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டாளென்று கபிலரகவல் பற்றிய கதையும் வேறுபட்டுக் கூறினும், பிறந்த பிள்ளைகள் வள்ளுவருள்ளிட்ட கபிலர் முதலிய எழுவர் என்பதில் மட்டும் ஒன்றுபடு கின்றன.

*"கபில ரதிகமான் கான்குறவர் பாவை*
*முகிலனைய கூந்த லுறுவை – நிகரில்லா*
*வள்ளுவ ரௌவை வயலூற்றுக்காட்டிலுப்பை*
*யெள்ளி லெழுவ ரிவர்"*

என்பது ஞானாமிர்தவுரை யடிக்குறிப்பு.

*"யாளி – கூவற் றூண்டு மாதப் புலைச்சி*
*காதற் காசனி யாகி மேதினி*
*யின்னிசை எழுவர்ப் பயந்தோ ளீண்டே"*

என்பதே ஞானாமிர்த மூலம்.

*"அருந்தவ மாமுனி யாம்பக வற்குக்*
*கருவூர்ப் பெரும்பதிக் கட்பெரும் புலைச்சி*
*ஆதி வயிற்றினி லன்றவ தரித்த*
*கான்முளை யாகிய கபிலனும் யானே*
*என்னுடன் பிறந்தவ ரெத்தனை பேரெனில்*
*ஆண்பால் மூவர் பெண்பால் நால்வர்*
*..........................................................*
*ஊற்றுக் காடெனும் ஊர்தனிற் றங்கியே*
*வண்ணா ரகத்தில் உப்பை வளர்ந்தனள்*
*காவிரிப்பூம் பட்டினத்திற் கள்விலைஞர் சேரியில்*
*சான்றா ரகந்தனில் உறுவை வளர்ந்தனள்*
*நரப்புக் கருவியோர் நண்ணிடு சேரியில்*
*பாண ரகத்தில் ஔவை வளர்ந்தனள்*
*குறவர் கோமான் கொய்தினைப் புனஞ்சூழ்*
*வண்மலைச் சாரலில் வள்ளி வளர்ந்தனள்*
*தொண்டைமண் டலத்தில் வண்டமிழ் மயிலைப்*
*பறைய ரிடத்தில் வள்ளுவர் வளர்ந்தனர்*
*அரும்பார் சோலைச் கரும்பார் வஞ்சி*

*அதிக னில்லிடை அதிகமான் வளர்ந்தனன்*
*பாரூர் நீர்நாட் டாரூர் தன்னில்*
*அந்தணர் வளர்க்க யானும் வளர்ந்தேன்"* (99 – 119)

என்பது கபிலர் அகவல்.

இதன் புரைமையையும் பொருந்தாமையையும் அறிஞர் அறிந்து கொள்க.

***மனைவியார்:*** திருவள்ளுவர் மனைவியார் வாசுகி யென்னும் பெயர் கொண்ட கற்பரசியார் என்றும், மார்க்கசகாயர் என்னும் வேளாளரின் மகளார் என்றும், அவ் வேளாளர் செய்த பயிர்பச்சைகளைத் தாக்கிய நோயைத் திருவள்ளுவர் நீக்கியதால் அவர் தம் மகட்கொடையைப் பெற்றா ரென்றும், அவ் வம்மையாரை மணக்குமுன்பே அவர் செய்த ஓர் இறும்பூது செயலால் அவர் கற்பைத் திருவள்ளுவர் கண்டாரென்றும், நீண்ட கால வரலாறு வழங்கி வருகின்றது. இதில் நம்பத்தகாதது ஒன்றுமில்லை. இறும்பூது செயல் கற்பினாலும் நிகழலாம்; இறைவன் அருளிய ஈவினாலும் நிகழலாம்; இன்றும் சோழநாட்டு மருதூரிலுள்ள நெசவுத்தொழில் செய்யும் தெய்வயானை யம்மையார் பற்பல இறும்பூதுகள் செய்துவருவதாக, புலவர் மறை. திருநாவுக்கரசர் எழுதிய மறைமலையடிகள் வரலாற்றில் வரையப் பெற் றிருத்தல் காண்க.

நாகன் - நாகி என்பன ஆண்பாற் பெண்பாற் பெயர்களாகத் தமிழர்க் குத் தொன்றுதொட்டு இடப்பட்டு வருவதனாலும், வாசுகி என்பது வடமொழித் தொல்கதைப்படி ஒரு பாம்பின் பெயராய் இருத்தலாலும், திருவள்ளுவர் மனைவியாரின் பெயர் ஒருகால் நாகி என்று இருந்திருக்கலாம் என்று மறை மலையடிகள் கருதுவர்.

நல்கூர் வேள்வியார் என்னும் புலவர் பெயரிலுள்ள திருவள்ளுவ மாலைப் பாவில் மாதாநுபங்கி யென்றிருக்குஞ் சொல், தாய்போ லொழுகு பவள் என்று பொருள்படலாமேயன்றி, வள்ளுவரின் மனைவியார் பேரா யிருந்திருக்க முடியாது.

***மக்கள்:*** திருவள்ளுவர்க்கு மக்கள் இருந்ததாகத் தெரியவில்லை.

***தொழில்:*** திருவள்ளுவர் தம் நூலியற்றுமுன் பாண்டியனின் முரசறை விளம்பர அதிகாரியாய் இருந்திருக்கலாம். பல்துறைப் பன்னூல்களைக் கற்கவும் அரசியல் வினைகளை நெருங்கி யறியவும் அது மிகுந்த வாய்ப்

பளித்திருக்கும். அவர் நூல் ஆரியத்தை வன்மையாகக் கண்டிப்பதால், அது இயற்றப்பெற்றபின் பிராமணர் கிளர்ச்சியாலும் அரண்மனைப் பிராமணப் பூசாரியின் தூண்டுதலாலும் அவர் தம் பதவியை இழந்திருக்க வேண்டும்.

அதன்பின், அவர் நெடுந்தொலைவிலுள்ள மயிலை சென்று நெசவுத் தொழிலை மேற்கொண்டிருக்கலாம். அல்லாக்கால் ஏலேலசிங்கன் தொடர் பிற்கும், பட்டப்பகலில் நெசவுக்குழலைத் தேட வாசுகியம்மையார் தம் கணவர் சொற்படி விளக்குக் கொண்டுவந்தார் என்னும் கதைக்கும், இடமில்லை.

*வாழ்ந்த இடம்:* திருவள்ளுவர் முன்பு மதுரையிலும் பின்பு மயிலையிலும் வாழ்ந்ததாகத் தெரிகின்றது.

அவர் பாண்டிநாட்டில் நீண்டகாலம் வாழ்ந்திராவிடின், ஊருணி, பைய, வாழ்க்கைத்துணை என்னுஞ் சொற்களை ஆண்டிருக்கவும் அண்மை யிலுள்ள சேரநாடு சென்று அக்காலத்து நம்பூதிரிப் பிராமணக் கன்னிகையர் சவச்சடங்கை யறிந்து,

> ***"பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்க மிருட்டறையி***
> ***லேதில் பிணந்தழீஇ யற்று"*** (913)

என்னும் உவமையை அமைத்திருக்கவும் முடியாது.

> ***"இப்பக்க – மாதாநு பங்கி மறுவில் புலச்செந்நாப்***
> ***போதார் புனற்கூடற் கச்சு"***

என்பதும் ஒருவகையில் திருவள்ளுவரின் மதுரை வாழ்க்கையை உணர்த்தும்.

*சமயம்:* ஆரியர் வருமுன்னரே, தமிழர் சமயத்துறையில் தத்தம் அறிவுநிலைக் கேற்ப, சிறுதெய்வ வணக்கத்தாரும் பெருந்தேவ வழி பாட்டாரும் கடவுள் மதத்தாரும் ஆக முந்நிலைப்பட்டிருந்தனர்.

இம்மைப் பயனையே அளிப்பனவாகக் கருதப்பெறும் இடத்தெய் வங்களும் பூதத்தெய்வங்களும் நடுகல் தெய்வங்களும் சிறு தெய்வங்களாம். இம்மையில் மழையையும் மறுமையில் விண்ணுலக வின்பத்தையும் அளிப்பவனாகக் கருதப்பெற்ற வேந்தன் பெருந்தேவனாம். இம்மையில் இவ்வுலக இன்பத்தோடு மறுமையில் பிறவி நீக்கப் பேரின்ப வீட்டையும் அருள்பவனாகக் கருதப்பெற்ற இறைவன் எல்லாவற்றையுங் கடந்துநிற்கும்

கடவுளாம். முதற்கண் சிறுதெய்வ வணக்கமாகவிருந்து பின்பு பெருந்தேவ வழிபாடாக வுயர்ந்த சேயியமும் மாலியமும் இறுதியில் முறையே சிவனியம் திருமாலியம் என்னும் வீடுபேற்று மதங்களாக வளர்ந்துவிட்டன. ஆயின், கடவுள் மதத்தார் கடவுள் என்னுஞ் சொற்கேற்ப அவ் விரண்டிற்கும் பொதுவா யிருக்க வேண்டியதாயிற்று.

"அங்கிங் கெனாதபடி யெங்கும்பிர காசமாய்", "பண்ணே னுனக்கான பூசை" என்னும் தாயுமானவர் பாட்டுகளும், "உளியிட்ட கல்லையு மொப் பிட்ட சாந்தையும்", "சொல்லிலும் சொல்லின் முடிவிலும்", "எட்டுத் திசை யும் பதினாறு கோணமும்" என்னும் பட்டினத்தார் பாட்டுகளும் "நட்ட கல்லைத் தெய்வ மென்று" என்னும் சிவ வாக்கியப் பாடலும் கடவு ளியல்பைத் தெளிவாகக் காட்டும்.

சிவனியமும் திருமாலியமும் முறையே சிவன் என்னும் பெயராலும் திருமால் என்னும் பெயராலும் கடவுளையே வணங்கும் வீடுபேற்று மதங்களாம். ஆதலால் கிறித்தவமும் இசலாமும் போலக் கொள்கையால் வேறுபடினும் தெய்வத்தால் ஒன்றாம். எனினும், உருவ வணக்கங் கொள்வ தால் வீடுபேற்று மதங்களேயன்றிக் கடவுள் மதமாகா.

கடவுட்கொள்கையும் கோயில் அல்லது உருவவழிபாடு மில்லாத ஆரியர் சிவனியம், திருமாலியம் என்னும் இரு தமிழ மதங்களையும் ஆரியப்படுத்தற்கும், தம்மினு முயர்ந்த தமிழரை அடிமைப்படுத்தற்கும் கடவுள் முத்தொழிலோன் என்னுங் கொள்கையைப் பயன்படுத்திக் கொண்டு, பிரமன் என்னும் ஒரு தெய்வத்தைப் புதிதாகப் படைத்து, அப் பிரமன் படைப்போனென்றும் திருமால் காப்போனென்றும் சிவன் அழிப் போனென்றும் முத்திருமேனிக் கொள்கையைத் தோற்றுவித்துவிட்டனர்.

சிவனையும் திருமாலையும் சிவனியரும் திருமாலியரும் முத்தொழில் இறைவனென்றே கொள்வதாலும், முத்திருமேனியர்க்கு முதல்வனொரு வன் வேண்டியிருப்பதினாலும், தமிழ் அறிஞரும் கடவுள் மதத்தாரும் முத்திருமேனிக் கொள்கையை ஒப்புக்கொள்ளவில்லை.

கடவுள் மதமாவது, காலமும் இடமும்போல முதலும் முடிவும் உருவமும் நிறமுமின்றி, இயல்பாகவே எங்கும் நிறைந்தவனாகவும், எல்லாம் வல்லவனாகவும், எல்லாம் அறிந்தவனாகவும், எல்லாம் உடைய வனாகவும், முற்றின்பனாகவும், முழுத் தூயனாகவும், எல்லையில்லா அருளனாகவும், எல்லா உலகங்களையும் படைத்துக் காத்தழிப்பவனாகவு

மிருந்து ஒப்புயர்வற்று மனமொழி கடந்த கடவுளை, உள்ளத்தில் எங்கும் என்றும் தொழுது, எல்லா வுயிர்களிடத்தும் அன்பும் அருளும் பூண் டொழுகுதலேயாம். திருவள்ளுவர் சமயமும் அதுவே.

இதனாலேயே அவர் எச் சமயத்தையுந் தழுவாது எல்லாச் சமயங் கட்கும் பொதுவாகக் கூறியதும், எல்லாச் சமயங்களும் கூறும் இறைவன் பெயர்களையும் கடவுட்குப் பொருத்தியதும் என்க.

***வேறுநூல்:*** திருவள்ளுவர் வேறுநூல் செய்ததாகத் தெரியவில்லை. இவர் பெயரால் வழங்கும் ஒருசில இவர் பெயரைத் திருட்டுத்தனமாகக் கொண்டனவே.

## 5. *திருவள்ளுவர் காலக் குமுகாய (சமுதாய) நிலை*

திருவள்ளுவர் காலத்தில் ஆரியம் வேரூன்றிவிட்டது. நிறம்பற்றிய நால்வகை வரணப் பாகுபாடும் புகுத்தப்பட்டுவிட்டது. தமிழரெல்லாரும் பிராமணருக்குத் தாழ்ந்தவராயினர். பார்ப்பாரென்று சொல்லப்பட்ட இல்வாழ்க்கைப் பிராமணரும் தம்மை அந்தணரென்று கூறிக்கொண்டனர். தொழில்பற்றி யேற்பட்ட குலங்களும் பிறப்புப்பற்றிப் பெயர்பெறலாயின. புலவருள்ளும் பிராமணர் உயர்ந்தவர் என்னுங் கருத்தெழுந்தது, அறங்க ளெல்லாம் பொதுவாகப் பிராமணர்க்கே செய்யப்பட்டன. தமிழருக்குள் உறவுக்கலப்பும் ஒற்றுமையும் வரவரக் குறைந்துவந்தன. மூவேந்தரும் மன்னர் சிலரும் ஆரியச் சார்பாயிருந்ததினால் பிராமணியத்தைக் கண்டிக்க எவருக்கும் வாயில்லாமற் போயிற்று. அதனாற் புலவரும் அடிமையரா யினர். பிராமணர் தெய்வப் பிறப்பினர் என்னுங் கருத்து, தமிழருக்குள் வளர்ந்து வந்தது. அதனால் வடசொற்கள் தமிழில் தாராளமாகக் கலக்கவும் தமிழ்ச்சொற்கள் மறையவும் புதுத் தமிழ்ச்சொற்கள் தோன்றா திருக்கவும், வழிவகுக்கப்பட்டுவிட்டது.

## 6. *திருவள்ளுவர் காலச் சமய நிலை*

ஆயிரமாண்டாக ஆரியம் தமிழகத்தில் இருந்துவந்ததினால், சமயத் துறை பெரும்பாலும் ஆரியவண்ணமாக மாறிவிட்டது. அரண்மனைகளிலும் கோயில்களிலும் செல்வர் மாளிகைகளிலும், வழிபாடும் சடங்குகளும் பிராமணராற் சமற்கிருதத்திலேயே நடத்தப்பட்டன. அரசர் ஆரியவேள்வி களை வேட்கத் தலைப்பட்டுவிட்டனர். துறவினால் மட்டும் வீடுபேறு கூடுமென்றும், அத் துறவு பிராமணனுக்கே யுரியதென்றும், ஆதன்கள் (ஆன்மாக்கள்) பல அஃறிணைப் பிறப்புப் பிறந்து அதன்பின் உயர்திணைப்

பிராமணனாகப் பிறக்கமுடியுமென்றும், இறைவன் என்றும் பிராமண வடிவிலேயே காட்சிளிப்பனென்றும், ஆரியக் கருத்துகள் தமிழருள்ளத்திற் பதிக்கப்பட்டன. தமிழத் தெய்வங்களை ஆரியத் தெய்வங்களாக மாற்று தற்கும் தமிழரை அடிமடைய் ராக்குதற்கும் பல புராணங்கள் இயற்றப்பட்டன. தமிழர் கொண்முடிபு (சித்தாந்த) நூல்களிலும் ஆரியக் கருத்துகளும் சொற்களும் சேர்க்கப்பட்டன.

இங்ஙனம் ஆரியத்தால் ஏற்பட்ட அவலங்கள் போதாவென்று, புத்தம் சமணம் முதலிய துன்பமதங்களும் உலகாயதம் பூதம் முதலிய சிற்றின்ப மதங்களும், தமிழகத்தை அளவிறந்து அலைக்கழித்தன.

## 7. திருவள்ளுவர் திருக்குறளியற்றிய நோக்கம்

ஆரியத்தாலும் நம்பா (நாத்திக) மதங்களாலும், சிறப்பாக ஆரியத்தால், குமுகாயத்துறையிலும் சமயத்துறையிலும் தமிழகத்திற்கு ஏற்பட்ட எல்லாக் கேடுகளும் பாடுகளும் துன்பங்களும் தொல்லைகளும் நீங்கி எல்லாரும் இன்பமாக வாழவேண்டு மென்னும் இன்னருள் நோக்கங் கொண்டே, தெள்ளிய மனமும் ஒள்ளிய அறிவும் திண்ணிய நெஞ்சும் நுண்ணிய மதியும் கொண்ட திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார் என்க.

*"அந்தண ரென்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்*
*செந்தண்மை பூண்டொழுக லான்",* (30)

*"அறத்தாற்றின் இல்வாழ்க்கை யாற்றின் புறத்தாற்றிற்*
*போஒய்ப் பெறுவ தெவன்",* (46)

*"ஒழுக்க முடைமை குடிமை யிழுக்கம்*
*இழிந்த பிறப்பாய் விடும்",* (133)

*"மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான்*
*பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்",* (134)

*"அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்*
*உயிர்செகுத் துண்ணாமை நன்று",* (259)

*"ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்பர்*
*காவலன் காவா னெனின்",* (560)

*"பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா*
*செய்தொழில் வேற்றுமை யான்",* (972)

*"சுழன்றுமேர்ப் பின்ன துலகம் அதனால்*
*உழந்தும் உழவே தலை,"* (1031)

*"உழுவா ருலகத்திற் காணியஃ தாற்றா*
*தெழுவாரை யெல்லாம் பொறுத்து"* (1032)

என்பன ஆரியத்தைக் கண்டித்தனவாகும். பிறவற்றைக் கடிந்ததை ஆங் காங்கு நூலுட் காண்க.

## 8. திருக்குறட் சிறப்பு

உலகியல் இனிது நடைபெறுதற்கு இன்றியமையாத நூல் நிலைமை யும் இல்லறமும் துறவறமும் அரசியலும் கணவன் மனைவியர் காமவின்ப மும்பற்றி, உண்மையாகவும் நடுநிலைமையாகவும் எல்லார்க்கும் ஒப்ப முடிந்த வகையிலும், தலைசிறந்த பாவாலும் சிறந்த சொற்களாலும் இலக்கண வழுவின்றி இருவகை யணிகளுடன், சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் நூல் திருக்குறள் ஒன்றே. இருமைக்கும் உதவும் விழுமிய பொருளை அணிமிக்க குறள்வெண்பாவாற் பாடியிருப்பது, பன்மணி பதித்த ஓவிய வேலைப்பாட்டுப் பொற்கலத்தில் அரசர்க்குரிய அறுசுவை புண்டியைப் படைத்தாற் போலும். குறள் வெண்பாவால் ஆனதினாலும், வீடுபேற்று வழியைக் கூறி மறைத்தன்மை பெற்றதினாலும், திருக்குறள் என அடையடுத்த ஆகுபெயர் பெற்றது.

இருவகை மொழிநடையுட் சிறந்தது செய்யுள். இருவகைச் செய்யுளுட் சிறந்தது பா. நால்வகைப் பாவுட் சிறந்தது வெண்பா.

*"காசினியிற் பிள்ளைக் கவிக்கம் புலிபுலியாம்*
*பேசும் உலாவிற் பெதும்பைபுலி – ஆசு*
*வலவர்க்கு வண்ணம் புலியாமற் றெல்லாப்*
*புலவர்க்கும் வெண்பாப் புலி."* (தனிப்பாடல்)

ஐவகை வெண்பாவுட் குறுகியது குறள் வெண்பா. பயனில் சொல் பகர்வானைப் பதடியென்னும் திருவள்ளுவர், சொற்சுருக்கம்பற்றிக் குறள் வெண்பாவையே தம் நூற்குத் தெரிந்துகொண்டார்.

திருவள்ளுவரின் பாச்சிறப்பை,

*"பூவிற்குத் தாமரையே பொன்னுக்குச் சாம்புனதம்*
*ஆவிற் கருமுனியா யானைக் கமரரும்பல்*
*தேவிற் றிருமால் எனச்சிறந்த தென்பவே*
*பாவிற்கு வள்ளுவர்வெண் பா"*

என்னும் திருவள்ளுவ மாலைப் பாவும்; நூற்சிறப்பை,

*"நிழலருமை வெய்யிலிலே நின்றறிமி னீசன்*
*கழலருமை வெவ்வினையிற் காண்மின் – பழகுதமிழ்ச்*
*சொல்லருமை நாலிரண்டிற் சோமன் கொடையருமை*
*புல்லரிடத் தேயறிமின் போய்."* (ஔவையார் தனிப்பாடல்)

*"பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ பாரிலுள்ள*
*நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ."*

(பரிமேலழக ருரைச்சிறப்புப் பாயிரம்)

*"ஆலும் வேலும் பல்லுக் குறுதி*
*நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி"* (பழமொழி)

என்பனவும்; புலமைச் சிறப்பை,

*"புலவர் திருவள் ளுவரன்றிப் பூமேல்*
*சிலவர் புலவரெனச் செப்பல் – நிலவு*
*பிறங்கொளிமா லைக்கும் பெயர்மாலை மற்றும்*
*கறங்கிருள்மா லைக்கும் பெயர்"*

என்னும் திருவள்ளுவமாலைப் பாவும்; கருத்துப் பரப்பை,

*"மாலுங் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியான்*
*ஞால முழுதும் நயந்தளந்தான் – வாலறிவின்*
*வள்ளுவருந் தங்குறள்வெண் பாவடியால் வையத்தார்*
*உள்ளுவவெல் லாமளந்தா ரோர்ந்து"*

என்னும் திருவள்ளுவமாலைப் பாவும்; சுருங்கச் சொல்லலை,

*"தினையளவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட*
*பனையளவு காட்டும் படித்தால் – மனையளகு*
*வள்ளைக் குறங்கும் வளநாட வள்ளுவனார்*
*வெள்ளைக் குறட்பா விரி"*

என்னும் திருவள்ளுவமாலைப் பாவும்; விளங்கவைத்தலை,

*"பரந்த பொருளெல்லாம் பாரறிய வேறு*
*தெரிந்து திறந்தொறுஞ் சேரச் – சுருங்கிய*
*சொல்லால் விரித்துப் பொருள்விளங்கச் சொல்லுதல்*
*வல்லாரார் வள்ளுவரல் லால்"*

என்னும் திருவள்ளுவமாலைப் பாவும் உணர்த்தும்.

இங்ஙனம் திருக்குறள் எல்லா வகையிலும் ஒப்புயர்வற்ற உலகத் தமிழ் நூலாம். அதனால், முப்பொருண்மைபற்றி முப்பால், முப்பால் நூல் என்றும்; ஆசிரியனை நோக்கி வள்ளுவம், வள்ளுவநூல், வள்ளுவப்பயன் என்றும்; உண்மை யுரைத்தல்பற்றிப் பொய்யா மொழி என்றும்; மந்திரத்தன்மைபற்றி வள்ளுவர் வாய்மொழியென்றும், மறைத்தன்மை பற்றித் தமிழ்மறை, பொதுமறை என்றும், தெய்வத்தன்மைபற்றித் தெய்வ நூல் என்றும்;

***"வேம்புங் கடுவும் போல வெஞ்சொல்***
***தாங்குத லின்றி வழிநனி பயக்குமென்***
***றோம்படைக் கிளவியின் வாயுறுத்தல்"*** (தொல். செய். 108)

பற்றி வாயுறைவாழ்த்து என்றும் பெயர் பெற்றுள்ள தென்க.

**முதனூன்மை:** திருக்குறள் எல்லாவகையிலும் தூய முதனூலாகும். அறம்பொரு ளின்பம் என்னும் முப்பொருளையும்பற்றித் திருக்குறள் முறையிற் கூறும் வடநூல் ஒன்றுமில்லை. நான்முகன் (பிரமன்) முதலில் 'திரிவர்க்கம்' என்னும் பெருநூலைச் செய்தானென்றும், அதை வியாழனும் (பிருகற்பதி) வெள்ளியும் (சுக்கிரன்) சுருக்கி முறையே பார்கற்பத்தியம்,, சுக்கிரநீதி என்னும் நூல்களை இயற்றினரென்றும், திருவள்ளுவர் 'திரிவர்க்கம்' போல் அறம்பொரு ளின்பம்பற்றி நூல் செய்ததனாலேயே நான்முகனின் தோற்றரவு (அவதாரம்) எனக் கருதப் பெற்றாரென்றும், தமிழ்ப் பற்றில்லாத பிராமணத் தமிழ்ப் புலவர் கூறுவர். ஒருவரோ பலரோ கட்டிப் பாடிய திருவள்ளுவ மாலையில்,

***"நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகத்தோன்***
***தான்மறைந்து வள்ளுவனாய்த் தந்துரைத்த – நூன்முறை"***

என்று உக்கிரப்பெருவழுதி பெயரிலுள்ள பாவும்,

***"மெய்யாய வேதப் பொருள்விளங்கப் – பொய்யாது***
***தந்தா னுலகிற்குத் தான்வள் ளுவனாகி***
***யந்தா மரைமே லயன்"***

என்று காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் பெயரிலுள்ள பாவும், எல்லா அறநூல்களையும் மறைநூல்களையும் ஆரியவேத வழிநூலாகக் கொள்ளும் பண்டை மரபுபற்றிக் கூறியதைக் கொண்டு, அவர் அங்ஙனம் கூறுகின்றார் போலும்!

மேற்காட்டிய பாப் பகுதிகளில் நான்மறையென்றும் வேதமென்றும் குறித்திருக்கின்றதே யொழியத் திரிவர்க்கமென்று குறிக்கப்படவில்லை. இதற்கு முற்றும் மாறாக,

*"தானே முழுதுணர்ந்து தண்டமிழின் வெண்குறளால்*
*ஆனா வறமுதலா வந்நான்கும் – ஏனோருக்*
*கூழி னுரைத்தாற்கு மொண்ணீர் முகிலுக்கும்*
*வாழியுல கென்னாற்று மற்று"*

எனவுள்ளது நக்கீரர் பெயரிலுள்ள பாட்டு.

நான்முகன் தேவியாகச் சொல்லப்படும் நாமகள் பெயரிலுள்ள பாட்டு,

*"நாடா முதனான் மறைநான் முகனாவிற்*
*பாடா விடைப்பா ரதம்பகர்ந்தேன் – கூடாரை*
*யெள்ளிய வென்றி யிலங்கிலைவேன் மாறபின்*
*வள்ளுவன் வாயதென் வாக்கு"*

என்பது. இதிலும் திரிவர்க்கக் குறிப்பில்லை.

மேலும், திருவள்ளுவர் முப்பாலால் நாற்பொருளுங் கூறினாரேயன்றி, முதல் முப்பொருளை மட்டும் கூறினாரல்லர். மக்களால் இயற்றப்பட்ட முப்பானூல் வடமொழியில் இல்லாததினாலேயே, 'திரிவர்க்கம்' என்பது நான்முகனால் இயற்றப்பெற்ற தென்றும், "ஓடிப்போன முயல் பெரிய முயல்" என்பதற்கொப்ப அது 'மகாசாஸ்திரம்' என்றும் கூறுவாராயினர் என்க.

இனி, கி.மு. நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த சாணக்கியரும் அவர் மாணவராகிய காமந்தகரும் எழுதிய பொருள்நூற் கருத்துகள் திருக்குறளிற் பயின்று வருவதால், அதன் பொருட்பாலுக்கு வடமொழி 'அருத்த சாத்திரம்' முதனூலென்பர் தமிழ்ப் பகைவரும் போலித் தமிழரும்.

"தொன்றுதொட்டு வருதல் சேர சோழ பாண்டிய ரென்றாற் போலப் படைப்புக்காலந் தொடங்கி மேம்பட்டு வருதல்" என்று பரிமேலழகராலும் பழைமை கூறப்படும் மூவேந்தர் குடிகளும், அவற்றுள்ளும் சிறப்பாக,

*"பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்*
*குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள*
*வடதிசைக் கங்கையு மிமயமுங் கொண்டு*
*தென்றிசை யாண்ட தென்னவன்"* (சிலப். 11 : 19–22)

குடி, வரலாற்றிற் கெட்டாத தொன்றுதொட்டுத் தென்னாட்டை யாண்டு வருவதாலும்,

*"ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து*
*வேண்டும் பனுவற் றுணிவு",*

*"பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர்*
*தொகுத்தவற்று ளெல்லாந் தலை",*

*"மதிநுட்பம் நூலோ டுடையார்க் கதிநுட்பம்*
*யாவுள முன்னிற் பவை",*

*"பொச்சாப்பார்க் கில்லை புகழ்மை யதுவுலகத்*
*தெப்பானூ லோர்க்குந் துணிவு"*

என்று திருக்குறள் பல்துறை நூல்களையுஞ் சுட்டுவதாலும்,

*"இழுமென் மொழியான் விழுமியது நுவலினும்*
*பரந்த மொழியான் அடிநிமிர்ந் தொழுகினும்*
*தோலென மொழிப தொன்மொழிப் புலவர்."* (1985)

என்னுந் தொல்காப்பிய நூற்பா, கி.மு. ஏழாம் நூற்றாண்டிற்கும் முற்பட்ட அறம்பொரு ளின்ப வீட்டு நூல்களைக் குறிப்பதாலும்,

*"ஏரண முருவம் யோகம் இசைகணக் கிரதஞ் சாலம்*
*தாரண மறமே சந்தத் தம்பநீர் நிலமு லோகம்*
*மாரணம் பொருள்என் றின்ன மானநூல் யாவும் வாரி*
*வாரணங் கொண்ட தந்தோ வழிவழிப் பெயரும் மாள"*

என்று ஒரு பழந்தனிச் செய்யுள் கூறுவதாலும்,

திருவள்ளுவர் வேந்தர்க்கு உள்படுகருமத் தலைவராயிருந்ததாகத் தெரிவதனாலும், அவர் திருக்குறள் இயற்றியதற்கு வடநூற்றுணை எத் துணையும் வேண்டியதா யிருந்ததில்லையென, அவர் நூலை வழிநூலென் பார் கூற்றை மறுக்க.

## முழுநிறைவு

அறம்பொரு ளின்பம் வீடென்னும் நாற்பொருளையும்பற்றி விளக்க மாகக் கூறுவதனாலும், ஒவ்வோர் அதிகாரத்திலும் அதற்குரிய பொரு ளைப்பற்றிய எல்லாக் கருத்துகளையுங் கொண்டிருப்பதனாலும், திருக்குறள் முழுநிறைவான நூலாகும்.

"அகர முதல" என்று தமிழ் நெடுங்கணக்கின் முதலெழுத்தில் தொடங்கி, "முயங்கப் பெறின்" என்று அதன் இறுதியெழுத்தில் முடிந் திருப்பதும், திருக்குறளின் முழுநிறைவைக் காட்டும்.

*"ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங்குறளும்*
*பாயிரத்தி னோடு பகர்ந்ததற்பின் – போயொருத்தர்*
*வாய்க்கேட்க நூலுளவோ மன்னு தமிழ்ப்புலவ*
*ராய்க்கேட்க வீற்றிருக்க லாம்."* (திருவள்ளுவமாலை)

## உலகப் பொதுமை

திருக்குறள் தமிழ்நாட்டிற்கு மட்டுமன்றி உலக முழுமைக்கும் ஒத்ததென்பது எல்லார்க்கும் ஒப்ப முடிந்ததே. இதுபற்றியே "வள்ளுவன் தன்னை உலகினுக் கேதந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என்று பாடினார் பாவலர் சுப்பிரமணிய பாரதியாரும்.

வாழ்க்கைத்துறையிலும் ஆட்சித்துறையிலும் மட்டுமன்றிச் சமயத் துறையிலும் பொதுவாயிருப்பதால் பொதுமறை யெனப்பட்டது.

*"ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனின்*
*அன்றென்ப ஆறு சமயத்தார் – நன்றென*
*எப்பா லவரும் இயைபவே வள்ளுவனார்*
*முப்பால் மொழிந்த மொழி."* (திருவள்ளுவமாலை)

## காலவரம்பின்மை

திருக்குறள் இத்துணைக் காலந்தான் அல்லது இன்ன நூற்றாண்டு வரைதான் பயன்படுமென்று எவருஞ் சொல்லுதற்கிடமின்றி, எக்காலத் திற்கும் ஏற்றதாயிருப்பதும் அதன் ஏற்றங்களுள் ஒன்றாம்.

கோவரசும் (Monarchy), குடியரசும் (Democracy), மக்களாட்சியும் (Republic), கூட்டுடைமையும் (Socialism) நீங்கி உலகெங்கும் பொது வுடைமை (Communism) வரினும் அதற்கும்,

*"பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர்*
*தொகுத்தவற்று ளெல்லாந் தலை",* (322)

*"பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னுந்*
*தீப்பிணி தீண்ட லரிது",* (227)

*"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து*
*கெடுக வுலகியற்றி யான்"* (1062)

என்னுங் குறள்கள் இடந்தரும் என்க.

## மறையியல்

திருக்குறள் இம்மைக்குரிய ஒழுக்க வரம்பு கூறும் அறநூலாக மட்டுமன்றி, மறுமையில் உயர்பிறப்போ விண்ணின்பமோ வீட்டின்பமோ பெறுதற்குரிய வழிகாட்டும் மறைநூலாகவு மிருப்பதால், தமிழ்மறை, பொது மறை, வள்ளுவர் வாய்மொழி, தெய்வநூல் எனப் பெயர் பெற்றுள்ளது.

*"இம்மை மறுமை யிரண்டு மெழுமைக்குஞ்*
*செம்மை நெறியிற் றெளிவுபெற – மும்மையின்*
*வீடவற்றி னான்கின் விதிவழங்க வள்ளுவனார்*
*பாடின ரின்குறள்வெண் பா."* (திருவள்ளுவமாலை)

## இயல்வரையறைச் சிறப்பு

பொருள்கட்டும் பண்புகட்டும் வினைகட்டும் இயல் வரையறை (Definition) கூறுவதில் திருக்குறள் தலைசிறந்ததாகும்.

*"அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்*
*செந்தண்மை பூண்டொழுக லான்",* (30)

*"வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றுந்*
*தீமை யிலாத சொலல்",* (291)

*"உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை*
*அற்றே தவத்திற் குரு"* (261)

## நவில்தொறும் நயமுடைமை

இதுவரை பகுதிக்கும் முழுமைக்கும் சுருக்கமாகவும் பெருக்கமாகவும் திருக்குறட்குத் தோன்றியுள்ள உரைகள் ஏறத்தாழ நூறும், அது மொழி பெயர்க்கப் பெற்ற மொழிகள் இருபதும் ஆகும். ஆயினும், இன்னும் அச் சுரங்கத்தினின்று கருத்துமணிகள் தோண்டத் தோண்ட மேன்மேலும் வந்துகொண்டே யிருக்கின்றன.

எ–டு:

*"நாடென்ப நாடா வளத்தன நாடல்ல*
*நாட வளந்தரு நாடு."* (739)

நாடு என்ப – சிறந்த நாடென்று சொல்லப்படுவன; நாடா வளத்தன – பிற நாடுகளின் உதவியை வேண்டாது தமக்கு வேண்டிய பொருள் வளங்களையெல்லாம் தம்மகத்தே கொண்டனவாகும்; நாட வளந்தரு நாடு – பிற நாட்டுதவியை நாடுமாறு குன்றிய வளங் கொண்ட நாடுகள்; நாடு அல்ல – சிறந்த நாடாகா.

*"மணற்கிளைக்க நீரூறு மைந்தர்கள் வாய்வைத்*
*துணச்சுரக்குந் தாய்முலை யொண்பால் – பிணக்கிலா*
*வாய்மொழி வள்ளுவர் முப்பான் மதிப்புலவோர்க்*
*காய்தொறு மூறு மறிவு."* (திருவள்ளுவமாலை)

## நடுவு நிலைமை

எல்லாரும் வாழவேண்டுமென்பதும், குற்றத்திற்கேற்ப எல்லாரையும் ஒப்பத் தண்டிக்க வேண்டு மென்பதும், திருக்குறளின் நடுநிலைக் கொள்கைகளாம். இவை ஆரியக் கொள்கைகட்கு நேர்மாறானவை.

*"வள்ளுவர்செய் திருக்குறளை மறுவறநன் குணர்ந்தோர்கள்*
*உள்ளுவரோ மனுவாதி யொருகுலத்திற் கொருநீதி"*

என்று மனோன்மணீய ஆசிரியர் கூறுதல் காண்க.

## உயர்நிலையறம்

எல்லா அறநூல்களுள்ளும் உயர்ந்த ஒழுக்க வரம்புகளைக் கூறுவது திருக்குறளே.

எ–டு:

*"பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல்*
*மக்கட் பதடி யெனல்."* (196)

*"இன்னாசெய் தாரை யொறுத்த லவர்நாண*
*நன்னயஞ் செய்து விடல்."* (314)

*"உள்ளத்தா லுள்ளலுந் தீதே பிறன்பொருளைக்*
*கள்ளத்தாற் கள்வே மெனல்."* (282)

*"ஈன்றாள் பசிகாண்பா னாயினுஞ் செய்யற்க*
*சான்றோர் பழிக்கும் வினை."* (656)

"இறந்த மூப்பினராய இருமுது குரவரும் கற்புடை மனைவியுங் குழவியும் பசியான் வருந்து மெல்லைக்கண், தீயன பலவுஞ் செய்தாயினும் புறந்தருக" என்பது ஆரிய அறநூல் நெறியீடு.

## நடைமுறையறிவு

திருவள்ளுவர் மக்கட்கு உயர்ந்த ஒழுக்கத்தைக் வகுத்தாரேனும், உலகியலறிந்து அதன் ஒழுங்கான நடப்பிற்குத் தோதாகவே சில விலக்குகளையும் அமைத்திருக்கின்றார்.

அருளுடைமை, புலான்மறுத்தல், கள்ளாமை, வாய்மை, வெகுளாமை, இன்னாசெய்யாமை, கொல்லாமை என்னும் அறவினைகளை அரசியலில் முற்றக் கடைப்பிடிப்பது அரிதாதலின், அவற்றை இல்லறவியலிற் கூறாது துறவறவியலிலேயே கூறியுள்ளார்.

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்" என்று சொன்ன வள்ளுவரே, "புலத்தலிற் புத்தேணா டுண்டோ" என்றும், "ஊடுதல் காமத் திற்கின்பம்" என்றும் உடன்பட்டுள்ளார்.

## உண்மைக்கூற்று

இறைவனே நால்வகை வருணத்தாரையும், முறையே தன் முகத்தினின்றும் மார்பினின்றும் தொடையினின்றும் பாதத்தினின்றும் படைத்தானென்றும், அவருட் பிராமணனே உயர்ந்தவனென்றும், மற்ற மூவரும் அவனுக்குத் தாழ்ந்தவரென்றும், அவனுக்குத் தொண்டு செய்யவே படைக்கப்பட்டவரென்றும், ஆரிய நூல்கள் துணிந்து பொய்யுரைப்பது போல, திருக்குறள் ஓரிடத்தும் கட்புலனான உண்மைகளைத் திரித்துக் கூறுவதில்லை. எங்கேனும் ஓரிடத்தில் உயர்வுநவிற்சி அளவிறந்திருப்பினும், அது அணி தழுவியதும் உண்மை எல்லாராலும் அறியப்படத் தக்கதுமாகவே யிருக்கும்.

எ–டு:

***"அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்***
***அடிக்கு நெருஞ்சிப் பழம்."*** (குறள்.1120)

***"பொய்ப்பால பொய்யேயாய்ப் போயினபொய் யல்லாத***
***மெய்ப்பால மெய்யாய் விளங்கினவே"*** (திருவள்ளுவமாலை)

## அதிகாரவொழுங்கு

நூன் முழுதும் 133 அதிகாரங்களாக வகுக்கப்பட்டிருப்பதும் ஒவ்வொன்றும் பப்பத்துக் குறள் கொண்டிருப்பதும், ஒவ்வோரியலிலும் அதிகாரங்கள் ஒன்றோடொன்று கோவையாகத் தொடர்புகொண்டிருப்பதும், பிற நூல்களிற் காணற்கரிய ஒழுங்காகும்.

## சொற்பொருள் தூய்மை

அக்காலத்தில் மொழியாராய்ச்சி யின்மையாலும், வடசொற்கள் ஒவ்வொன்றாகப் புகுத்தப்பட்டமையாலும், தமிழருட் பெரும்புலவர்க்கும் தென்சொல் வடசொல் வேறுபாடு தெரியாதிருந்தது. அதனால் திருக்குற

ளிலும் சில வடசொற்கள் புகுந்துவிட்டன. அவை **அந்தம், அமரர், அவி, அன்னம், ஆகுலம், ஆசாரம், ஆதி, இந்திரன், உல்கு, கணம்** (க்ஷணம்), **காரணம், சலம்** (வஞ்சனை), **நாமம்** (பெயர்), **பாக்கியம், பாவம், பாவி, வித்தகர்** என்னும் பதினேழே; ஆரிய வெறியர் கூறுவது போல் ஐம்பதல்ல.

அப் பதினேழேனுள்ளும் அமரர், காரணம், பாக்கியம், வித்தகர் என்னும் நான்கும் தமிழ் வேரினவே.

அல் - அ. மடி - மரி - மரர்.

கரணம் - காரணம் (வ.). கரு + அணம் - கரணம் = செய்கை, செய்கைக் கருவி. கருத்தல் செய்தல். இது ஒரு வழக்கற்ற வினை.

பகு - பக்கு - பாக்கு = பகுதி. பாக்கு - பாக்கியம் = நற்பகுதி, நற்பால், நற்பேறு.

விழித்தல் = கண்திறத்தல், பார்த்தல், அறிதல். விழி = அறிவு. விழி - விடி - விதி - வித் (வ.) - வித்தக.

அதி என்பது அதை என்னும் சொல்லிற்கினமான வழக்கற்ற தமிழ் வினைச்சொல். ஆயம் என்னுஞ் சொல்லின் முதனிலையான ஆ என்பது வா என்பது திரிபு.

குணம், நிச்சம் என்னும் இரண்டும் தென்சொல்லே. கொள்ளுதல் = கொண்டிருத்தல், உடையனாயிருத்தல். கொள் - கொள்கை = இயல்பு. கொள் - கோள் = தன்மை. கொள் - கொண் - (கொணம்) - குணம் = கொண்ட தன்மை,தன்மை.

இச் சொற்கு வடவர் காட்டும் மூலம் க்ரஹ் (பற்று) என்பதே. நில் - நிற்றல் = நிலைப்பு.

***"குணபத் திரன்றாள் நிற்றலும் வணங்கி"*** (சூடா . 7:76)

நிற்றல் - நிச்சல். ஒ. நோ: முறம் - முற்றில் - முச்சில்.

***"நிச்சலும் விண்ணப்பஞ் செய்ய"*** (திவ். திருவாய். 1 : 6: 11)

நிச்சல் - நித்தல். "நித்தல் விழாவணி" (சிலப். உரைபெறு கட்டுரை).

நில் - நிற்றம். ஒ.நோ: வெல் - வெற்றம்.

நிற்றம் - நிச்சம் - நித்தம் - நித்ய(வ.).

இன்னும் இவற்றின் விளக்கத்தை என் 'வடமொழி வரலாறு' என்னும் நூலுட் கண்டுகொள்க.

திருக்குறளிற் சொல்லப்பட்டுள்ள பொருள்களெல்லாம் தூய தமிழ்ச் செய்திகளே. ஆரியத்தைக் கண்டித்தற்கென்றே நூலியற்றியவர் எங்ஙனம் ஆரியச் செய்திகளைத் தழுவ முடியும்? இயன்றவிட மெல்லாம் வலிந்தும் நலிந்தும் ஆரிய மூலங்காட்டும் பரிமேலழகரும்,

*"இன்றி யமையாச் சிறப்பின வாயினும்*
*குன்ற வருப விடல்"* (961)

என்னுங் குறட் சிறப்புரையில், "இறப்ப வருவழி இளிவந்தன செய்தாயினும் உய்கவென்னும் வடநூன் முறைமையை மறுத்து, உடம்பினது நிலையின்மையையும் மானத்தினது நிலையுடைமையையுந் தூக்கி அவை செய்யற்க வென்பதாம்" என்று வரைந்திருத்தல் காண்க.

## செய்யுட் சிறப்பு

திருக்குறள்போற் குறள்வெண்பாவிற்குச் சிறந்த நூல் முன்னுமில்லை; பின்னுமில்லை. ஒவ்வொரு குறளும் ஒவ்வொரு வகையில் ஒளிவிடும் மணிபோல்வதாம்.

எ—டு:

*"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்*
*பெய்யெனப் பெய்யு மழை",* (55)

*"மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்*
*நன்கல நன்மக்கட் பேறு"* (60)

என்பன இன்னோசையுள்ளன.

*"இயற்றலு மீட்டலுங் காத்தலுங் காத்த*
*வகுத்தலும் வல்ல தரசு",* (385)

*"பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்*
*பொருளல்ல தில்லை பொருள்",* (751)

*"உழுவா ருலகத்திற் காணியஃ தாற்றா*
*தெழுவாரை யெல்லாம் பொறுத்து",* (1032)

*"இரந்து முயிர்வாழ்தல் வேண்டின் பரந்து*
*கெடுக வுலகியற்றி யான்",* (1062)

*"கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும்*
*ஒண்டொடி கண்ணே யுள"* (1101)

என்பன பொருட்சிறப் புள்ளன.

*"நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்*
*வித்தகர்க் கல்லா லரிது"* (235)

என்பது சொற்சுருக்க முள்ளது.

*"தலையி னிழிந்த மயிரனையர் மாந்தர்*
*நிலையி னிழிந்தக் கடை",* (உவமை)

*"வேலொடு நின்றா னிடுவென் றதுபோலுங்*
*கோலொடு நின்றா னிரவு",* (உவமை)

*"உப்பமைந் தற்றாற் புலவி யதுசிறிது*
*மிக்கற்றால் நீள விடல்",* (உவமை)

*"நெடுநீர் மறவி மடிதுயில் நான்குங்*
*கெடுநீரார் காமக் கலன்",* (உருவகம்)

*"நுனிக்கொம்ப ரேறினா ரஃதிறந் தூக்கின்*
*உயிர்க்கிறுதி யாகி விடும்",* (பிறிதுமொழிதல்)

*"தீயினாற் சுட்டபு ணுள்ளாறும் ஆறாதே*
*நாவினாற் சுட்ட வடு",* (வேற்றுமை)

*"நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்*
*நெஞ்சத் தவல மிலர்",* (வஞ்சப் புகழ்ச்சி)

*"கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க*
*முன்னின்று பின்னோக்காச் சொல்",* (முரண்)

*"நெருந லுளனொருவன் இன்றில்லை யென்னும்*
*பெருமை யுடைத்திவ் வுலகு",* (எதிர்ப்பொருள்)

*"காணாதாற் காட்டுவான் தான்காணான் காணாதான்*
*கண்டானாந் தான்கண்ட வாறு"* (சொற்பொருட் பின்வருநிலை)

என்பன பல்வேறு அணியுடையன.

## 9. திருக்குறள் நூல்வகை

கடைக்கழகச் செய்யுள்கள் அல்லது நூல்கள் என்று முதலில் வழங்கியவை பத்துப்பாட்டும் எட்டுத்தொகையுமே. திருவள்ளுவர் கழகப்புலவரன்மையாலும், அவர் நூல் கழகத்திலுள்ள பிராமணப் புலவரால் ஒப்புக்

கொள்ளப் பெறாமையால் அரங்கேறாதிருந்ததினாலும், அது கழக நூலும் கழக மருவிய நூலுமல்லாது தனியாகவே யிருந்துவந்தது. பிற்காலத்திற் கடைக்கழகங் சலைக்கப்பட்டபின், சமணத் தமிழ்க் கழகத்தைச் சேர்ந்த அறநூலாசிரியர் சிலர் தம் நூல்கட்குக் கடைக்கழக நூல் நிலைமை யூட்டல் வேண்டி, கழகக் காலத்தனவும் பிற்காலத்தனவுமான பதினெண் நூல்களை ஒரு தொகுதியாக்கி, அவற்றைப் பதினெண் கீழ்க்கணக்கென்றும் பத்துப் பாட்டையும் எட்டுத்தொகையையும் பதினெண் மேற்கணக்கென்றும் வழங் கினதாகத் தெரிகின்றது.

திருக்குறள் கழகநூ லன்மையாலும், அதற்கு நால் நூற்றாண்டிற்குப் பிற்பட்ட கார்நாற்பது, களவழிநாற்பது, இன்னாநாற்பது, இனியவை நாற்பது என்னும் நான்கே கழகக்காலத்தன வாதலாலும், ஏனையவெல்லாம் வச்சிர நந்தி 5ஆம் நூற்றாண்டில் மதுரையில் சமணத் தமிழ்க்கழகம் நிறுவிய பின்னரே எழுந்தவை யாதலாலும், அவற்றுள் ஆசாரக்கோவை திருக்குறட்கு நேர்மாறாக வடசொல்லும் ஆரியக்கொள்கையும் மிகுந்திருப்பதுடன், இழிதகு நிலையில் தமிழரைப் பிராமணர்க்கு அடிமைப்படுத்தி யிருப்பதாலும், பதினெண் கீழ்க்கணக்கு என்னும் தொகுதிமுறை மிகத் தவறானதென்றும், திருக்குறளை அதிற் சேர்த்தது அதினும் மிகத் தவறானதென்றும் அறிந்து கொள்க.

திருக்குறளைக் கடைக்கழகக் காலத்து அம்மை வனப்பு நூலென்று கொள்வதே தக்கதாம்.

## 10. பாயிரவிளக்கம்

*“ஆயிர முகத்தான் அகன்ற தாயினும்*
*பாயிர மில்லது பனுவ லன்றே”,*

*“மாடக்குச் சித்திரமும் மாநகர்க்குக் கோபுரமும்*
*ஆடமைத்தோள் நல்லார்க் கணியும்போல் – நாடிமுன்*
*ஐதுரையா நின்ற அணிந்துரையை யெந்நூற்கும்*
*பெய்துரையா வைத்தார் பெரிது.”*

*“பருப்பொருட் டாகிய பாயிரங் கேட்டார்க்கு*
*நுண்பொருட் டாகிய நூலினிது விளங்கும்.”*

பாயிரம் பொதுவும் சிறப்பும் என இருவகைப்படும். இலக்கண நூற்கு இவ் விரண்டும் வேண்டும்; இலக்கிய நூற்குச் சிறப்பொன்றே போதும். அச் சிறப்பும், பிறர் ஆசிரியனையும் நூலையும் சிறப்பித்துக் கூறுவதும் ஆசிரியன் நூற்பொருளைச் சுருக்கிக் கூறுவதும் என இருவகையாம். ஆசிரியன் கூறுவது தற்சிறப்புப் பாயிரம் எனப்படும். அது கடவுள் வழுத்தொடு கூடியும் கூடாதும் இருக்கும்.

மக்களெல்லாரும் இம்மையிலும் மறுமையிலும் இன்புற்று வாழ வேண்டுமென்பதே, திருவள்ளுவர் திருக்குற ளியற்றியதன் நோக்கம். இல்லறத்தில் இம்மைக்கும் மறுமைக்கும் ஏற்றவாறு எங்ஙனம் ஒழுக வேண்டுமென்பது இல்லற வியலிலும், இறந்தபின் வீடுபெறுவதற்கு எவ்வெவ் வறங்களையும் பயிற்சிகளையும் மேற்கொள்ள வேண்டு மென்பது துறவற வியலிலும், எல்லாரும் தத்தம் தொழிலைச் செய்து பொருளீட்டி வாழ்வதற்கு அரசன் எங்ஙனம் பாதுகாப்பளிக்க வேண்டுமென்பது பொருட் பாலிலும், கணவனும் மனைவியும் காமவின்பத்தை எங்ஙனம் நுகர வேண்டுமென்பது இன்பத்துப் பாலிலும், கூறப்பட்டுள்ளன.

இங்ஙனம் மக்களெல்லாரும் இடையூறின்றி இனிது வாழ்தற்கு, முதற்படியாக வேண்டிய ஏதுக்கள் நான்கெனத் திருவள்ளுவர் கண்டார். அவை கடவுள்வழிபாடு, மழைபெயல், துறவியர் உறைவு, அறவொழுக்கம் என்பன. இவற்றையே ஆதிபகவன் வழுத்து, வான்சிறப்பு, நீத்தார் பெருமை, அறன்வலியுறுத்தல் என்னும் பாயிர வதிகாரங்கள் நான்கும் எடுத்தோது கின்றன. ஆதலால், திருக்குறட்குப் பாயிரந் தேவையில்லை யென்பதும், இது இடைச்செருக லென்பதும், ஆராய்ச்சியில்லார் கூற்றே யென அறிக.

பாயிரம் என்னும் சொல், முதற்கண் போர்மறவர் போர்க்களத்திற் பகைவரை விளித்துக்கூறும் நெடுமொழி யென்னும் மறவியல் முகவுரை யைக் குறித்துப் பின்பு நூன் முகவுரையைக் குறித்தது.

*பயிர்தல்*

(1) ஊரி விலங்கு பறவைகள் ஒன்றையொன்று அழைத்தல்.

***"செங்காற் பல்லி தன்றுணை பயிரும்"*** (குறுந். 16)

***"கடுவன்... மந்தியைக் கையிடூஉப் பயிரும்"*** (புறம். 158)

***"புலம்புதரு குரல புறவுப்பெடை பயிரும்"*** (குறுந். 79)

(2) மக்களை அழைத்தல்

***"நாட்டிறை பயிருங் காலை முரசம்"*** (சிலப். 16: 52)

பயிர் - பயிரம் - பாயிரம் = அழைப்பு, போருக்கழைப்பு, போருக் கழைக்கும் முகவுரை, முகவுரை.

ஒ.நோ: அகவுதல் = அழைத்தல். அகவு - ஆகவம் = போர்.

***"மறுமனத்த னல்லாத மாநலத்த வேந்தன்***
***உறுமனத்த னாகி யொழுகின் - செறுமனத்தார்***
***பாயிரங் கூறிப் படைதொக்கா லென்செய்ப***
***ஆயிரங் காக்கைக்கோர் கல்."*** (பழ. 246)

பாயிரங் கூறி என்பதற்கு "வீரத்திற்கு வேண்டும் முகவுரைகள் சொல்லி" என்று பழைய வுரையாசிரியர் பொருள் வரைந்திருப்பதை நோக்குக.

## *11. திருக்குறள் நூற்பகுப்பு*

திருக்குறள், பால் என்னும் முப்பெரும் பிரிவுகளையும், இயல் என்னும் எண் சிறு பிரிவுகளையும், அதிகாரம் என்னும் 133 உட்சிறு பிரிவுகளையும் உடையது. ஒவ்வோர் அதிகாரமும் பப்பத்துக் குறள்களைக் கொண்டது. ஆக, மொத்தம் 1330 குறளாம். பாயிரமும் ஊழும் நூல் முழுமைக்கும் பொதுவாம்.

**அதிகாரக் கணக்கு**

| பால் | இயல் | அதிகாரத்தொகை |
|---|---|---|
| அறத்துப்பால் | பாயிரவியல் | 4 |
| | இல்லறவியல் | 20 |
| | துறவறவியல் | 13 |
| | ஊழியல் | 1 |
| பொருட்பால் | அரசியல் | 25 |
| | உறுப்பியல் | 45 |
| இன்பத்துப்பால் | களவியல் | 7 |
| | கற்பியல் | 18 |
| | மொத்தம் | 133 |

உறுப்பியல் அமைச்சு (10), நாடு (1), அரண் (1), பொருள் (கூழ், 1), படை (2), நட்பு (17), குடி (13) என ஏழு பகுதிகளையும் 45 அதிகாரங்களையும் உடையது. நட்பிற்பகையும் (14) அடங்கியுள்ளது.

*“அரசிய லையைந் தமைச்சிய லீரைந்*
*துரைநா டரண்பொரு ளொவ்வொன் – றுரைசால்*
*படையிரண்டு நட்புப் பதினேழ்பன் மூன்று*
*குடியெழுபான் றொக்கபொருட் கூறு”*

என்பது திருவள்ளுவமாலை.

## 12. பரிமேலழகர் நச்சுக் கருத்துகள்

அறமாவது மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலுமாம்.

ஒழுக்கமாவது அந்தணர் முதலிய வருணத்தார் தத்தமக்கு விதிக்கப் பட்ட பிரமசரிய முதலிய நிலைகளினின்று, அவ்வவற்றிற் கோதிய அறங் களின் வழுவாதொழுகுதல்.

அதுதான் (அறம்) நால்வகை நிலைத்தாய் வருணந்தோறும் வேறு பாடுடைமையின், சிறுபான்மையாகிய அச் சிறப்பியல்புக ளொழித்து... கூறப்பட்டது. (உரைப்பாயிரம்)

இவ் வாழ்த்து ஏற்புடைக் கடவுளை யெனவறிக; என்னை? சத்துவ முதலிய குணங்களான் மூன்றாகிய உறுதிப்பொருட்கு, அவற்றான் மூவராகிய முதற்கடவுளோடு இயைபுண்டாகலான். அம் மூன்று பொருளையுங் கூறலுற் றார்க்கு அம் மூவரையும் வாழ்த்துதல் முறைமையாகலின், இவ் வாழ்த்து அம் மூவர்க்கும் பொதுப்படக் கூறினாரென வுணர்க (கடவுள் வாழ்த்து அதிகார முகவுரை).

தமிழெழுத்திற்கேயன்றி வடவெழுத்திற்கும் முதலாதல் நோக்கி ‘எழுத்தெல்லா’ மென்றார். (1) தத்துவ மிருபத்தைந்தினையுந் தெரிதலாவது, ......... சாங்கிய நூலு ளோதியவாற்றான் ஆராய்தல். (27.)

ஏனை மூவராவார், ஆசாரியனிடத்தினின் றோதுதலும் விரதங்காத்த லுமாகிய பிரமசரிய வொழுக்கத்தானும், இல்லைவிட்டு வனத்தின்கட் டீயொடு சென்று மனையாள் வழிபடத் தவஞ்செய்யு மொழுக்கத்தானும், முற்றத் துறந்த யோகவொழுக்கத்தானுமென இவர். (41)

பிதிரராவார் படைப்புக்காலத்து அயனாற் படைக்கப்பட்டதோர் கடவுட்சாதி; அவர்க்கிடம் தென்றிசையாதலின், ‘தென்புலத்தா’ ரென்றார். (43)

புதல்வரைப் பெறுதல் - அஃதாவது, இருபிறப்பாளர் மூவரானும் இயல்பாக விறுக்கப்படூஉங் கடன் மூன்றனுள், முனிவர்கடன் கேள்வியானும், தேவர் கடன் வேள்வியானும், தென்புலத்தார் கடன் புதல்வரைப் பெறுதலானு மல்லது இறுக்கப்படாமையின், அக் கடனிறுத்தற் பொருட்டு நன்மக்களைப் பெறுதல். (புதல்வரைப் பெறுத லதிகார முகவுரை)

மக்களென்னும் பெயர் பெண்ணொழித்து நின்றது. (41)

பெண்ணியல்பாற் றானாக வறியாமையிற் 'கேட்டதா' யெனவுங் கூறினார். (46)

***தீய சொற்களாவன........ வருணத்திற்கு உரியவல்லனவுமாம்.*** **(139)**

இனி மனு முதலிய அறநூல்களால் பொதுவாகக் கூறப்பட்ட இல்லறங்களெல்லாம் இவர் தொகுத்துக் கூறிய இவற்றுள்ளே அடங்கும்.

***"வேதமும் அறமும் அநாதி."*** **(543)**

பசுக்கள் பால்குன்றியவழி அவியின்மையானும், அது கொடுத்தற் குரியார் மந்திரங் கற்பமென்பன ஓதாமையானும், வேள்வி நடவாதாம்; ஆகவே, வானம் பெயலொல்லா தென்பதாயிற்று. (560)

தேவர்க்கும் அசுரர்க்கும் அமைச்சுப் பூண்ட வியாழ வெள்ளிகளது துணிவு தொகுத்துப் பின் நீதிநூலுடையார் கூறியவாறு கூறுகின்றமையின், ஈண்டு வினைத்தூய்மையும் உடன் கூறினார். (662)

"வேந்தன் மேய தீம்புன லுலகமும்" என்றார் பிறரும். நகுடனென் பான் இந்திரபதம் பெற்றுச் செல்கின்ற காலத்துப் பெற்ற களிப்பு மிகுதியான் அகத்தியன் வெகுள்வதோர் பிழைசெய, அதனாற் சாப மெய்தி அப் பதம் இடையே இழந்தானென்பதனை யுட்கொண்டு இவ்வாறு கூறினார். (899)

***"பெண்பாலாக்கியது வடமொழி முறைமை பற்றி."*** **(624)**

வினைவயத்தாற் பஞ்சபூத பரிணாமமாகிய யாக்கையைப் பொருந்தி நின்று அதின் பயனனுபவித்தல் எல்லா வருணத்தார்க்கு மொத்தலிற் 'பிறப்பொக்கு' மென்றும்....... கூறினார். (972)

***"வடநூலார் அங்கமென்றமையின் 'உறுப்' பென்றார்".*** **(993)**

காமத்துப்பால் - இது புணர்ச்சி பிரிவென விருவகைப்படும். ஏனை இருத்தல், இரங்கல், ஊட லென்பனவோவெனின், இவர் பொருட்பாகு

பாட்டினை அறம்பொரு ளின்பமென வடநூல் வழக்குப்பற்றி யோதுத லான், அவ்வாறே யவற்றைப் பிரிவின்க ணடக்கினாரென்க. இனி, அவை தம்மையே தமிழ் நூல்களோடும் பொருந்தப் புணர்ச்சியைக் களவென்றும் பிரிவைக் கற்பென்றும் பெரும்பான்மைபற்றி வகுத்து, அவற்றைச் சுவை மிகுதி பயப்ப உலக நடையோடு ஒப்பு மொவ்வாமையு முடையவாக்கிக் கூறுகின்றார். (காமத்துப்பால் முகவுரை)

ஈண்டுப் பிரிவினை வடநூன்மதம் பற்றிச் செலவு ஆற்றாமை விதுப்புப் புலவியென நால்வகைத் தாக்கிக் கூறினார். அவற்றுட் செலவு பிரிவாற்றாமையுள்ளும், ஆற்றாமை படர்மெலிந்திரங்கன் முதல் நிறை யழித லீறாயவற்றுள்ளும், விதுப்பு அவர்வயின் விதும்பன் முதற் புணர்ச்சி விதும்ப லீறாயவற்றுள்ளும், புலவி நெஞ்சொடு புலத்தன் முதல் ஊட லுவகை யீறாயவற்றுள்ளுங் கண்டு கொள்க. அஃதேல், வடநூலார் இவற் றுடனே சாபத்தினானாய நீக்கத்தையுங் கூட்டிப் பிரிவினை ஐவகைத் தென்றாராலெனின், அஃது அறம்பொரு ளின்ப மென்னும் பயன்களுள் ஒன்றுபற்றிய பிரிவின்மையானும், முனிவராணையான் ஒருகாலத்தோர் குற்றத் துளதாவதல்லது உலகியல்பாய் வாராமையானும். ஈண்டொழிக் கப்பட்ட தென்க. (காமத்துப்பால் முடிவுரை)

ஏனைக் கருத்துகளை ஆங்காங்கு உரையிற் காண்க.

# I

# அறத்துப்பால்

## 1

## பாயிரவியல்

### அதிகாரம் 1 - முதற்பகவன் வழுத்து

*அதாவது, ஆசிரியன் தான் இயற்றும் நூல் இடையூறின்றி இனிது முடிதற்பொருட்டும், தன் நூலிற்கு வேண்டிய தெள்ளிய அறிவை அறிவிற் குப் பிறப்பிடமாகிய இறைவனிடத்தினின்று பெறற்பொருட்டும், இறைவ னருள் உலக நடப்பிற்கு இன்றியமையாத முதற்கரணியமாதலின் அதைத் தேடுதற்கு எல்லா மாந்தரும் எவ்வினையையும் இறைவனைத் தொழுதே தொடங்கல் வேண்டும் என்னும் நெறிமுறையை உலகிற்கு உணர்த்தற் பொருட் டும், இறைவனை வழுத்துதல். வழுத்துதல் போற்றுதல். துதித்தல் என்பது வடசொல்.*

*சிறுதெய்வ வணக்கம், பெருந்தேவ வணக்கம், கடவுள் வணக்கம் என முறையே ஒன்றினொன் றுயர்ந்த மூவகை வணக்கங்களுள், இது கடவுள் வணக்கம். கடவுள் என்னும் சொல் இம் முதலதிகாரப் பத்துக் குறள்களுள் ஒன்றிலேனும் வாராமையானும், முதற்குறளில் ஆதிபகவன் என்னும் பெயரே குறிக்கப் பெற்றிருத்தலானும், கடவுள் வாழ்த்து இங்கு முதற்பகவன் வழுத்து எனப் பெற்றது.*

*வாழ்த்து என்னும் சொல் மக்களை வாழ்வித்தலும் இறைவனைப் போற்றுதலும் ஆகிய இருபொருள் தந்து மயங்கற் கிடனாக நிற்றலால், வழுத்து என்னும் சொல்லை அதனின்று திரித்தனர் முன்னை யறிஞர்.*

*அதிகரித்தது அதிகாரம். இது இலக்கண நூல்களிற் பெரும் பகுதியைக் குறிக்குமேனும், இங்கு உட்சிறுபகுதியைக் குறிக்குமாறு ஆளப்பட்டது.*

**1. அகர முதல வெழுத்தெல்லா மாதி**
**பகவன் முதற்றே யுலகு.**

**(இதன் தொடருரை)** எழுத்து எல்லாம் அகர முதல - நெடுங்கணக்கில் (அல்லது குறுங்கணக்கில்) உள்ள எழுத்துகளெல்லாம் அகரத்தை முதலாக வுடையன; உலகு ஆதிபகவன் முதற்று - அது போல உலகம் முதற்பகவனை முதலாக வுடையது.

இது உவமத்தையும் பொருளையும் இணைக்கும் உவமை யுருபின்மை யால் முதன்மைபற்றி வந்த எடுத்துக்காட்டுவமை. அகரத்திற்குரிய அங்காப் பின்றியும் மகரமெய் ஒலிக்கப் பெறுதலால் 'நெடுங்கணக்கிலுள்ள எழுத்து களெல்லாம்' என்று உரைக்கப்பட்டது.

"அகர முதர வெழுத்தெல்லா மாங்குப்
பகவன் முதற்றே யுலகு"

என்றே யிருக்கலாம். 'ஆங்கு' உவம வுருபு.

பகவன் என்பது பகுத்துக் காப்பவன் அல்லது எல்லா வுயிர்கட்கும் படியளப்பவன் (Dispenser) என்று பொருள்படும் தென்சொல். பகு - பகவு - பகவன். பகு என்னும் வினைமுதல் வடமொழியில் பஜ் (bhaj) வ. என்று திரியும். ஒ.நோ: புகு - புஜ் (bhuj), உகு - யுஜ்.

'பகவன்' தென்சொல்லே. பகுத்தளிப்பவன் 'படியளப்பவன்' என்பது பொருள். வடமொழியிலும் அஃதே. 'பகு' என்பதை வடமொழியில் 'bhaj' எனத் திரிப்பர். பாகம் 'bhaga' என்னும் சொற்கும் வடமொழியில் இதுவே வேர். உடைமை, புகழ் முதலிய அறுகுணமுடையான் என்பது பிற்காலத்தார் பொருத்தப் பொய்த்தலாம். பண்டை யுழவன் தன் விளைவை அறு கூறிட்டதனாலும், பகு என்னும் பொருளுண்டாயிற்று. ஆறுறுப்புடைமை யாலும் பகம் என்னும் சொற்கு அறு என்னும் பொருளுண்டாயிற்று. பகம் = பகுதி.

பகவன் என்னும் சொல் முதற்காலத்திற் கடவுளையே குறித்தது. ஆயின், பிற்காலத்தார் அதைப் பிரமன் விட்டுணு உருத்திரன் என்னும் ஆரிய மத முத்திருமேனியர்க்கும் அருகன் புத்தன் என்னும் பிறமதத் தலைவர்க்கும் வழங்கிவிட்டமையால், கடவுளைக் குறிக்க முதல் என்னும் அடை கொடுக்க வேண்டியதாயிற்று. கடவுள் என்னும் சொல்லும் இங்ஙனமே இழிபடைந்து விட்டமையால், முதற்கடவுள் என்றும் முழுமுதற் கடவுள் என்றும் அடை

கொடுத்துச் சொல்லும் வழக்கை நோக்குக. பதம் (ஆறு) என்னுஞ் சொல்லை மூலமாகக் கொண்டு பகவன் என்பதற்குச் செல்வம், மறம், புகழ், திரு, ஓதி (ஞானம்), அவாவின்மை என்னும் அறுகுணங்களை யுடையவன் என்று பொருள் கூறுவது பொருந்தாது.

இறைவன், கடவுள், தேவன் என்னும் பிற சொற்கள் இருக்கவும் பகவன் என்னுஞ் சொல்லை யாண்டது, அகரம் என்னும் சொற்கு எதுகையாயிருத்தல் நோக்கியே.

ஆதி என்பது வடசொல்; அதாவது வடநாட்டுச் சொல். இதன் விளக் கத்தை என் 'வடமொழி வரலாறு' என்னும் நூலுட் காண்க.

ஆதிபகவன் என்னுந் தொடர்ச்சொல் தமிழியல்பிற் கேற்ப ஆதிப் பகவன் என்று வலிமிக்கும் இருக்கலாம்.

ஏகாரம் தேற்றம்; ஆதலால் இன்றியமையாததே. இவ் வேகாரத்தை ஈற்றசையாகக் கொண்டு,

> **"கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்**
> **குறுகத் தறித்த குறள்"** **(திருவள்ளுவமாலை)**

என்னும் இடைக்காடர் பாராட்டு எங்ஙனம் பொருந்தும் என்று புலவர் ஒருவர் வினவ, அதற்கு இராமலிங்க அடிகள் "முதல் தே எனப் பிரித்தாற் குற்ற மென்ன?" என்று எதிர் வினவியதாகச் சொல்லப்படுகின்றது. ஏகாரம் ஈற்றசையு மன்று; அடிகள் விடை மிகைபடக் கூறலாகவும் உவமச் சொல்லிய (வாக்கிய) அமைப்பொடு ஒவ்வாததாகவும் இருத்தலாற் பொருந்துவது மன்று.

அகரம் எல்லா எழுத்துகட்கும் முதலாகவும், ஏனை யுயிரெழுத்து களோடு நுண்ணிதாகக் கலந்தும், எல்லா மெய்யெழுத்துகளையும் இயக்கியும் நிற்றல் போல்; இறைவனும் உலகிற்கு முந்தியும் உயிருக்குயிராகியும் உயிரற்ற பொருள்களையெல்லாம் இயக்கியும் நிற்பவன் என்னும் உண்மை, இம் முதற்குறளால் உணர்த்தப் பெற்றது.

உலகம் பலவாதலின், உலகு என்பதைப் பால்பகா அஃறிணைப் பெய ராகவும் முதற்று என்பதை வகுப்பொருமைக் குறிப்பு வினைமுற்றாகவுங் கொள்ளின், உவமத்தின் பன்மை பொருளிற்கும் ஏற்கும்.

**2. *கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ***
***னற்றா டொழாஅ ரெனின்.***

**(இ-ரை.)** வால் அறிவன் நல்தாள் தொழார் எனின் - தூய அறிவையுடைய இறைவனின் நல்ல திருவடிகளைத் தொழாதவராயின்; கற்றதனால் ஆய பயன் என் - நூல்களைக் கற்றவர்க்கு அக் கல்வியால் உண்டான பயன் யாதாம்?

அஃறிணை யிருபாற் பொதுவான எவன் என்னும் வினாப்பெயர் என் என்று தொக்கு இங்கு இன்மை குறித்தது. கொல் என்பது அசைநிலை. தூய அறிவாவது இயற்கையாகவும் முழுநிறைவாகவும் ஐயந்திரிபற்றும் இருப்பது. தமிழக மருந்துகள் பெரும்பாலும் தழையுந் தண்டுமாயிருத்தலின், பிறவிப் பிணிக்கும் மருந்தாகும் குறிப்புப்பட இறைவன் திருவடிகளை நற்றாள் என்றார். 'தொழாஅர்', இசைநிறை யளபெடை.

கல்வியின் சிறந்த பயன் கடவுளை வழிபட்டுப் பேரின்ப வீடு பெறுவ தென்பதே பண்டையறிஞர் கொள்கை.

"ஆண்டவனுக்கு அஞ்சுவதே அறிவின் தொடக்கம்" (ஞானியார்)

என்றார் சாலோமோன் ஓதியார்.

"எழுத்தறியத் தீரும் இழிதகைமை தீர்ந்தான்
மொழித்திறத்தின் முட்டறுப்பா னாகும் – மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்"

என்பது பழஞ் செய்யுள்.

"கற்பக் கழிமடம் அஃகும் மடமஃகப்
புற்கந்தீர்ந் திவ்வுலகிற் கோளுணரும் – கோளுணர்ந்தால்
தத்துவ மான நெறிபடரும் அந்நெறியே
இப்பால் உலகத் திசைநிறீஇ யுப்பால்
உயர்ந்த வுலகம் புகும்" (நான்மணி. 27)

என்பது நான்மணிக்கடிகை.

கடவுளை வணங்காவிடின் கல்வியாற் பயனில்லை என்பது இக் குறட் கருத்து.

3. *மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்*
*நிலமிசை நீடுவாழ் வார்.*

**(இ-ரை.)** மலர்மிசை ஏகினான் மாண்அடி சேர்ந்தார் - அடியாரின் உள்ளத் தாமரை மலரின்கண்ணே அவர் நினைந்தமட்டில் விரைந்து சென்றமரும்

இறைவனின் மாட்சிமைப்பட்ட அடிகளை அடைந்தவர்; நிலமிசை நீடு வாழ்வார் - எல்லா வுலகிற்கும் மேலான வீட்டுலகின்கண் நிலையாக வாழ்வார்.

மலர் என்னுஞ் சொல் தனித்துநின்று மனத்தைக் குறியாமையாலும், ஏகினான் என்னுஞ் சொல்லாட்சியாலும், மலர்மிசை யேகினான் என்பது இயல்பாக இறைவன் பெயராதற்கு ஏற்காமையாலும் 'பூமேல் நடந்தான்' என்னும் அருகன் பெயரையே ஆசிரியர் இறைவனுக்குப் பொருந்துமாறு ஆண்டார் என்பது தெரிகின்றது. "மலர்மிசை நடந்தோன்" என்று இளங்கோவடிகளும் கவுந்தியடிகள் கூற்றாகக் கூறுதல் காண்க (சிலப். 10 : 204). சமணர் தம் பொய்யான சமயத்தை விட்டுவிட்டு மெய்யான கடவுளை வணங்க வேண்டுமென்பது இக் குறளின் உட்குறிப்பு.

அடியாரின் உள்ளத்தாமரை நோக்கி ஏகுவானை ஏகினான் என்று இறந்தகால வாய்பாட்டாற் கூறியது, விரைவுபற்றிய கால வழுவமைதி. அடிசேர்தல் - இடைவிடாது நினைத்து அதற்கேற்ப ஒழுகுதல்.

4. *வேண்டுதல்வேண் டாமை யிலானடி சேர்ந்தார்க்*
*கியாண்டு மிடும்பை யில.*

**(இ-ரை.)** வேண்டுதல் வேண்டாமை இலான் அடி சேர்ந்தார்க்கு - விருப்பு வெறுப்பில்லாத இறைவனடியைச் சேர்ந்தவர்க்கு; யாண்டும் இடும்பை இல - எங்கும் எக்காலத்தும் துன்பமில்லை.

விருப்பு வெறுப்பினாலேயே துன்பங்கள் வருவதனாலும், விருப்பு வெறுப்பில்லாத இறைவனை யடைந்தவரும் விருப்பு வெறுப்பற்றவரா யிருப்பராதலாலும், இறைவன் இன்ப வடிவினனாகவும் எல்லாம் வல்லவனாகவு மிருப்பதனாலும், அவனடி யடைந்தார்க்கு எங்கும் என்றும் எவ்வகைத் துன்பமும் இல்லையென்பது.

5. *இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்*
*பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.*

**(இ-ரை.)** இறைவன் பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு - இறைவனின் மெய்யான புகழை விரும்பினாரிடத்து; இருள்சேர் இருவினையும் சேரா - மயக்கஞ் செய்யும் நல்வினை தீவினை என்னும் இருவினையும் இல்லாதனவாகும்.

வழிதெரியாத இருள்போ லிருத்தலின் அறியாமையை இருளென்றும், நல்வினையும் பிறவிக் கேதுவாமென்பது கொண்முடிபு (சித்தாந்தம்) ஆதலின்

இருவினையுஞ் சேராவென்றும் கூறினார். மக்கள் எத்துணைப் பெரியோரா யிருப்பினும் அவரின் அறிவாற்றலுங் காலமுங் குறுகிய வரையறைப்பட் டிருப்பதனாலும், அவரை மகிழ்விக்கக் கூறும் புகழுரைகளெல்லாம் உயர்வு நவிற்சியும் இன்மைநவிற்சியுமே யாதலாலும், எல்லாவாற்றலும் எங்கும் நிறைந்திருக்கும் இறைவன் புகழே பொருளுள்ள புகழ் எனப்பட்டது. புரிதல் - விரும்பிச் சொல்லுதல். இறைவன் - எங்குந் தங்கியிருப்பவன். இறுத்தல் - தங்குதல். நல்வினை பிறவிக்கேதுவாவது கடவுள் வழுத்தொடு கூடாத போதும் தீவினையொடு கலந்த விடத்துமாம்.

6. *பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க*
*நெறிநின்றார் நீடுவாழ் வார்.*

**(இ-ரை.)** பொறிவாயில் ஐந்து அவித்தான் - மெய், வாய், கண், மூக்கு, செவியென்னும் ஐம்பொறிகளையும் வழியாகக்கொண்ட ஐவகை யாசை களையும் விட்ட இறைவனது; பொய்தீர் ஒழுக்கநெறி நின்றார் - மெய்யான ஒழுக்கநெறியில் ஒழுகினவர்; நீடுவாழ்வார் - வீட்டுலகில் என்றும் இன்புற்று வாழ்வார்.

ஊறு, சுவை, மணம், காட்சி, ஓசை என்பன ஐவகை ஆசைப் புலன்கள். ஊறென்பது உடம்பால் தொட்டின்புறுதல். இறைவன் இயல்பாகவே ஆசை யில்லாதவனாதலால், ஐந்தவித்தான் என்னும் பெயரும் சமணரை வயப் படுத்துமாறு சமண நெறியினின்று எடுத்தாண்டதே. "ஐவரை வென்றோன்" என்று இளங்கோவடிகளுங் கூறுதல் காண்க (சிலப்.10: 168). ஒழுக்கநெறி இறைவனாற் சொல்லப்பட்டது அல்லது அவனுக்கு ஏற்றது.

இந் நான்கு குறளாலும், இறைவனை இடைவிடாது நினைப்பாரும் வழுத்துவாரும், அவனெறி யொழுகுவாரும் வீடு பெறுவரென்பது கூறப் பட்டது.

7. *தனக்குவமை இல்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லால்*
*மனக்கவலை மாற்ற லரிது.*

**(இ-ரை.)** தனக்கு உவமை இல்லாதான் - ஒருவகையாலும் தனக்கு ஒப்பில்லாத இறைவனுடைய; தாள் சேர்ந்தார்க்கு அல்லால் - திருவடிகளை யடைந்தார்க்கல்லாமல்; மனக்கவலை மாற்றல் அரிது - மனத்தின்கண் நிகழுந் துன்பங்களையும் அவற்றால் ஏற்படும் கவலையையும் நீக்குதல் இயலாது.

இம்மைக்கும் மறுமைக்கும் உரிய எல்லாப் பொருள்களையும் நலங் களையும், எல்லார்க்கும் என்றும் வரையாதளிக்கக்கூடிய வள்ளல் இறைவன்

ஒருவனேயாதலின், அவனை யடைந்தார்க்கல்லது துன்பமுங் கவலையும் நீங்காவென்பதாம்.

அருமைச் சொல்லிற்குரிய சின்மை இன்மையென்னும் இரு பொருள்களுள், இங்கு வந்துள்ளது இன்மை.

8. ***அறவாழி யந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லாற்***
***பிறவாழி நீந்த லரிது.***

**(இ-ரை.)** அறஆழி யந்தணன் - அறக்கடல் வடிவினனும் அழகிய குளிர்ந்த அருளாளனுமாகிய இறைவனது; தாள் சேர்ந்தார்க்கு அல்லால் - திருவடியாகிய புணையைச் சேர்ந்தார்க்கல்லது; பிற ஆழி நீந்தல் அரிது - அதனொடு சேர்ந்த பிறவாகிய பொருளின்பக் கடல்களைக் கடத்தல் இயலாததாகும்.

எல்லா அறங்களுந் தொக்க தொகுதி கடல்போற் பரந்ததாதலின், இறைவனை அறவாழியென்றார். பொருளின்பங்களைக் கடலாக வுருவகித்தமையால், அவற்றொடு தொடர்புள்ள அறவாழி என்பது அறக்கடலையன்றிப் புத்தனது தரும சக்கரத்தை யுணர்த்தாது. பிறவாழி கடவாமையாவது பொருளின்ப ஆசையுள் மூழ்கித் துன்புறுதல். இறைவனடி சேர்ந்தவர் அத் துன்பத்தினின்று நீங்கி என்றென்றும் பேரின்பத்தில் திளைப்பர் என்பதாம்.

அறம்பொரு ளின்பத்தை ஆழியென் றுருவகித்து இறைவன் திருவடியைப் புணையென் றுருவகியாது விட்டது, ஒருமருங் குருவகம்.

9. ***கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்***
***றாளை வணங்காத் தலை.***

**(இ-ரை.)** எண் குணத்தான் - எண்வகைப்பட்ட குணங்களையுடைய இறைவனின்; தாளை வணங்காத் தலை - திருவடிகளை வணங்காத தலைகள்; கோளில் பொறியின் - தத்தம் புலன்களைக் கொள்ளாத பொறிகளைப்போல; குணம் இல - பயன்படாதனவாம்.

எண் குணங்களாவன: தன்வயத்தம், தூய்மை, இயற்கையறிவு, முற்றறிவு, கட்டின்மை, பேரருள், எல்லாம் வன்மை, வரம்பிலின்பம் என்பன. தாளை வணங்காத் தலையென்று தலையையே விதந்தோதினாரெனினும், வழுத்தா நாவும், புகழ்கேளாச் செவியும் அங்ஙனமே பயனில்லாதன வென்று கொள்க. குணமிலவே என்னும் பன்மை வினைகொண்டு முடிதலால், தலை என்பது பன்மை குறித்துவந்த பால்பகா வஃறிணைப் பெயர். இறைவனுக்கு

உடம்பில்லாவிடினும், அவன் என்றேனும் ஒரு வடிவுகொள்ளின் அதன் அடியும் முடியும் ஒரு நிகரவாகவே தூய்மையாயிருப்பினும், அவனை வணங்கும் மக்களின் பணிவியலை மிகுத்துக் காட்டற்கே, திருவடி தொழுதல் அல்லது வணங்குதல் என்று கூறுவது மரபாகும்.

இறைவன் வழிபாட்டிற்குப் பயன்படுவதே மாந்தன் உடம்பின் தலையாய பயன் என்பது இக் குறட் கருத்து.

***10. பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா***
***ரிறைவ னடிசேரா தார்.***

**(இ-ரை.)** இறைவன் அடி (சேர்ந்தார்) - இறைவன் திருவடியாகிய புணையைச் சேர்ந்தவர்; பிறவிப் பெருங்கடல் நீந்துவர் - பிறவியாகிய பெரிய கடலைக் கடப்பர்; சேராதார் நீந்தார் - அப் புணையைச் சேராதவர் அக் கடலைக் கடவாதவராய் அதனுள் அழுந்துவர்.

வீடுபேறுவரை கணக்கில் கழிநெடுங்காலம் விடாது தொடர்ந்து வரு வதாகக் கருதப்படுதலின், பிறவியைப் பெருங்கடல் என்றார். பிறவி வாழ்வு எல்லையில்லாது தொடர்ந்துவரும் துன்பம் மிகுந்த நிலையற்ற சிற்றின் பமேயாதலால், அதனின்று விடுதலைபெற்று நிலையான தூய பேரின்பந் துய்க்கும் பிறவா வாழ்வைப் பெறும் வழியை இக் குறள் கூறுகின்றது.

சேர்ந்தார் என்பது சொல்லெச்சம். பிறவியைப் பெருங்கடலாக உருவகித்து இறைவனடியைப் புணையாக உருவகியாதுவிட்டது ஒருமருங் குருவகம். புணை யெனினும் கலம் எனினும் ஒக்கும்.

## அதி. 2 - வான்சிறப்பு

*அதாவது, இறைவனருட்கு அடுத்தபடியாக, அவன் ஏற்பாட்டின்படி, உலக நடப்பிற்கும் அறம்பொரு ளின்பப் பேற்றிற்கும் இன்றியமையாத துணைக்கரணியமாகிய மழையின் சிறப்பைக் கூறுதல்.*

***11. வானின் றுலகம் வழங்கி வருதலாற்***
***றானமிழ்த மென்றுணரற் பாற்று.***

**(இ-ரை.)** வான் நின்று உலகம் வழங்கி வருதலால் - மழை வரையறவாய் நின்றுவிடாது தொடர்ந்து பெய்துவர அதனால் உலகம் நடைபெற்று வருவதால்; தான் அமிழ்தம் என்று உணரற்பாற்று - அம் மழை உலகிற்குச் சாவாமருந்து என்று கருதப்பெறுந் தன்மையது.

உலகம் என்பது அதிலுள்ள உயிர்களைக் குறித்தலால் இங்கு இடவாகு பெயர். அமிழ்தம் என்றது சாவா மருந்தாகிய இருவகை யுணவை. உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத சோறும் நீரும், தொடர்ந்த பசி தகை (தாக) நோய்களால் நேரும் சாவைத் தவிர்த்தலால் இருமருந்து எனப்பெறும்.

"இருமருந்து விளைக்கும் நன்னாட்டுப் பொருநன்" (புறம். 70)

நீரும் சோறும் மழையாலேயே பெறப்படுதலால், மழை உலகிற்கு அமிழ்தமாயிற்று. ஆயினும், உயிர்கட்கெல்லாம் பிணிமூப்புச் சாக்காடிருத் தலால், சாவாமை என்பது சாக்காடு வரையுள்ள நிலைமையேயாம். மருந் தினால் நோய் நீங்கினவனைச் சாவினின்று தப்பினான் என்று கூறும் வழக் கைக் காண்க.

அமிழ்தம் என்னும் சொல் சோற்றையும் பாலையுங் குறிக்கும் இருவேறு சொற்களின் திரிபாகும்.

அவிழ் = வெந்து மலர்ந்த சோற்றுப்பருக்கை, சோறு. அவிழ் - அவிழ்து - அவிழ்தம் - அமிழ்தம் = உணவு. "அறுசுவை நால்வகை யமிழ்தம்" (மணிமே. 28 : 116). அவிழ்து - அமிழ்து - அமுது = சோறு, உணவு, நீர்.

நீரும் உணவாதலால் அமுதெனப் பெற்றது. அமிழ்தம் - அமுதம் = சோறு, நீர்.

மருமம் - (மம்மம்) - அம்மம் = முலை, தாய்ப்பால், குழந்தையுணவு.

பாலும் ஒருவகை யுணவாதலாலும், அம்மம் அமுது என்னும் சொற் களின் ஒருபுடை யொப்புமையினாலும், அமுது என்னும் சொல்லும் பாலைக் குறித்தது. அமுது = பால், அமுதம் = பால், அமிழ்து = பால்.

அமுதம் என்னும் தென்சொல் வடமொழியில் அம்ருத என்னும் வடிவுகொள்ளும். அவ் வடிவை அ + ம்ருத என்று விரித்து, சாவை (மரணத்தை)த் தவிர்ப்பது என்று பொருளுறுத்தி, அதற்கேற்பத் தேவரும் அசுரரும் திருப்பாற்கடலைக் கடைந்தெடுத்த அமிர்தம் என்று கதையுங் கட்டிவிட்டனர் வடமொழியாளர்.

இங்ஙனங் கட்டினும், மீண்டும் அது தென்சொல் திரிபேயாதல் காண்க.

அல் (எதிர்மறை முன்னொட்டு) - அ. ஒ.நோ: நல் - ந. மடி - மரி - ம்ரு(வ.) - ம்ருதி, ம்ருத்யு (சாவு).

தேவர் அமுதுமுண்டார் என்பது கட்டுக்கதையாதலால், தேவரமுதம் என்னும் இல்பொருளை உவமையாகக் கூறுவதால் ஒரு பயனுமில்லையென உணர்க.

**12. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉ மழை.**

**(இ-ரை.)** துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கி - உண்பார்க்கு நல்ல வுணவுகளை உண்டாக்கி; துப்பார்க்கு - அவற்றை உண்பவர்க்கு; துப்பாயதும் மழை - தானும் உணவாவது மழையே.

இருதிணை யறுவகை யுயிர்கட்கும் உணவு இன்றியமையாததேனும், தலைமைபற்றித் துப்பார் என உயர்திணைமேல் வைத்துக் கூறினார். முந்தின குறளில் அமிழ்தம் என ஒன்றாகக் கூறியதை, இக் குறளில் நீரும் உணவும் என இருவகையாக வகுத்தார். உணவென்றது உண்பனவும் தின்பனவும் பருகுவனவும் நக்குவனவுமான நால்வகை விளைபொருள்களை, சோறுங் களியுமாகச் சமைக்கப்பெறும் நெல் புல் (கம்பு) முதலியன உண்பன; காய் கறிகள் தின்பன; பாலும் பதனீரும் (தெளிவும்) பருகுவன; தேனும் நெகிழ் நிலைப் பயினும் நக்குவன. மழை உணவுப்பொருளை விளைப்பதொடு தானும் நீராக உண்ணப்படுவது என்று அதன் சிறப்புக் கூறப்பட்டது.

துத்தற்சொல் நான்முறை வந்தது சொற்பொருட் பின்வருநிலையணி. "துப்பாய துப்பாக்கி" என்பது சொற்பின் வருநிலையணி. துப்பாய தூஉம் என்பது இசைநிறை யளபெடை.

**13. விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி.**

**(இ-ரை.)** விண் இன்று பொய்ப்பின் - வேண்டிய காலத்து மழை பெய்யாது நின்றுவிடுமாயின்; விரிநீர் வியன் உலகத்துள் - பரந்த கடலாற் சூழப்பட்ட அகன்ற நிலவுலகத்தின்கண்; பசி நின்று உடற்றும் - பசி நிலைத்து நின்று உயிர்களை வருத்தும்.

ஞாலத்தின்(பூமியின்) முக்காற் பங்கு என்றும் வற்றாக் கடலாயினும் அதனாற் பஞ்சக்காலத்திற் பயனில்லையென்பதை, விரிநீர் என்னும் அடை மொழியாற் குறிப்பாக வுணர்த்தினார், வருத்துதலாவது உணவு விளை யாமையால் மீண்டும் மழை பெய்யும்வரை கொல்லுதலும் துன்புறுத்துதலும். பெய்யும் என்று எதிர்பார்க்கப்பட்டது பெய்யாமை பொய்த்தது போலாயிற்று.

**14. ஏரி னுழாஅ ருழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால்.**

**(இ-ரை.)** புயல் என்னும் வாரி வளம் குன்றிக்கால் - மழையென்னும் வருவாய் வரவற்றுவிடின், உழவர் ஏரின் உழார் - உலகத்திற்கு ஆணியாகிய உழவர் தமக்கும் பிறர்க்கும் உணவு விளைவிக்குமாறு ஏரால் உழுதலைச் செய்யார்.

சுழல்காற்று மழையைக் குறிக்கும் புயல்(cyclone) என்னும் சொல் இங்குப் பொதுப்பொருளில் ஆளப்பட்டது. பசி உயிர்களை வருத்துதற்குக் கரணியங் கூறியவாறு.

உழாஅர் என்பது இசைநிறை யளபெடை. குன்றியக்கால் என்பது குன்றிக்கால் எனக் குறைந்து நின்றது. குன்றுதல் இங்கு இன்மையாதல்.

*15. கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே*
*யெடுப்பதூஉ மெல்லா மழை.*

**(இ-ரை.)** கெடுப்பதும் - பெய்யாது நின்று பண்பாட்டிலும் தொழிலிலும் மக்களைக் கெடுப்பதும்; கெட்டார்க்குச் சார்வாய் மற்று ஆங்கே எடுப்பதும் - அங்ஙனங் கெட்டார்க்குத் துணையாகப் பெய்து முன்பு கெடுத்தது போன்றே பின்பு அவரைத் தூக்கிவிடுவதும்; எல்லாம் மழை - ஆகிய எல்லாம் செய்வது மழையே.

"தனக்கு மிஞ்சித் தானம்." ஆதலால், வளமில்லாக் காலத்தில் வள்ளன்மை இல்லாதாரின் பண்பாடு கெடுவதும், விளைபொருளும் கருவிப் பொருளும் இல்லாக்காலத்தில் வணிகர் கைத்தொழிலாளர் ஆகியோரின் தொழில் கெடுவதும் இயல்பாதலாலும்; மழையில்லாப் பஞ்சக்காலம் நெடிதுங் குறிதுமாக இடையிடை நேரினும், பின்பு இறைவனருளால் மீண்டும் மழை பெய்து மக்கட்பண்பாடும் தொழிலும் முன்போல் திருந்துவதனாலும்; கெடுப்பதும் எடுப்பதுமாகிய இரு முரண்பட்ட செயலையும் மழை செய்வதாகக் கூறினார். ஆயினும், காலத்திற்கேற்ப மக்கள் நிலைமை மாறும் என்பதும், இடையிடை நிற்பினும் அறுதியாய் நின்றுவிடாது உலகம் அழியும்வரை மழை பெய்துவரும் என்பதும், மழை பெய்யாமைக்கு ஏதேனும் ஒரு கரணியம் இருத்தல் வேண்டும் என்பதும், குறிப்பாக உணர்த்தப்பெறும் உண்மைகளாகும். செல்வமிழந்தவரைக் கெட்டார் என்பது இருவகை வழக்கிலுமுண்டு.

கெடுப்பதூஉம் எடுப்பதூஉம் என்பன இன்னிசை யளபெடை. 'மற்று' வினைமாற் றிடைச்சொல். 'ஆங்கு' உவமையுருபு.

***16. விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் றாங்கே***
***பசும்புற் றலைகாண் பரிது.***

**(இ-ரை.)** விசும்பின் துளிவீழின் அல்லால் - வானத்தினின்று மழைத் துளி விழுந்தாலன்றி; மற்று ஆங்கே பசும்புல் தலை காண்பு அரிது - பின் அப்பொழுதே பசும்புல் நுனியையும் காண்பது அரிதாகும்.

'மற்று' விளைவு குறித்த பின்மைப்பொரு ளிடைச்சொல். ஆங்கே என்றது தேற்றமும் விரைவும்பற்றிய காலவழுவமைதி. புற்றலை என்பது புன்னிலம் என்றுமாம். ஒரு நாட்குள் முளைக்கும் புல்லும் இல்லையெனின், மற்ற மரஞ்செடி கொடிகளின் இன்மையைச் சொல்லவேண்டுவதில்லை. ஓரறிவுயிர் இல்லையெனின் மற்ற ஐவகையுயிர்களும் நாளடைவில் இரா வென்பதாம். இழிவுசிறப்பும்மை செய்யுளால் தொக்கது.

***17. நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றுந் தடிந்தெழிலி***
***தானல்கா தாகி விடின்.***

**(இ-ரை.)** நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் - மாபெருங்கடலும் தன் இயல்பு குறையும்; எழிலி தடிந்து தான் நல்காது ஆகிவிடின் - முகில் (மேகம்) அதனைக் குறைத்துப் பின்பு தான் அதன்கண் பெய்யாது விடின்.

தன்னியல்பு குறைதலாவது மீன் முதலியன கலியாமையும் முத்து முதலியன விளையாமையும். கடலைக் குறைத்தலென்பது அதில் நீரை முகத்தல். இது பண்டை நம்பிக்கை.

> **"கடல்குறை படுத்தநீர் கல்குறை படவெறிந்து"** **(20)**

என்று பரிபாடலும்,

> **"இலங்க லாழியி னான்களிற் றீட்டம்போற்**
> **கலங்கு தெண்டிரை மேய்ந்து கனமழை"** **(சீவக. 32)**

என்று சிந்தாமணியும் கூறுதல் காண்க. முகப்பது முகில். முகந்தபின் மேலெழுவது எழிலி. கடல்நீர் ஆவியாக மாறி மேலெழுவது முகிலாவதால், பண்டை நம்பிக்கையும் ஒருமருங்கு உண்மையானதே. மழைக்கு மூலமாகிய மாபெரு நீர்நிலைக்கும் மழை வேண்டும் என்று மழையின் சிறப்புக் கூறிய வாறு. உம்மை சிறப்பும்மை.

*18. சிறப்பொடு பூசனை செல்லாது வானம்*
*வறக்குமேல் வானோர்க்கு மீண்டு.*

**(இ-ரை.)** வானம் வறக்குமேல் - மழை பெய்யாவிடின்; ஈண்டு வானோர்க்கும் பூசனை சிறப்பொடு செல்லாது - இவ் வுலகில் தேவர்க்கும் அன்றாடு பூசையும் ஆட்டைவிழாவும் நடைபெறா.

அன்றாடு பூசை, கதை நிகழ்ச்சி குறியாதும் கொண்டாட்டமின்றியும் ஒருசிலரான அக்கம் பக்கத்தார் மட்டும் கலந்தும் கலவாமலும் வழக்கம்போற் சிற்றளவான வழிபாடாகக் கோவிற்குள் மட்டும் நடைபெறுவது; ஆட்டைவிழா, ஒரு கதை நிகழ்ச்சி குறித்தும் கொண்டாட்டத்துடனும் நாட்டு மக்களையெல்லாம் வரவழைத்தும், பேரளவாக ஊர்வலஞ்செய்து நடை பெறுவது. உம்மை உயர்வுசிறப்பு.

பூசுதல் = கழுவுதல், தெய்வப் படிமையை நீரால் துப்புரவாக்குதல். பூசு - பூசி. பூசித்தல் = பூச்சாத்தியும் தேங்காய் பழம் முதலியன படைத்தும் வழிபடுதல். உழவு என்பது பயிர்த்தொழிலின் பின்வினைகளையும் குறித் தல்போல், பூசித்தல் என்பது வழிபாட்டின் பின்வினைகளையும் குறித்தது.

பூசி - பூசை. ஒ.நோ: ஆசு (பற்று)-ஆசி (அவாவு) - ஆசை (அவா). பூசை - பூசனை - பூசனம். ஐ, அனை, அனம் என்பன தமிழ் ஈறுகளே. பூசை - பூசாரி. ஆரி தலையாரி என்பதிற்போல் ஓர் ஈறு. பூசாச்சாரி (பூசை+ ஆச்சாரி) என்னும் வழக்கு வடமொழியிலு மில்லை.

பூ செய் என்பது பூசை என்றாயிற்றென்று கொள்வது பொருந்தாது.

பூசி-பூஜ் (வ). பூசை-பூஜா (வ). பூசனம் - பூஜன (வ). பூசனை - பூஜ்னா (வ).

வேத ஆரியர்க்கு வேள்வி வேட்டலேயன்றிப் படிமைப்பூசையும் கோவில் வழிபாடும் இல்லை. பூஜ் என்னும் சொல்லும் வேதத்திலில்லை. பாரதம் முதலிய பிற்கால வடபனுவல்களிலேயே அது வழங்குகின்றது.

*19. தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்*
*வானம் வழங்கா தெனின்.*

**(இ-ரை.)** வானம் வழங்காது எனின் - மழை பெய்யாவிடின்; வியன் உலகம் தானம் தவம் இரண்டும் தங்கா - இப் பரந்த வுலகின்கண் அறக் கொடையும் தவமும் ஆகிய இருவகை நல்வினைகளும் செய்யப்பெறா.

தானம் என்பது, நல்வழியில் ஈட்டப்பட்ட பொருளை, தெய்வப்பற்றுக் கரணியமாகக் கோவிற்கும் அடியார்க்கும், அருளுடைமை கரணியமாக, இரப்போர்க்கும், ஈடின்றிக் கொடுத்தல். தவம் என்பது, ஐம்புல வடக்கம்பற்றித் துறவறத்தார் கடுமையாகவும், மகப்பேறு முதலியன கருதி இல்லறத்தார் எளிமையாகவும், உடலை வருத்துதல். கடுமையாக வருத்தும் வகைகள் துறவறவியலிற் கூறப்பெறும். எளிமையாக வருத்தும் வகைகள் உண்டி சுருக்கல், எளிய வுடையுடுத்தல், இன்பம் விலக்கல் முதலியன.

"மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல்" (70)

என்று திருவள்ளுவரும்,

"முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட்சுமந்து"

என்று பட்டினத்தடிகளும் பாடியிருப்பதால், தவம் துறவறத்தின் மேலதென்று வரையறுப்பது பொருந்தாது. தானம் பிறர்க்குக் கொடுப்பது; தவம் தன்னை ஒடுக்குவது.

தானம் என்பது தென்சொல் லென்பதை என் 'வடமொழி வரலாறு' என்னும் நூலிற் கண்டு தெளிக.

**20. நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு.**

**(இ-ரை.)** யார் யார்க்கும் நீர் இன்று உலகு அமையாது எனின் - எத்துணை உயர்ந்தவர்க்கும் நீரின்றி உலக வாழ்வு நடவாதாயின்; ஒழுக்கு வான் இன்று அமையாது - அந் நீர் இடையறாது ஒழுகும் ஒழுக்கும் மழை யின்றி நிகழாது.

உலகமெல்லாம் ஒரு குடைக்கீழ் ஆளும் ஒப்புயர்வற்ற வேந்த னாயினும், மழையின்றி வாழும் வழியில்லை யென்பதாம்.

## அதி. 3 - நீத்தார் பெருமை

*அதாவது, இறைவன் திருவருளைப் பெற்றவரும், மழைபெயற்கு ஓரளவு கரணியமாகக் கருதப் பெறுபவரும், பேரரசர்க்கும் பெருந் துணை யாகும் அறிவாற்றல் மிக்கவரும், மழைக்கு அடுத்தபடியாக நாட்டு நல்*

*வாழ்விற்கு வேண்டியவருமான, முற்றத் துறந்த முழு முனிவரின் பெருமை கூறுதல்.*

**21. ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து**
**வேண்டும் பனுவற் றுணிவு.**

**(இ-ரை.)** பனுவல் துணிவு - நூல்களது துணிவு; ஒழுக்கத்து நீத்தார் பெருமை - தமக்குரிய ஒழுக்கத்தின்கண் உறைத்து நின்று உலகப்பற்றைத் துறந்த முனிவரது பெருமையை; விழுப்பத்து வேண்டும் - சிறந்த பொருள் எல்லாவற்றுள்ளும் சிறந்ததாக விரும்பும்.

ஆசிரியர் துணிவு அவர் நூல்மேல் ஏற்றப்பட்டது.

"தொண்டரோ இறைவ னுள்ளத் தொடுக்கம்
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே"

என்னும் ஔவையார் கூற்றைத் தழுவியது இக் குறள். பற்று,'நான்' என்று தன்னைப்பற்றிய அகப்பற்றும், 'எனது' என்று தன் உடைமைகளைப்பற்றிய புறப்பற்றும் என இருவகையாம்.

**22. துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்**
**திறந்தாரை யெண்ணிக்கொண் டற்று.**

**(இ-ரை.)** துறந்தார் பெருமை துணைக்கூறின் - இருவகைப் பற்றையும் முற்றும் விட்டுவிட்ட முனிவரது பெருமையை இவ்வளவின் தென்று அளவிட்டுக் கூறப்புகின்; வையத்து இறந்தாரை எண்ணிக்கொண்டு அற்று - அது இவ் வுலகத்தில் இதுவரை பிறந்திறந்தவரை யெல்லாம் இத்தனையர் என எண்ணியறியப் புகுந்தாற்போல்வதாம்.

இரண்டும் முடியாதென்பது. கொண்டால் என்னும் வினையெச்சம் கொண்டு எனத் திரிந்தது. கொண்ட அற்று எனினுமாம்.

**23. இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்**
**பெருமை பிறங்கிற் றுலகு.**

**(இ-ரை.)** இருமை வகை தெரிந்து - பிறப்பு வீடு என்னும் இரண்டின் துன்பவின்பக் கூறுபாடுகளை ஆராய்ந்தறிந்து; ஈண்டு அறம் பூண்டார்

பெருமை - பிறப்பறுத்தற்கு இப் பிறப்பில் துறவறம் பூண்டாரது பெருமையே; உலகு பிறங்கிற்று - உலகின்கண் விளங்கித் தோன்றிற்று.

படைகொண்டு பொருது பார்முழுதும் வென்றவரினும், ஐம்புலனை யடக்கி ஆசையை வென்றவரே பெரியர் என்பது. பிரிநிலை யேகாரம் செய் யுளில் தொக்கது.

**24. உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான்**
**வரனென்னும் வைப்பிற்கோர் வித்து.**

**(இ-ரை.)** உரன் என்னும் தோட்டியான் - அறிவு என்னும் துறட்டியினால்; ஓரைந்தும் காப்பான் - பொறிகளாகிய யானைகள் ஐந்தையும் தன்தன் புலன்மேற் செல்லாது அடக்குபவன்; வரன் என்னும் வைப்பிற்கு - எல்லா நிலங்களுள்ளும் மேலான வீட்டு நிலத்திற்போய் முளைத்தற்குரிய; ஓர் வித்து - ஒரு விளைந்த மணிவிதை போல்வான்.

உரனைத் துறட்டியாக உருவகித்துப் பொறிகளை யானைகளாக உருவகியாதது ஒருமருங் குருவகம். துறடு - துறட்டி - தோட்டி.

புரம் = மேல், மேன்மாடம். புரம் - பரம் = மேல், மேலிடம், மேலுலகம். பரம்- வரம் = மேன்மை. வரம் - வரன் (கடைப்போலி) = மேலுலகம், வீட்டுலகம்.

இனி, வைப்பு என்பதற்குச் சேர்த்து வைக்கும் இடம் என்று பொருள் கொண்டு, வீட்டுலகமாகிய களஞ்சியத்திற் சேர்த்து வைக்கப்பெறும் விளைந்த மணிபோல்வான் என்று உரைக்கினும் பொருந்தும்.

**25. ஐந்தவித்தா னாற்ற லகல்விசும்பு ளார்கோமா**
**னிந்திரனே சாலுங் கரி.**

**(இ-ரை.)** ஐந்தவித்தான் ஆற்றல் - ஐம்புலனையும் அடக்கின முனிவனது வலிமைக்கு; அகல் விசும்புளார் கோமான் இந்திரனே சாலும் கரி - அகன்ற வானத்துள்ள தேவர்க்கரசனாகிய வேந்தனே (இந்திரனே) போதிய சான்றாளனாம்.

ஐந்து என்பது தொகைக்குறிப்பு. ஐந்தும் என்னும் முற்றும்மையும் ஆற்றற்கு என்னும் 4ஆம் வேற்றுமையுருபும் செய்யுளால் தொக்கன. "தான் ஐந்தவியாது சாபமெய்தி நின்று அவித்தவன தாற்றல் உணர்த்தினானாதலின்,

'இந்திரனே சாலுங் கரி' யென்றார்" என்று பரிமேலழகர் அகலிகை சாவிப்புக் கதையை இங்கெடுத்துக் காட்டியது பொருந்தாது, அவள் கணவனான கோதமன் ஐந்தவித்தா னல்லன் ஆகலின்.

"இந்திரன் சான்று என்றது, இவ் வுலகின்கண் மிகத் தவஞ் செய்வார் உளரானால், அவன் தன் பதம் இழக்கின்றானாக நடுங்குமாதலான். இது தேவரினும் வலியன் என்றவாறு" என்று மணக்குடவரும்,

"ஈண்டுத் தன் பதங் கருதித் தவஞ்செய்யும் நீத்தார்மாட்டுத் திலோத்தமை முதலிய தெய்வமகளிரை விடுத்து, மற்று அத் தவமழித்துந் தவம் அழியாமை நிலைநிற்கையாலும், தனது பதம் விரும்பாமையாலும், தானே சான்றாய் அமையும் என்றவாறு" என்று காளிங்கரும் கூறிய விளக்கம் ஒருவாறு பொருந்தும்.

ஆயினும், ஆசிரியர் கருதிய கதை ஒன்றிருத்தல் வேண்டும். அது இன்று அறியப்படவில்லை. இந்திரன் என்பது வேந்தன் என்னும் தென் சொற்கு நேரான வடநாட்டுச் சொல். வேந்தன் மருதநிலத் தமிழ்த் தெய்வம்.

**"வேந்தன் மேய தீம்புன லுலகமும்"** **(தொல். 951)**

## 26. *செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்*
## *செயற்கரிய செய்கலா தார்.*

**(இ-ரை.)** செயற்கு அரிய செய்வார் பெரியர் - உயர்திணை எனப்படும் மக்களுள் பிறர் செய்யமுடியாத அருஞ்செயல்களைச் செய்து முடிப்பவர் பெரியோர்; செயற்கு அரிய செய்கலாதார் சிறியர் - பிறர் செய்ய முடியாத அருஞ்செயல்களைச் செய்யாது எளிய செயல்களையே செய்து முடிப்பவர் சிறியோர்.

"செயற்கரியவாவன இயமம் நியமம் முதலாய எண்வகை யோக வுறுப்புகள்" என்பர் பரிமேலழகர். எண்வகை ஓக உறுப்புகள் **ஒழுக்கம்** (இயமம்), **தவம்**(நியமம்), **இருக்கை**(ஆசனம்), **வளிநிலை** (பிராணாயாமம்), **ஒருக்கம்** (பிரத்தியாகாரம்), **நிறை**(தாரணை), **ஊழ்கம்** (தியானம்), **ஒன்றுகை**(சமாதி) என்பன. இவற்றுள் ஒருக்கமும் நிறையுமான மனவடக்கம் சிறந்ததாம்.

**"வெந்தழலி னிரதம்வைத் தைந்துலோ கத்தையும்**
**வேதித்து விற்றுண்ணலாம்**
**வேறொருவர் காணாம லுலகத் துலாவலாம்**
**விண்ணவரை யேவல்கொளலாம்**

சந்ததமு மிளமையோ டிருக்கலா மற்றொரு
சரீரத் தினுடம்புகுதலாம்
சலமே னடக்கலாம் கனன்மே லிருக்கலாம்
தன்னிகரில் சித்திபெறலாம்
சிந்தையை யடக்கியே சும்மா விருக்கின்ற
திறமரிது"

என்றார் தாயுமான அடிகள். ஆதலால், மனமடக்குதலும் அவாவறுத்தலுமே செயற்கரிய செயல்கள் என அறிக.

செயற்கெளியவாவன உலகத்தொழில் செய்தலும் பொருளீட்டுதலும் இன்பந்துய்த்தலும் எளியாரை வாட்டுதலுமாம். இல்லறம் துறவறத்தை நோக்க எளிதாயினும், அதையுஞ் செய்ய இயலாதவர் சிலர் உளர். அவரே சிறியர் என்னுங் கருத்தினர், "செயற்குரிய செய்கலா தார்" என்று பாடவேறுபாடு காட்டுவர். அவ் வேறுபாடு பெரியர் சிறியர் என்னும் இரு வகுப்பார்க்கும் இடையே வேறொரு வகுப்பாரையும் வேண்டுதலின், அது அத்துணைச் சிறந்ததன்றாம்.

**27. சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்**
**வகைதெரிவான் கட்டே யுலகு.**

**(இ-ரை.)** சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்தின் வகை - சுவை, ஒளி, ஊறு, ஓசை, மணம் என்னும் பூதமூலங்கள் ஐந்தின் கூறுபாட்டையும்; தெரிவான்கட்டே உலகு - ஆராய்ந்தறியும் ஓகியின் அறிவிற்குள் அடங்கியதே உலகம்.

காட்சி ஒளியினால் தோன்றுதலின் ஒளியெனப்பட்டது. உறுவது ஊறு. உறுதலாவது உடம்பின் உள்ளும் புறம்பும் படுதல் அல்லது தொடுதல். உலக வழக்கில் தீய பொருளிலேயே வழங்கும் நாற்றம் என்னும் சொல், இங்கு நறுமைக்குந் தீமைக்கும் பொதுவாய் நின்றது.

உகு-யுஜ் (வ.). ஓகம் - யோக (வ. ը). ஓகி-யோகின் (வ. ը).

ஐந்தின் கூறுபாடாவன, மேற்கூறிய பூதமூலம் ஐந்தும், அவற்றின்கண் தோன்றிய நிலம், நீர், தீ, வளி(காற்று), வெளி என்னும் பூதங்கள் ஐந்தும், அவற்றொடு தொடர்புடைய புலனைக்கொண்ட மெய், வாய், கண், மூக்கு,

செவி என்னும் அறிவுப்பொறி யைந்தும், அவற்றைப்போல் உடம்பின் கூறாகிய நாவு, கை, கால், அண்டி(எருவாய்), குறி(கருவாய்) என்னும் கருமப்பொறி யைந்தும் ஆக இருபதுமாம். இனி, 'வகைதெரிவான் கட்டு' என்றதினால், தெரிகின்ற ஆதனும்(புருடனும்), அவன் தெரிதற் கருவியாகிய மதி(மான்) தன்முனைப்பு(அகங்கார) மனங்களும், அவற்றிற்கு முதலாகிய சித்தமும்(மூலப்பகுதியும்) பெறப்படும்.

இவற்றை ஆராயும் வகை:

ஆதன் தான் ஒன்றினின்று தோன்றாமையாலும் பிறிதொன்றைத் தோற்றுவியாமையாலும் தனிநிலையாம்.

மூல முதனிலை(சித்தம்) தான் ஒன்றினின்று தோன்றாமையால் முதனிலையாம்.

மதியும் அதனின்று தன்முனைப்பும் அதனின்று பூத மூலங்களுமாக ஏழும் மூல முதனிலையினின்று முறையே தோன்றுவதனாலும் மன முத் லியவற்றைத் தோற்றுவித்தலாலும் இடைநிலையாம்.

மனமும் அறிவுப்பொறிகளும் கருமப்பொறிகளும் பூதங்களுமாகிய பதினாறும், இடைநிலையினின்று தோன்றுவதனாலும் வேறெவற்றையும் தோற்றுவியாமையாலும் இறுதிநிலையாம்.

இனி, சாங்கியத்திற்கு மாறாக,

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு"

என்றமையால், எல்லாவற்றொடுங் கலந்துநின்று அவற்றை யியக்கி முத்தொழிற்படுத்தும் இறைவனென்னும் முழு முதனிலையொடு சேர்க்க,, மெய்ப்பொருள்கள் மொத்தம் இருபத்தாறாம். ஆகவே, "சாங்கிய நூல்கள் ஓதியவாற்றான் ஆராய்தல்" என்பது தவறாம். நுண்ணிய அடிப்படைப் பாகுபாட்டில், ஆவிவடிவான உயிராதனும் (சீவாத்துமாவும்) பரவாதனும் (பரமாத்துமாவும்) காற்றுள் அடங்குதலால், ஐந்தின் வகையென்று எல்லா வற்றையும் அடக்கினார் ஆசிரியர். வெளி என்னும் இடத்தின் உண்மை நீட்சி அல்லது தொடர்ச்சியே காலம்.

ஐம்பூதங்களும் அவற்றொடு தொடர்புள்ள பொறிபுலன்களும்:

| பூதம் | பூதத்தன்மை | பொறி | புலன் |
|---|---|---|---|
| நிலம் | நாற்றம் | மூக்கு | முகர்தல் |
| நீர் | சுவை | வாய் | சுவைத்தல் |
| தீ | ஒளி | கண் | காண்டல் |
| வளி | ஊறு | மெய் | உறுதல்(தொடுதல்) |
| வெளி | ஓசை | செவி | கேட்டல் |

"வகை தெரிவான் கட்டு" என்றது உடம்பொடு புணர்த்தல் என்னும் உத்தி; அதாவது, ஓர் உண்மையை அல்லது நெறியை வெளிப்படையாகக் கூறாது ஒரு சொல்லாட்சியாற் பெறவைத்தல். கண்ணது - கட்டு (கண் + து).

மூலப்பகுதியின் சேர்க்கையாற் கட்டுற்ற ஆதன்(புருடன்) அதைத் தன்னின் வேறாகக் காண்டலே வீடுபேறென்பது சாங்கியக் கொள்கை. அதிற் கடவுட் கொள்கையில்லை.

*28. நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து*
*மறைமொழி காட்டி விடும்.*

**(இ-ரை.)** நிறைமொழி மாந்தர் பெருமை - பயன் நிறைந்த சொற்களை யுடைய துறவியரின் பெருமையை; நிலத்து மறைமொழி காட்டிவிடும் - நிலவுலகத்தில் அவர் கட்டளையாகச் சொல்லப்பெறும் மந்திரங்களே கண் கூடாகக் காட்டிவிடும். இக் குறள்,

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப" (1434)

என்னும் தொல்காப்பிய நூற்பாவைத் தழுவியது. மறைமொழி அல்லது மந்திரம் என்பது, வாய்மொழியும் சாவிப்பும் என இருவகைப்படும். திருமூலரின் திருமந்திரமும், நம்மாழ்வாரின் திருவாய்மொழியும் வாய்மொழி போல்வன; கவுந்தியடிகள் காவிரித் தென்கரைச் சோலையொன்றில் வம்பப் பரத்தையும் வறுமொழியாளனுமான இருவரை நரிகளாக்கியது சாவிப்பு. மறை(வேத)த் தன்மையுடைய மொழி மறைமொழி; மனத்திண்மையாற் கருதியது நிறைவேறும் மொழி மந்திரம். மன் + திரம் = மந்திரம். முன்னுதல் = கருதுதல். முன் - மன். திரம் = திறம். ஒ.நோ: மன்று - மந்து - மந்தை. முரி -முறி(வளை).

ஆரியர் வருகைக்கு முற்பட்டதும், எண்வகை வனப்பான பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல் என்னும் ஏழுநிலத்திற்கும்

இலக்கியமா யிருந்ததுமான முதலிரு கழகத் தூய தமிழிலக்கியம் முழுவதும் அழிக்கப்பட்டுவிட்டதென அறிக.

**29. குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி**
**கணமேயுங் காத்த லரிது.**

**(இ-ரை.)** குணம் என்னும் குன்று ஏறி நின்றார் வெகுளி - நற்குணத் தொகுதி என்னும் மலையின் கொடுமுடியேறி நின்ற முனிவரின் கடுஞ் சினத்தை; கணமேயும் காத்தல் அரிது - சினக்கப்பட்டாரால் நொடி நேர மேனுந் தடுத்தல் முடியாது.

குன்று சிறுமலை. இங்கு மலையென்னும் பொதுப் பொருளது. எரிக்கும் நெருப்புப் போன்றது வெகுளி. வேகு - வெகுள் - வெகுளி. திண்மையும் பெரு மையும் வண்மையும்பற்றி நற்குணத் தொகுதியை மலையாக வுருவகித்தார். இக் குறட்கு, நற்குணமலையாகிய முனிவர் நொடி நேரமேனும் தம் உள்ளத்திற் சினத்தைப் பேணுதலில்லை யென்று பொருள் கூறுவாருமுளர். அது உரையன்மை, முந்தின குறளாலும் "சொல்லொக்குங் கடிய வேகச் சுடுசரம்" (பால. தாடகை. 71) என்னுங் கம்பர் கூற்றாலும் கண்டு தெளிக. உம்மை இழிவுசிறப்பு.

**30. அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்**
**செந்தண்மை பூண்டொழுக லான்.**

**(இ-ரை.)** எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலான் - எவ்வகைப்பட்ட உயிர்களிடத்தும் செம்மையான குளிர்ந்த அருளைப் பூண்டொழுகுதலால்; அந்தணர் என்போர் அறவோர் - அந்தணரென்று சிறப்பித்துச் சொல்லப்படுபவர் துறவியரே.

அந்தணர் என்னுஞ் சொல் அழகிய குளிர்ந்த அருளையுடையவர் என்னும் பொருளது. அருளாவது ஓரறிவுயிர் முதல் ஆறறிவுயிர் வரைப்பட்ட எல்லா வுயிர்களிடத்தும் இரக்கங் கொண்டு அன்பு செய்தல். இது துறவியர்க்கே இயலும். அதனால், அருளுடைமையைத் துறவுநிலைக்குரிய முதலறமாகக் குறித்தார் திருவள்ளுவர். தமக்கு வாழ்வளித்துக் காக்கும் தலைநாகரிக மக்களையுந் தாழ்வாகக் கருதும் தந்நல ஆணவப் பிராமணர் அந்தணராகார் என்பது, இதனால் அறிவிக்கப்பட்டது. பூணுதல் நோன்பாக மேற்கொள்ளுதல். 'என்போர்' செயப்பாட்டுவினை செய்வினையாக நின்றது. 'மற்று' அசைநிலை. உம்மை முற்றும்மை.

## அதி. 4 - அறன்வலியுறுத்தல்

*அதாவது, முனிவரால் கூறப்படும் மூன்றனுள் முதன்மையானதும், மக்கள் இருவகையின்பமும் அடைதற்கும் உலகம் இனிது நடைபெறற்கும் எல்லாராலும் கடைப்பிடிக்கப்பட வேண்டியதுமான, அறத்தின் இன்றியமையாமையை வலியுறுத்திக் கூறுதல்.*

**31. சிறப்பீனும் செல்வமு மீனு மறத்தினூஉங்
காக்க மெவனோ வுயிர்க்கு.**

**(இ-ரை.)** சிறப்பு ஈனும் - மறுமையில் விண்ணுலக வின்பத்தையும் வீடுபேற்றையுந் தரும்; செல்வமும் ஈனும் - இம்மையிற் செல்வத்தையுந் தரும்; உயிர்க்கு அறத்தின் ஊங்கு ஆக்கம் எவனோ - ஆதலால் மக்களுயிர்க்கு அறத்தைவிடச் சிறந்த ஆக்கம் எதுதான்?

எல்லாப் பேற்றுள்ளும் சிறந்த பேரின்ப வீடும் சிற்றின்பத்துட் சிறந்த விண்ணின்பமும் சிறப்பெனப் பெற்றன. செல்வமும் விண்ணின்பமும் இல்லறத்தார்க்கும், வீடு துறவறத்தார்க்கும் உரியனவாம். ஆகுவது ஆக்கம். ஆகுதல் மேன்மேலுயர்தல். இனி, "சிறப்பீனும் செல்வமு மீனும்" என்பதற்கு, ஏதேனுமொரு துறையில் தலைமை பெறுதற்கேற்ற சிறப்பாற்றலையுந் தரும்; எண்வகைச் செல்வமுந் தரும் என்று உரை கூறினுமாம். 'அறத்தினூஉங்கு' இன்னிசை யளபெடை. ஆக்கம் என்றது அகறகேதுவை. 'ஓ' அசைநிலை.

**32. அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
மறத்தலி னூங்கில்லை கேடு.**

**(இ-ரை.)** அறத்தின் ஊங்கு ஆக்கமும் இல்லை - ஒருவர்க்கு அறஞ் செய்வதிலும் சிறந்த ஆக்கவழியு மில்லை; அதனை மறத்தலின் ஊங்கு கேடு இல்லை - அதை மறந்து செய்யாது விடுவதினும் பெரிய கெடுதல்வழியு மில்லை.

'அறத்தினூஉங்கு' இன்னிசை யளபெடை. செய்யாமையாகிய எதிர் மறையொடு வேற்றுமைப்படுத்திக் காட்டற்கு, மேற்கூறிய உடன்பாட்டுச் சொல்லியத்தை (வாக்கியத்தை) வழிமொழிந்தார்.

**33. ஒல்லும் வகையா னறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல்.**

**(இ-ரை.)** அறவினை - அறமாகிய நல்வினையை; ஒல்லும் வகையான் - தத்தமக் கியன்றவாறு; செல்லும் வாய் எல்லாம் ஓவாதே செயல் - அது நடைபெறக் கூடிய வழியெல்லாம் இடைவிடாது செய்க.

ஒல்லும் வகையாவது, இல்லற வினையை இடம்பொருளேவற்கு ஏற்பவும், துறவற வினையை உடம்புநிலைக்கும் உளநிலைக்கும் ஏற்பவும் செய்தல். செல்லும் வாய்கள் மனம் மொழி மெய் என்னும் முக்கரணங்கள். அவற்றாற் செய்யப் பெறுவன நல்லெண்ணம் நற்சொல் நற்செயல் என்பன. வாய் என்பது வழியை மட்டுமன்று இடத்தையுங் குறித்தலால், 'செல்லும் வாய்' என்பன எல்லா அறத்துறைகளுமாம்.

**34. *மனத்துக்கண் மாசில லாத லனைத்தற*
*னாகுல நீர பிற.***

**(இ-ரை.)** மனத்துக்கண் மாசு இலன் ஆதல் அனைத்து அறன்-ஒருவன் தன் மனத்தின்கண் குற்றமற்றவனா யிருத்தலாகிய அவ்வளவே அறமாவது; பிற ஆகுல நீர - மற்றப் பூச்சும் ஆடையும் அணியுமாகிய கோலங்களெல்லாம் வீண் ஆரவாரத்தன்மையன.

மனம் தூய்மையாயிருப்பின் அதன் வழிப்பட்ட முக்கரண வினைகளும் தூய்மையா யிருக்குமாதலின், மாசிலா மனமே அறத்திற்கு அடிப்படை என்றவாறு. மனம் தூயதாயிருப்பின் வெளிக்கோலம் வேண்டாததாயும், தீயதாயிருப்பின் வெளிக்கோலம் பிறரை ஏமாற்றுவதாயு மிருத்தலின் இருவழியும் பயனின்மை நோக்கி வெளிக்கோலத்தை வீண் ஆரவாரமென்றார். 'ஆதல்' வியங்கோளுமாம்.

**35. *அழுக்கா றவாவெகுளி யின்னாச்சொல் நான்கு*
*மிழுக்கா வியன்ற தறம்.***

**(இ-ரை.)** அழுக்காறு - பிறராக்கம் பொறாமையும்; அவா-அவ் வாக்கத்தின்மேற் செல்லும் ஆசையும்; வெகுளி - அதைப் பெறாதவிடத்து எழும் சினமும்; இன்னாச் சொல் - அதுபற்றி வருங் கடுஞ்சொல்லும்; நான்கும் இழுக்கா இயன்றது அறம் - ஆகிய இந் நான்கையும் விலக்கி நடந்ததே அறமாவது. (இழுக்கா = இழுக்கி).

**36. *அன்றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது*
*பொன்றுங்காற் பொன்றாத் துணை.***

**(இ-ரை.)** அன்று அறிவாம் என்னாது அறம் செய்க - யாம் இன்று இளைமையா யிருப்பதாற் பிந்தி முதுமையிற் செய்வே மென்று கடத்திவையாது, இன்றிருந்தே அறவினையைச் செய்து வருக; மற்று அது பொன்றுங்கால் பொன்றாத்துணை - பின்பு அவ்வறம் இறக்குங் காலத்து இறவாத் துணையாம்.

இறத்தலாவது உடம்பினின்றும் உயிர் நீங்குதல். உயிர் நீங்கிய உடம்பு அழியவும், அதனாற் செய்யப்பட்ட அறம் அதனோடழியாது உயிரோ டொன்றிநின்று உதவுவதால், பொன்றாத்துணை யாயிற்று. நிலையாத உடம்பு நிலையும் பொழுதே நிலைக்கும் பயனைப் பெற்றுக் கொள்க என்பது ஆசிரி யரின் அன்பார்ந்த அறிவுரை.

**37.** *அறத்தா றிதுவென வேண்டா சிவிகை*
*பொறுத்தானோ டூர்ந்தா னிடை.*

**(இ-ரை.)** அறத்து ஆறு இது என வேண்டா - அறத்தின் பயன் இது வென்று உரையளவையால் ஒருவர் அறிவிக்க வேண்டுவதில்லை; சிவிகை பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை - பல்லக்கைச் சுமப்பானோடு அதில் ஏறிச் செல்வானிடைப்பட்ட காட்சியளைவையாலேயே அது அறியப்படும்.

இதுவே ஆசிரியர் கருத்தென்பது, பின்னர் அவர் ஆங்காங்கு நூலிற் கூறும் கூற்றுகளாலும், பல்பிறவியும் பழவினையும்பற்றி அவர்க்கிருந்த நம்பிக்கையாலும்,

"செய்தீ வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்
எய்த வருமோ இருநிதியம் – வையத்து
அறும்பாவ மென்னவறிந் தன்றிடார்க் கின்று
வெறும்பானை பொங்குமோ மேல்" (நல்வழி, 17)

என்னும் ஔவையார் கூற்றாலும்,

"Need not in words to dwell on virtue's fruits: compare
The man in litter borne with that toiling bear!"

என்னும் போப்பையர் மொழிபெயர்ப்பாலும் அறியப்படும்.

'பல்லக்கைச் சுமப்பாரையும் அதில் ஏறிச் செல்வானையுங் காட்டி இதுதான் அறத்தின் பயன் என்று கூறாதே' என்பதை இக் குறளுரையாகக் கூறுவது, இக்காலத்திற் கேற்குமேயன்றி ஆசிரியர் கருத்தாகாது.

ஆறென்பது வழி. அறத்தின் வழிப்பட்ட பயனை ஆறென்றார். அறியப்படும் என்பது சொல்லெச்சம்.

**38. *வீழ்நாள் படாஅமை நன்றாற்றி னஃதொருவன்***
***வாழ்நாள் வழியடைக்குங் கல்.***

**(இ-ரை.)** வீழ்நாள் படாமை நன்று ஆற்றின் - செய்யாது வீணாகக் கழியும் நாள் இல்லாவாறு ஒருவன் நாள்தோறும் அறத்தைச் செய்துவரு வானாயின்; அஃது ஒருவன் வாழ்நாள் வழி அடைக்கும் கல் -அச் செயல் அவன் இவ் வுலகில் உடம்போடுகூடி வாழும் நாள் வரும் வழியை அடைக் குங் கல்லாகும்.

மூவகைக் குற்றத்தால் வரும் இருவகை வினையும் உள்ளவரை உயிர் உடம்போடு கூடிநின்று அவ் வினைகளின் இருவகைப் பயனையும் நுகரு மாகலின், அந் நாளெல்லாம்; 'வாழ்நாள்' எனப்பட்டன. மூவகைக் குற்றம் காமம், வெகுளி, மயக்கம் என்பன. இவற்றை வடநூலார் அவிச்சை, அகங்காரம், அவா, விழைவு, வெறுப்பு என ஐந்தாக விரித்துப் பஞ்சக்கிலேசம் என்பர். அவற்றுள் அகங்காரம் மயக்கத்துள்ளும் அவா காமத்துள்ளும் அடங்கும். இருவகை வினை நல்வினை தீவினை என்பன. இருவகைப் பயன் இன்பந் துன்ப மென்பன. இனி, 'வாழ்நாள் வழியடைக்குங் கல்' என்பதற்கு, ஒருவரது நிலத்தினூடு தவறாகச் செல்லும் வழியிற் பிறர் செல்லாதவாறு வைத்தடைக்குங் கல்போல, வாழ்நாள் என்னும் தீயவழியில் உயிர் செல்லாவாறு வைத் தடைக்குங் கல் எனினுமாம். இது உருவகவணி.

'படாஅமை' இசைநிறை யளபெடை. வாழ்நாள் வழியடைத்தலாவது பிறவியை நீக்கி வீடுபெறுவித்தல்.

**39. *அறத்தான் வருவதே யின்பமற் றெல்லாம்***
***புறத்த புகழு மில.***

**(இ-ரை.)** அறத்தான் வருவதே இன்பம் - அறவழியால் ஒருவர்க்கு வரும் இன்பமே உண்மையான இன்பமாவது; மற்று எல்லாம் புறத்த - வேறு தீய வழியில் வருவனவெல்லாம் இன்பம்போல் தோன்றினும் துன்பத்தின்பாற் படுவனவே; புகழும் இல - அதோடு அவை புகழுடையனவும் ஆகா.

இங்கு இன்பமென்று பொதுப்படக் கூறியது உலகின்பமாகிய சிற்றின் பத்தை; அறவழியல்லது வேறுவழியிற் பேரின்பம் ஒருவன் பெறமுடியா தாகலின். உலக வின்பம் ஒருபுல வின்பமும் பலபுல வின்பமும் ஐம்புல வின்பமாகிய முற்றின்பமும் என முத்திறப்படும். வண்ண வோவியமும் எழுவும் யாழும் இன்னடிசிலும் நறுவிரையும் மெல்லணைக் கட்டிலும் போல்வன, ஒருபுல வின்பமே தருவன; அழகிய வளமனையும் பல்வகைப்

பழுமரக்காவும் போல்வன பலபுல வின்பந் தருவன; கட்டழகியான கற்புடை மனைவியெனின் ஐம்புலவின்பமும் ஒருங்கே தரவல்லாள். இனி, இன்பப் பொருள் போன்றே அதனைக் கொள்ளும் செல்வப் பேறும் உள்ளத்திற்கு இன்பந் தருவதாம். காசு தானாக இன்பந்தராவிடினும் இன்பப் பொருள்களைக் கொள்ளுங் கருவியாதல் காண்க. விலையாகக் கூடிய எல்லாப் பொருளும் காசுபோற் பயன்படுவனவே.

ஒருவன் அறவழியில் தேடிய தன் பொருளை நுகர்வதே புகழொடு கூடிய இன்பமாம்; பிறன்பொருளை நுகர்வது பழியொடு கூடிய துன்பமாம். பிரிநிலை யேகாரம் பின்னுங் கூட்டப்பட்டது.

**40. *செயற்பால தோரு மறனே யொருவற்***
***குயற்பால தோரும் பழி.***

**(இ-ரை.)** ஒருவர்க்குச் செயற்பாலது அறனே - ஒருவன் என்றுஞ் செய்யத்தக்கது நல்வினையே; உயற்பாலது பழியே - செய்யாது விடத்தக்கது தீவினையே.

'ஓரும்' ஈரிடத்தும் அசைநிலை. ஆயினும், முதற்காலத்தில் 'ஆராய்ந் தறியும்' என்று பொருள்படும் ஏவற்பன்மை அல்லது பெயரெச்சமாகவே அது வழங்கியிருத்தல் வேண்டும். பிரிநிலையேகாரம் பின்னுங் கூட்டப்பட்டது.

***பாயிரவியல் முற்றிற்று.***

②

# இல்லறவியல்

*அறநூற் பாகுபாட்டின்படி அறம்பொரு ளின்பம் வீடென வரிசைப் படுத்தப்பட்ட உறுதிப்பொருள் நான்கனுள், முதலதான அறத்தைக் கடைப் பிடிக்கும் இருவகை வாழ்க்கை முறைகளையுங் கூறும் பெரும் பகுதி, அறத்துப்பால் எனப்பட்டது. இது பாயிரத்தின் இறுதி அதிகாரமான அறன் வலியுறுத்தலொடு பொருள்தொடர்புங் கொண்டதாயிற்று. பகு - பகல் - பால் = பகுதி, நூற் பெரும்பகுதி.*

*இருவகை அறவாழ்க்கைகளுள், இயல்பானதும் பெரும்பான்மை யானதும் உலக நடப்பிற்கு இன்றியமையாததும், துறவறத்திற்கும் இன்றி யமையாத துணையாவதும், உலகிலுள்ள ஐம்புல வின்பமும் நுகர்வதும், முறைப்படி கடைப்பிடிக்கப்பெறின் வீடுபேற்றையுந் தருவதும், நல்லற மென்று உயர்ந்தோராற் சிறப்பிக்கப் பெறுவதுமான இல்லற வாழ்க்கையின் இயல்பைக் கூறும் சிறு பகுதி இல்லறவியல் எனப்பட்டது.*

## அதி. 5 - இல்வாழ்க்கை

*அதாவது, ஒருவன் தன் கற்புடை மனைவியொடு கூடி இல்லத் தின்கண் இருந்து இன்பந்துய்த்து வாழும் அறவாழ்க்கையின் இன்றியமை யாமையையும் சிறப்பையும் எடுத்துக் கூறுவது.*

**41. இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கு
நல்லாற்றி னின்ற துணை.**

**(இ-ரை.)** இல்வாழ்வான் என்பான் - இல்லறத்தில் வாழ்பவன் என்று சிறப்பித்துச் சொல்லப்படும் வேளாளன்; இயல்புடைய மூவர்க்கும் - இல்லறத்தில் வாழும் இயல்புடைய ஏனை மூவர்க்கும்; நல்லாற்றின் நின்ற துணை - அவர் செல்லும் நல்லற நெறிக்கண் நிலைபெற்ற துணையாம்.

ஏனை மூவராவார் இருவகை யந்தணருள் இல்லறத்தானான பார்ப்பானும் அரசனும் வணிகனுமாவர். 'இயல்புடைய' என்னும் அடைமொழி அதிகார இயைபினால் இல்லறத்தாரைக் குறிக்குமேயன்றித் துறவறத்தாரைக் குறிக்காது. அந்தணர் (பார்ப்பார்) முதலிய நால்வரும் இல்லறத்தாரா யிருப்பரேனும், அவருள் தலைசிறந்தவர் வேளாளரே யென்பது கருத்து.

"உழுவா ருலகத்தார்க் காணியஃ தாற்றா
தெழுவாரை யெல்லாம் பொறுத்து", (1032)

"ஏரி னுழாஅ ருழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால்", (14)

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந்
தொழுதுண்டு பின்செல் பவர்", (1033)

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க றானென்றாங்
கைம்புலத்தா றோம்ப றலை", (43)

"இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு", (81)

"வித்து மிடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்" (85)

என்று திருவள்ளுவரும்,

"வேளாள னென்பான் விருந்திருக்க வுண்ணாதான்" (திரிகடு. 12)

என்று நல்லாதனாரும், கூறியிருத்தலையும், 'இல்வாழ்வான்' என்பதனோடொத்த 'குடியானவன்' என்னுஞ் சொல் உலக வழக்கில் உழவனையே குறித்து வருதலையும் நோக்குக.

ஆரியர் வருமுன் ஐயரென்றும் பார்ப்பாரென்றும் சொல்லப்பட்ட இருவகையந்தணரும் தமிழரே. அவருள் முன்னவர் துறவியர்; பின்னவர் ஆசிரியர் புலவர் பண்டாரம் உவச்சர் குருக்கள் திருக்கள் நம்பியர் போற்றியர் எனப் பல்வேறு பெயர்பெற்ற இல்லறத்தார். ஏனை மூவகுப்பார் போன்றே அந்தணரும் இருவகுப்பார் என அறிக.

திருவள்ளுவர் பிராமணீயம் என்னும் ஆரியத்தை ஒழிக்கவே நூல் செய்தாராதலின், பிரமசரியம் வானப்பிரத்தம் சந்நியாசம் என்னும் முந்நிலை பட்ட பிராமணரைக் காத்தலைத் தமிழ வேளாளன் கடமையெனக் கூறியிரார் என்பது தெளிவுறு தேற்றமாம்.

"அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை" என்று ஆசிரியர் கூறுவதால், 'நல்லாறு' என்றது இல்லறத்தையே என்பது துணியப்படும். 'என்பான்' என்னும் செய்வினை வாய்பாட்டுச் சொல் செயப்பாட்டு வினைப் பொருளது.

***42. துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கு***
***மில்வாழ்வா னென்பான் றுணை.***

**(இ-ரை.)** துறந்தார்க்கும் - உலகப்பற்றைத் துறந்தவர்க்கும்; துவ்வாதவர்க்கும் - உண்பதற்கில்லாத வறியார்க்கும்; இறந்தார்க்கும் - ஒருவரு மின்றித் தன்னிடம் வந்து இறந்தார்க்கும்; இல்வாழ்வான் என்பான் துணை - இல்லறத்தான் என்று சிறப்பித்துச் சொல்லப்படுபவன் துணையாம்.

"உழவினார் கைம்மடங்கி னில்லை விழைவதூஉம்
விட்டேமென் பார்க்கு நிலை", (1036)

"இரவார் இரப்பார்க்கொன் றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்" (1035)

என்று ஆசிரியர் வேறிடத்துங் கூறுதல் காண்க.

"துறந்தார் பெருமை" (22), "துறந்தாரின் தூய்மை" (159), "துறந்தார்க்குத் துப்புரவு" (263), "துறந்தார் படிவத்தர்" (586) என வருமிடமெல்லாம், துறந்தார் என்னுஞ் சொல் செய்வினைப் பொருளே தருதலால், "களைகணானவராற் றுறக்கப்பட்டார்க்கும்" என்று பரிமேலழகர் ஈண்டுச் செயப்பாட்டு வினைப் பொருள் கூறுவது பொருந்தாது. முந்தின குறளுரையில் அவர் மூவகைப் போலித் துறவியரைப் பொருத்தியதினாலேயே இங்கு இவ்வா றுரைக்க நேர்ந்தது. களைகணானவரால் துறக்கப்பட்டவரும் துவ்வாதவருள் அடங்குவர். இறந்தார்க்குச் செய்யுந் துணை ஈமக்கடனும் இறுதிச் சடங்கும் தென்புலத்தார் படையலுமாம்.

***43. தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க றானென்றாங்***
***கைம்புலத்தா றோம்ப றலை.***

**(இ-ரை.)** தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்று - இறந்த முன்னோர் வழிபடுதெய்வம் விருந்தினர் ஏழையுறவினர் தன் குடும்பம் என்று சொல்லப்படும்; ஆங்கு ஐம்புலத்து ஆறு ஓம்பல் - அவ் வைந்திடத் தும் செய்யவேண்டிய அறவினைகளைப் பேணிச் செய்தல்; தலை - இல்லறத் தானுக்குத் தலையாய கடமையாம்.

பரிமேலழகர் 'தென்புலத்தார்' என்னுஞ் சொற்குப் 'பிதிரர்' என்று பொரு ளுரைத்து, "பிதிரராவார் படைப்புக் காலத்து அயனாற் படைக்கப்பட்டதோர் கடவுட்சாதி" என்பர்.

முதற்காலத் தமிழகமாகிய குமரிநாடு பல்வேறு கடல்கோள்களால் மூழ்கிப் போனமையால், அது இருந்த தென்றிசை, கூற்றுவன் திசையாகவும் இறந்தோரின் இருப்பிடமாகவும் கொள்ளப்பட்டது. தென்புலத்தார்க்குச் செய் யும் அறவினையாவது, அவர் ஆவி ஆறுதலும் மகிழ்வும் அடைதற் பொருட்டு, அவர் இறந்த நாளில் தெய்வத்திற்குப் படைப்பதுபோல் அடை யாள முறையில் சில வுண்டிகளை அவர்க்கும் படைத்து, அவர் பெயரால் துறவியர்க்கும் இரப்போர்க்கும் சிறந்த உணவும் புத்தாடையும் உதவுதல். தெய்வம் என்றது அவரவர் உளநிலைக் கேற்றவாறு சிறுதெய்வமும் பெருந் தேவனும் கடவுளுமாகிய மூவகைத் தேவுகளை. கோயிற்கும் அடியார்க்கும் செய்யும் தானங்களும் தெய்வ வழிபாட்டின்பாற் படும். விருந்து என்றது புதிதாக வரும் மதிப்புள்ள அயலாரை. அவரை வரவேற்றுச் சிறந்த உண வளிப்பது இக்காலத்து வழக்கற்றது. அயலூரினின்று வந்த உறவினர்க்குச் சிறந்த வுணவளிப்பது கைம்மாறு கருதிய கடமையேயன்றி அறமாகாது. தான் என்றது தன்னையுந் தன் குடும்பத்தையும். "உண்டி முதற்றே யுணவின் பிண் டம்" (புறம்.18), "உடம்பா ரழியின் உயிரா ரழிவர்" (திருமந். 724). ஆதலால், ஒருவன் தன் குடும்பத்தைக் கவனியாது பிறரைப் பேணுதலும் அறமாகாது.

இங்குக் குறிக்கப்பட்ட ஐந்திட வினைகளும் அறவினையாகவே, ஆறாவது இடமாகிய அரசிற்குச் செலுத்தவேண்டிய வரி கட்டாய வினை யாகிய கடமையாயிற்று, ஆறிலொரு கடமையிறுத்தல் என்னும் பண்டை வழக்கும், உழவனையே இல்லறத்தாருட் சிறந்தவனாகக் காட்டும். பிறதொழி லார் எல்லாரும் பெரும்பாலும் குறிப்பிட்ட சிறுதொகைப் பணத்தையே வரியாகச் செலுத்திவந்தனர்.

"பலகுடை நீழலுந் தங்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர்" (1034)

என்று திருவள்ளுவரும்,

"இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும்
உழவிடை விளைப்போர் பழவிற லூர்களும்" (சிலப். 10 : 149–50)

என்று இளங்கோவடிகளும், கூறுதல் காண்க.

44. ***பழியஞ்சிப் பாத்தூ ணுடைத்தாயின் வாழ்க்கை***
***வழியெஞ்ச லெஞ்ஞான்று மில்.***

(இ-ரை.) வாழ்க்கை - ஒருவனது இல்லறவாழ்க்கை; பழி அஞ்சிப் பாத்துஊண் உடைத்தாயின் - ஈயாத கஞ்சன் என்று பிறர் பழித்தற்கு அஞ்சித் துறந்தார் முதலிய மூவர்க்கும் தென்புலத்தார் முதலிய ஐவர்க்கும் அவன் பொருளைப் பகுத்தளித்து உண்டலை இயல்பாகக் கொண்டிருப்பின்; வழி எஞ்சல் எஞ்ஞான்றும் இல் - அவனது மரபுவழி ஒருபோதும் அறாது எக்காலும் தொடர்ந்து வருவதாம்.

இறைவனருளும் உலகோர் வாழ்த்தும் அவன் வழியை நீடிக்கச் செய்யும் என்பது கருத்து.

45. ***அன்பு மறனு முடைத்தாயி னில்வாழ்க்கை***
***பண்பும் பயனு மது.***

(இ-ரை.) இல்வாழ்க்கை அன்பும் அறனும் உடைத்தாயின் - ஒருவனது இல்லறவாழ்க்கை அவனுக்கும் அவன் வாழ்க்கைத் துணைக்கும் இடைப்பட்ட இருதலைக் காதலையும் அவர் கருத்தொருமித்துப் பிறர்க்குச் செய்யும் அறவினைகளையும் உடைத்தாயின்; அது பண்பும் பயனும் - அவ் வுடைமை அவ் வாழ்க்கைக்கு முறையே பண்பு தன்மையும், பயன் விளைவு மாகும்.

இல்லற வாழ்க்கை இருபகட் டொருசகட் டொழுக்கம் போல்வதாக லின், கணவன் மனைவியரிடைப்பட்ட இருதலையன்பு அதன் பண்பாயிற்று. அதனாற் செய்யப்படும் அறம் அதன் பயனாயிற்று. அன்பு பண்பும் அறன் பயனும் ஆகும் என்பது நிரனிறை.

46. ***அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்***
***போஒய்ப் பெறுவ தெவன்.***

(இ-ரை.) இல்வாழ்க்கை அறத்தாற்றின் ஆற்றின் - ஒருவன் இல்லற வாழ்க்கையை அதற்குரிய அறநெறிப்படி நடத்துவானாயின்; புறத்தாற்றில்

போய்ப் பெறுவது எவன் - அதற்குப் புறம்பாகிய துறவுநெறியிற் போய்ப் பல்வகையில் துன்புறுவதல்லது சிறப்பாகப் பெறும் பயன் யாது?

அறத்தாறு என்றது அன்புடைமை, விருந்தோம்பல், இனியவை கூறல், செய்ந்நன்றியறிதல், நடுநிலைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, பிறனில் விழையாமை, பொறையுடைமை, அழுக்காறாமை, வெஃகாமை, புறங்கூறாமை, பயனிலசொல்லாமை, தீவினையச்சம், ஒப்புரவறிதல், ஈகை என்னும் பதினாறறத் தொகுதியை. இல்லறத்தாலும் வீடுபேறுண்டாமென்பது தமிழர் கொள்கையாதலின், துறவறத்தினால் மட்டும் வீடுபெற முடியும் என்னும் ஆரியக் கொள்கையை மறுத்து, இல்லறத்தில் தானும் இன்புற்றுப் பிறர்க்கும் ஒல்லும் வகையால் அறவினை ஓவாதே செல்லும்வா யெல்லாம் செய்து இறுதியில் பேரின்பமும் பெறுவதாயிருக்க; துறவறத்திற் போய்ப் பசி பட்டினியாலும் தட்பவெப்ப மிகையாலும் துன்புற்றும் ஒருவர்க்கும் ஒருவகையிலும் உதவாதும், கூடாவொழுக்கத்திற் காளாகியும், ஒருகால் இறுதி யிற் பிறவா வீடுபெறினும் சிறப்பாகப் பெறுவது எதுதானென்று வினவுகின்றார் ஆசிரியர். சிவனடியார் பலர் இல்லறத்தில் நின்றே வீடு பெற்றாரென்று பெரிய புராணங் கூறுதல் காண்க. போஒய் என்பது இசைநிறை யளபெடை.

47. *இயல்பினா னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான்*
*முயல்வாரு ளெல்லாந் தலை.*

(இ-ரை.) இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான் - முறைப்படி இல்லறவாழ்க்கை வாழ்பவன் என்று சொல்லப்படுகின்றவன்; முயல்வாருள் எல்லாம் தலை - பற்றறுக்க முயலும் துறவுநெறியார் எல்லா ருள்ளும் தலைமையானவனாம்.

முற்றத் துறந்தார் யாரென மக்களால் அறியப்படாமையின், 'முயல் வாருளெல்லாம்' என்றும், இருவகை யறத்தார்க்கும் உதவியே வீடு பெறு தலின் 'தலை' என்றுங் கூறினார். என்பான் என்னும் செய்வினை வாய்பாட்டுச் சொல் செயப்பாட்டு வினைப் பொருளது.

48. *ஆற்றி னொழுக்கி யறனிழுக்கா வில்வாழ்க்கை*
*நோற்பாரி னோன்மை யுடைத்து.*

(இ-ரை.) ஆற்றின் ஒழுக்கி - தவஞ்செய்வாரைத் தவநெறியில் ஒழுகச் செய்து; அறன் இழுக்கா இல்வாழ்க்கை - தானும் தன் அறத்தினின்று தவறாத இல்லறவாழ்க்கை; நோற்பாரின் நோன்மை உடைத்து - அத் தவஞ் செய்வார் நிலையினும் மிகுந்த பொறைத்திறனை யுடையது.

பசி, தகை முதலிய இடையூற்றை நீக்கலின் 'ஆற்றினொழுக்கி' என்றார். இல்வாழ்வான் தன்மை அவன் வாழ்க்கைமேல் ஏற்றிக் கூறப்பட்டது. இல்லறத்தையுந் தவநெறியையும் ஊக்குவது, தவநெறியைமட்டுங் காப்பதினும் வலிமையுடைத்தாயிற்று. நோற்பர் என்பது ஆகுபொருட்சொல்.

**49.** *அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும்*
*பிறன்பழிப்ப தில்லாயி னன்று.*

**(இ-ரை.)** அறன் எனப்பட்டது இல்வாழ்க்கையே - இருவகை யறத்துள்ளும் அறம் என்று தமிழ் நூல்களாற் சிறப்பித்துச் சொல்லப் பெற்றது இல்லறமே; அஃதும் பிறன் பழிப்பது இல்லாயின் நன்று - அவ் வில்லறமும் பிறராற் பழிக்கப்படாத தூய்மையுடைத்தாயின் மிக நன்றாம்.

பிரிநிலை யேகாரம் பிரித்துக் கூட்டப்பட்டது. அஃது என்னுஞ் சுட்டுப் பெயர், முற்குறிக்கப்பெற்ற இல்லறத்தைச் சுட்டுமேயன்றி, அதற்கு மறுதலையானதும் ஓரிடத்துங் குறிக்கப் பெறாததுமான துறவறத்தைச் சுட்டாது. மேலும், துறவறமும் நல்லதே யென்று கூறின், அது 'அறனெனப்பட்டது இல்வாழ்க்கையே' என்னும் பிரிநிலைத் தேற்றக் கூற்றின் வலிமையைக் கெடுத்து முன்னுக்குப் பின் முரணாதல் காண்க. "இல்லற மல்லது நல்லற மன்று" என்னும் ஔவையார் கூற்றையும் நோக்குக.

பிறன்பழிக்கும் இல்வாழ்க்கை விருந்தோம்பாமையாலும் பிறனில் விழைவாலும் வரைவின் மகளிர் தொடர்பாலும் பிறவற்றாலும் நேர்வதாம்.

**50.** *வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்*
*தெய்வத்துள் வைக்கப் படும்.*

**(இ-ரை.)** வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் - இவ் வுலகத்தில் இல்லறத்து வாழும் முறைப்படி வாழ்கின்றவன்; வான் உறையும் தெய்வத்துள் வைக்கப்படும் - இவ்வுலகத்தானே யாயினும் வானுலகிலுள்ள தேவருள் ஒருவனாக வைத்து மதிக்கப்படுவான்.

இல்லறவாழ்க்கையில் தூய்மையாக வாழ்பவன் மக்களுட் சிறந்தவனாக இருப்பனாதலாலும், இம்மையிற் செய்த நல்வினைப் பயனை மறுமையில் தேவனாகித் தேவருலகத்தில் நுகர்வான் என்னும் நம்பிக்கையினாலும், 'வானுறையுந் தெய்வத்துள் வைக்கப்படும்' என்றார். தெய்வம் என்றது வகுப்பொருமை.

## அதி. 6 - வாழ்க்கைத் துணைநலம்

*அஃது, இல்லறத்தானின் வாழ்க்கைத் துணையாகிய கற்புடை மனைவியின் நலங்களை எடுத்துக் கூறுதல்.*

**51. *மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்***
***வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.***

**(இ-ரை.)** மனைத்தக்க மாண்பு உடையள் ஆகி - இல்லறத்திற்கேற்ற நற்குண நற்செய்கைகள் உடையவளாய்; தற்கொண்டான் வளத்தக்காள் - தன்னை மணந்துகொண்ட கணவனின் வருவாய்க்குத் தக்கவாறு வாழ்க்கை நடத்துபவள்; வாழ்க்கைத் துணை - அவனுக்குச் சிறந்த வாழ்க்கைத் துணையாம்.

நற்குணங்களாவன: கணவனையும் பிறக்கும் மக்களையும் பேணுதலும் அன்பாக விருந்தோம்புதலும் துறவியரைப் போற்றுதலும் இரப்போர்க்கு ஈதலும் முதலியன. நற்செய்கைகளாவன: அறுசுவை யுண்டிகளைச் சுவை யாகச் சமைத்தலும் வீட்டையும் பொருள்களையும் பாதுகாத்துக் கொள்ளு தலும் அக்கம்பக்கத்தாரொடு நட்பாயிருத்தலும் கணவன் உத்தரவின்றி வீட்டைவிட்டு வெளியேறாமையும் முதலியன.

**52. *மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை***
***யெனைமாட்சித் தாயினு மில்.***

**(இ-ரை.)** மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் - இல்லறத்திற்கேற்ற நற்குண நற்செய்கைகள் ஒருவனுடைய மனைவியிடத்தில் இல்லாவிடின்; வாழ்க்கை எனை மாட்சித்து ஆயினும் இல் - அவனது இல்வாழ்க்கை வேறு செல்வத்திலும் அதிகாரத்திலும் எத்துணைச் சிறந்ததாயினும் சிறப்புடைய தாகாது.

'இல்' என்றது பயனின்மையை. "ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே" என்னும் பழமொழி இங்குக் கவனிக்கத்தக்கது.

**53. *இல்லதெ னில்லவண் மாண்பானா லுள்ளதெ***
***னில்லவள் மாணாக் கடை.***

**(இ-ரை)** இல்லவள் மாண்பு ஆனால் இல்லது என் - ஒருவனுடைய மனைவி நற்குண நற்செய்கைச் சிறப்புடையவளானால் அவளுக்கு இல்

லாதது எது? இல்லவள் மாணாக்கடை உள்ளது என் - அம் மனைவி அச் சிறப்பில்லாதவளானால் அவளுக்கு உள்ளது எது?

மாண்பு என்னும் பண்பின் பெயர் பண்பியின்மேல் நின்றது. இல்லறத் திற்கு முதன்மையாக வேண்டுவது மனைவியின் குணச்சிறப்பே என்பது இதனாற் கூறப்பட்டது.

**54. பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின்.**

**(இ-ரை.)** பெண்ணின் பெருந்தக்க யா உள - ஒருவன் இவ் வுலகத்திற் பெறக்கூடிய பொருள்களுள் மனைவியினுஞ் சிறந்த தகுதி யுடையவை வேறு எவை உள்ளன? கற்பு என்னும் திண்மை உண்டாகப் பெறின் - அவளிடத்திற் கற்பு என்னும் கலங்கா நிலைமை மட்டும் அமைந்திருக்குமாயின்.

கற்பு என்பது கற்போல் உறுதியான இருபாலிடைக் காதற்பண்பு. கல்-கற்பு. "கற்பு றுத்திய கற்புடை யாடனை" (அயோத்தி. நகர்நீங்கு. 16) கம்பரும் கூறுதல் காண்க. அது மணப்பருவம் வரை தோன்றாதிருந்து பின்பு ஒருவரையே காதலிப்பது; இருபாற்கும் பொதுவானது. ஆதலின், மனைவியையன்றி அணங்கையும் நோக்காத ஆண்கற்பும் கணவனையன்றிக் காவலனையும் நோக்காத பெண்கற்பும் எனக் கற்பு இருதிறப்பட்டதாம். இங்குக் கூறியது பெண்கற்பு என அறிக. இன்னும் இதன் விளக்கத்தைக் கற்பியலிற் காண்க.

கற்புடை மனைவியால் அறம்பொரு ளின்பப்பேற்றுடன் வாழ்நாளும் நீடிப்பதால், "பெண்ணிற் பெருந்தக்க யாவுள?" என்றார். 'உண்டாகப் பெறின்' என்பது உண்டாதலின் அருமைகுறித்து நின்றது.

**55. தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை.**

**(இ-ரை.)** தெய்வம் தொழாள் - தான் மணக்கு முன்பு தொழுதுவந்த சிறுதெய்வமாகிய இல்லுறை தெய்வத்தைத் தொழாது; கொழுநன் தொழுது எழுவாள் - தன் கணவன் பாதங்களையே வைகறையிறுதியில் தொட்டுக் கும்பிட்டெழும் கற்புடை மனைவி; பெய் என மழை பெய்யும் - பெய்யென்று சொன்னவுடன் மழை பெய்யும்.

"அணங்குடை நல்லில்" என்னும் மதுரைக்காஞ்சித் தொடர் (678) இல்லுறை தெய்வத்தைக் குறித்தல் காண்க. சிவனும் திருமாலும் போன்ற பெருந்தேவரைக் கற்புடை மனைவியரும் தத்தம் கணவனாரொடு கூடி வழிபட்டமையை, திருநீலகண்ட நாயனாரின் மனைவியார், மங்கையர்க் கரசியார், காரைக்காலம்மையார் முதலியோர் வாழ்க்கையினின்று அறிந்து கொள்க.

"வானம் பொய்யாது வளம்பிழைப் பறியாது
நீணில வேந்தர் கொற்றம் சிதையாது
பத்தினிப் பெண்டிர் இருந்த நாடு" (சிலப். 15 : 145 – 7)

என்னும் பண்டை நம்பிக்கை, நாளடைவில் "பெய்யெனப் பெய்யும் மழை", "வான்றரு கற்பின் மனையறம்" (மணிமே, 22: 53), "மழைதரும் இவள்" (மணிமே. 22 : 93) என்னும் வழக்குகட்கு வழிவகுத்தது போலும்! ஒருகால் வள்ளுவர் குறள் பண்டைக்காலத்து ஒரு பத்தினிப் பெண் செய்த இறும்பூதை(அற்புதத்தை) அடிப்படையாகக் கொண்டதாகவும் இருக்கலாம்.

இனி, "அனிச்சமும்... நெருஞ்சிப்பழம்" என்பதைப்போல் உயர்வு நவிற்சியாகக் கொள்ளின் ஒரு குற்றத்திற்கும் இடமில்லை.

புரட்சிப் பாவலர் பாரதிதாசனார், "கொழுநற் றொழுதெழுவாள் பெய் யெனப் பெய்யும் மழைக்கு ஒப்பாவள்" என்று பொருள் கூறிப் பொருத்த மாக்குவர்.

தொழாஅள் என்பது இசைநிறை யளபெடை.

**56. தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற**
**சொற்காத்துச் சோர்விலாள் பெண்.**

**(இ-ரை.)** தற்காத்து - தன் கற்பையும் உடல்நலத்தையுங் காத்து; தற்கொண்டான் பேணி - தன் கணவனையும் உண்டி மருந்து முழுக்கு முதலியவற்றாற் பேணி; தகைசான்ற சொல்காத்து - தம் இருவரையும்பற்றிய தகுதிவாய்ந்த உலக மதிப்பையுங் காத்து; சோர்விலாள் - பிறர்க்குச் செய்யும் அறவினைகளிலும் தளர்ச்சியில்லாதவள்; பெண் - இல்லறத்திற்குச் சிறந்த பெண்ணாவாள்.

**57. *சிறைகாக்குங் காப்பெவன் செய்யும் மகளிர்***
***நிறைகாக்குங் காப்பே தலை.***

**(இ-ரை.)** மகளிர் சிறைகாக்கும் காப்பு எவன் செய்யும் - பெண்டிரைக் கணவர் சிறைச்சாலையுள் அடைத்துவைத்தாற்போற் காக்குங் காவல் என்ன பயன்படும்? நிறை காக்கும் காப்பே தலை - அப் பெண்டிரே தங்கள் கற்பினால் தங்களைக் காத்துக்கொள்ளுதலே தலையாய காவலாம்.

சிறை காப்பாவது இரவும் பகலும் வீட்டைவிட்டு வெளியேறாமற் காவல் செய்தல். நிறை யென்பது மனத்தைக் கற்புநெறியில் நிறுத்துதல். கற்பில்லாத பெண்ணைக் காவல் செய்தல் அரிது என்பது கருத்து. ஏகாரம் பிரிநிலை.

**58. *பெற்றாற் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்***
***புத்தேளிர் வாழு முலகு.***

**(இ-ரை.)** பெண்டிர் பெற்றான் பெறின் - பெண்டிர் தம் கணவனுக்குத் தொண்டு செய்தலைப் பெறுவாராயின்; புத்தேளிர் வாழும் உலகு பெருஞ் சிறப்புப் பெறுவர் - தேவர் வாழும் உலகின்கண் அவராற் பெருஞ்சிறப்புச் செய்யப் பெறுவர்.

தொண்டுசெய்தல் என்பது சொல்லெச்சம். கொண்டானைப் பேணும் பெண்டிர் மண்ணுலகத்தில் மட்டுமன்றி விண்ணுலகத்திலும் சிறப்படைவர் என்பது இதனாற் கூறப்பட்டது.

**59. *புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை யிகழ்வார்முன்***
***னேறுபோற் பீடு நடை.***

**(இ-ரை.)** புகழ் புரிந்த இல் இல்லோர்க்கு - தனக்கும் தன் கணவனுக்கும் புகழை விரும்பிய மனைவி யில்லாதார்க்கு; இகழ்வார் முன் ஏறுபோல் பீடுநடை இல்லை - தம்மைப் பழித்துரைக்கும் பகைவர் முன் ஆணரிமா போல் இறுமாந்து நடக்கும் பெருமித நடையில்லை.

புரிந்த என்னும் பெயரெச்சத்தின் அகரம் தொக்கது. ஏறு என்னும் விலங்கின ஆண்பாற் பொதுப்பெயர் நடைச்சிறப்புப்பற்றி இங்கு அரிமாவின் (சிங்கத்தின்) ஆண்பாலைக் குறித்தது. கற்புடை மனைவியாற் கணவன் மதிக்கப்படுதலை,

"செயிர்தீர் கற்பிற் சேயிழை கணவ" (புறம். 36)

"அறம்பா டிற்றே ஆயிழை கணவ" (புறம். 34:7)

"சேணாறு நல்லிசைச் சேயிழை கணவ" (பதிற். 88: 36)

என்னும் விளிகள் உணர்த்துதல் காண்க.

**60. மங்கல மென்ப மனைமாட்சி மற்றத**
**னன்கல நன்மக்கட் பேறு.**

**(இ-ரை.)** மனைமாட்சி மங்கலம் - மனைவியின் நற்குண நற்செய்கைச் சிறப்பே இல்லறத்திற்கு மங்கலமாவது; நன்மக்கட்பேறு அதன் நன்கலம் - நல்ல அறிவுடை மக்கட்பேறு அதற்கு அணிகலமாவது; என்ப - என்று கூறுவர் அறிந்தோர்.

மங்கலமென்பது நெடுநன்மை. அறிந்தோர் என்னும் எழுவாய் எஞ்சி நின்றது. 'மற்று' அசைநிலை; பெயர்மாற்று எனினும் ஒக்கும். இல்லறத்திற்கு அணிகலங் கூறுமுகத்தான் அடுத்த அதிகாரத்திற்குத் தோற்றுவாய் செய்யப்பட்டது.

## அதி. 7 - மக்கட்பேறு

*அதாவது, இனப்பெருக்கத்திற்கும் உலக நடப்புத் தொடர்ச்சிக்கும் வகுத்த இயற்கையான ஏற்பாட்டின்படியும், தத்தம் தொழிலில் தமக்கு உதவி செய்தற்பொருட்டும், உழைக்க இயலாத முதுமைக்காலத்தில் தம்மைப் பேணும் பொருட்டும், தாம் இறந்தபின் தம் பெயரால் அறஞ்செய்தற் பொருட்டும், தம் பெயரை இவ் வுலகில் நிலவச்செய்தற் பொருட்டும் பிள்ளைகளைப் பெறுதல்.*

**61. பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த**
**மக்கட்பே றல்ல பிற.**

**(இ-ரை.)** பெறும் அவற்றுள் - இல்லறத்தான் பெறக்கூடிய பேறுகளுள்; அறிவு அறிந்த மக்கட்பேறு அல்ல - அறியத்தக்க நூல்களை அறியக்கூடிய பிள்ளைப்பேறு அல்லாத; பிற - வேறு சிறந்தவற்றை; யாம் அறிவதில்லை - யாம் அறிந்ததில்லை.

அறிவு என்பது அறிவைத் தரும் நூலைக் குறித்தலால் கருமிய(காரிய) வாகுபெயர். அறிந்த என்பது தேற்றம்பற்றிய காலவழுவமைதி. பெற்றோர், பேறுகாலம் என்னும் இருசொற்களும் பிள்ளைப்பேற்றின் தலைமையை எடுத்துக் காட்டும்.

**62. எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்**
**பண்புடை மக்கட் பெறின்.**

**(இ-ரை.)** பழிபிறங்காப் பண்பு உடை மக்கள் பெறின் - பழி தோன்றாத நற்குணங்களையுடைய மக்களைப் பெறின்; எழுபிறப்பும் தீயவை தீண்டா - பெற்றோரை எழுபிறவி யளவும் துன்பங்கள் அணுகா.

பண்பு என்றது பெற்றோரை நோக்கி அறஞ் செய்வதற்கேற்ற நற் குணத்தை. பிள்ளைகள் செய்யும் நல்வினையாற் பெற்றோரின் தீவினை தேயும் என்னும் கருத்துப்பற்றி, "எழுபிறப்புந் தீயவை தீண்டா" என்றார். நிலைத்திணை (தாவரம்), நீர்வாழ்வன, ஊர்வன, பறவை, விலங்கு, மக்கள், தேவர் என்னும் எழுவகைப் பிறப்பினும் தீயவை தீண்டா என்பது, பிறப்பின் வகைபற்றியும் தொகைபற்றியும் பொருந்தாமையின், எழு மக்கட்பிறப்பு என உரைக்கப்பட்டது. இதுவும் ஒருவகை உயர்வுநவிற்சியே. ஏழு என்பது ஒரு நிறைவெண்; ஆதலால் நீண்ட காலத்தைக் குறிப்பது.

பிறங்குதல் விளங்குதல். கண்ணோட்டம் அல்லது அச்சம்பற்றி ஒரு வரைப் பிறர் பழியாமலுமிருக்கலாமாதலின், "பிறராற் பழிக்கப்படாத" மக்கள் என்பது முற்றும் பொருந்தாது.

**63. தம்பொரு ளென்பதம் மக்க ளவர்பொரு**
**டந்தம் வினையான் வரும்.**

**(இ-ரை.)** தம் மக்கள் தம் பொருள் என்ப - தம் மக்களைத் தம் செல்வ மென்று பாராட்டுவர் பெற்றோர்; அவர் பொருள் தம் தம் வினையான் வரும் - அம் மக்களின் மகச்செல்வம் அவரவர் வினைக்கேற்றவாறு வரும்.

இம்மையிலும் மறுமையிலுமாக எதிர்காலத்தில் தம் மக்கள் தமக்குச் செய்யக்கூடிய நன்மையை எள்ளளவும் எதிர்நோக்காதே, அவர்களைக் குழவிப் பருவத்திலும் பிள்ளைப் பருவத்திலும் தம் சிறந்த செல்வமாகப் பாராட்டுவது பெற்றோர் வழக்கம். மக்களைப் பெற்றோரின் உடைமையாகக் குறிக்கும்போதே அவ் வுடைமைகளும் பின்பு பெற்றோரைப்போல உடை

யோராக மாறும் நிலைமையிருத்தலால், அம் மாறுநிலைத் தொடர்ச்சியைக் காட்டற்கே "அவர் பொருள் தந்தம் வினையான் வரும்" என்றார். அது கரணிய (காரண)க் கிளவியமாயின், "தம் வினையான் வரலான்" என்றே அமைத்திருப்பார்.

**64. *அமிழ்தினு மாற்ற வினிதேதம் மக்கள்***
***சிறுகை யளாவிய கூழ்.***

**(இ-ரை.)** தம் மக்கள் சிறு கை அளாவிய கூழ் - தம் மக்களின் சிறுகைகளால் துழவிக் குழைக்கப்பட்ட சோறு; அமிழ்தினும் ஆற்ற இனிதே - பெற்றோர்க்கு அவர்களின் மீதுள்ள காதல் மிகுதியால் தேவ ருணவினும் மிக இனிமையுடையதாம்.

தம் என்னும் சொல், பெற்றோரின் உடற்கூறாயிருந்து அவருடம்பினின்றும் வெளிப்பட்ட மக்களின் நெருங்கிய தொடர்பை உணர்த்தும். தேவருணவென்றது மக்களின் குருட்டுநம்பிக்கையான உலக வழக்கைத் தழுவியது.

"படைப்புப் பல படைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும்
நெய்யுடை யடிசில் மெய்பட விதிர்த்து
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத்தாம் வாழு நாளே." (புறம். 188)

"பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற்
றென்னுடைய ரேனு முடையரோ – இன்னடிசில்
புக்களையுந் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய்
மக்களையிங் கில்லா தவர்" (நள. கலிதொடர்)

என்னும் பாக்கள் இங்குக் கவனிக்கத் தக்கன.

அவிழ் - அவிழ்து - அமிழ்து - அமுது = சோறு. மருமம் - மம்மம் - அம்மம் - அம்முது - அமுது = பால். பாலைக் குறிக்கும் அமுது என்னும் சொல்லும் சோற்றைக் குறிக்கும் அமுது என்னும் சொல்லொடு மயங்கி, அமிழ்து என்னும் வடிவங் கொள்ளும். அமுது - அமுதம் - அம்ருத (வ.). வடமொழியாளர் அம்ருத என்னும் வடசொல் வடிவை அ + ம்ருத என்று தவறாகப் பகுத்து, சாவைத் தவிர்ப்பது என்று பொருள் புணர்த்து, தேவரும் (சுரரும்). அசுரரும் திருப்பாற்கடலைக் கடைந்தெடுத்த சுரையைத் தேவர் உண்டதனால் சுரர்

எனப்பட்டாரென்றும் அச் சுரை சாவைத் தவிர்த்ததனால் அம்ருத எனப் பெயர் பெற்றதென்றும், கதை கட்டிவிட்டனர். அதைக் குருட்டுத்தனமாய் நம்பிய தமிழர், விண்ணுலகப் பொருளெல்லாம் மண்ணுலகப் பொருளினும் மிகச் சிறந்தவை யென்னும் பொதுக் கருத்துப்பற்றி, தலைசிறந்த இன்சுவை யுண்டியை அமிழ்து என்றும் அமிழ்தினும் இனியது என்றும், சொல்லத் தலைப் பட்டனர். அம்ருத என்னும் வடசொல் வடிவம் கிரேக்கத்தில் (ambrotos) என்றும், ஆங்கிலத்தில் (ambrosia) என்றும் திரியும்.

**65.** ***மக்கண்மெய் தீண்ட லுடற்கின்ப மற்றவர்***
***சொற்கேட்ட லின்பஞ் செவிக்கு.***

**(இ-ரை.)** மக்கள் மெய் தீண்டல் உடற்கு இன்பம் - பெற்றோர்க்குத் தம் குழந்தைகளின் உடம்பைத் தொடுதல் தம் உடலுக்கு இன்பம்; அவர் சொல் கேட்டல் செவிக்கு இன்பம் - அவரது மழலைச்சொற் கேட்டல் தம் செவிக்கு இன்பம்.

'மற்று' வினைமாற்று. இங்கு இன்பத்திற்குக் கரணியம், பெற்றோரின் காதலொடு குழந்தைகளின் உடம்பு நொய்ம்மையும் குரல் மழலைமையுமாம்.

**66.** ***குழலினி தியாழினி தென்பதம் மக்கண்***
***மழலைச்சொற் கேளா தவர்.***

**(இ-ரை.)** தம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர் - தம் குழந்தைகளின் குதலைச் சொற்களைக் கேட்டறியாதவர்; குழல் இனிது யாழ் இனிது என்ப - புல்லாங்குழலிசை இனிதென்றும் செங்கோட்டியாழிசை இனிதென்றுங் கூறுவர்.

'குழல்', 'யாழ்' என்பன ஆகுபெயர். ஈரிசையினும் மழலைச்சொல் இனிதென்பது காதல்பற்றிய உயர்வுநவிற்சியே. செங்கோட்டியாழ் குடத் தின்மேல் தோல் போர்க்கப்பட்ட பண்டை வீணை.

**67.** ***தந்தை மகற்காற்று நன்றி யவையத்து***
***முந்தி யிருப்பச் செயல்.***

**(இ-ரை.)** தந்தை மகற்கு ஆற்றும் நன்றி - தந்தை கல்வித் திறமையுள்ள தன் மகனுக்குச் செய்யவேண்டிய நன்மையாவது; அவையத்து முந்தி இருப்பச் செயல் - கற்றோ ரவையின்கண் முதன்மையாயிருக்குமாறு அவனைச் சிறந்த கல்விமானாக்குதல்.

மகனைச் செல்வனாக்குவதிலுங் கல்விமானாக்குவது சிறந்தது என்பது கருத்து. "சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே" என்றார் பொன்முடி யாரும் (புறம். 312).

**68. தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து**
**மன்னுயிர்க் கெல்லா மினிது.**

**(இ-ரை.)** தம்மின் - தம்மினும் மிகுதியாக; தம் மக்கள் அறிவுடைமை - தம் மக்கள் கல்வியறிவுடையரா யிருத்தல்; மாநிலத்து மன் உயிர்க்கு எல்லாம் இனிது - பெற்றோராகிய தமக்கு மட்டுமன்றி இம் மண்ணுலகத்துள்ள மற்றெல்லா மக்கட்கும் இன்பந் தருவதாம்.

மன் = மாந்தன் (OE., OS., OHG. man, Skt. மநு). மன்பதை = மக்கட் கூட்டம். மன்னுயிர் என்பது இருபெயரொட்டு. மக்கள் கல்வியறிவில் அவையோரின் மட்டுமன்றிப் பெற்றோரினும் விஞ்சியிருக்கலாமென்பது கருத்து. தந்தையும் கற்றோனாகவும் அவையத்து முந்தியிருப்பவனாகவு மிருக்கலா மாதலால், "தந்தையினும் அவையத்தா ருவப்பர்" என்று பரிமேலழகர் கூறுவது பொருந்தாது.

**69. ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்**
**சான்றோ னெனக்கேட்ட தாய்.**

**(இ-ரை.)** தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய் - தன் மகனைக் கல்வியறிவு நிறைந்தோனென்று அறிவுடையோர் சொல்லக் கேட்ட தாய்; ஈன்ற பொழுதின் பெரிது உவக்கும் - தான் அவனைப் பெற்றெடுத்த பொழுதினும் பெரிது மகிழ்வாள்.

"ஐயிரு திங்களா யங்கமெலா நொந்துபெற்றுப்
பைய லென்ற போதே பரிந்தெடுத்து"

மகிழ்ந்ததினும் சான்றோனெனக் கேட்ட மகிழ்ச்சி சிறந்ததாதலின், 'பெரி துவக்கும்' என்றார். அறிவுடையோர் என்பது அவாய்நிலையான் வருவிக் கப்பட்டது. காமஞ்செப்பாது கண்டது மொழியும் நடுநிலை யுண்மைக் கூற்று அவரதேயாகலின். மனம்மட்டுங் குளிரும் தந்தை மகிழ்ச்சியினும், மனமும் வயிறும் மார்பும் குளிரும் தாய் மகிழ்ச்சி மிகப் பெரிதாகலின் தனித்துக் கூறப்பட்டது.

தமிழ மகளிர்க்கு உயர்நிலைக் கல்வி விலக்கப்படாமையாலும் இருபாலார்க்கும் உரிய பொதுச் செய்திகளையும் தலைமைபற்றி ஆண்பாலின்

மேல் வைத்துக் கூறுவது மரபாதலாலும், "தம்மிற்றம் மக்க ளறிவுடைமை" என்று ஆசிரியரும் பொதுப்படக் கூறியிருப்பதாலும், "பெண்ணியல்பால் தானாக வறியாமையாற் 'கேட்ட தாய்' என்றார்" என்று பரிமேலழகர் கூறியது தவறாம். இனி, ஔவையார், காக்கைபாடினியார், நச்செள்ளையார், காவற் பெண்டு, குறமகள் இளவெயினி, பூதப்பாண்டியன் தேவியார், பேய்மகள் இளவெயினி, வெண்ணிக் குயத்தியார், வெறிபாடிய காமக்கண்ணியார் முதலிய பண்டைப் புலத்தியரை அவரும் அறிந்திருந்தமையால், அவர் கூற்று நெஞ்சார்ந்த பொய்யுமாம். மகன்மேலுள்ள அன்புப் பெருக்கால் அவனறிவை மிகுத்தெண்ணும் தாய்க்கு நடுநிலை யறிஞர் பாராட்டு, முழு நம்பிக்கை யுண்டாக்கும் என்பதே கருத்து.

**70. மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை**
**யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல்.**

**(இ-ரை.)** தந்தைக்கு மகன் ஆற்றும் உதவி - தான் பிறந்ததினின்று தன்னை வளர்த்துக் கல்வி கற்கவைத்து, உலகிற் பிழைப்பதற்கு ஒரு தொழி லிற் பயிற்றி, மணஞ் செய்வித்து மனையறம் படுத்தி, தன் தேட்டிலும் ஒரு கூறளித்த தன் தந்தைக்கு, மகன் செய்ய வேண்டிய கைம்மாறாவது; இவன் தந்தை என் நோற்றான்கொல் எனும் சொல் - தன் அறிவாற்றலையும் நற்குண நற்செயல்களையும் கண்டோர், இவன் தந்தை இவ் வருமந்த மகனைப் பெறு தற்கு என்ன கடுந்தவஞ் செய்தானோ என்று வியந்து கூறுஞ் சொல்லை, அவர் வாயினின்று தானாக வரச் செய்தலாம்.

சொல் என்றது சொல்லை வருவித்தலைக் குறித்தது. 'கொல்' ஐயம் குறித்த இடைச்சொல். தந்தை நெடுங்காலமாகச் செய்த பல்வேறு பெரு நன்மைக்கும் மகன் செய்ய வேண்டிய கைம்மாறு ஒரு சொல்லே என்று, ஒருவகை அணிநயம்படக் கூறினார். இதனால், தந்தை செய்த நன்றிக்குச் சரியாக ஈடுசெய்தல் அரிதென்பதும், "தென்புலத்தார் கடனைத்" தீர்க்க நன்மக்களைப் பெறுதல், பெற்றோர் தம் விருப்பம்போற் செய்துகொள்ளக் கூடிய செயலன்றென்பதும், பெறப்படும்.

## அதி. 8 - அன்புடைமை

*அதாவது, இல்லறத்தானும் அவன் வாழ்க்கைத் துணையாகிய, மனைவியும் தாம் பெற்ற மக்களிடத்துக் காட்டிய அன்பை, துறவோர்ப் போற் றல், விருந்தோம்பல், ஒப்புரவொழுகல், இல்லார்க் கீதல், இரப்போர்க் கிடுதல் முதலிய இல்லற வினைகள் நடைபெறற்கேற்பப் பிறரிடத்தும் உடையராய்*

*இருத்தல். பிள்ளைகளைப் பெற்றவர்க்கே பிறரிடத்து அன்புண்டாகும் என்பது பொதுவான உலகக் கொள்கை.*

**71. அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்**
**புன்கணீர் பூச றரும்.**

**(இ-ரை.)** அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ் - ஒருவரது அன் பிற்கும் அதைப் பிறர் அறியாதவாறு அடைத்துவைக்கும் தாழ்ப்பாள் உளதோ? ஆர்வலர் புன்கண் நீர் பூசல் தரும் - தம்மால் அன்புசெய்யப் பட்டாரது துன்பங் கண்டவிடத்து அன்புடையாரின் துன்புறுங் கண் சிந்தும் நீரே அவருள்ளத்திலுள்ள அன்பை எல்லாரும் அறியப் பறைசாற்றிவிடும்.

உம்மை சிறப்புப் பற்றியது. புன்கண் புன்கூர்ந்த கண். புன்மை துன்பம். ஆர்வலர் துன்பம் அவர் கண்ணின்மேல் ஏற்றப்பட்டது.

இனி, துன்பக்கண்ணீரன்றி நீண்ட காலத்திற்குப்பின் கண்ணன்ன கேளிரைக் காணும்போது சிந்தும் காதற்கண்ணீரும் உண்டென அறிக.

**72. அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையா**
**ரென்பு முரியர் பிறர்க்கு.**

**(இ-ரை.)** அன்பு இலார் எல்லாம் தமக்கு உரியர் - அன்பில்லாதவர் எல்லாப் பொருள்களையுந் தமக்கே பயன்படுத்துவர்; அன்பு உடையார் என்பும் பிறர்க்கு உரியர் - அன்புடையாரோ பிறிதின் கிழமைப் பொருள் களை மட்டுமன்றித் தற்கிழமைப் பொருளாகிய தம் உடம்பையும் பிறர்க்குப் பயன்படுத்துவர்.

பிரிநிலை யேகாரமும், 'உரியர்' என்னும் வினைக்கேற்ற 'எல்லாவற் றாலும்', 'என்பாலும்' என்னும் கருவிவேற்றுமை யுருபுகளும் தொக்கன. எலும்பு என்பதன் மரூஉவான 'என்பு' சினையாகு பெயர். உம்மை சிறப் பும்மை. உடம்பைப் பிறர்க்கு உதவிய அன்பிற்கு, தன்னிடம் அடைக்கலம் புகுந்த புறாவிற்காகத் தன் தசையையும் உடம்பையும் அளித்த செம்பி (சிபி) என்னும் சோழ வேந்தன் கதை எடுத்துக்காட்டாகக் கூறப்பெறும். ஆயின், அதனினும் சிறந்த எடுத்துக்காட்டு, தன் தம்பியால் தன் நாடு கொள்ளப் பட்டுக் காட்டிற்போய்த் தங்கியிருந்த குமணன், தன்னைப் பாடிய பெருந் தலைச் சாத்தனார் என்னும் புலவர்க்குத் தன் தலையை வெட்டிக் கொண்டு போய்த் தன் தம்பியிடங் காட்டிப் பெரும் பொருள் பெறுமாறு தன் வாளைக் கொடுத்ததாகும். இதை,

"பாடுபெறு பரிசிலன் வாடினன் பெயர்தலென்
நாடிழந் ததனினு நனியின் னாதென
வாள்தந் தனனே தலையெனக் கீயத்
தன்னிற் சிறந்ஃது பிறிதொன் றின்மையின்" (புறம். 145)

என்று அப் புலவர் பாடியதினின்று அறிந்து கொள்க. இனி, பாரி தன்னையும் பரிசிலர்க்குத் தர அணியமாயிருந்ததும் இத்தகைய செயலாம்.

"பறம்பு பாடின ரதுவே யறம்பூண்டு
பாரியும் பரிசில ரிரப்பின்
வாரே னென்னான் அவர்வரை யன்னே" (புறம். 108)

என்று கபிலர் பாடியிருத்தல் காண்க.

**73. *அன்போ டியைந்த வழக்கென்ப வாருயிர்க்*
*கென்போ டியைந்த தொடர்பு.***

**(இ-ரை.)** ஆர் உயிர்க்கு என்போடு இயைந்த தொடர்பு - பெறுதற்கரிய மக்களுயிர்க்கு உடம்போடு பொருந்திய தொடர்பை; அன்போடு இயைந்த வழக்கு என்ப - அன்பு செய்தற்கு ஏற்பட்ட நெறியின் பயன் என்று கூறுவர் அறிவுடையோர்.

வழக்கு என்பது வழங்கும் நெறி. அஃது இங்கு அதன் பயனைக் குறித்தது. 'அன்பு' ஆகுபெயர். அன்பு செய்தலே மக்கட் பிறப்பின் நோக்க மும் பயனும் என்பது இங்குக் கூறப்பட்டது.

**74. *அன்பீனு மார்வ முடைமை யதுவீனு*
*நண்பென்னு நாடாச் சிறப்பு.***

**(இ-ரை.)** அன்பு ஆர்வமுடைமை ஈனும் - உறவினரிடத்துச் செய்யும் அன்பு ஒருவனுக்குப் பிறரிடத்தும் விருப்பத்தை உண்டாக்கும்; அது நண்பு என்னும் நாடாச் சிறப்பு ஈனும் - அது நாளடைவில் எல்லாரையும் நட்பாக்கி எல்லாப் பொருள்களும் எளிதாய்க் கிடைக்கக் கூடிய நல்ல நிலைமையை உண்டுபண்ணும்.

நாடாமை வருந்தித் தேடாமை.

**75. *அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்*
*தின்புற்றா ரெய்துஞ் சிறப்பு.***

**(இ-ரை.)** வையகத்து இன்புற்றார் எய்தும் சிறப்பு - இவ் வுலகத்து இல்லறத்தில் நின்று இன்பம் நுகர்ந்தவர் மறுமையில் தேவருலகஞ் சென்று

அடையும் சிறந்த இன்பத்தை; அன்பு உற்று அமர்ந்த வழக்கு என்ப - அவர் முன்பு இங்கு அன்போடு பொருந்த வாழ்ந்த நெறியின் பயன் என்று சொல்வர் அறிந்தோர்.

'வழக்கு' என்பது ஆகுபொருளது. இல்லறத்தினாலேயே இம்மையில் இவ்வுலக இன்பமும் மறுமையில் விண்ணுலக வின்பமும் பெறுவதற்குக் கரணியமாயிருப்பது அன்பு ஒன்றே என்பது இங்குக் கூறப்பட்டது.

**76. அறத்திற்கே யன்புசார் பென்ப வறியார்**
**மறத்திற்கு மஃதே துணை.**

**(இ-ரை.)** அன்பு அறத்திற்கே சார்பு என்ப - அன்பு அறத்திற்கே துணை யாவது என்று சிலர் சொல்வர்; அறியார் - அவர் அறியார்; மறத்திற்கும் அஃதே துணை - அதன் மறுதலையான மறத்திற்கும் அவ் வன்பே துணை யாவது.

அறம் மறம் என்பன இங்கு நல்வினை தீவினை என்று பொருள்படும் எதிர்ச்சொற்கள். அன்பு மறத்திற்குத் துணை என்பது, இஞ்சி பித்தத்திற்கு நல்லது என்பது போல்வது.

> "மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தம்
> தகுதியான் வென்று விடல்" (168)

> "இன்னாசெய் தாரை யொறுத்த லவர்நாண
> நன்னயஞ் செய்து விடல்" (314)

என்னுங் குறள்கள் இங்குக் கவனிக்கத் தக்கன. ஒரு பகைவனுக்கு நன்மை செய்தவிடத்து அவன் நாணித் தன் பகைமையை விட்டு நட்பாவது இயல்பாதலின், "மறத்திற்கு மஃதே துணை" என்றார்.

ஒருவன் தன் மனைவி மக்கள் மேலுள்ள அன்பினால், அவரைக் காத்தற்குத் தீயவழிகளிலும் பொருள் தேடுதல் உலகத்து நிகழ்தலால், அதனையே "மறத்திற்கு மஃதே துணை" என்று குறித்தார் என்று உரை கூறுவாருமுளர். அகப்பற்றால் தீமை செய்வது போன்றதே புறப்பற்றால் தீமை செய்வது மாதலானும், தீமைக்குத் துணைசெய்வது அறத்தொடு பொருந் தாமையானும், அது உரையன்மை அறிக.

**77. என்பி லதனை வெயில்போலக் காயுமே**
**யன்பி லதனை யறம்.**

**(இ-ரை.)** அறம் - அறத் தெய்வம்; அன்பு இலதனை -அன்பில்லாத உயிரை; என்பு இலதனை வெயில் போலக் காயும் - எலும்பில்லாத வுடம்பை வெயில் எரித்தாற் போல் எரிக்கும்.

எலும்பில்லாத வுடம்பு பூச்சி புழுக்களுடையன. அன்பில்லாத வுயிர் என்றது மக்களுயிரை. வெயில் வந்தபோது எலும்பில்லா வுடம்பு துன்புறுவதுபோல. வினைப்பயன் வந்தபோது அன்பு செய்யா மக்களுயிர் துன்புறும் என்பது. அன்பு செய்யாமையாவது அதற்கு மறுதலையான தீமை செய்தல். "அரைசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற் றாவதூஉம்" என்றார் இளங்கோவடிகள் (சிலப். பதிகம்). "அல்லவை செய்தார்க் கறங்கூற்றம்" என்றார் விளம்பிநாகனார் (நான்மணி. 85). மக்களை உயிர் என்றது அன்பின்மையாகிய இழிவுபற்றி.

78. *அன்பகத் தில்லா வுயிர்வாழ்க்கை வன்பாற்கண்*
*வற்றன் மரந்தளிர்த் தற்று.*

**(இ-ரை.)** அகத்து அன்பு இல்லா உயிர்வாழ்க்கை - உள்ளத்தில் அன்பில்லாத வுயிர் இல்லற வாழ்க்கை நடாத்துதல்; வன்பாற்கண் வற்றல் மரம் தளிர்த்த அற்று - பாலைநிலத்தின்கண் பட்டுப்போன மரம் தளிர்த்தாற் போலும்.

நடவாத தென்பதாம். 'வற்றல்' தொழிலாகு பெயர். 'வற்றன்மரம்' இருபெயரொட்டு. அன்னது - அற்று. அன்பில்லா மக்களை உயிர் என்றது இழிவுக் குறிப்பு.

79. *புறத்துறுப் பெல்லா மெவன்செய்யும் யாக்கை*
*யகத்துறுப் பன்பி லவர்க்கு.*

**(இ-ரை.)** யாக்கை அகத்து உறுப்பு அன்பு இலவர்க்கு - இல்லறம் நடத்துவாரின் உடம்புள் நின்று இல்லறத்திற்கு உறுப்பாகிய அன்பு இல்லாதவர்க்கு; புறத்து உறுப்பு எல்லாம் எவன் செய்யும் - மற்றப் புறத்து நின்று உறுப்பாவன வெல்லாம் அவ் வறஞ் செய்தற்கண் என்ன உதவியைச் செய்யும்?

புறத்துறுப்பாவன இடம்பொரு ளேவல் முதலியன. இது பரிமேலழக ருரையைத் தழுவியது. இனி, மணக்குடவர் பரிதி காளிங்கர் உரைக் கருத்து வருமாறு:

உடம்பிற்கு அகத்துறுப்பாகிய அன்பில்லாதவர்க்குப் புறத்துறுப்பாகிய மெய் வாய் கண் மூக்குச் செவியும், மார்பும் தோளும் முகமும் மயிர்முடியும் பிறவும், மரப்பாவைபோல் அழகாயிருந்தும் என்ன பயன்?

இதுவுங் கொள்ளத் தக்கதே. அகத்துறுப்பாகிய அன்பில்லாதவர்க்குப் புறத்துறுப்பாகிய ஐம்பொறிகளும் கை கால் முதலிய வினையுறுப்புகளும் நிறைவாயிருந்தும், அவற்றால் இல்லற நடப்பிற்கு என்ன பயன் என்று வினவற் கிடமிருத்தலால், "அதற்கு இல்லறத்தோடு யாது மியையில்லாமை யறிக" என்று பரிமேலழகர் மறுத்துரைப்பது பொருந்தாது. அன்பில்லாத வுடம்பு என்புதோற் போர்ப்பென்று ஆசிரியரும் அடுத்த குறளிற் கூறுதல் காண்க.

**80. அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்**
**கென்புதோல் போர்த்த வுடம்பு.**

**(இ-ரை.)** அன்பின் வழியது உயிர்நிலை - அன்பின் வழிப்பட்ட உடம்பே உயிர்நிலை என்று சிறப்பித்துச் சொல்லப் பெறுவது; அஃது இலார்க்கு உடம்பு என்பு தோல் போர்த்த - அவ் வன்பு இல்லாதவர்க்கு உள்ள உடம்புகள் உயிரில்லாது எலும்பைத் தோலாற் போர்த்த போர்ப்புகளே.

அன்பின் வழியது என்பது அன்பு செய்தற் கென்றே ஏற்பட்டது. இதன் விளக்கமே,

"அன்போ டியைந்த வழக்கென்ப வாருயிர்க்
கென்போ டியைந்த தொடர்பு" (73)

என்னுங் குறள். உயிர்நிலை என்பது கதவுநிலை என்பது போன்ற கூட்டுச் சொல். என்புதோற் போர்ப்பு என்றது பிணத்தினும் இழிந்த தென்னுங் குறிப்பினது.

## அதி. 9 - விருந்தோம்பல்

*அதாவது, இல்லறம் நடத்தும் கணவனும் மனைவியும், அன்புடைய ராயிருந்து, தம் இல்லத்திற்கேனும் ஊருக்கேனும் புதிதாக வந்த உயர்ந் தோரையும் ஒத்தோரையும், அவர் தங்கும் சில பல நாள்கட்கு அவர் தகுதிக்கும் தம் நிலைமைக்கும் ஏற்ப, உறையுளும் சிறந்த வூணும் உதவிப் பேணுதல்.*

*வேற்றூரிலிருந்து வந்த உறவினர்க்கும் நண்பர்க்கும் இங்ஙனமே சிறப்பு நடக்குமேனும், அது அறத்தின்பாற் படாது, வழக்கமும் கடமையும் பற்றியதாகும். அதனால், அதை உறவாடல் என்றும் நட்பாடல் என்றும் பிரித்துக் கூறல் வேண்டும்.*

*விருந்தோம்பல் என்னும் சிறந்த அறம், ஆரியர் தென்னாடு வந்து பிறப்பொடு தொடர்புற்ற குலப் பிரிவினையால் தமிழரின் ஒற்றுமையைச் சிதைத்தபின், தமிழகத்து அடியோடு நின்றுவிட்டது.*

*விரும்புவது என்னும் வேர்ப்பொருளைக் கொண்ட விருந்து என்னுஞ் சொல், பின்பு விரும்பப் பெற்ற புதியவரையும் அவர் நிலைமையான புதுமை யையும் அவர்க்களிக்கும் சிறந்த வுணவையும் முறையே குறித்து, இன்று உறவினர்க்கும் நண்பர்க்கும் படைக்கும் சிறந்த வுணவையே குறிக்கும் இழிபடைந்துள்ளது. பண்டை விருந்தினர் புதியவராயிருந்ததினால் புதுவர் எனவும் பட்டார்.*

"புலம்புசே ணகலப் புதுவி ராகுவிர்" (மலைபடு. 413)

**81. இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தற் பொருட்டு.**

**(இ-ரை.)** இல் இருந்து ஓம்பி வாழ்வது எல்லாம் - கணவனும் மனை வியும் தம் இல்லத்தின்கண் இருந்து தம்மையும் தம் மக்களையும் தம் பொருள் களையும் பேணிக் காத்து வாழ்வதெல்லாம்; விருந்து ஓம்பி வேளாண்மை செய்தற்பொருட்டு - விருந்தினரைப் பேணி அவருக்குப் பலவகையிலும் நன்றி (உபகாரம்) செய்தற் பொருட்டே.

இக்காலத்திற்போல் உண்டிச் சாலைகளும் தங்கல் விடுதிகளு மில்லாத பண்டைக் காலத்தில், பணம் பெற்றேனும், இல்லறத்தாரையன்றி விருந் தினரைப் பேண ஒருவரு மின்மையின், இல்வாழ்க்கையின் அடிப்படை நோக்கம் விருந்தோம்பலே என்றார். 'விருந்து' பண்பாகுபெயர்.

**82. விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா**
**மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.**

**(இ-ரை.)** சாவா மருந்து எனினும் - உண்ணப்படும் உணவு சாவை நீக்கும் மருந்தே யெனினும்; விருந்து புறத்ததாத் தான் உண்டல் வேண்டற்

பாற்று அன்று - விருந்தினரை வீட்டிற்கு வெளியே வைத்துவிட்டுத் தான் மட்டும் உள்ளிருந்து தனித்துண்டல் விரும்பத்தக்க தன்று.

இனி, விருந்தினரை வெளியே வைத்துவிட்டுத் தனித்துண்டல் சாவா மருந்தாகும் என்று சிலர் சொன்னாராயினும், அது செய்யத்தக்கதன்று என வேறோர் உரையுமுளது. அது,

"நல்லா றெனினும் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று" (குறள். 222)

என்றாற் போல்வது.

சாவா மருந்து சாவாமைக்குக் கரணியமாகிய மருந்து. நோவா மருந்து, மூவா மருந்து, சாவா மருந்து என்னும் மூவகை மருந்துகளுள் சாவா மருந்து தலைசிறந்ததாதலின், உம்மை உயர்வுசிறப்பு.

அதிகமான் ஔவையார்க்கு அளித்த அருநெல்லிக்கனி பரிசில் போன்றதாதலின், ஈண்டைக்கு எடுத்துக்காட்டாகாது.

இனி, விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவாம் (சாவையொக்கும்). அங்ஙனம் உண்பது சாவா மருந்தெனினும் வேண்டற்பாற்றன்று என்றும் பிரித்துப் பொருள் கொள்வர்.

**83. வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுத லின்று.**

**(இ-ரை.)** வைகலும் வருவிருந்து ஓம்புவான் வாழ்க்கை - நாள்தோறும் தன்னை நோக்கி வருகின்ற விருந்தினரைப் பேணுவானது இல்வாழ்க்கை; பருவந்து பாழ்படுதல் இன்று - வறுமையால் துன்புற்றுக் கெடுதல் இல்லை.

இது நாட்டு வளத்தையும் இல்லறத்தானின் செல்வநிலையையும் பொறுத்தது.

**84. அகனமர்ந்து செய்யா ளுறையு முகனமர்ந்து
நல்விருந் தோம்புவா னில்.**

**(இ-ரை.)** முகன் அமர்ந்து நல்விருந்து ஓம்புவான் இல் - முகமலர்ந்து நல்ல விருந்தினரைப் பேணுவானது இல்லத்தின்கண்; செய்யாள் அகன் அமர்ந்து உறையும் - திருமகள் மனமகிழ்ந்து வதிவாள்.

திருமகள் மனமகிழ்தல் செல்வம் நல்வழியிற் செலவிடப்படுதல்பற்றி. வதிதல் நிலையாகத் தங்குதல். நல்விருந்தினர் அறிவும் ஒழுக்கமும் தன் மானமும் உள்ளோர்.

**85. வித்து மிடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்.**

**(இ-ரை.)** விருந்து ஓம்பி மிச்சில் மிசைவான் புலம் - முன்பு விருந் தினரை உண்பித்துவிட்டுப் பின்பு மீந்ததைத் தானுண்ணும் வேளாளனது நிலத்திற்கு; வித்தும் இடல் வேண்டுமோ - விதை தெளித்தலும் வேண்டுமோ? வேண்டுவதில்லை.

தானே விளையும் என்பது குறிப்பெச்சம். இஃது இக்காலத்திற்கு இன்மைநவிற்சியாகத் தோன்றலாம். வளமிக்க பண்டைக் காலத்தில், அறு வடை நாளில் வயலிற் சிந்திய மணிகள் களந்தூர்க்கப்படாமலே கிடந்து, அடுத்துப் பெய்த மழையால் முளைத்து வளர்ந்து விளைந்திருக்கலாம். இனி, இக்காலத்தும், வித்தையும் சமைத்து விருந்தினர்க்குப் படைத்த வேளாளனது நிலத்தில், அவனுக்குத் தெரியாமல் இரவோடிரவாக வேறோர் அறவாண னான செல்வன் தன் சொந்த வித்தை விதைக்கலாம்.

இனி, விருந்தோம்பி மிச்சில் மிசைவான் - விருந்தினரை யுண்பித்துப் பின் மீந்ததை யுண்ணும் இயல்புள்ள வேளாளன்; புலம் வித்து இடலும் வேண்டுமோ - விருந்தோம்பல் முட்டுப்பட்ட விடத்துத் தன் நிலத்தில் விதைக்கு வைத்திருந்ததை விதைக்கவும் விரும்புவானோ? விரும்பான் என்று, வேறும் ஒரு பொருள் கொள்வர். இதற்கு இளையான்குடி மாற நாயனார் வரலாறு ஓர் எடுத்துக்காட்டாம்.

'கொல்' அசைநிலை, மிச்சில் அடுகலத்தில் அல்லது பெட்டியில் மிஞ்சு வது; தூய்மையா யிருப்பது. எச்சில் உண்கலத்தில் அல்லது இலையில் எஞ்சுவது; எச்சிலோடு கூடியது. இவ் வேறுபாடறிக.

**86. செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பா
னல்விருந்து வானத் தவர்க்கு.**

**(இ-ரை.)** செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான் - தன்னிடம் முந்திவந்த விருந்தினரைப் பேணிவிட்டுப் பின்பு பிந்திவரும் விருந்தின ரையும் எதிர்பார்த்து அவரோடு தானுண்ணக் காத்திருப்பான்; வானத்தவர்க்கு

நல்விருந்து - மறுமையில் தேவனாகி விண்ணகத்தாரால் சிறந்த விருந்தினனாக ஏற்றுக்கொள்ளப்படுவான்.

பண்டை வேளாண் மகளிர் தம் பிள்ளைகளை முறையாக விடுத்து வழிப்போக்கரைத் தடுத்துத் தம் வீட்டிற்கு வருவித்து விருந்தோம்பிய செய்தியை,

"உரன்கெழு நோன்பகட் டுழவர் தங்கை
பிடிக்கை யன்ன பின்னுவீழ் சிறுபுறத்துத்
தொடிக்கை மகடூஉ மகமுறை தடுப்ப
இருங்கா ழுலக்கை யிரும்புமுகந் தேய்த்த
அவைப்புமா ணரிசி யமலைவெண் சோறு
கவைத்தா ளலவன் கலவையொடு பெறுகுவிர்" (190–5)

என்னும் சிறுபாணாற்றுப்படைப் பகுதியால் அறிக.

**87. இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
றுணைத்துணை வேள்விப் பயன்.**

**(இ-ரை.)** வேள்விப்பயன் இனைத்துணைத்து என்பது ஒன்று இல்லை - விருந்தினர்க்குணவு படைத்தலின் பயன் இவ்வளவினது என்று வரையறுத்துச் சொல்லுந் திறத்த தன்று; விருந்தின் துணைத்துணை - விருந்தினரின் தகுதியளவே அதன் அளவாம்.

வேட்டுச் செய்யும் வினையாகலின் விருந்தோம்பலை வேள்வி என்றார். வேட்டல் விரும்பல்.

"உறக்குந் துணையதோ ராலம்வித் தீண்டி
யிறப்ப நிழற்பயந் தா அங் – கறப்பயனும்
தான்சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால்
வான்சிறிதாப் போர்த்து விடும்" (38)

என்பது நாலடியார்.

**88. பரிந்தோம்பிப் பற்றற்றே மென்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்.**

**(இ-ரை.)** விருந்து ஓம்பி வேள்வி தலைப்படாதார் - விருந்தினரைப் பேணி அவர்க்குச் சிறந்த உணவு படைத்தலை மேற்கொள்ளாதார்; பரிந்து ஓம்பிப் பற்று அற்றேம் என்பர் - அவ் வறங்கட்குச் செலவிட வேண்டிய பொருளை நிலையானதென்று மயங்கி வருந்திப் பாதுகாத்தும் பின்பு இழந்துவிட்டதனால், இன்று எமக்கு யாதொரு பற்றுக்கோடும் இல்லை யென்று நொந்து கூறாநிற்பர்.

"ஈட்டலுந் துன்பமற் றீட்டிய வொண்பொருளைக்
காத்தலு மாங்கே கடுந்துன்பங் – காத்தல்
குறைபடிற் றுன்பங் கெடிற்றுன்பந் துன்பக்
குறைபதி மற்றைப் பொருள்." (நாலடி. 280)

ஆதலால், நிலையாத பொருள் நிலையும் போதே நிலைத்த பயனைத் தேடிக்கொள்க என்பது இதனாற் கூறப்பட்டது.

வேள்வி என்னும் தூய தென்சொல்லாகிய தொழிலாகுபெயர் (ம., தெ. வேள்வி; க. பேளுவெ) விரும்பு என்று பொருள்படும் வேள் என்னும் முதனிலையடிப் பிறந்து, பின்வருமாறு விரும்பிச் செய்யும் பல்வேறு வினைகளைக் குறிக்கும்.

1. திருமணம். "நாமுன்பு தொண்டுகொண்ட வேள்வியில்" (பெரியபு. தடுத்தாட். 127)
2. விருந்தினர்க்குப் படைப்பு. "வேள்வி தலைப்படா தார்" (குறள். 88)
3. தெய்வத்திற்குப் படைப்பு, பூசனை (பிங்.) "வேள்வியி னழகியல் விளம்பு வோரும்" (பரிபா. 16: 43)
4. பேய்கட்குப் படைப்பு, களவேள்வி. "பண்ணி, தைஇய பயங்கெழு வேள்வியின்" (அகம். 13:11)
5. கொடை (பிங்.)

ஆரியர் தம் ஆரியக் கொள்கைகளைத் தமிழ்நாட்டிற் பரப்புதற்கும் 'யாகம்' என்னும் கொலைவேள்வியைத் தமிழரிடை எதிர்ப்பின்றிச் செய் தற்கும், தம் கொலைவேள்விக்குக் கடவுள் வேள்வியென்றும் வேதக் கல்விக்குப் பிரமவேள்வி யென்றும் பெயரிட்டு, அவற்றொடு பேய்ப்படை யலாகிய பூதவேள்வியையும் விருந்தோம்பலாகிய மாந்தன் வேள்வியையும் இறந்த முன்னோர்க்குப் படைத்தலாகிய தென்புலத்தார் வேள்வியையுஞ்

சேர்த்து, ஐவகை வேள்வி யென்று தொகுத்துக் கூறி, வேள்வியென்று வருமிடமெல்லாம் ஆரிய வேள்வியை நினைக்குமாறு செய்துவிட்டனர்.

89. உடைமையு ளின்மை விருந்தோம்ப லோம்பா
மடமை மடவார்க ணுண்டு.

**(இ-ரை.)** உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா மடமை - செல்வக் காலத்து வறுமையாவது விருந்தோம்பலைப் புறக்கணிக்கும் பேதைமை; மடவார்கண் உண்டு - அது பேதையரிடத்திலேயே உள்ளது.

செல்வத்தின் பயனை இழப்பித்து அதை வறுமையாக மாற்றுவதால், பேதைமையை வறுமையாகச் சார்த்திக் கூறினார்.

90. மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

**(இ-ரை.)** அனிச்சம் மோப்பக் குழையும் - இயல்பாக மென்மையாக வுள்ள பூக்களுள்ளும் மிக மென்மையானதாகச் சொல்லப்படும் அனிச்சப் பூவும் மோந்தால் மட்டும் வாடும்; விருந்து முகம் திரிந்து நோக்கக் குழையும் - ஆனால், தன்மானமுள்ள விருந்தினரோ, வீட்டாரின் முகம் வேறுபட்டு நோக்கிய மட்டில் வாடிவிடுவர்.

'அனிச்சம்' முதலாகுபெயர். தொட்டு முகர்ந்தால் வாடும் அனிச்ச மலரினும் தொலைவில் முகம் வேறுபட்டு நோக்கியமட்டில் வாடும் விருந்தினர் மென்மையராதலின், விருந்தோம்புவார் இன்சொற்கும் இன்செயற்கும் முன் இன்முகங் காட்டவேண்டுமென்பது இங்குக் கூறப்பட்டது.

## அதி. 10 - இனியவை கூறல்

*அதாவது, பொதுவாக எல்லார்க்கும், சிறப்பாக விருந்தினர்க்கும், இன்முகங் காட்டியபின் இன்சொற் சொல்லுதல்.*

91. இன்சொலா லீர மளைஇப் படிறிலவாஞ்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.

**(இ-ரை.)** இன்சொல் -இனிய சொல்லாவன; ஈரம் அளைஇ - அன்பு கலந்து; படிறு இலவாம்- வஞ்சனை யில்லாத; செம்பொருள் கண்டார் வாய்ச்சொல் - மெய்ப்பொருளை யறிந்த சான்றோர் வாய்ச்சொற்கள்.

'ஆல்' அசைநிலை. படிறு - பொய். எப்பாலவரும் இயையும் உண்மைப் பொருள் என்றும் மாறாது நேராயிருத்தலின் 'செம்பொருள்' என்றார். 'செம்பொருள் கண்டார் வாய்ச்சொல்' என்றது, அவர் வாயினின்று வருஞ் சொற்களெல்லாம் என்றும் இனியனவே என்பதை உணர்த்தற்கு. 'அளைஇ' சொல்லிசை யளபெடை.

**92. அகனமர்ந் தீதலி னன்றே முகனமர்ந்**
**தின்சொல னாகப் பெறின்.**

**(இ-ரை.)** முகன் அமர்ந்து இன்சொலன் ஆகப் பெறின் - ஒருவரைக் கண்டபொழுதே முகமலர்ந்து இனிய சொல்லும் உடையனாகப் பெறின்; அகன் அமர்ந்து ஈதலின் நன்று - அது மனமுவந்து ஒரு பொருளைக் கொடுத்தலினும் சிறந்ததாம்.

வெறுநோக்கினும் வெறுஞ் சொல்லினும் ஒரு பொருளைக் கொடுத் தலே உண்மையிற் சிறந்ததாயினும், மக்கள் பொதுவாக வெளிக்கோலத் திற்கே வயப்படுவதால், அகமலர்ச்சி வெளிப்படாத கொடையிலும் முக மலர்ச்சியோடு கூடிய இன்சொல்லே நல்லதென்றார்.

**93. முகத்தா னமர்ந்தினிது நோக்கி யகத்தானா**
**மின்சொ லினதே யறம்.**

**(இ-ரை.)** முகத்தான் அமர்ந்து இனிது நோக்கி - ஒருவரைக் கண்ட பொழுதே முகமலர்ச்சியோடு விரும்பி இனிதாக நோக்கி; அகத்தான் ஆம் இன்சொலினதே அறம் - பின்பு நெருங்கியவிடத்து அகமலர்ச்சியோடு கூடிய இனிய சொற்களைச் சொல்லுதலையுடையதே அறமாவது.

ஒருவரைக் கண்டபொழுதே ஒரு பொருளை யீதல் பொதுவாக இயை யாமையின், முதற்கண் இன்முகங் காட்டலும் உடனும் அடுத்தும் இன்சொற் சொல்லுதலும் மக்களைப் பிணித்து மகிழ்விக்குந் தன்மையனவாதலின், விருந்தினரிடத்தும் அம் முறையைக் கையாள்வதே சிறந்த தென்றார்.

**94. துன்புறூஉந் துவ்வாமை யில்லாகும் யார்மாட்டு**
**மின்புறூஉ மின்சொ லவர்க்கு.**

**(இ-ரை.)** யார்மாட்டும் இன்புறும் இன்சொலவர்க்கு- யாரிடத்தும் இன்புறுத்தும் இன்சொல்லைச் சொல்வார்க்கு; துன்புறும் துவ்வாமை இல்லாகும் - துன்புறுத்தும் வறுமை இலதாகும்.

'உறூஉம்' ஈரிடத்தும் பிறவினையான இன்னிசை யளபெடை. துவ்வாமை நுகராமை. துய்-து. எல்லாரிடத்தும் இன்சொற் சொல்வார்க்கு எல்லாரும் நண்பரும் அன்பரு மாவராதலின், எல்லாப் பொருளுங் கிடைக்கு மென்றும் அதனால் வறுமை யிராதென்றும் கூறினார். வறுமையால் ஐம்புல நுகர்ச்சி கூடாமையின் வறுமையைத் துவ்வாமையென்றார். வறியவரைத் 'துவ்வாதவர்' என்று முன்னரே (42) கூறியிருத்தல் காண்க.

**95. பணிவுடைய னின்சொல னாத லொருவற்கு**
**அணியல்ல மற்றுப் பிற.**

**(இ-ரை.)** ஒருவற்கு அணி பணிவு உடையவன் இன்சொலன் ஆதல் - ஒருவனுக்கு அணியாவன அடக்கமுடைமையும் இன்சொலுடைமையுமாம்; பிற அல்ல - மற்றப் பொன்னாலும் மணியாலும் செய்யப்பட்ட அணிகள் அணிகளாகா.

பணிவுடைமை இன்முகத்தோடு கூடியதாதலின் இன்சொற்கு உடன் சேர்த்துக் கூறப்படும் இனமாயிற்று. பண்டைக்காலத்தில் ஆடவரும் காதிலும் கழுத்திலும் கையிலும் அணியணிவது பெரு வழக்கமாதலின், 'ஒருவற்கு' என ஆண்பாலாற் குறித்தது தலைமைபற்றியதாகும். அடக்கமுடைமையும் இன்சொலுடைமையும் இருபாற்கும் ஒப்பப் பொதுவேனும், அணியுடைமை பெண்பாற்குப்போல் ஆண்பாற்குத் தேவையன்று என்பது குறிப்பான் அறியப்படும். 'மற்று' அசைநிலை.

**96. அல்லவை தேய வறம்பெருகு நல்லவை**
**நாடி யினிய சொலின்.**

**(இ-ரை.)** நல்லவை நாடி இனிய சொலின் - விளைவாற் பிறர்க்கு நன்மை பயக்குஞ் சொற்களை ஆராய்ந்தறிந்து அவற்றைச் செவிக்கினிதாக ஒருவன் சொல்வானாயின்; அல்லவை தேய அறம் பெருகும் - அவனுக்குத் தீவினைப் பயன் குன்ற நல்வினைப் பயன் வளரும்.

அறம் நல்வினை; இங்கு அதன் பயனைக் குறித்தது. அறமல்லாதவை தீவினைகள். தீவினைகள் தேய்தலாவது தீவினைப் பயன் குன்றல். நல்வினையும் தீவினையும் ஒளியும் இருளும் போல மறுதலைப் பொருள்களாதலின், ஒளியின் முன் இருள் கெடுதல் போல நல்வினைப் பயன் முன் தீவினைப் பயன் கெடுமென்றார். நல்லவற்றைச் சொன்னாலும் அறமாகு மேனும், அவற்றைக் கடுமையாகச் சொல்லின் கேட்பார் மனம் வருந்தி அவ் வறங்

கெடுதலால், நல்லவற்றையும் இனிதாகச் சொன்னாலன்றி அறமாகா தென் றார். இதனால் இன்சொல்லின் அறத்தன்மை வலியுறுத்தப் பெற்றது.

**97. *நயனீன்று நன்மை பயக்கும் பயனீன்று பண்பிற் றலைப்பிரியாச் சொல்.***

**(இ-ரை.)** பயன் ஈன்று பண்பின் தலைப்பிரியாச் சொல் - விளைவாற் பிறர்க்கு நன்மை செய்து இனிமைப் பண்பினின்றும் நீங்காத சொல்; நயன் ஈன்று நன்றி பயக்கும் - இம்மைக்கு நேர்பாட்டை (நீதியை) உண்டாக்கி மறுமைக்கு அறத்தையும் விளைவிக்கும்.

நேர்பாடு என்பது நீதி என்னும் வடசொற்கு நேர்த் தென்சொல். நேர்மை என்பது நேர்பாட்டையுங் குறிக்கும் பலபொரு ளொருசொல். நேர்பாடு நேர்மையான ஒழுக்கம். "கோணே நேர்பாடா யிருந்தான்" (பாரத. சூது. 227). பண்பு என்பது இங்கு அதிகாரத்தால் இனிமைப் பண்பைக் குறித்தது. தலைப் பிரிதல் என்பது தலைக்கூடுதல் என்பதற்கு எதிர்.

**98. *சிறுமையு ணீங்கிய வின்சொன் மறுமையு மிம்மையு மின்பந் தரும்.***

**(இ-ரை.)** சிறுமையுள் நீங்கிய இன்சொல் - விளைவாலும் பொருளாலும் குரலாலும் பிறர்க்கு நோய் செய்யாத இனிய சொல்; இம்மையும் மறுமையும் இன்பம் தரும் - ஒருவனுக்கு இருமையிலும் இன்பம் விளைவிக்கும்.

இம்மை இன்பமாவது ஐம்புல நுகர்ச்சி பெற்று நோயற்ற நீடு வாழ்வு. மறுமை யின்பமாவது விண்ணுலக வாழ்வு அல்லது மண்ணுலக நற்பதவி. இன்சொல் என்பது இன்செயலையுந் தழுவும்.

**99. *இன்சொ லினிதீன்றல் காண்பா னெவன்கொலோ வன்சொல் வழங்கு வது.***

**(இ-ரை.)** இன்சொல் இனிது ஈன்றல் காண்பான் - பிறர் கூறும் இன்சொல் தனக்கு இன்பந் தருதலை நுகர்ந்தறிகின்றவன்; வன்சொல் வழங்குவது எவனோ - தான் மட்டும் பிறரிடத்தில் வன்சொல்லை ஆள்வது என்ன பயன் கருதியோ?

'கொல்' அசைநிலை. 'ஓ' இரக்கப் பொருளது. "தன்னுயிர்போல் மன்னுயிரை நினைக்க வேண்டும்" என்பது இங்கு வற்புறுத்தப்பட்டது.

**100.** ***இனிய வுளவாக வின்னாத கூறல்***
***கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.***

**(இ-ரை.)** இனிய உளவாக இன்னாத கூறல் - தனக்கு அறமும் பிறர்க்கு இன்பமும் பயக்கும் இனிய சொற்களும் எளிதாய் வழங்குமாறு தன்னிடத் திலிருக்கவும், அவற்றை வழங்காது தனக்குத் தீதும் (பாவமும்) பிறர்க்குத் துன்பமும் பயக்கும் கடுஞ்சொற்களை ஒருவன் வழங்குதல்; கனி இருப்பக் காய் கவர்ந்த அற்று - இனியனவும் வாழ்நாளை நீட்டிப்பனவுமான கனிகளும், கைப்பனவும் சாவைத் தருவனவுமான காய்களும் ஒருசரியாய்க் கைக்கு எட்டுவனவாக விருக்கவும், அவற்றுள் முன்னவற்றை விட்டுவிட்டுப் பின்னவற்றை மட்டும் பறித்துண்டலொக்கும்.

பொருளைச் சிறப்பிக்கும் அடைமொழிகள் உவமத்திற்கும் ஏற்குமாத லால், இனிய கனி என்பது ஒளவையாருண்ட அருநெல்லிக்கனி போலும் வாழ்வு நீட்டியையும், இன்னாத காய் என்பது எட்டிக்காய் போலும் உடன் கொல்லியையும் குறிக்கும் என அறிக. 'கவர்ந்தற்று' என்னும் சொல் மரங் களினின்று காய்கனிகளைப் பறிக்குஞ் செயலை நினைவுறுத்தும். கவர்தல் பறித்தல்; இங்குப் பறித்துண்டல். பிறரிடத்து இன்னாச்சொற் சொல்லுதல் தனக்கே தீங்கை வருவிக்கும் பேதைமை யென்பது இதனாற் கூறப்பட்டது.

உவமமும் பொருளும் சேர்ந்தது உவமை என அறிக.

## அதி. 11 - செய்ந்நன்றி யறிதல்

*அதாவது, இன்முகத்தோடும் இன்சொல்லோடும் விருந்தோம்பி வேளாண்மை செய்தவர்க்கும் வேறு வகையில் உதவினவர்க்கும் நன்றி யறிவுடையரா யிருத்தல். "உப்பிட்டவரை உள்ளளவும் நினை", "உண்ட வீட்டிற்கு இரண்டகம் பண்ணுகிறதா?" என்னும் பழமொழிகள் இங்கு நினைக்கத் தக்கன.*

**101.** ***செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்***
***வானகமு மாற்ற லரிது.***

**(இ-ரை.)** செய்யாமல் செய்த உதவிக்கு - தன்னிடத்திலிருந்து ஓர் உதவியையும் முன்பு பெறாதிருந்தும் ஒருவன் தனக்குச் செய்த உதவிக்கு; வையகமும் வானகமும் ஆற்றல் அரிது - 'மண்ணுலகத்தையும் விண்ணுல கத்தையும் கைம்மாறாகக் கொடுத்தாலும் அவை ஈடு செய்தல் அரிது.

கைம்மாறுகளெல்லாம் எத்துணைச் சிறந்தன வாயினும், முதல் வினையைப் பின்பற்றின வழிவினைகளாதலின் முதல் வினைக்கு ஈடாகா என்பது கருத்து.

செய்யாமைச் செய்த வுதவி யென்று பாடமோதி, மறுத்துதவ மாட்டாமையுள்ளவிடத்துச் செய்த வுதவி யென்று பொருளுரைக்கத் தேவையில்லை. அப்பொருள்,

"கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ வுலகு" (211)

என்னுங் குறளாற் பெறப்படுதலால்.

*102. காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினு*
*ஞாலத்தின் மாணப் பெரிது.*

**(இ-ரை.)** காலத்தினால் செய்த நன்றி - ஒருவனது வாழ்க்கைக்கேனும் தொழிற்கேனும் இறுதி நேரும் நெருக்கடி வேளையில் அதை நீக்க இன்னொருவன் செய்த வுதவி; சிறிது எனினும் ஞாலத்தின் மாணப் பெரிது - பொருளளவிலும் முயற்சியளவிலும் சிறிதாயிருந்தாலும், அக் காலநிலை நோக்க நிலவுலகத்தினும் பெரிதாம்.

ஒருவர் செய்த நன்றியை அது செய்யப்பட்ட காலநிலைக்கேற்ப மதிக்க வேண்டுமென்பது கருத்து. 'காலத்தினால்' என்பது காலத்தாலே வந்தான் என்னும் மேலை வடார்க்காட்டு வழக்குப் போன்ற வேற்றுமை மயக்கம்.

*103. பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கி*
*னன்மை கடலிற் பெரிது.*

**(இ-ரை.)** பயன் தூக்கார் செய்த வுதவி நயன் தூக்கின் - இவருக்கு இன்னது செய்தால் நமக்கு இன்னது கிடைக்குமென்று ஆராயாது ஒருவர் செய்த வுதவியின் அருமையை ஆய்ந்து நோக்கின்; நன்மை கடலின் பெரிது - அதன் நன்மை கடலினும் பெரியதாம். காலத்தினாற் செய்த நன்றி பயன் தூக்கியதாகவு மிருக்கலாமாதலால், பயன் தூக்காது செய்த வுதவியும் ஒரு வகையிற் பெரியதே யென்றார்.

**104. *தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்***
***கொள்வர் பயன்றெரி வார்.***

**(இ-ரை.)** தினைத்துணை நன்றி செயினும் - தினையளவினதாகிய சிற்றுதவியையே ஒருவன் தமக்குச் செய்தானாயினும்; பயன் தெரிவார் பனைத் துணையாக் கொள்வர் - அதன் பயனளவை யறிந்தவர் அதைப் பனையளவினதாகிய பேருதவியாகக் கருதுவர்.

'தினை', 'பனை' என்னும் நிலைத்திணைப் பெயர்கள், இங்குச் சிறுமை பெருமை குறிக்கும் அளவைப் பெயர்களாக வந்தன. 'உம்மை' இழிவுசிறப்பு. ஒருவர் செய்த வுதவியைப் பொருளளவிலும் முயற்சியளவிலும் நோக்காது பயனளவில் நோக்க வேண்டுமென்பது, இங்குக் கூறப்பட்டது.

**105. *உதவி வரைத்தன் றுதவி யுதவி***
***செயப்பட்டார் சால்பின் வரைத்து.***

**(இ-ரை.)** உதவி உதவி வரைத்து அன்று - கைம்மாறான உதவி காரணத்தானும் பொருளானுங் காலத்தானுமாகிய மூவகையானும் முன் செய்த உதவியளவினதன்று; உதவி செயப்பட்டார் சால்பின் வரைத்து - அதனைச் செய்வித்துக் கொண்டவர்தம் அமைதியளவிற்று.

பெரும்பாலும் இக் கருத்தைத் தழுவியே மணக்குடவ பரிதி காளிங்கர் உரைகளும் உள்ளன.

இக் குறள் கைம்மாறு பற்றியது என்பதற்கு அதில் ஒரு குறிப்புமில்லை. செய்யாமற் செய்ததும் காலத்தினாற் செய்ததும் கைம்மாறு கருதாமற் செய் ததும் பயனளவிற் பெரியதுமான நன்றிகள் இதுவரை கூறப்பட்டன. அவை யல்லாது, பெரியார்க்குச் செய்த நன்றி யென்றும் ஒரு சிறப்புவகை யுளது. அதுவே இக் குறளிற் கூறப்பட்டுள்ளது.

உதவி உதவி வரைத்தன்று - ஒருவர் ஒருவர்க்குச் செய்த நன்றி மேற் கூறிய நால்வகை யுதவியளவினது மட்டுமன்று; உதவி செயப்பட்டார் சால் பின் வரைத்து - நன்றி செய்யப்பட்டவரின் மேன்மையளவினது மாகும்.

இது,

"இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன்" (87)

என்னுங் கருத்தை யொத்தது. அங்குக் கூறியது விருந்தோம்பல்பற்றியது. இங்குக் கூறியது வேறுவகை நன்றிபற்றியது. எச்சவும்மை தொக்கது.

"The kindly aids extent is of its worth no measure true. Its worth is as the worth of him to whom the act you do." - G.U.P.

"The benefit itself is not the measure of the benefit, the worth of those who have received it is the measure." - W.H.D.

"Help has no measure of its own. Its worth is as much as the worth of the recipient." - M.S.P.

*106. மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க*
*துன்பத்துட் டுப்பாயார் நட்பு.*

(இ-ரை.) துன்பத்துள் துப்பு ஆயார் நட்பு துறவற்க - துன்பக் காலத்தில் தனக்குப் பற்றுக்கோடானவரின் நட்பை விடாதிருக்க; மாசு அற்றார் கேண்மை மறவற்க - மனத்திற் குற்றமற்றவரது உறவை மறவாதிருக்க.

மாசற்றார் கேண்மை இம்மைக்கும் மறுமைக்கும் பலவகையில் உதவும் என்பது கருத்து.

*107. எழுமை யெழுபிறப்பு முள்ளுவர் தங்கண்*
*விழுமந் துடைத்தவர் நட்பு.*

(இ-ரை.) தங்கண் விழுமம் துடைத்தவர் நட்பு - தங்கட்கு நேர்ந்த துன்பத்தை நீக்கினவருடைய நட்பை; எழுமை யெழுபிறப்பும் உள்ளுவர் - ஏழேழு பிறவியளவும் அன்புடன் நினைப்பர் நன்றியறிவுடையோர்.

எழுவகைப் பிறப்பிலும் நினைப்பர் என்பது பகுத்தறிவிற்குப் பொருந் தாமையின். ஏழேழ் மக்கட் பிறப்பு என உரைக்கப்பட்டது. அதுவும் உயர்வு நவிற்சியே. ஏழேழு என்பது கழிநெடுங் காலத்தைக் குறிக்க வந்த இருமடி நிறைவெண். நீக்கின வினையின் விரைவும் நிறைவுந் தோன்றத் 'துடைத்தல்' என்றார்.

*108. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல*
*தன்றே மறப்பது நன்று.*

(இ-ரை.) நன்றி மறப்பது நன்று அன்று - ஒருவர் செய்த நன்மையை மறப்பது அறனன்று; நன்றல்லது அன்றே மறப்பது நன்று - அவர் செய்த தீமையை அன்றே மறப்பது அறனாவது.

நன்றி மறப்பதென்பது மறந்து ஈடான நன்மை செய்யாமையும் தீமை செய்தலுமாம். நன்றல்லது மறப்பதென்பது மறந்து எதிர்த் தீமை செய்யாமையும் நன்மை செய்தலுமாம்.

**109. கொன்றன்ன வின்னா செயினு மவர்செய்த**
**வொன்றுநன் றுள்ளக் கெடும்.**

**(இ-ரை.)** கொன்ற அன்ன இன்னா செயினும் - தமக்கு முன்பொருகால் ஒரு நன்மை செய்தவர் பின்பு கொன்றாற் போன்ற பெருந் தீமைகளைச் செய் தாராயினும்; அவர் செய்த நன்று ஒன்று உள்ளக் கெடும் - அவை யெல்லாம் அவர் செய்த நன்மை யொன்றையே நினைத்தமட்டில் நன்றி யறிவுடையார் மனத்தில் இல்லாமல் மறைந்துபோம்.

இஃது உண்மையான அல்லது தலையாய நன்றியறிவுடையார் செய லாம்.

**110. எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை**
**செய்ந்நன்றி கொன்ற மகற்கு.**

**(இ-ரை.)** எந்நன்றி கொன்றார்க்கும் உய்வு உண்டாம் - எத்துணைப் பெரிய அறங்களைக் கெடுத்தவர்க்கும் அத் தீவினைகள் நீங்கும் கழுவாய் (பிராயச்சித்தம்) உண்டாம்; செய்ந்நன்றி கொன்ற மகற்கு உய்வு இல்லை - ஆயின், ஒருவர் செய்த நன்றியைக் கெடுத்தவனுக்கோ தப்பும் வழியே இல்லை.

பேரறக் கெடுப்புகளாவன: ஆவின் மடியறுத்தலும், குழவிகளையும் நிறைசூலியரையும் தூய துறவியரையுங் கொல்லுதலும், ஊருண்ணுங் கிணற்றில் நஞ்சிடுதலும், இவை போல்வன பிறவுமாம்.

## அதி. 12 - நடுவுநிலைமை

*அதாவது, தகுதிபற்றி ஒருவரை ஒரு வினைக்கு அமர்த்தும் போதும், திறமைபற்றி ஒரு துறையிற் சிறந்தவர்க்குப் பரிசளிக்கும் போதும், விலைக் குக் கொள்ளும் பொருட்டுப் பண்டங்களுள் நல்லனவற்றைத் தெரிந் தெடுக்கும்போதும், குற்றச்சாட்டுப்பற்றி ஒருவர் நடத்தையை ஆய்ந்து தீர்ப்புக் கூறும் போதும் பகை நட்பு நொதுமல் (அயல்) என்னும் முத்திறத்தும் ஒத்திருந்து உண்மைப்படி ஒழுகுதல். நன்றி செய்தவரிடத்துங் கண்ணோடி*

*நடுநிலை திறம்பக் கூடாதென்பதற்கு இது செய்ந்நன்றியறிதலின் பின் வைக்கப்பட்டது.*

*நடுநிலை என்னும் சொல், சமன் செய்து சீர்தூக்குந் துலைக்கோலில் நடுநின்று ஒருபாற் கோடாத நாவின் நிலைமையினின்று எழுந்தது.*

**111. தகுதி யெனவொன்று நன்றே பகுதியாற்**
**பாற்பட் டொழுகப் பெறின்.**

**(இ-ரை.)** பகுதியான் பாற்பட்டு ஒழுகப் பெறின் - பகை நட்பு நொதுமல் என்னும் முத்திறத்தும் முறைமை தவறாது ஒழுகப் பெறின்; தகுதி என ஒன்றே நன்று - நேர்மை என்று சொல்லப்படும் ஓர் அறமே நல்லதாம்.

தகுதி என்ற சொல்லால் இங்குக் குறிக்கப்பட்டது நடுவுநிலை. தமிழரின் ஏமாளித்தனத்தினால் 'யோக்கியதை' என்னும் வடசொல் வழக்கூன்றவே தகுதி என்னும் தகுந்த தமிழ்ச்சொல் வழக்கு வீழ்ந்தது. ஏகாரம் பிரித்துக் கூட்டப்பட்டது. 'பகுதியான்' என்பது பகுதிதொறும் என்று பொருள்படுதலால், ஆனுருபு உடனிகழ்ச்சிப் பொருளது. 'பெறின்' என்பது அவ் வொழுக்கத்தின் அருமை தோன்ற நின்றது.

**112. செப்ப முடையவ னாக்கஞ் சிதைவின்றி**
**யெச்சத்திற் கேமாப் புடைத்து.**

**(இ-ரை.)** செப்பம் உடையவன் ஆக்கம் - நடுவுநிலைமை யுடையவனது செல்வம்; சிதைவு இன்றி எச்சத்திற்கு ஏமாப்பு உடைத்து - பிறர் செல்வம் போல் அழியாது அவன் வழியினர்க்கும் வலிமையாதலை யுடையது. வலிமை பாதுகாப்பு.

எச்சவும்மை தொக்கது. ஒருவனுக்குப் பின் எஞ்சி நிற்பதாகலின் வழிமரபு எச்சமெனப்பட்டது.

**113. நன்றே தரினு நடுவிகந்தா மாக்கத்தை**
**யன்றே யொழிய விடல்.**

**(இ-ரை.)** நன்றே தரினும் - அறவழியில் வந்த செல்வம்போல் நன்மையே விளைப்பினும்; நடுவு இகந்து ஆம் ஆக்கத்தை அன்றே ஒழிய விடல் - நடுவுநிலை திறம்புவதால் வரும் செல்வத்தை அப்பொழுதே விட்டுவிடுக.

நன்மை தராமையின் 'நன்றே தரினும்' என்பது எதிர்மறையும்மை. தன்னை மட்டுமன்றித் தன் எச்சத்தையுந் தாக்குமாதலின், 'அன்றே யொழிய விடல்' என்றார். 'விடல்' என்பது அல்லீற்று வியங்கோள்.

*114. தக்கார் தகவில ரென்ப தவரவ*
*ரெச்சத்தாற் காணப் படும்.*

**(இ-ரை.)** தக்கார் தகவு இலர் என்பது - இவர் நேர்மை யுடையவர் அல்லது இல்லாதவர் என்னும் உண்மை; அவர் அவர் எச்சத்தால் காணப் படும் - அவரவருடைய மக்களால் அறியப்படும்.

தக்கார்க்கு நன்மக்களும் தகவிலார்க்குப் புன்மக்களும் பிறத்தல் இயல்பாதலின், 'அவரவர் எச்சத்தாற் காணப்படும்' என்றார். எச்சம் என்னும் சொல், மக்களின் வாழ்க்கை மட்டுமன்றிப் பெற்றோரின் முகத்தோற்றமும் குணவமைதியும் எஞ்சி நிற்பதைக் குறிக்கும். அதனால், மக்கள் என்னுஞ் சொல்லினும் தகுதியும் பொருட்பொலிவு முடையதாம்.

'யோக்கியர்' என்னும் வடசொல் வழக்கூன்றியதால், தக்கார் என்னும் தமிழ்ச்சொல் வழக்கற்றதென அறிக.

*115. கேடும் பெருக்கமு மில்லல்ல நெஞ்சத்துக்*
*கோடாமை சான்றோர்க் கணி.*

**(இ-ரை.)** கேடும் பெருக்கமும் இல் அல்ல - பழம் பிறப்பிற் செய்த தீவினையாற் கேடும் நல்வினையால் ஆக்கமும் ஏற்கெனவே எல்லார்க்கும் வகுக்கப்பட்டிருத்தலால், அவை இப் பிறப்பில் யார்க்கும் இல்லாதவை யல்ல; நெஞ்சத்துக் கோடாமை சான்றோர்க்கு அணி - ஆதலால் இவ் வுண்மை யறிந்து வரும் பிறப்பிலும் கேடு நேராதவாறு மனத்துக்கண் ஒருபாற் கோடாமை, அறிவுநிறைந்தோர்க்கு அழகாம்.

அறிவுநிறைந்தோரும் உண்மையறியாது நடுவிகந்தா மாக்கம் விரும்பி ஒருபாற் கோடுவராயின், தம் சிறப்பிழந்து பிறர்போலாவர் என்பது கருத்து.

*116. கெடுவல்யா னென்ப தறிகதன் னெஞ்ச*
*நடுவொரீஇ யல்ல செயின்.*

**(இ-ரை.)** தன் நெஞ்சம் நடுவு ஒரீஇ அல்ல செயின் - ஒருவன் தன் மனம் நடுநிலை திறம்பித் தீயவற்றைச் செய்யக் கருதுமாயின்; யான் கெடுவல்

என்பது அறிக - அக் கருத்தையே தன் கேட்டை முன்னறிவிக்குந் தீக்குறி யாகக் கொண்டு, "நான் இனிக் கேடடைவேன்" என்று திட்டமாய் அறிந்து கொள்க.

கருதுதல் மனத்தின் செயலாதலின் 'செயின்' என்றார். ஒருவி என்பது ஓரீஇ என அளபெடுத்தது சொல்லிசை யளபெடை. நெஞ்சார நடுநிலை திறம்புவார்க்கு எச்சரிக்கை இக் குறளாற் கூறப்பட்டது.

*117. கெடுவாக வையா துலக நடுவாக*
*நன்றிக்கட் டங்கியான் றாழ்வு.*

**(இ-ரை.)** நடுவாக நன்றிக்கண் தங்கியான் தாழ்வு - நடுநிலை நின்று அறத்தின்கண் தங்கினவனது வறுமையை; உலகம் கெடுவாக வையாது - உயர்ந்தோர் கேடாகக் கருதார்.

'கெடு' என்பது முதனிலைத் தொழிற்பெயர். உலகம் என்பது உயர்ந் தோர் மேற்றே, "உலகம் புகழ்ந்த வோங்குயர் விழுச்சீர்" (திருமுருகு. 124) கெடுவாக வையாது எனவே, செல்வமாகக் கொள்ளும் என்பது கருத்து.

"ஒப்புரவி னால்வருங் கேடெனி னஃதொருவன்
விற்றுக்கோட் டக்க துடைத்து" (220)

என்பதால், அறத்தினால் வருங் கேடெல்லாம் விரும்பத்தக்கது என்பதே அறிஞர் கொள்கை.

*118. சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்*
*கோடாமை சான்றோர்க் கணி.*

**(இ-ரை.)** சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல் - இயல்பாகச் சமனாக நின்று தன்கண் வைத்த பொருளின் நிறையை வரையறுத்துக் காட்டும் துலாக்கோல் போல; அமைந்து ஒருபால் கோடாமை சான்றோர்க்கு அணி - மனத்திற் சமநிலையாக விருந்து ஒரு பக்கஞ் சாயாது உண்மை யுரைத்தல் அறிவு நிறைந்தோர்க்கு அழகாம்.

சமன் செய்தலும் சீர் தூக்கலும் ஆகிய உவம வடைகள், முறையே, அமைதலும் ஒருபாற் கோடாமையும் ஆகிய பொருளடைகளை ஒப்பன வாம். ஒருபாற் கோடாமையாவது, துலாக்கோல் சீர்தூக்கிப் பொருள்களின் நிறையை உள்ளவாறு காட்டுதல்போல, முத்திறத்தாரிடத்தும் ஒத்து நின்று

ஆய்ந்து கண்ட உண்மையை உள்ளவாறுரைத்தல். இங்குக் கோடாமை என்றது கோடாதிருந்து உண்மையுரைத்தலை. ஆகவே, ஒருபாற் கோடாமை யுள்ளேயே ஆய்ந்துண்மை காண்டலும் அடங்கிற்றென அறிக. இது 'கவர்ந்தற்று' என்றது கவர்ந்துண்டலைக் குறித்தது போன்றதாம்.

*119. சொற்கோட்ட மில்லது செப்ப மொருதலையா*
*வுட்கோட்ட மின்மை பெறின்.*

**(இ-ரை.)** செப்பம் சொல் கோட்டம் இல்லது - நடுவுநிலைமையாவது ஆய்ந்து கூறும் தீர்ப்பின்கண் சிறிதும் சொற்கோடுதல் இல்லதாம்; உள்கோட்டம் இன்மை ஒருதலையாப் பெறின் - அது அங்ஙனம் நிகழ்வது மனத்தின்கண் கோட்டமின்மையை முழுவுறுதியாகப் பெற்றவிடத்தே.

மனம் வாய் மெய் என்னும் முக்கரணங்களுள் மனமே ஏனை யிரண் டிற்கும் மூலமாதலாலும், மனத்துக்கண் மாசிலனாதலே அறமாதலாலும், சொற்கோட்ட மில்லா நடுவுநிலைக்கு உட்கோட்டமின்மை இன்றியமையாத தென்றார். ஆயினும், கண்ணன்ன கேளிருக்கும் பெருநன்றி செய்தவர்க்கும் செல்வத்தாலும் அதிகாரத்தாலும் ஆட்டுணையாலும் வலியவர்க்கும் கருதி யது செய்து முடிக்கும் கயவருக்கும் மாறாக, உயிர்நாடிச் செய்திகளில் உண்மை கூறுவதற்குத் தெய்வத் தன்மையான மனச்சான்றும் இறுதிவரினும் அஞ்சாத் தறுகண்மையும் வேண்டியிருத்தலின், அவை யிரண்டும் அமையும் அருமை நோக்கி, 'உட்கோட்ட மின்மை பெறின்' என்றார்.

*120. வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்*
*பிறவுந் தமபோற் செயின்.*

**(இ-ரை.)** பிறவும் தமபோல் பேணிச் செயின் - பிறர் பொருளையுந் தம் பொருள்போலப் பேணிச் செய்யின்; வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் - வாணிகஞ் செய்வார்க்கு நடுநிலையான நல்வாணிகமாம்.

"கொடுமேழி நசையுழவர்
நெடுநுகத்துப் பகல்போல
நடுவுநின்ற நன்னெஞ்சினோர்
வடுவஞ்சி வாய்மொழிந்து
தமவும் பிறவு மொப்ப நாடிக்
கொள்வதூஉ மிகைகொளாது
கொடுப்பதூஉங் குறைகொடாது
பல்பண்டம் பகர்ந்து வீசும்" (பட்டினப். 205 – 11)

வாணிகம் கொள்வனையையும் விற்பனையையும் ஒப்பக் கருதுவதனாலும், பொய்க்குங் கொள்ளைக்கும் இடந்தராமையாலும், மொத்த வணிகர் சில்லறை வணிகர் கொள்வோர் ஆகிய முத்திறத்தார்க்கும் தீதுங் கேடு மில்லா நல்வாணிகமாம்.

## அதி. 13 - அடக்கமுடைமை

*அதாவது, செருக்கின்றியும் வரம்பிறந்தொழுகாதும் முக்கரணத்தாலும் அடங்கிநடத்தல். இது தன்னுயிர்போல் மன்னுயிரைக் கருதும் நடுநிலை மனப்பான்மை வழியதாகலின், நடுவுநிலைமையின் பின் வைக்கப்பட்டது.*

***121.*** ***அடக்க மமரரு ளுய்க்கும் மடங்காமை***
***யாரிரு ளுய்த்து விடும்.***

**(இ-ரை.)** அடக்கம் அமரருள் உய்க்கும் - அடக்கமாகிய நன்று ஒருவனைத் தேவருலகத்திற் கொண்டுபோய்ச் சேர்க்கும்; அடங்காமை ஆர் இருள் உய்த்துவிடும் - அடங்காமையாகிய தீது ஒருவனைத் தங்குதற்கரிய இருளுலகத்திற்குச் செலுத்திவிடும்.

இருள் என்றது இருளுலகத்தை. இருளுலகமாவது நரகம். "இருளுலகஞ் சேராத வாறு" என்று நல்லாதனார் (திரிகடு. 60) கூறுதல் காண்க. பண்டைக் காலத்தில் இருட்டறையுள் அடைப்பதும் ஒருவகைத் தண்டனையா யிருந்தமையின், நரகம் இருளுலகம் எனப்பட்டது. ஆர் இருள் என்பது திணிந்த இருள் என்றுமாம். விடு என்பது விரைவும் நிறைவும் உணர்த்தும் துணை வினைச்சொல்.

***122.*** ***காக்க பொருளா வடக்கத்தை யாக்க***
***மதனினூஉங் கில்லை யுயிர்க்கு.***

**(இ-ரை.)** அடக்கத்தைப் பொருளாக் காக்க - அடக்கமுடைமையை ஒரு செல்வமாகப் பேணிக் காக்க; உயிர்க்கு அதனின் ஊங்கு ஆக்கம் இல்லை - மக்கட்கு அதனினுஞ் சிறந்த ஆக்கந் தருவது வேறொன்று மில்லை.

உயிர் என்பது வகுப்பொருமை. அது இங்கு மக்களுயிரைக் குறித்தது; அடக்கமுடைமையாகிய அறத்தை மேற்கொள்வது அதுவே யாகலின். அறிவற்றதும் பிறவிதொறும் நீங்குவதுமான உடம்பை இயக்குவதும் இன்ப துன்பங்களைத் துய்ப்பதும் உயிரேயாதலின், 'உயிர்க்கு' என்றார்.

***123. செறிவறிந்து சீர்மை பயக்கு மறிவறிந்***
***தாற்றி னடங்கப் பெறின்.***

**(இ-ரை.)** அறிவு அறிந்து ஆற்றின் அடங்கப் பெறின் - ஒருவன் அறியத் தக்க நூல்களை யறிந்து இல்லறத்தின்கண் அடங்கி யொழுகுவானாயின்; செறிவு அறிந்து சீர்மை பயக்கும் - அவ் வடக்கம் பிறரால் அறியப்பட்டு அவனுக்குச் சிறந்த நன்மையை விளைவிக்கும்.

ஆற்றின் அடங்குதலாவது, பிறன் பொருளைக் கவராமையும் பிறன் மனைவியை விழையாமையும் பிறனைத் தனக்கு அடிப்படுத்தாமையுமாம்.

***124. நிலையிற் றிரியா தடங்கியான் றோற்ற***
***மலையினு மாணப் பெரிது.***

**(இ-ரை.)** நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம் - இல்லறத்தின் கண் வழுவாது நின்று அடங்கினவனது உயர்ச்சி; மலையினும் மாணப் பெரிது - மலையுயர்ச்சியினும் மிகப் பெரிது.

மலை யென்பது வளமிகுந்ததாதலின், குடமலையும் பனி (இமய) மலையும் போல்வதாகும். உம்மை உயர்வுசிறப்பு. 'நிலையிற் றிரியா தடங் குதல்' ஐம்புலவின்பமும் நுகர்ந்துகொண்டே அடங்கியொழுகுதல்.

***125. எல்லார்க்கு நன்றாம் பணித லவருள்ளுஞ்***
***செல்வர்க்கே செல்வந் தகைத்து.***

**(இ-ரை.)** பணிதல் எல்லார்க்கும் நன்றாம் - செருக்கின்றி யடங்குதல் எல்லார்க்கும் பொதுவாக நல்லதாம்; அவருள்ளும் செல்வர்க்கே செல்வந் தகைத்து - ஆயினும், அவ் வெல்லாருள்ளும் செல்வம் உடையவர்க்கே அது வேறொரு செல்வமாந் தன்மைத்தாகும்.

எல்லாராலும் மதிக்கப்படும் இயல்பும், எண்ணியதைச் செய்துமுடிக் குந்திறனும், ஒட்டோலக்கமாக (ஆடம்பரமாக) வாழ்ந்தின்புறும் உயர்வும், இடம்பொரு ளேவலால் வரம்பிறந் தொழுகத் தூண்டும் நிலைமையும், உடைய செல்வரின் வாழ்க்கை அடக்கமுடைமைக்குப் பெரிதும் ஏற்காத தாயிருப்பதால், அவரிடத்து அவ் வறம் அமைவது அவர்க்கு மற்றொரு

செல்வப்பேறாம் என்றார். செல்வத் தகைத்து என்பது இன்னோசைபற்றி மெலிந்து நின்றது.

***126. ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றி***
***னெழுமையு மேமாப் புடைத்து.***

**(இ-ரை.)** ஆமைபோல் - ஆமையானது, தனக்குத் தீங்கு நேராதவாறு, தன் ஓருடம்பிற்குள் தன் தலையும் நாற்காலுமாகிய ஐந்துறுப்புகளையும் அடக்கிக்கொள்ளுதல் போல; ஒருமையுள் ஐந்து அடக்கல் ஆற்றின் - இல்லறத்தானும் ஒரு பிறப்பில் தன் ஐம்பொறிகளையும் தீவினை நேராதவாறு அடக்க வல்லனாயின்; எழுமையும் ஏமாப்பு உடைத்து -அவ் வல்லமை அவனுக்கு எழு பிறப்பளவும் அரணாதலை யுடையது.

ஒருமை, ஐந்து, எழுமை என்பன தொகைக்குறிப்பு. இவற்றுள் ஒருமை எழுமை என்பன எண்ணாயிருக்கும் நிலைமை குறியாது எண்ணையே குறித்து நின்றன. எழுபிறப்பு என்பதற்கு 62ஆம் குறளுரையில் தந்த விளக் கத்தையே இங்குங் கொள்க.

***127. யாகாவா ராயினு நாகாக்க காவாக்காற்***
***சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.***

**(இ-ரை.)** யா காவாராயினும் நா காக்க - மக்கள் வேறெவற்றைக் காவாவிடினும் நாவையாவது காத்துக் கொள்க; காவாக்கால் சொல்லிழுக்குப் பட்டுச் சோகாப்பர் - அதைக் காவாவிடின் சொற்குற்றப்பட்டுச் சிறைத் தண்டம் அடைவர்.

யா = எவை . இதற்கு யாவும் என்று பொருள் கொண்டு “முற்றும்மை விகாரத்தாற் றொக்கது” என்றார் பரிமேலழகர். ‘காவாராயினும்' என்னும் வைத்துக்கொள்வு அல்லது ஒத்துக்கொள்வுக் கிளவியத்திற்கு (Adverb clause of supposition or concession) அப் பொருள் பொருந்தாமை காண்க. சொல்லிழுக்கு என்றது இங்குப் பழிச்சொல்லை. சோ காத்தல் சிறையிற் காத்திருத்தல். அது கனகவிசயர் என்னும் ஆரிய மன்னர் தமிழ் வேந்தரைப் பழித்ததினால், சேரன் செங்குட்டுவனின் சீற்றத்திற் காளாகிச் சிறைப்பட்டது போல்வது.

“அடல்வேல் மன்ன ராருயி ருண்ணும்
கடலந் தானைக் காவ லுரைக்கும்

பால குமரன் மக்கள் மற்றவர்
காவா நாவிற் கனகனும் விசயனும்
விருந்தின் மன்னர் தம்மொடுங் கூடி
அருந்தமி ழாற்றல் அறிந்தில ராங்கெனக்
கூற்றங் கொண்டிச் சேனை செல்வது" (சிலப். 26: 156 – 62)

"ஆரிய வரசரை யருஞ்சிறை நீக்கி" (சிலப். 28: 165)

சோ என்பது அரிய பொறிகள் ஏற்றப்பட்ட சிறந்த அரண். அஃது இராவணனின் இலங்காபுரியிலும் வாணனின் சோணிதபுரத்திலும் இருந்தது.

"தாவியசே வடிசேப்பத் தம்பியொடுங் கான்போந்து
சோவரணும் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழித்த
சேவகன்" (சிலப். ஆய்ச்சியர் குரவை)

"ஆனிரை தாங்கிய குன்றெடுத்தான் சோவின்
அருமை யழித்த மகன்." (நான்மணி. 2)

சோ என்னும் சொல்லைப் பிற்காலத்தார் பொதுவான மதிற்பெயராகவும் ஆண்டுவிட்டனர்.

"சோமே லிருந்தொரு கோறா வெனின்." (சி.சி. மறைஞான தேசிகர் உரை)

காத்தல் என்பது காத்திருத்தல் அல்லது நிலையில்லாது தங்கியிருத்தல். wait என்னும் ஆங்கிலச் சொற்கும் tarry, stay என்று ஆக்கசுபோர்டு ஆங்கிலச் சிற்றகர முதலி பொருள் கூறியிருத்தல் காண்க.

சோகா என்னும் சொல்லை வடசொல் தொடர்பினதாகக் காட்டல் வேண்டி, சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகரமுதலி, அதற்குச் சோகம் + யா என்று மூலங் குறித்திருப்பது பொருந்தாது. யாத்தல் கட்டுதல். அரையாப்பு, கழல்யாப்பு, மார்யாப்பு (மாராப்பு), விதலையாப்பு முதலிய கூட்டுச் சொற்கள்போல் சோக(ம்) யாப்பு என்றொரு சொல்லின்மையும், அவ் விருபிறப்பியில் (hybrid) யாப்பு என்னும் சொல் இயற்கையாகப் பொருந்தாமையும், நோக்குக. இனி, சோ என்னும் சொல்லையும், வாணன் தலைநகர்ப் பெயரான சோணிதபுரம் என்பதன் சிதைவாக அவ் வகரமுதலி காட்டியிருப்பதும் குறும்புத்தனமாம். வாணனுக்கு முந்தின இராவணன் காலத்திலேயே சோவரண் இருந்தமையை நோக்குக.

***128. ஒன்றானுந் தீச்சொற் பொருட்பய னுண்டாயி***
***னன்றாகா தாகி விடும்.***

**(இ-ரை.)** தீச்சொற் பொருட்பயன் ஒன்றானும் உண்டாயின் - ஒருவன் கூறும் தீய சொற்களின் பொருளால் விளையும் துன்பம் ஒன்றேனும் பிறர்க்கு உண்டாயின்; நன்று ஆகாது ஆகிவிடும் - அவன் ஏற்கெனவே செய்துள்ள பிறவறங்கள் பயன்படாமற்போம்.

சொற்குற்றம் பொய், குறளை, கடுஞ்சொல், பயனில்சொல் என நான்கு என்பர்.

"ஒரு சொல்லே யாயினும் கேட்டார்க்கு இனிதாயிருந்து தீய சொல்லின் பொருளைப் பயக்குமாயின், நன்மை யாகாதாகியேவிடும்" என்னும் மணக்குடவருரை பொருந்துவதன்று.

***129. தீயினால் சுட்டபு ணுள்ளாறு மாறாதே***
***நாவினாற் சுட்ட வடு.***

**(இ-ரை.)** தீயினால் சுட்ட புண் உள் ஆறும் - ஒருவன் ஒருவனை நெருப்பினாற் சுட்ட புண் காட்சிப் பொருளாகிய ஒருவன் உடம்பையே சுட்டதினால், அப்பொழுதேயோ அப் புண் ஆறின பின்போ உள்ளத்தில் ஆறிவிடும்; நாவினால் சுட்ட வடு ஆறாது - ஆயின், நாவினால் சுட்ட புண்ணோ, கருத்துப் பொருளாகிய உள்ளத்தைச் சுட்டதினால், ஒருகாலும் ஆறாது அதன்கண்ணே நிற்கும்.

தீயினாற் சுட்ட புண் ஆறிப்போதலால் அதைப் புண் என்றும், நாவினாற் சுட்ட புண் ஆறாது நிற்றலால் அதை வடு என்றும், வெவ்வேறு சொல்லாற் குறித்தார். மருந்தினால் ஆறிவிடுவது புண்; புண் ஆறியபின் என்றும் மாறாது நிற்பது வடுவெனும் தழும்பு. நாவினாற் சுட்டது புண்ணிலைமையும் வடுநிலைமையும் ஒருங்கே கொண்டது என்பதை உணர்த்தச் 'சுட்ட வடு' என்றார். கடுஞ்சொல்லும் பழிச்சொல்லுமாகிய சுடுசொல்லின் தொழில், அதற்குக் கருவியான நாவின்மேல் ஏற்றிக் கூறப்பட்டது. ஏகாரம் தேற்றம்.

இனி, சூடிடுதல் சில நோய்க்கு மருந்துமாகலின், சுடுசொல் இரு வகையில் தீயினுங் கொடியதாம். இருவகைப் புண்ணையும் வேறுபடுத்திக் காட்டியது வேற்றுமையணியாகும்.

**130. கதங்காத்துக் கற்றடங்க லாற்றுவான் செவ்வி**
**யறம்பார்க்கு மாற்றி னுழைந்து.**

**(இ-ரை.)** கற்றுக் கதம் காத்து ஆற்றுவான் செவ்வி - அறநூல்களைக் கற்றறிந்து சினம் வராமற் காத்து அடங்கியொழுக வல்லவனின் செவ்விய மனநிலையை; அறம் ஆற்றின் நுழைந்து பார்க்கும் - அறத்தெய்வம் அவனைத் தலைக்கூடுமாறு அவனை யடை யும்வழிச் சென்று நுணுகி நோக்கும்.

செவ்வியாவது ஒருவரைக் கண்டுரையாடுதற் கேற்ற இனிய மனநிலை. செவ்வையான நிலை செவ்வி. அறத்தெய்வம் அவனைக் கண்டு பாராட்டி மகிழ்தற்குச் சமயம் பார்க்கும் என்றது, அந்த அளவிற்கு அவன் அடக்க முடைமையிற் சிறந்தவன் என்பதை உணர்த்தற்கு. "நொசிவும் நுழைவும் நுணங்கும் நுண்மை" (தொல். 867).

## அதி. 14 - ஒழுக்கமுடைமை

*அதாவது, அறத்திலும், கடமையிலும் வழுவாதொழுகுதல். முக்கரணமும் அடங்கியவழி இஃது எளிதாகலின், அடக்கமுடைமையின் பின் வைக்கப்பட்டது.*

**131. ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்க**
**முயிரினு மோம்பப் படும்.**

**(இ-ரை.)** ஒழுக்கம் விழுப்பம் தரலான் - ஒழுக்கம் எல்லார்க்கும் சிறப்பைத் தருதலால்; ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் - அவ் வொழுக்கம் உயிரினும் சிறப்பாகப் பேணிக் காக்கப்படும்.

உயிர் எல்லாப் பொருளினுஞ் சிறந்ததாயினும், அவ் வுயிருக்கே சிறப்பைத் தருதலால் 'உயிரினு மோம்பப்படும்' என்றார்.

**132. பரிந்தோம்பிக் காக்க வொழுக்கந் தெரிந்தோம்பித்**
**தேரினு மஃதே துணை.**

**(இ-ரை.)** ஒழுக்கம் பரிந்து ஓம்பிக் காக்க - ஒழுக்கத்தை எவ்வகை யிலும் கெடாவாறு வருந்தியும் பேணிக் காக்க; தெரிந்து ஓம்பித் தேரினும் அஃதே துணை - பலவகை யறங்களையு மாராய்ந்து அவற்றுள் இருமைக் கும் துணையாவதை எவ்வளவு கவனமாகத் தேர்ந்தாலும், அவ் வொழுக் கமே துணையாக முடியும். ஏகாரம் பிரிநிலை.

***133. ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க
மிழிந்த பிறப்பாய் விடும்.***

**(இ-ரை.)** ஒழுக்கமுடைமை குடிமை - நல்லொழுக்க முடைமையே உயர்குலத் தன்மையாம்; இழுக்கம் இழிந்த பிறப்பு ஆய்விடும் - தீயொழுக்கம் தாழ்ந்த குலமாகிவிடும்.

குடி என்னும் சொல் தலைக்கட்டு, குடும்பம், சரவடி (கோத்திரம்), குலம், குடிகள் (நாட்டினம் ) என்னும் ஐவகை மக்கட் கூட்டத்தையுங் குறிக்கும். இங்குக் குடியென்றது குலத்தை. குலமாவது ஒரே தொழில் செய்யும் மக்கள் வகுப்பு. வரணம் என்பது ஆரியர் வந்தபின் நிறம்பற்றியும் பிறப்புப்பற்றியும் ஏற்படுத்தப்பட்ட ஆரிய வகுப்புப் பிரிவினையாதலால், அது "யாதும் ஊரே யாவருங் கேளிர்", "குலமும் ஒன்றே குடியும் ஒன்றே", "பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும்" என்னும் தமிழ்க் கொள்கைக்கும், அதைத் தழுவிய வள்ளுவர் கருத்திற்கும் ஏற்காது. ஆகவே, தமிழ வொழுக்கங் கெடின் பிராமணனுந் தாழ்ந்தவனாவான் என்பதே வள்ளுவர் கருத்தாம்.

***134. மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்.***

**(இ-ரை.)** பார்ப்பான் ஓத்து மறப்பினும் கொளல் ஆகும் - ஆரியப் பார்ப்பானான பிராமணன் தான் கற்ற வேதத்தை மறந்தானாயினும் அதைத் திரும்ப ஓதிக்கொள்ள முடியும்; பிறப்பு ஒழுக்கம் குன்றக் கெடும் - ஆனால் அவன் தன்னை உயர்ந்தவனாகச் சொல்லிக் கொள்ளும் பிறப்பு, தமிழ ஒழுக்கங் குன்றின் கெடும்.

ஒவ்வொரு நாட்டிலும் அந்தந்த நாட்டுப் பண்பாட்டின்படியே ஒழுக்க வரம்பிருக்கும். பிராமணன் வேதத்தை மறந்தானா மறக்கவில்லையா என்பது தமிழ்நாட்டில் ஆய்விற்குரியதன்று; அவன் தமிழ வொழுக்கத்தைக் கடைப்பிடித்தானா இல்லையா என்பதே அதன் ஆய்விற்குரியதாம். ஆகவே, அவ் வொழுக்கத்தினாலேயே அவன் உயர்குலத்தானாவான் என்பதும், அது கெட்டவிடத்துத் தாழ்ந்த குலத்தானாகிவிடுவான் என்பதும், தமிழற நூல் முடிபாம்.

***135. அழுக்கா றுடையான்க ணாக்கம்போன் றில்லை
யொழுக்க மிலான்க ணுயர்வு.***

**(இ-ரை.)** அழுக்காறு உடையான்கண் ஆக்கம் போன்று - பொறாமை யுள்ளவனிடத்திற் செல்வமில்லாததுபோல; ஒழுக்கம் இலான்கண் உயர்வு இல்லை - ஒழுக்கமில்லாதவனிடத்து உயர்வு இல்லை. உயர்வு உயர்குலத் தானாதல்.

***136. ஒழுக்கத்தி னொல்கா ருரவோ ரிழுக்கத்தி***
***னேதம் படுபாக் கறிந்து.***

**(இ-ரை.)** இழுக்கத்தின் ஏதம் படுபாக்கு அறிந்து - ஒழுக்கக் கேட்டால் தமக்குக் குலவிழிபாகிய கேடுண்டாவதை யறிந்து; உரவோர் ஒழுக்கத்தின் ஒல்கார் - அறிவுடையோர் ஒழுக்கத்தின் தளரார்.

'பாக்கு' ஒரு தொழிற்பெயரீறு.

***137. ஒழுக்கத்தி னெய்துவர் மேன்மை யிழுக்கத்தி***
***னெய்துவ ரெய்தாப் பழி.***

**(இ-ரை.)** ஒழுக்கத்தின் மேன்மை எய்துவர் - ஒழுக்கத்தினால் எல்லாரும் உயர்வடைவர்; இழுக்கத்தின் எய்தாப் பழி எய்துவர் - அவ் வொழுக்கத்தினின்று தவறுவதால் தமக்கு உரியதல்லாத பழியையும் அடைவர்.

ஒருவன் ஒரு குற்றஞ் செய்தபின், அத்தகைய குற்றம் பிறர் செய்திருப் பினும் அவையும் அவன்மேல் ஏற்றப்படுவது இயல்பாதலின், 'எய்தாப் பழி' எய்துவர் என்றார்.

***138. நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கந் தீயொழுக்க***
***மென்று மிடும்பை தரும்.***

**(இ-ரை.)** நல் ஒழுக்கம் நன்றிக்கு வித்து ஆகும் - ஒருவனுக்கு நல்லொழுக்கம் நன்மைக்குக் கரணியமாய் இருமையிலும் இன்பந் தரும்; தீயொழுக்கம் என்றும் இடும்பை தரும் - தீயொழுக்கம் எக்காலும் துன்பமே தரும்.

மறுமையில் விளையும் இன்பத்திற்கு இம்மையில் ஒழுகும் நல் லொழுக்கம் வித்துப்போன்றிருத்தலால், 'வித்தாகும்' என்றார். தீயொழுக்கம் என்றும் இடும்பை தரும் என்பதால், நல்லொழுக்கம் இம்மையிலும் இன்பந் தருதல் பெற்றாம்.

***139. ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய***
***வழுக்கியும் வாயாற் சொலல்.***

**(இ-ரை.)** வழுக்கியும் தீய வாயால் சொலல் - மறந்தும் தீய சொற்களைத் தம் வாயாற் சொல்லும் சொலவுகள்; ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லா - ஒழுக்கமுடைய உயர்ந்தோர்க்கு இயலா.

வழுக்குதல் கால்தவறுதல்போல் வாய்தவறுதல்; அதாவது மறத்தல். 'வாயால்' என்று வேண்டாது கூறியது, 'செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்' என்பதிற்போல (91) நல்ல சொற்களே பயின்ற தன்மையை உணர்த்தற்கு. ஏகாரம் தேற்றம். 'சொலல்' பாலபகா வஃறிணைப் பெயர்.

***140. உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்***
***கல்லா ரறிவிலா தார்.***

**(இ-ரை.)** உலகத்தோடு ஒட்ட ஒழுகல் கல்லார் - உயர்ந்தோரொடு பொருந்த வொழுகுதலைக் கல்லாதார்; பல கற்றும் அறிவிலாதார் - பல நூல் களைக் கற்றவரேனும் அறிவிலாதாரே.

உலகம் என்றது வரையறைப்பட்ட இடவாகுபெயர். அறநூல்களில் எல்லா வொழுக்க முறைகளும் சொல்லப்படாமையானும், காலந்தோறும் பழையன கழிதலும் புதியன புகுதலும் நிகழ்தலானும், ஒழுக்க வகையில் உயர்ந்தோரைப் பின்பற்றுதல் இன்றியமையாததாயிற்று. கல்வியால் அறிவும் அறிவால் ஒழுக்கமும் பயனாதலின், உயர்ந்தோரொடு பொருந்த வொழு கலைக் கல்லாதார் பல நூல்களைக் கற்றும் அறிவில்லாதவரே யாவர். ஒழுகு தலைக் கற்றலாவது பின்பற்றியொழுகுதல்.

## அதி. 15 - பிறனில் விழையாமை

*அதாவது, காமமயக்கத்தாலும், அழகுள்ள பெண்டிர் பலரொடு கூடி இன்பம் நுகரவேண்டுமென்னும் ஆசையாலும், பிறன் மனைவியை விரும் பாமை. இஃது ஒழுக்கத்திற் சிறந்தாரிடத்திலேயே நிகழ்வதாகலின், ஒழுக்க முடைமையின் பின் வைக்கப்பட்டது.*

***141. பிறன்பொருளாட் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்***
***தறம்பொருள் கண்டார்க ணில்.***

**(இ-ரை.)** பிறன் பொருளாள் பெட்டு ஒழுகும் பேதைமை - வேறொரு வன் உடைமையாக வுள்ளவளைக் காதலித் தொழுகும் மடமை; ஞாலத்து அறம்பொருள் கண்டார்கண் இல் - நிலவுலகத்தில் அறநூலையும், பொருள் நூலையுங் கற்றுத் தெளிந்தவரிடம் இல்லை.

பிறன் மனைவியைக் காதலிப்பவர், இம்மைக்குரியனவும் மாந்தனுக்கு உறுதி பயப்பனவுமான அறம்பொரு ளின்பம் என்னும் மூன்றனுள் இன்பம் ஒன்றையே கருதியவர் என்பதை உணர்த்தற்கு, 'அறம்பொருள் கண்டார்க ணில்' என்றார்.

பொருள்நூலை அறியாததினால் பிறன் மனைவி பிறன் பொருளென் பதும், அறநூலை யறியாததினால் பிறன் பொருளை நுகர்தல் தீவினை யென்பதும், தெரியாதுபோயின. அறம் பொருள் என்பன கருமிய (காரிய) வாகுபெயர். எண்ணும்மை தொக்கது. பூமி என்னும் வடசொல் வழங்கவே, ஞாலம் என்னும் தென்சொல் வழக்கற்றது. பேதைமை என்பது நல்லதை விட்டுவிட்டுத் தீயதைத் தெரிந்துகொள்ளுந் தன்மை.

***142. அறன்கடை நின்றாரு ளெல்லாம் பிறன்கடை***
***நின்றாரிற் பேதையா ரில்.***

**(இ-ரை.)** அறன்கடை நின்றாருள் எல்லாம் - காமம்பற்றித் தீவினை செய்தா ரெல்லாருள்ளும்; பிறன்கடை நின்றாரின் பேதையார் இல் - பிறன் மனைவியைக் காதலித்து அவன் வீட்டு வாயிற்கண் போய் நின்றாரைப் போலப் பேதையா ரில்லை.

அறத்தின் எல்லைக்கு அப்பாற்பட்ட தென்னுங் கருத்தால் கரிசு (பாவம்) அறங்கடை எனப்பட்டது. காமத்தாற் பெண்ணிற் கடிமையாகும் அண்ணாளரும் விலைமகளிரொடு கூடும் காமுகரும் போல, அறமும் பொரு ளும் இழத்தலேயன்றி, அச்சத்தால் தாம் விரும்பிய இன்பமும் இழத்தலால், பிறன் மனைவியை விரும்புவாரைப் போலப் பேதையா ரில்லை என்றார். கடை என்னும் சொல்லொப்புமைபற்றித் தீவினையில் நிலைத்தவரையும் 'நின்றார்' என்றார். பிறன் கடைநிற்றல் என்பது இரப்போன் நிலை போன்ற இழிவையும் உணர்த்திற்று.

***143. விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரிற்***
***றீமை புரிந்தொழுகு வார்.***

(இ-ரை.) தெளிந்தார் இல் தீமை புரிந்து ஒழுகுவார் - தம்மை நல்லவ ரென்று நம்பித் தாராளமாய்ப் பழகவிட்டவரின் மனைவியின்கண் தீவினை செய்தலை விரும்பி யொழுகுவார்; மன்ற - உறுதியாக; விளிந்தாரின் வேறு அல்லர் - இறந்தாரின் வேறுபட்டவரல்லர்.

உயிர் அடையவேண்டிய அறம்பொரு ளின்பங்களை அடையாமை பற்றியும், தீமை செய்யாரென்று நம்பிப் பழகவிட்ட நிலைமையையே தீமை செய்தற்குப் பயன்படுத்தியதுபற்றியும், உயிருடையவரேனும் செத்தவரே என்றார். 'மன்ற' தேற்றப்பொரு ளிடைச்சொல்.

***144. எனைத்துணைய ராயினு மென்னாந் தினைத்துணையும் தேரான் பிறனில் புகல்.***

(இ-ரை.) எனைத்துணையர் ஆயினும் - எத்துணை உயர்ந்தோராயினும்; தினைத்துணையும் தேரான் பிறன் இல் புகல் - தாம் செய்யுந் தீவினையைத் தினையளவும் எண்ணிப்பாராது பிறன் மனைவியை விரும்பி அவன் இல்லத்திற்குட் புகுதல்; என் ஆம் - என்ன பயனுடைத்தாம்?

உயர்ந்தோர் அரசனும் தலைமையமைச்சனும் படைத்தலைவனும் போலப் பதவியிற் சிறந்தார். தேரான் என்பது தேர்வான் என்னும் உடன் பாட்டு எதிர்கால வினையெச்சத்தின் எதிர்மறை. எத்துணை உயர்ந்தோனா யினும் குற்றங் குற்றமே யென்பது இக் குறளாற் கூறப்பட்டது.

***145. எளிதென வில்லிறப்பா னெய்துமெஞ் ஞான்றும் விளியாது நிற்கும் பழி.***

(இ-ரை.) எளிது என இல் இறப்பான் - பின்விளைவு கருதாது இன்பம் ஒன்றையே நோக்கி அதையடைவது எளிதென்று பிறன் மனைவியின்கண் நெறிகடந்தொழுகுபவன்; விளியாது எஞ்ஞான்றும் நிற்கும் பழி எய்தும் - தீராது எப்போதும் நிற்கும் தன் பழியையும் தன் குடிப்பழியையும் அடைவான்.

'இல்லிறப்பான்' என்பது இல்லத்தின்கண் கொல்லப்பட்டுச் சாவான் என்றும் பொருள்பட்டு இரட்டுறலாய் நின்றது.

***146. பகைபாவ மச்சம் பழியென நான்கு மிகவாவா மில்லிறப்பான் கண்.***

**(இ-ரை.)** இல் இறப்பான்கண் - பிறன் மனைவியின்கண் நெறிகடந்து ஒழுகுபவனிடத்து; பகை, பாவம், அச்சம், பழி என நான்கும் இகவாவாம் - பகையும் கரிசும் அச்சமும் பழியும் ஆகிய நாற்கேடுகளும் ஒருகாலும் நீங்காவாம்.

“அறம்புகழ் கேண்மை பெருமையிந் நான்கும்
பிறன்றாரம் நச்சுவார்ச் சேரா – பிறன்றாரம்
நச்சுவார்ச் சேரும் பகைபழி பாவமென்
றச்சத்தோ டிந்நாற் பொருள்.” (82)

“புக்க விடத்தச்சம் போதரும் போதச்சம்
துய்க்கு மிடத்தச்சந் தோன்றாமற் காப்பச்சம்
எக்காலு மச்சந் தருமா லெவன்கொலோ
வுட்கான் பிறனில் புகல்.” (83)

“காணிற் குடிப்பழியாங் கையுறிற் கால்குறையும்
ஆணின்மை செய்யுங்கா லச்சமாம் – நீணிரயத்
துன்பம் பயக்குமால் துச்சாரி நீகண்ட
இன்ப மெனக்கெனைத்தாற் கூறு.” (84)

இவை நாலடியார்.

***147. அறனியலா னில்வாழ்வா னென்பான் பிறனியலாள்***
***பெண்மை நயவா தவன்.***

**(இ-ரை.)** அறன் இயலான் இல்வாழ்வான் என்பான் - அறவியல்போடு கூடி இல்வாழ்வானென்று சொல்லப்படுபவன்; பிறன் இயலாள் பெண்மை நயவாதவன் - பிறனுக்கு உரிமைபூண்டு அவன்வழி நிற்பவளின் பெண்டன்மையை விரும்பாதவனாவான்.

ஆனுருபு உடனிகழ்ச்சிக்கண் வந்தது. பிறன் மனையை விழையாதவனே உண்மையான இல்லறத்தான் என்றவாறு.

***148. பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்***
***கறனொன்றோ வான்ற வொழுக்கு.***

**(இ-ரை.)** சான்றோர்க்கு - அறிவு நிறைந்தோர்க்கு; பிறன்மனை நோக்காத பேராண்மை அறன் ஒன்றோ - பிறன் மனைவியைக் கருதாத

பெரிய ஆண்டகைமை அறம் மட்டுமோ; ஆன்ற ஒழுக்கு - நிரம்பிய ஒழுக்கமுமாம்.

புறப் பகைகளை வெல்வதினும் அகப் பகைகளை வெல்வதே அருமை யாதலின், அறுவகை உட்பகைகளுள் ஒன்றாகிய காமத்தை அடக்குவதைப் பேராண்மை என்றார். ஒன்றோ என்பது ஒன்றுதானே என்று பொருள்படுவ தாம். பிறன்மனை நோக்காமை பிறர்க்குச் சிறந்த அறமாயினும் சான்றோர்க்கு இயல்பான ஒழுக்கம் என்பது கருத்து. எச்சவும்மை தொக்கது.

***149. நலக்குரியார் யாரெனி னாமநீர் வைப்பிற்***
***பிறற்குரியா டோடோயா தார்.***

**(இ-ரை.)** நாமநீர் வைப்பின் - அஞ்சத்தக்க கடலாற் சூழப்பட்ட நில வுலகத்தின்கண்; நலக்கு உரியார் யார் எனின் - எல்லா நலங்களும் பெறுதற் குரியார் எவர் எனின்; பிறற்கு உரியாள் தோள் தோயாதார் - பிறனொருவனுக் குரியவளின் தோளைத் தழுவாதார்.

நாமம் அச்சம். இஃது உரிச்சொல்., அகலம், ஆழம், தீயவுயிர்கள், கொநதளிப்பு, நிலமுழுக்கு முதலியவற்றால் அஞ்சத்தக்கதாதலின், கடலை நாமநீர் என்றார். 'நலத்திற்கு' என்பது அத்துச்சாரியை தொக்கு நின்றது. 'தோள் தோய்தல்' இடக்கரடக்கல்.

***150. அறன்வரையா னல்ல செயினும் பிறன்வரையாள்***
***பெண்மை நயவாமை நன்று.***

**(இ-ரை.)** அறன் வரையான் அல்ல செயினும் - ஒருவன் அறத்தைத் தனக்கு உரியதாகக் கொள்ளாது தீவினைகளைச் செய்து வருவானாயினும்; பிறன் வரையாள் பெண்மை நயவாமை நன்று - பிறனாட்சிக் குட்பட்டவளின் பெண்டன்மையை விரும்பாமையை அவன் மேற்கொள்ளின் அது அவனுக்கு நல்லதாம்.

இக் குணம் அவன் குற்றங்களை ஓரளவு மறைக்கும் என்பது கருத்து.

### அதி. 16 - பொறையுடைமை

*அதாவது, தெரிந்தோ தெரியாமலோ பிறர் தமக்குச் செய்த சிறியவும் பெரியவுமான தீங்குகளை யெல்லாம் திருப்பிச் செய்யாதும், அவற்றிற்காக அவரைத் தண்டியாதும், பொறுத்துக் கொள்ளுதல், பெருங்குற்றமாயினும்*

*பொறுத்துக்கொள்ள வேண்டுமென்றற்கு, இது பிறனில் விழையாமையின் பின் வைக்கப்பட்டது.*

**151. அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை**
**யிகழ்வார்ப் பொறுத்த றலை.**

**(இ-ரை.)** அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல - தன்னைத் தோண்டு வாரை விழாமல் தாங்கும் நிலம்போல; தம்மை இகழ்வார்ப் பொறுத்தல் தலை - தம்மை மதியாது தீங்கு செய்தாரைப் பொறுத்தல் தலையாய அறமாம்.

இகழ்தல் புகழ்தலுக்கு எதிர். அது இங்கு மதியாது சொல்லும் சொல்லை மட்டுமன்றிச் செய்யுஞ் செயலையுங் குறித்தது.

**152. பொறுத்த லிறப்பினை யென்று மதனை**
**மறத்த லதனினு நன்று.**

**(இ-ரை.)** இறப்பினை என்றும் பொறுத்தல் - பொறை நன்றாதலால், பிறர் செய்த மிகையை எக்காலத்தும் பொறுத்துக் கொள்க; அதனை மறத்தல் அதனினும் நன்று - இனி, அதை மனத்திற் கொள்ளாது அப்பொழுதே அடியோடு மறக்க முடியுமாயின் அது அப் பொறையினும் நன்றாம்.

பழிக்குப் பழி வாங்கக்கூடிய அல்லது தீங்கு செய்தாரைத் தண்டிக்கக் கூடிய காலத்துப் பொறுத்துக் கொள்ளுதலே உண்மையான பொறையாதலின், அக் காலமும் அடங்க 'என்றும்' என்றார். இறப்புச் சொல்லிலும் செயலிலும் நெறிகடந்த நடத்தை. அதைப் பொறுத்த காலத்தும் அது உள்ளத்திலிருத்த லால், மறத்தல் அதனினும் நன்றென்றார். மறத்தலாவது தீங்கு செய்தாரை நட்பாகக் கருதுதலும் அவருக்கு நன்மை செய்தலும். 'பொறுத்தல்' வியங் கோள் வினை.

**153. இன்மையு ளின்மை விருந்தொரால் வன்மையுள்**
**வன்மை மடவார்ப் பொறை.**

**(இ-ரை.)** இன்மையுள் இன்மை விருந்து ஒரால் - ஒருவனுக்கு வறுமையுள் வறுமையாவது விருந்தினரை ஏற்றுக்கொள்ளாது விடுதல்; வன்மையுள் வன்மை மடவார்ப் பொறை - அதுபோல வலிமையுள் வலிமை யாவது அறிவிலார் செய்த மிகையைப் பொறுத்துக்கொள்ளுதல்.

இது ஓர் உவமியத்திற்கு வேறோர் உவமியத்தை உவமமாக்கிய எடுத்துக்காட்டுவமை. ஒரால் ஒருவுதல், உவமியம் பொருள்.

***154. நிறையுடைமை நீங்காமை வேண்டிற் பொறையுடைமை போற்றி யொழுகப் படும்.***

**(இ-ரை.)** நிறையுடைமை நீங்காமை வேண்டின் - ஒருவன் நற்குண நிறைவு தன்னிடத்தினின்று நீங்காமையை விரும்பின்; பொறையுடைமை போற்றி ஒழுகப்படும் - அவனாற் பொறையுடைமை பேணிக்காத் தொழுகப் படும்.

பொறையுடைமை யின்றி நற்குண நிறைவில்லை யென்றவாறு. படும் என்பது வேண்டும் என்று பொருள்படும் துணைவினையுமாம்.

***155. ஒறுத்தாரை யொன்றாக வையாரே வைப்பர் பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து.***

**(இ-ரை.)** ஒறுத்தாரை ஒன்றாக வையார் - பிறன் செய்த தீங்கைப் பொறாது அவனைத் தண்டித்தாரை அறிவுடையோர் ஒரு பொருட்டாகக் கொள்ளார்; பொறுத்தாரைப் பொன்போல் பொதிந்து வைப்பர் - ஆனால், அத் தீங்கைப் பொறுத்தாரையோ பொன்போற் போற்றி வைத்துக்கொள்வர்.

தீங்கு செய்தவனைத் தண்டித்தவரும் அத் தீங்கு செய்தவனை யொத்தலின் 'ஒன்றாக வையார்' என்றார். பொன்போற் பொதிதலாவது மிக மேன்மையாகப் போற்றுதல். ஏகாரம் தேற்றம்.

***156. ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப் பொன்றுந் துணையும் புகழ்.***

**(இ-ரை.)** ஒறுத்தார்க்கு ஒரு நாளை இன்பம் - தமக்குத் தீங்கு செய்தவனைத் தண்டித்தாக்கு உண்டாவது அவ் வொருநாளை யின்பமே; பொறுத்தார்க்குப் பொன்றும் துணையும் புகழ் - ஆனால், அத் தீங்கைப் பொறுத்தார்க்கோ உலகம் அழியும்வரையும் புகழுண்டாம்.

'ஒருநாளை யின்பம்' சரிக்குச் சரி செய்தேம் என்னும் பொந்திகை (திருப்தி). புகழ் உலகமுள்ள காலமெல்லாம் தொடருமாதலால், பொன்றுதல் இங்கு உலகத்தின் தொழில்.

***157. திறனல்ல தற்பிறர் செய்யினு நோநொந்***
***தறனல்ல செய்யாமை நன்று.***

**(இ-ரை.)** திறன் அல்ல தன் பிறர் செய்யினும் - செய்யத்தகாத கொடிய வற்றைத் தனக்குப் பிறர் செய்தாராயினும்; நோ நொந்து அறன் அல்ல செய் யாமை நன்று - அதனால் அவர்க்கு வரும் துன்பத்திற்காக உளம் நொந்து அறனல்லாதவற்றைத் தான் அவர்க்குச் செய்யாதிருத்தல் ஒருவனுக்கு நல்லதாம்.

உம்மை உயர்வுசிறப்பு. துன்பத்திற்கு நோதலை,

**"தம்மை யிகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றிமற்**
**றெம்மை யிகழ்ந்த வினைப்பயத்தால் – உம்மை**
**எரிவாய் நிரயத்து வீழ்வர்கொல் என்று**
**பரிவதூஉம் சான்றோர் கடன்" (58)**

என்னும் நாலடியார்ச் செய்யுளால் அறிந்துகொள்க.

***158. மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தம்***
***தகுதியான் வென்று விடல்.***

**(இ-ரை.)** மிகுதியான் மிக்கவை செய்தாரை - செருக்கினால் தமக்குத் தீயவை செய்தவரை; தாம் தம் தகுதியான் வென்று விடல் - தாம் தம் பொறையினால் வென்று விடுக.

சரிக்குச் சரி தீங்கு செய்யும் இழுக்க வெற்றி ஒழுக்கத் தோல்வி யென்றும்; தீயவை செய்தாரைப் பொறுத்துக் கொள்ளும் ஒழுக்கவெற்றியே உண்மையான வெற்றி யென்றும் உணர்த்தற்குத் 'தகுதியான் வென்று விடல்' என்றார். 'விடல்' வியங்கோள் வினை.

***159. துறந்தாரிற் றூய்மை யுடைய ரிறந்தார்வா***
***யின்னாச்சொ னோற்கிற் பவர்.***

**(இ-ரை.)** இறந்தார் வாய் இன்னாச் சொல் நோற்கிற்பவர் - நெறி கடந்த கீழ்மக்களின் வாயினின்று வரும் தீய சொற்களைப் பொறுத்துக் கொள்ளும் ஆற்றலுடைய மேன்மக்கள்; துறந்தாரின் தூய்மை உடையர் - இல்லறத்தின்கண் நின்றாலும் துறவியர் போல மனத்தூய்மை உடையராவர்.

'வாய்' என மிகைபடக் கூறியது, கீழோர் வாயினின்று தீய சொற்களே மிகுதியாக வரும் என்பதை உணர்த்தற்கு. ஐந்தாம் வேற்றுமை யின்னுருபு உறழ்பொருளிற்கே யுரியதாதலால், துறந்தாரைவிடத் தூயர் எனினுமாம். சுடுகின்ற வெயிலைப் பொறுத்தலினும் சுடுகின்ற சொல்லைப் பொறுத்தல் அரிதாதல் காண்க. 'கில்' ஆற்றலுணர்த்தும் இடைநிலை. வெயில் பிறப்பிக்காத சினத்தைச் சுடுசொல் பிறப்பித்தலால், அதைப் பொறுத்துக்கொள்ளுதலே மிகுந்த மனத்தூய்மையைக் காட்டும் என்பது கருத்து.

***160. உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லு
மின்னாச்சொ னோற்பாரிற் பின்.***

**(இ-ரை.)** உண்ணாது நோற்பார் பெரியர் - நோன்பினால் உணவைத் தவிர்ந்து பசியையும் தட்பவெப்பத்தையும் பொறுத்துக்கொள்ளும் துறவியர் மக்கட்குட் பெரியவரே; பிறர் சொல்லும் இன்னாச் சொல் நோற்பாரின் பின் - ஆயின் அவர் பெரியவராவது பிறர் சொல்லும் தீய சொற்களைப் பொறுத்துக்கொள்ளும் இல்லறத்தார்க்கு அடுத்தபடியே.

பிறர் என்றது தீயவரை. இன்பம் பெறுதற்குரிய இல்லறத்திலிருந்து கொண்டே துன்பம் பொறுத்தற்குரிய துறவியரினும் மிகுந்த பொறையை மேற்கொள்வதால், முதற்படியாகப் பெரியவர் என்றார்.

## அதி. 17 - அழுக்காறாமை

*அதாவது, பிறராக்கங் கண்டு பொறாமைப்படாமை. பொறாமை என் பது பொறுத்தலின் மறுதலையாதலால், அதை விலக்குதற்கு இவ் வதிகாரம் பொறையுடைமையின் பின் வைக்கப்பட்டது.*

*அழுங்குதல் வருந்துதல் அல்லது துன்புறுதல். அழுங்குவது அழுக்கு. அது உறு என்னும் துணைவினை பெற்று அழுக்குறு என நிற்கும். அழுக் குறுதல் பிறராக்கங் கண்டு பொறாது வருந்துதல். நாசமுறு என்னும் வினை நாசமறு என்று உலக வழக்கில் திரிந்தாற் போன்று, அழுக்குறு என்பதும் அழுக்காறு என இலக்கிய வழக்கில் திரிந்தது. "அழுக்கற் றகன்றாரு மில்லை" (170) என வள்ளுவரே கூறுதல் காண்க. நாசமுற்றுப் போவான் என்பது நாசமற்றுப் போவான் என்றே வழங்குதல் காண்க.*

*அழுக்கறு என்னும் கூட்டுவினை அழுக்காறு என நீண்டு தொழிற் பெயராகும். அது முதனிலை திரிந்த தொழிற்பெயர். அழுக்காறு கடும்*

*பொறாமை. அழுக்கறாமை என்னும் எதிர்மறைத் தொழிற்பெயர் அழுக்காறாமை என நீண்டு வழங்குகின்றது. இது வராமை தராமை என்பன வாராமை தாராமை என நீண்டது போன்றது.*

**161.** ***ஒழுக்காறாக் கொள்க வொருவன்றன் னெஞ்சத்***
***தழுக்கா றிலாத வியல்பு.***

**(இ-ரை.)** ஒருவன் தன் நெஞ்சத்து அழுக்காறு இலாத இயல்பு - ஒருவன் தன் நெஞ்சத்திற் பொறாமை யில்லாத தன்மையை; ஒழுக்கு ஆறாக் கொள்க - தனக்குரிய ஒழுக்க நெறியாகக் கொள்க.

இயல்பு இயல்பான தன்மை. ஒழுக்காறாக் கொள்ளுதல் உயிரினுஞ் சிறப்பாகப் பேணிக் காத்தல்.

**162.** ***விழுப்பேற்றி னஃதொப்ப தில்லையார் மாட்டு***
***மழுக்காற்றி னன்மை பெறின்.***

**(இ-ரை.)** யார் மாட்டும் அழுக்காற்றின் அன்மை பெறின் - யாரிடத்தும் பொறாமையில்லா தொழுகுதலை ஒருவன் பெறுமாயின்; விழுப் பேற்றின் அஃது ஒப்பது இல்லை - அவன் பெறுஞ் சிறந்த பேறுகளுள் அதை யொப்பது வேறு ஒன்றும் இல்லை.

'யார் மாட்டும்' என்றதால், பகைவரிடத்தும் பொறாமை கொள்ளுதல் விலக்கப்பட்டது.

**163.** ***அறனாக்கம் வேண்டாதா னென்பான் பிறனாக்கம்***
***பேணா தழுக்கறுப் பான்.***

**(இ-ரை.)** ஆக்கம் அறன் வேண்டாதான் என்பான் - இம்மைக்கும் மறுமைக்கும் வேண்டிய செல்வமும் அறமும் ஆகிய பேறுகளைத் தனக்கு வேண்டாதவனென்று சொல்லப்படுகின்றவன்; பிறன் ஆக்கம் பேணாது அழுக்கறுப்பான் - பிறன் செல்வங் கண்டவிடத்து அதற்கு மகிழாது பொறாமைப்படுபவனாவன்.

பொறாமைக்காரன் பிறனுக்கு ஒரு தீங்குஞ் செய்ய இயலாது தனக்கே கேட்டை வருவித்துக் கொள்கின்றான் என்பது, இதனாற் கூறப்பட்டது.

**164.** ***அழுக்காற்றி னல்லவை செய்யா ரிழுக்காற்றி***
***னேதம் படுபாக் கறிந்து.***

**(இ-ரை.)** அழுக்காற்றின் அல்லவை செய்யார் - அறிவுடையோர் பொறாமை கொண்டு அதனால் அறனல்லாதவற்றைச் செய்யார்; இழுக்கு ஆற்றின் ஏதம் படுபாக்கு அறிந்து - அத் தீய நெறியால் தமக்கு இருமை யிலுங் கேடு வருதலை யறிந்து.

அல்லவை செய்தலாவது, கல்வி செல்வம் அதிகாரம் ஆற்றல் முதலி யன வுடையார்க்குத் தீங்கு எண்ணுதலும் சொல்லுதலும் செய்தலுமாம். 'பாக்கு' ஒரு தொழிற்பெயரீறு.

***165.*** ***அழுக்கா றுடையார்க் கதுசாலு மொன்னார்***
***வழுக்கியுங் கேடீன் பது.***

**(இ-ரை.)** ஒன்னார் வழுக்கியும் கேடு ஈன்பது - பகைவர் கேடு செய்யத் தவறினும் பொறாமை தப்பாது கேடு செய்வதாதலின்; அழுக்காறு உடையார்க்கு அது சாலும் - பொறாமையுள்ளவர்க்குக் கேடு செய்ய அது ஒன்றே போதுமானது; வேறு பகை வேண்டுவதில்லை.

உம்மை எதிர்மறைப் பொருட்டு. அதுவே என்னும் பிரிநிலை யேகாரம் தொக்கது.

***166.*** ***கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற முடுப்பதூஉ***
***முண்பதூஉ மின்றிக் கெடும்.***

**(இ-ரை.)** கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் - ஒருவன் பிறர்க்குக் கொடுப்பதைப் பொறாமையால் தடுப்பவன் மட்டுமன்றி அவன் உறவின ரும்; உண்பதும் உடுப்பதும் இன்றிக் கெடும் - உண்ணும் பொருளும் உடுக் கும் பொருளுமின்றிக் கெடுவர்.

சுற்றமும் என்னும் எச்சவும்மை தொக்கது. ஒரு செல்வனது பொருளைக் கண்டு பொறாமைப்படுவதினும் ஒரு செல்வன் ஓர் ஏழைக்குக் கொடுப்பதைப் பொறாமையால் தடுப்பது மிகக் கொடியதாதலின், அக் கொடுமை செய்தவன் தன் சுற்றத்தோடும் உண்பதும் உடுப்பதுமின்றிக் கெடுவான் என்றார். இவ் விளைவு பொறாமைக் குற்றத்தோடு ஏழை வயிற்றெரிச்சலும் கூடுவதால் நேர்வது. ஊனுடை யென்னாது உண்பது முடுப்பதும் என்றமையால், உண்ணத்தக்கனவும் உடுக்கத்தக்கனவுமான எவ்வகைப் பொருளையு மிழப்பர் என்பது பெறப்படும். 'சுற்றம்' தொழிலாகு பெயர். சுற்றியிருக்கும் இனம் சுற்றம். அளபெடை ஈரிடத்தும் இன்னிசை பற்றியது.

**167. அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவ
டவ்வையைக் காட்டி விடும்.**

**(இ-ரை.)** அழுக்காறு உடையானை - பிறராக்கங் கண்டவிடத்துப் பொறாமை கொள்பவனை; செய்யவள் அவ்வித்துத் தவ்வையைக் காட்டி விடும் - செங்கோலத்தினளாகிய திருமகள் தானும் பொறாது தன் அக்கை யாகிய மூதேவிக்குக் காட்டிவிட்டு நீங்கும்.

அவ்வை அக்கை. தம் அவ்வை தவ்வை; தம் அக்கை தமக்கை என்பது போல, திருமகளின் அக்கை வறுமைக்குத் தெய்வமாதலின், அவளுக்குக் காட்டுதல் என்பது வறியனாக்குதல். தவ்வையை என்பது இரண்டாம் வேற்றுமையுருபு நாலாம் வேற்றுமைப் பொருளில் வந்த வேற்றுமை மயக்கம். 'விடும்' என்பது இங்குத் தலைமையாய் வந்த தனிவினை.

**168. அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும்.**

**(இ-ரை.)** அழுக்காறு என ஒரு பாவி - பொறாமை யென்று சொல்லப் படும் ஒப்பற்ற கரிசன் (பாவி); திருச்செற்றுத் தீயுழி உய்த்து விடும் - தன்னை யுடையவனை இம்மைக்கண் செல்வங் கெடுத்து மறுமைக்கண் நரகத்திற் புகுத்திவிடுவான்.

பொறாமைக் குணத்தை ஒரு கொடியனாக் குறித்தது ஆட்படையணி (Personification). தீயுழி என்பது எரிவாய் நரகத்தின் பெயர். விடும் என்பது செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று. கரிசு (பாவம்) - கரிசன் (ஆண்பால்), கரிசி (பெண்பால்).

**169. அவ்விய நெஞ்சத்தான் னாக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்.**

**(இ-ரை.)** அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் - பொறாமை மனத்தானது செல்வமும்; செவ்வியான் கேடும் - பொறாமை கொள்ளாத செவ்விய மனத்தானது வறுமை அல்லது துன்பமும்; நினைக்கப்படும் - எக்கரணியம் பற்றி நேர்ந்தன வென்று ஆராயப்படும்.

இரு நிலைமையும் இயற்கைக்கும் அறநூற் கொள்கைக்கும் மாறா யிருப்பதால், அவற்றிற்குக் கரணியம் பழவினையே என்பது ஆராய்ச்சியால் அறியப்படும்.

"இம்மைச் செய்தன யானறி நல்வினை
யும்மைப் பயன்கொ லொருதனி யுழந்தித்
திருத்தகு மாமணிக் கொழுந்துடன் போந்தது" (சிலப். 15:61-3)

என்னும் மாடலன் கூற்றும்,

"என்செய லாவதி யாதொன்று மில்லை யினித்தெய்வமே
உன்செய லேயென் றுணரப்பெற் றேனிந்த வூனெடுத்த
பின்செய்த தீவினை யாதொன்று மில்லைப்பிறப்பதற்கு
முன்செய்த தீவினை யோவிங்ங னேவந்து மூண்டதுவே"

என்னும் பட்டினத்தார் பாடலும், இவ்வகை யாராய்ச்சியைக் குறிக்கும்.

**170. அழுக்கற் றகன்றாரு மில்லையஃ தில்லார்
பெருக்கத்திற் றீர்ந்தாரு மில்.**

**(இ-ரை.)** அழுக்கற்று அகன்றாரும் இல்லை - பொறாமைப்பட்டுப் பெரியவராயினாரு மில்லை; அஃது இல்லார் பெருக்கத்தின் தீர்ந்தாரும் இல் - அக் குணமில்லாதவர் பேராக்கத்தினின்று நீங்கினாரு மில்லை.

இது பழவினையால் தாக்குண்ணாத பிறப்பின் நிலைமையைக் கூறுவது.

## அதி. 18 - வெஃகாமை

*அதாவது, பிறர் பொருள்மேல் ஆசைகொள்ளாமை. பொறாமை யினாற் பிறர் பொருளைக் கவர விரும்புவது இயல்பாதலால், இது கூடா தென்பதற்கு அழுக்காறாமையின் பின் வைக்கப்பட்டது. வெள் - வெள்கு - வெஃகு. வெஃகுதல் விரும்புதல்.*

**171. நடுவின்றி நன்பொருள் வெஃகிற் குடிபொன்றிக்
குற்றமு மாங்கே தரும்.**

**(இ-ரை.)** நடுவு இன்றி நல் பொருள் வெஃகின் - பிறர் பொருளையும் தம் பொருள்போற் கருதும் நடுவுநிலைமையில்லாது அவரது நற்செல்வத் தின்மேல் ஒருவன் ஆசைவைப்பின்; குடிபொன்றி - அவன் குடிகெட்டு; குற்றமும் ஆங்கே தரும் - அத் தீய ஆசைவைப்பு அவனுக்கு மறுமைத் துன்பத்திற்கேதுவாகிய தீவினைக் குற்றத்தையும் உண்டாக்கும்.

அறவழியில் ஈட்டப்பட்டு நல்வழியிற் செலவிடப்பெறும் செல்வத்தை 'நன்பொருள்' என்றார். பொன்றி என்பது பொன்றியபின் என்னும் பொருளது.

**172. படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்**
**நடுவன்மை நாணு பவர்.**

**(இ-ரை.)** நடுவு அன்மை நாணுபவர் - நடுவுநிலையன்மைக்கு அஞ்சி நாணுபவர்: படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார் - பிறர் பொருளைக் கவர்வதனால் தமக்குண்டாகும் பயனை விரும்பிப் பழிக்கத்தக்க செயல்களைச் செய்யார்.

'நடுவு' தமவும் பிறவும் ஒப்ப நாடிப் பிறவுந் தமபோற் பேணுதல்.

**173. சிற்றின்பம் வெஃகி யறனல்ல செய்யாரே**
**மற்றின்பம் வேண்டு பவர்.**

**(இ-ரை.)** சிற்றின்பம் வெஃகி அறன் அல்ல செய்யார் - பிறர் பொருளைக் கவர்வதால் தாம் அடையும் நிலையில்லாத சிற்றளவான தீய இன்பத்தை விரும்பி அறனல்லாத செயல்களைச் செய்யார்; மற்றின்பம் வேண்டுபவர் - அறத்தால் வருவதும் நிலையானதும் பேரளவினதுமான வேறு நல்லின்பத்தை வேண்டும் அறிவுடையோர்.

இன்பத்தின் சிறுமை காலமும் அளவும் தீமையும்பற்றியது. மற்று வேறு. ஏகாரம் தேற்றம்.

**174. இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற**
**புன்மையில் காட்சி யவர்.**

**(இ-ரை.)** புலம் வென்ற புன்மை இல் காட்சியவர் - ஐம்புலன்களையும் அடக்கிய குற்றமற்ற அறிவினையுடையோர்; இலம் என்று வெஃகுதல் செய்யார் - யாம் பொருளிலேம் என்று எண்ணி அவ்வின்மையைத் தீர்த்தற் பொருட்டுப் பிறர்பொருளை விரும்புதல் செய்யார்.

புலம் வெல்லுதல் தீய வழியில் இன்புறாது மனத்தைத் தடுத்தல். 'புன்மையில் காட்சி' ஐயந்திரிபறப் பொருள்களை யறிதல், அதாவது, பிறர் பொருள்மீது தமக்குரிமை யில்லையென்றும், அதைக் கவரின் அது நிலையாதாகையாற் பின்னும் வறுமையுண்டாகுமென்றும், ஆகவே, அக் கவரால் இருமையிலுந் துன்பமன்றி யின்பமில்லை யென்றும் உணர்தல்.

**175. *அஃகி யகன்ற வறிவென்னாம் யார்மாட்டும்***
***வெஃகி வெறிய செயின்.***

**(இ-ரை.)** அஃகி அகன்ற அறிவு என்ஆம் - உணர்வால் நுணுகிப் பொருளாற் பரந்த ஒருவரது கல்வியறிவால் என்ன பயனாகும்; வெஃகி யார்மாட்டும் வெறிய செயின் - அவர் பிறர் பொருளை விரும்பி எல்லாரிடத்தும் தம் அறிவொடு பொருந்தாத செயல்களைச் செய்வாராயின்.

யார் மாட்டும் வெறிய செய்தலாவது, நல்லார் பொல்லார், சிறியார் பெரியார், இளையார் மூத்தார், ஆடவர் பெண்டிர், நல்லவர் பிணியர் என்னும் வேறுபாடின்றி, இழிந்தனவுங் கடியனவுஞ் செய்தல். வெறுமை அறிவென்னும் உள்ளீடின்மை. அறிவாற் பயனின்மையின் 'என்னாம்' என்றார்.

**176. *அருள்வெஃகி யாற்றின்க ணின்றான் பொருள்வெஃகிப்***
***பொல்லாத சூழக் கெடும்.***

**(இ-ரை.)** அருள் வெஃகி ஆற்றின்கண் நின்றான் - அன்பைமட்டுமன்றி அருளையும் விரும்பி இல்லறத்தின்கண் நின்றவன்; பொருள் வெஃகிப் பொல்லாத சூழக் கெடும் - பிறர் பொருளை விரும்பி அதைக் கைப்பற்றத் தீய வழிகளை ஆராய்ந்தெண்ணிய மட்டிற் கெட்டுவிடுவான்.

விருந்தோம்பல் ஒப்புரவொழுகல் ஈகை ஆகிய அறங்கட்கு அன்பும், இரப்போர்க் கீதற்கு அருளும் வேண்டியிருப்பதால், இல்லறமும் ஓரளவு அருள்நெறிப்பட்டதாம். ஆதலால், இல்லறத்தைத் துறவறத்திற்கு ஆறென்று பரிமேலழகர் கூறியது முழுதும் பொருந்தாது. சூழ்வு வெளிப்பட்டவுடன் பொருளையிழக்க விருந்தாரால் தீங்கு நேர்தலின், 'சூழக் கெடும்' என்றார்.

**177. *வேண்டற்க வெஃகியா மாக்கம் விளைவயின்***
***மாண்டற் கரிதாம் பயன்.***

**(இ-ரை.)** வெஃகி ஆம் ஆக்கம் வேண்டற்க - பிறர் பொருளைக் கவர்தலால் உண்டாகும் ஆக்கத்தை விரும்பற்க; விளைவயின் பயன் மாண்டற்கு அரிது ஆம் - பின்பு நுகருங் காலத்தில் அவ் வாக்கத்தின் பயன் நன்றாத லில்லையாதலின்.

'விளைவயின்' வினைத்தொகை. அருமை இங்கு இன்மை மேற்று.

*178.* **அஃகாமை செல்வத்திற் கியாதெனின் வெஃகாமை**
**வேண்டும் பிறன்கைப் பொருள்.**

**(இ-ரை.)** செல்வத்திற்கு அஃகாமை யாது எனின் - ஒருவனது செல்வம் சுருங்காமலிருப்பதற்கு வழி எதுவெனின்; பிறன் வேண்டும் கைப்பொருள் வெஃகாமை - அது பிறனுக்குத் தேவையான அவனது கைப்பொருளைத் தான் விரும்பாமையாம்.

அஃகாமை இங்கு ஆகுபொருளது.

*179.* ***அறனறிந்து வெஃகா வறியுடையார்ச் சேருந்***
***திறனறிந் தாங்கே திரு.***

**(இ-ரை.)** அறன் அறிந்து வெஃகா அறிவு உடையார் - இது அறமென்று தெளிந்து பிறர்பொருளை விரும்பாத அறிவுடையாரிடத்து; திரு திறன் அறிந்து ஆங்கே சேரும் - திருமகள் தான் அடைதற்கான திறங்களை யறிந்து அவற்றின்படியே சென்றடைவாள்.

'திரு' ஆகுபெயர். திறங்கள் காலமும் இடமும் வினையும். பிறன் பொருளை விரும்பாமையாற் செல்வம் சுருங்காதிருப்பதோடு புதிதாகத் தோன்றவுஞ் செய்யும் என்பது இதனாற் கூறப்பட்டது.

*180.* **இறலீனு மெண்ணாது வெஃகின் விறலீனும்**
**வேண்டாமை யென்னுஞ் செருக்கு.**

**(இ-ரை.)** எண்ணாது வெஃகின் இறல் ஈனும் - பின் விளைவதை எண்ணிப்பாராது. ஒருவன் பிறன் பொருளைக் கைப்பற்றக் கருதின், அக் கருத்து அவனுக்கு முடிவைத் தரும்; வேண்டாமை என்னும் செருக்கு விறல் ஈனும் - பிறன் பொருளை விரும்பாமை யென்னும் பெருமிதம் ஒருவனுக்கு வெற்றியைத் தரும்.

முடிவு பொருளிழந்தாராலும் அரசனாலும் நேர்வது. "கள்வனைக் கோறல் கடுங்கோ லன்று" என்று ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் கூறியமை காண்க (சிலப். 20: 94). வெற்றி வெஃகுவார் எல்லார்மீதும் ஆசை மீதுங் கொண்டது.

## அதி. 19 - புறங்கூறாமை

*அதாவது, ஒருவரில்லாதவிடத்து அவரைப்பற்றித் தீதாகப் பேசுதல். புறம் முதுகு அல்லது பின்பக்கம். ஒருவரில்லாத இடம் அவருக்குத் தெரியாத முதுகுபக்கம் போன்றிருத்தலால் புறம் எனப்பட்டது. புறத்திற் கூறுவது புறங்கூறுதல். அது புறம் எனவும் படும். அன்று அது இடவாகு பெயர்.*

*புறங்கூறுதல், கோட் சொல்லுவதும் குண்டுணி பேசுவதும் என இரு வகைத்து. ஓர் அதிகாரியினிடத்தில் ஒரு பணியாளனைப்பற்றித் தீதாகச் சொல்வது கோள்; சோம்பேறிகள் பலர், சிறப்பாக வேலையொழிந்த பெண்டிர், ஒருவரைப்பற்றித் தீதாகப் பேசி மகிழ்வது குண்டுணி. கோள் குறளை யெனவும் படும்.*

*இலக்கிய வழக்கிற் பெரும்பாலுங் கோட்சொல்லுவதைக் குறிக்கும் புறங்கூற்று, ஒருவரின் பதவியை அல்லது வேலையைப் பொறாமையால் அல்லது தன்னலத்தால் வெஃகி அதைப் பறிப்பதற்கு நிகழ்வதாயிருத்தலால், அதைக் கண்டித்தற்குப் புறங்கூறாமை வெஃகாமையின் பின் வைக்கப் பட்டது.*

**181.** **அறங்கூறா னல்ல செயினு மொருவன்**
**புறங்கூறா னென்ற லினிது.**

**(இ-ரை.)** ஒருவன் அறம் கூறான் அல்ல செயினும் - ஒருவன் அறம் என்னுஞ் சொல்லையுஞ் சொல்லாது அறமல்லாதவற்றைச் செய்யினும்; புறங்கூறான் என்றல் இனிது - ஒருவரையும்பற்றிப் புறங்கூறான் என்று உலகத்தாராற் சொல்லப்படுதல் நன்றாம்.

புறங்கூறாமை அக் குற்றங்களினும் மேம்பட்டுத் தோன்றும் என்பதாம்.

**182.** **அறனழீஇ யல்லவை செய்தலிற் றீதே**
**புறனழீஇப் பொய்த்து நகை.**

**(இ-ரை.)** புறன் அழீஇப் பொய்த்து நகை - ஒருவனைக் காணாவிடத்துப் பழித்துரையால் அழித்துக் கூறிக் கண்டவிடத்து அவனோடு பொய்யாகச் சிரித்து முகமலர்தல்; அறன் அழீஇ அல்லவை செய்தலின் தீது - அறம் என்றே ஒன்றுமில்லையென அழித்துக் கூறி அறமல்லாதவற்றைச் செய்தலினுந் தீயதாம்.

அறனழித்தலினும் புறனழித்தலும், அல்லவை செய்தலினும் பொய்த்து நகையும் தீதென நிரனிறையாகக் கொள்க. பழித்துரையால் அழித்தலாவது பெயரைக் கெடுத்தல். 'அழீஇ' ஈரிடத்தும் பிறவினைப் பொருளில் வந்த சொல்லிசை யளபெடை.

***183. புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாத***
***லறங்கூறு மாக்கந் தரும்.***

**(இ-ரை.)** புறங்கூறிப் பொய்த்து உயிர் வாழ்தலின் - ஒருவன் பிறனைக் காணாவிடத்துத் தீதாகக் கூறி அவனைக் கண்டவிடத்து நல்லவனாக நடித்து உயிர் வாழ்தலினும்; சாதல் அறம் கூறும் ஆக்கம் தரும் - அங்ஙனஞ் செய்யாது இறந்து போதல் அவனுக்கு அறநூல்கள் கூறும் ஆக்கத்தைத் தரும்.

இறந்தவழிப் புறங்கூறலின்மையால், 'அறங் கூறும் ஆக்கந் தரும்' என்றார். ஆக்கம் மறுமையிற் பெறும் நன்மை. 'அறம்' ஆகுபெயர். தரும் என்னும் சொல்,

"தருசொல் வருசொல் ஆயிரு கிளவியும்
தன்மை முன்னிலை ஆயீ ரிடத்த" (512)

என்னும் தொல்காப்பிய நூற்பாப்படி தன்மை முன்னிலையில் வராது படர்க்கையில் வந்ததினால், இடவழுவமைதியாம்.

***184. கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க***
***முன்னின்று பின்னோக்காச் சொல்.***

**(இ-ரை.)** கண் நின்று கண் அறச் சொல்லினும் -ஒருவனெதிரே நின்று கண்ணோட்டமின்றிக் கடுஞ்சொற்களைச் சொல்லினும்; முன் இன்று பின் நோக்காச் சொல் சொல்லற்க - அவன் எதிரில் இல்லாவிடத்துப் பின் விளையுந் தீமையை நோக்காத புறங்கூற்றுச் சொற்களைச் சொல்லா தொழிக.

'பின்' ஆகுபொருளது. சொல்வான் செயல் சொல்லின்மே லேற்றப் பட்டது. இதில் வந்துள்ளது முரணணி.

***185. அறஞ்சொல்லு நெஞ்சத்தா னன்மை புறஞ்சொல்லும்***
***புன்மையாற் காணப் படும்.***

**(இ-ரை.)** அறம் சொல்லும் நெஞ்சத்தான் அன்மை - புறங்கூறுவா னொருவன் அறம் நல்ல தென்று சொல்லினும், அவன் அதை நெஞ்சாரச்

சொல்கின்றானல்லன் என்னும் உண்மை; புறஞ் சொல்லும் புன்மையால் காணப்படும் - அவன் புறஞ்சொல்லுதற்குக் கரணியமான சிறுதன்மையால் அறியப்படும்.

மனந்திருந்தாமையால் அவன் சொல் நம்பப்பெறா தென்பதாம். இனி, அறம் நல்லதென்று ஒருவனது மனச்சான்று ஒப்புக்கொள்ளினும், வழக்கத்தினாலும் விருப்பினாலும் நெஞ்சுரமின்மையாலும் அவன் அதற்கு மாறாக ஒழுகலாமாகலின், 'அறங்கூறும் நெஞ்சத்தா னன்மை' என்பதற்கு, அறத்தின் நன்மையைப்பற்றிக் கூறத் தகுதியுள்ள மனத்தானல்லாமை என்று உரைப்பினுமமையும்.

***186. பிறன்பழி கூறுவான் றன்பழி யுள்ளுந்***
***திறந்தெரிந்து கூறப் படும்.***

(இ-ரை.) பிறன்பழி கூறுவான் - பிறனொருவன் பழியை அவன் புறத்துக் கூறுபவன்; தன் பழியுள்ளும் திறன் தெரிந்து கூறப்படும் - தன் சொந்தப் பழிகளுள்ளும் கடுமையானவை தெரிந்தெடுக்கப்பட்டு அப் பிறனால் தன் எதிரிலேயே கூறப்படுவான்.

புறத்து என்பது அதிகாரத்தால் வந்தது. 'திறன்' வலிமை. அது இங்குத் திறனான பழிகளைக் குறித்தது; ஆதலால் ஆகுபொருளது. திறந்தெரிந்து கூறுவதற்குக் கரணியம் புறங்கூற்றைப்பற்றி அறிவிக்கப்பட்டமை அல்லது கேள்விப்பட்டமை யென்பது, கருதலளவையால் அறியப்படும். செய்யாமற் செய்த புறங்கூற்றிற்குப் பழிவாங்குஞ் செய்கையாதலாலும், 'திறந்தெரிந்து' என்னுங் குறிப்பினாலும், நேரிற் சொல்லுதலும் உய்த்துணரப்படும்.

***187. பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி***
***நட்பாட றேற்றா தவர்.***

(இ-ரை.) நகச் சொல்லி நட்பாடல் தேற்றாதவர் - மகிழுமாறு இனிய சொற்களைச் சொல்லி அயலாரோடும் நட்பாடல் தமக்கு நன்றென்று தெளியாத புறங்கூற்றாளர்; பகச் சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் - பிளவுண்டாகுமாறு புறங்கூறித் தம் உறவினரையும் தம்மைவிட்டுப் பிரியப்பண்ணுவர்.

கேளிரையும் என்னும் சிறப்பும்மை தொக்கது. நட்பாடல் என்னுங் குறிப்பால் அயலாரோடும் என்பது வருவிக்கப்பட்டது. அவ் வும்மை எச்ச வும்மை. தம் கேளிர் என்னாது கேளிர் என்றுமட்டுங் குறித்ததினால், பிற

ரினத்தார்க்குள்ளும் புறங்கூற்றாற் பிரிவினையுண்டாக்குவர் என்பது பெறப்படும். இங்ஙனம் எல்லார்க்கும் பொல்லாதவராவர் என்பது கருத்து. தேறாதவர் என்னும் தன்வினை தேற்றாதவர் என்று பிறவினை வடிவில் நின்றது, "கனவிலுந் தேற்றாதார் மாட்டு" (குறள். 1054) என்புழிப்போல.

*188. துன்னியார் குற்றமுந் தூற்று மரபினா*
*ரென்னைகொ லேதிலார் மாட்டு.*

**(இ-ரை.)** துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினார் - தம் நெருங்கிய வுறவினர் குற்றத்தையும் அவர் புறத்துத் தூற்றும் இயல்புடைய வன்னெஞ்சர்; ஏதிலார் மாட்டு என்னை கொல் - அயலார் செய்தியில் எத்தகையவராவார்!

'குற்றமும்' என்பது துன்னியாரை நோக்கிய சிறப்பும்மை. தூற்றுதல் என்பது களத்திற் பொலி தூற்றுதல்போலப் பலருமறியப் பரப்புதல். மிகக் கொடியவராவர் என்பதுபற்றியும் அறியப்படாமைபற்றியும் 'என்னை கொல்' என்றார். 'என்னர் கொல் என்னும் பாடமும் ஏற்றதே. 'கொல்' ஐயம்.

*189. அறனோக்கி யாற்றுங்கொல் வையம் புறனோக்கிப்*
*புன்சொ லுரைப்பான் பொறை.*

**(இ-ரை.)** புறன் நோக்கிப் புன்சொல் உரைப்பான் பொறை - பிறர் இல்லாத சமயம் பார்த்து அவரைப் பழித்துரைக்கும் புறங்கூற்றாளனது உடலைப் பொறுத்தலை; வையம் அறன்நோக்கி ஆற்றுங்கொல் - மாநிலம் தனக்கு அறமென்று கருதிச் செய்யும் போலும்!

தன்னை அகழ்வாரைத் தாங்கும் நிலத்திற்கும் புறங்கூற்றாளன் உடலைச் சுமத்தல் அரிதென்னுங் கருத்தால். 'அறனோக்கி யாற்றுங்கொல்' என்றார். பொறை என்னும் சொல் இங்குச் சுமத்தலும் பொறுத்துக்கொள்ளுதலுமாகிய இரு பொருளையும் ஒருங்கே தழுவியதாம். 'கொல்' ஐயங் கலந்த உய்த்துணர்வு.

*190. ஏதிலார் குற்றம்போற் றங்குற்றங் காண்கிற்பின்*
*றீதுண்டோ மன்னு முயிர்க்கு.*

**(இ-ரை.)** ஏதிலார் குற்றம்போல் தம் குற்றம் காண்கிற்பின் - புறங்கூறுவார் தாம் காணும் பிறர் குற்றம்போல் தம் குற்றத்தையுங் காணவல்லராயின்; மன்னும் உயிர்க்குத் தீது உண்டோ - நிலைபெற்ற மக்களுயிர்க்கு வரக்கூடிய துன்பமுண்டோ?

அயலாரையும் பகைவரையுங் குறிக்கும் ஏதிலார் என்னும் சொல், இங்குப் பிறர் என்னும் பொருட்டாய் நின்றது. பிறர் குற்றம்போல் தம் குற்றமுங் காண்டலருமை நோக்கிக் 'காண்கிற்பின்' என்றார். கண்டவழித் தீவினை நிகழாதாதலின் அதனால் துன்பமு மிராதென்பதாம். 'கில்' ஆற்றலுணர்த்தும் இடைநிலை. இனி, காண்கின்பின் என்று பிரிப்பினும் அமையும். உடல் நில்லா தொழியவும் உயிர் நிலைபெற்று நிற்றலால் மன்னுமுயிர் என்றார்.

## அதி. 20 - பயனில சொல்லாமை

*அதாவது, வேலை செய்யாத ஓய்வு நேரத்திலும் தனக்கேனும் பிறர்க் கேனும் அறம்பொரு ளின்பங்களுள் ஒன்றும் பயவாத வீண் சொற்களைச் சொல்லாமை. பொய், குறளை, கடுஞ்சொல், பயனில்சொல் என்னும் நால்வகைச் சொற்குற்றங்களுள், பொய் இல்லறத்தார்க்குப் பயன்படுமாறும் துறவறவியலிற் கண்டிக்கப்படுவதனாலும், கடுஞ்சொல் இனியவை கூறலானும் குறளை புறங்கூறாமையானும் விலக்கப்பட்டமையாலும், எஞ்சி நின்ற பயனில் சொல்லைக் கடிவது இங்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. ஒன்றைச் சொல்வதற்குக் கேட்பாரும் வேண்டியிருத்தலின் இருவர்க்குக் குறைந்து சொல்லாட்டு நிகழ்த்த முடியாது. இருவரோ பலரோ கூடி வீண்பேச்சுப் பேசும் போது, நகையாடி மகிழ்தற்கேனும் பிறரைப்பற்றிப் புறங்கூற்றாகப் பேச நேருமாதலின், அத் தொடர்புபற்றி இது புறங்கூறாமையின்பின் வைக்கப்பட்டது.*

**191.** பல்லார் முனியப் பயனில சொல்லுவா
னெல்லாரு மெள்ளப் படும்.

**(இ-ரை.)** பல்லார் முனியப் பயன் இல சொல்லுவான் - அறிவுடையார் பலரும் வெறுக்குமாறு வீண் சொற்களைச் சொல்பவன்; எல்லாரும் எள்ளப் படும் - எல்லாராலும் இழிவாய் எண்ணப்படுவான்.

எல்லாரும் என்று பிற்குறித்ததனால் பல்லார் என்று முற்குறித்தது, அறிவுடையாரை யென்பது உய்த்துணரப்படும். அறிவுடையார் வெறுக்கவே அவரைப் பின்பற்றி ஏனையோரும் வெறுப்பர் என்பது கருத்து. எள்ளுதல் மனத்தின் செயல்.

**192.** பயனில பல்லார்முற் சொல்ல னயனில
நட்டார்கட் செய்தலிற் றீது.

**(இ-ரை.)** பயன் இல பல்லார்முன் சொல்லல் - ஒருவன் பயனற்ற சொற்களை அறிவுடையோர் பலர்முன் சொல்லுதல்; நயன் இல நட்டார்கண் செய்தலின் தீது - விரும்பப்படாத செயல்களைத் தன் நண்பரிடத்துச் செய்தலினுந் தீயதாம்.

நயத்தல் விரும்புதல். நயம் விருப்பம். நயன் போலி. அறிவுடையோர்க்குப் பயனில் சொல்லின்மீதுள்ள வெறுப்பின் அளவைக் கூறியவாறு.

***193. நயனில னென்பது சொல்லும் பயனில***
***பாரித் துரைக்கு முரை.***

**(இ-ரை.)** பயன் இல பாரித்து உரைக்கும் உரை - ஒருவன் பயனில்லாத பொருள்களைப்பற்றி விரித்துரைக்கும் உரையே; நயன் இலன் என்பது சொல்லும் - அவன் நேர்மை (நீதி) யில்லாதவன் என்பதை அறிவிக்கும். அறிவித்தலும் பயனளவிற் சொல்லுதலை ஒக்குமாதலின் 'சொல்லும்' என்றார்.

***194. நயன்சாரா நன்மையி னீக்கும் பயன்சாராப்***
***பண்பில்சொற் பல்லா ரகத்து.***

**(இ-ரை.)** பல்லாரகத்துப் பயன் சாராப் பண்பு இல் சொல் - ஒருவன் பலரிடத்தும் பயனொடு பொருந்தாத பண்பற்ற சொற்களைச் சொல்லுதல்; நயன் சாரா நன்மையின் நீக்கும் - நேர்மையொடு பொருந்தாது அவனை நற்குணத்தினின்று நீக்கும்.

சொற்பண்புகள் ஓசையினிமை, இலக்கண வழுவின்மை, பொருள் நன்மை முதலியன. சொல்லுதல் என்பது சொல்லெச்சம். 'சாரா' இரண்டனுள் முன்னது ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம்; பின்னது ஈறுகெட்ட எதிர் மறைப் பெயரெச்சம்.

***195. சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில***
***நீர்மை யுடையார் சொலின்.***

**(இ-ரை.)** நீர்மை உடையார் பயன் இல சொலின் - இனிய தன்மையுடைய உயர்ந்தோரும் பயனற்ற சொற்களைச் சொல்வாராயின்; சீர்மை சிறப்பொடு நீங்கும் - அதனால் அவருடைய உயர்வும் அதுபற்றிய மதிப்பும் நீங்கிவிடும்.

'சொலின்' என்னும் நிலைப்பாட்டு வினையெச்சம் சொல்லாமையை உணர்த்திற்று.

*196. பயனில்சொற் பாராட்டு வானை மகனெனல்*
*மக்கட் பதடி யெனல்.*

**(இ-ரை.)** பயன் இல் சொல் பாராட்டுவானை மகன் எனல் - பயனற்ற சொற்களைப் பலகாலும் விரும்பிச் சொல்பவனை மகன் (மாந்தன்) என்று சொல்லற்க; மக்கட் பதடி எனல் - மக்களுட் பதர் என்று சொல்லுக.

அல் என்னும் வியங்கோளீறு முன்பு எதிர்மறையிலும், பின்பு உடன் பாட்டிலும் வந்தது. பதர் உள்ளீடில்லாத கூலமணி. மக்கட் பதர் அறிவாகிய உள்ளீடற்றவன் அல்லது அற்றவள்.

*197. நயனில சொல்லினுஞ் சொல்லுக சான்றோர்*
*பயனில சொல்லாமை நன்று.*

**(இ-ரை.)** சான்றோர் நயன் இல சொல்லினும் சொல்லுக - அறிவுடை யோர் நேர்மை யில்லாத சொற்களை என்றேனும் தப்பித் தவறிச் சொல்லினும் சொல்லுக; பயன் இல சொல்லாமை நன்று. ஆயின் எக்கரணியத்தை யிட்டும் பயனில்லாத சொற்களைச் சொல்லாதிருத்தலே அவர்க்கு நன்றாம்.

இது நேர்மையில்லாச் சொல்லை நெருக்கடி நிலைமையிற் சொல்ல இசைவளித்ததன்று; நேர்மையில்லாச் சொல்லினும் பயனில்லாச் சொல் தீயதென்பதை உணர்த்துவதேயாம்.

*198. அரும்பய னாயு மறிவினார் சொல்லார்*
*பெரும்பய னில்லாத சொல்.*

**(இ-ரை.)** அரும்பயன் ஆயும் அறிவினார் - அறிதற்கரிய பயன்களை ஆராயவல்ல அறிவுடையார்; பெரும்பயன் இல்லாத சொல் சொல்லார் - மிகுந்த பயனில்லாத சொற்களை ஒருபோதும் சொல்லார்.

அறிதற்கரிய பயன்களாவன நாள்கோளியக்கமும் மெய்ப்பொருளியலும் வீடுபேறும் முதலியன. பெரும்பயனில்லாத சொல்லைச் சொல்லாரெனவே, சிறு பயன் தரும் சொல்லும் அவர் வாயினின்று வாராதென்பது பெறப்படும். இதனால், அரும்பயனாராயும் அறிவினார்க்குச் சிறுபயன் சொல்லும் அறவே விலக்கப்பட்டது.

**199. பொருடீர்ந்த பொச்சாந்துஞ் சொல்லார் மருடீர்ந்த**
**மாசறு காட்சி யவர்.**

**(இ-ரை.)** மருள் தீர்ந்த மாசு அறு காட்சியவர் - மயக்கத்தினின்று நீங்கிய குற்றமற்ற அறிவுடையார்; பொருள் தீர்ந்த பொச்சாந்தும் சொல்லார் - பயனில்லாத சொற்களை மறந்துஞ் சொல்லார்.

மயக்கம் ஐயமுந் திரிபும். குற்றமற்ற அறிவு மெய்யறிவு அல்லது தூய அறிவு.

**200. சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க**
**சொல்லிற் பயனிலாச் சொல்.**

**(இ-ரை.)** சொல்லின் பயன் உடைய சொல்லுக - ஏதேனு மொன்றைச் சொல்லின் பயனுள்ள சொற்களையே சொல்லுக; சொல்லின் பயனிலாச் சொல் சொல்லற்க - சொற்களிற் பயனில்லாதவற்றைச் சொல்லாதிருக்க.

ஒரே பொருளை உடன்பாட்டிலும் எதிர்மறையிலும் கூறியது அதை வலியுறுத்தற்காதலின், கூறியது கூறலன்று. ஒரே சொல் பொருள் மாறாது திரும்பத் திரும்ப வந்தது 'சொற்பொருட் பின்வருநிலை' யணியாம்.

## அதி. 21 - தீவினையச்சம்

*அதாவது, இம்மையிலும் மறுமையிலும் துன்பம் விளைவிக்கும் தீவினைகட்கு அஞ்சி அவற்றைச் செய்யாதிருத்தல். பயனில் சொல்லையும் தீச்சொல் என விலக்கியமையால், தீவினை விலக்கப்பட்டமை சொல்லாமலே பெறப்படும். முக்கரணத்துட் சொல்லிற் கடுத்தது செயலாதலால், இது பயனில சொல்லாமையின் பின் வைக்கப்பட்டது.*

*தீச்சொல்லினும் தீச்செயல் கொடியது என்பதை வலியுறுத்தற்குத் தீவினை செய்யாமை என்னாது தீவினையச்சம் என்றார்.*

**201. தீவினையா ரஞ்சார் விழுமியா ரஞ்சுவர்**
**தீவினை யென்னுஞ் செருக்கு.**

**(இ-ரை.)** தீவினை என்னும் செருக்கு - தீவினை என்று சொல்லப்படும் இறுமாப்பிற்கு; தீவினையார் அஞ்சார் - தீவினை செய்து பழகிய தீயோர் அஞ்சார்; விழுமியார் அஞ்சுவர் - ஆயின் அதைச் செய்தறியாத சீரியார் அஞ்சுவர்.

தீவினைக்குக் கரணியமான இறுமாப்பு, தீவினை யென்னும் கருமிய மாகச் சார்த்திக் கூறப்பட்டது. அஞ்சாமை மனச்சான்றின் மழுக்கத்தாலும் அச்சம் அதன் கூர்மையாலும் ஏற்படுவனவாம்.

**202.** ***தீயவே தீய பயத்தலாற் றீயவை***
***தீயினு மஞ்சப் படும்.***

**(இ-ரை.)** தீய தீயவே பயத்தலால் - ஒருவன் தனக்கின்பங் கருதிச் செய்யும் தீவினைகள் இம்மையிலும் மறுமையிலும் துன்பங்களையே தருதலால்; தீயவை தீயினும் அஞ்சப்படும் - அத் தீவினைகள் தீயினும் மிகுதியாக அஞ்சப்படத்தக்கனவாம்.

தீயானது தொட்டவரைச் சுடினும் எரிப்பினும், சமைத்தலும் குளிர் போக்கலும் நோய் நீக்கலும் கொடுவிலங்கு விரட்டலுமாகிய நன்மை களையுஞ் செய்தலாலும்; தீவினையானது செய்த காலத்தில் மட்டுமன்றிப் பின்பு வேறொரு காலத்திலும் வேறோரிடத்திலும் வேறோருடம்பிலும் சென்று சுடுதலாலும் எவ்வகை நன்மையும் செய்யாமையாலும்; 'தீயவை தீயினும் அஞ்சப்படும்' என்றார். தீவினை நன்மை செய்யாமைபற்றியே 'தீயவே' என்னும் பாடம் இங்குக் கொள்ளப்பட்டது.

**203.** ***அறிவினு ளெல்லாந் தலையென்ப தீய***
***செறுவார்க்குஞ் செய்யா விடல்.***

**(இ-ரை.)** செறுவார்க்கும் தீய செய்யா விடல் - தம்மைப் பகைப்பவர்க்குந் தீமையானவற்றைச் செய்யாது விடுதலை; அறிவினுள் எல்லாம் தலை என்ப - அறிவுச் செயல்க ளெல்லாவற்றுள்ளும் தலையாயதென்பர் அறிவுடையோர்.

நன்மைக்கு நன்மையும் தீமைக்குத் தீமையுஞ் செய்வதே மக்களியல் பாதலால், தீமைக்கு நன்மை செய்வதை அல்லது தீமை செய்யாமையைச் சிறந்த அறிவுச் செயலென்றார். உம்மை இழிவுசிறப்பு. 'செய்யா' ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம், அறிவினால் ஒழுக்கம் பயனாதலின் ஒழுக்கம் அறிவெனப்பட்டது.

**204.** ***மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழி***
***னறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு.***

**(இ-ரை.)** பிறன்கேடு மறந்தும் சூழற்க - ஒருவன் பிறனுக்குக் கேடு செய்யும் வினையை மறந்தும் எண்ணாதிருக்க; சூழின் சூழ்ந்தவன் கேடு அறம் சூழும் - எவனேனும் எண்ணின், எண்ணினவனுக்குக் கேட்டை அறத்தெய்வமே செய்ய எண்ணும்.

தப்பாது பழிக்குப் பழிவாங்க வலிமை மிக்க அறத்தெய்வம் உடனிருத் தலால், ஒருவனுக்குத் தீங்கை எண்ணுதலும் ஆகாது என்பதாம்.

**205. இலனென்று தீயவை செய்யற்க செய்யி**
**லிலனாகும் மற்றும் பெயர்த்து.**

**(இ-ரை.)** இலன் என்று தீயவை செய்யற்க - எவனேனும் யான் பொரு ளில்லாதவன் என்று கருதி அதைப் பெறற்பொருட்டுப் பிறர்க்குத் தீமையான வற்றைச் செய்யாதிருக்க; செய்யின் பெயர்த்தும் இலன் ஆகும் - செய்வா னாயின் மீண்டும் வறியனாவான்.

தீவினையான் வந்த பொருளை விரைந்து இழந்துவிடுவானாதலின் மீண்டும் வறியனாவான் என்றார். 'இலன்' இரண்டுள், முன்னது தன்மை யொரு மைக் குறிப்பு வினைமுற்று; பின்னது படர்க்கை யாண்பாற் குறிப்பு வினை யாலணையும் பெயர். 'மற்று' அசைநிலை. உம்மை பிரித்துக் கூட்டப்பட்டது.

**206. தீப்பால தான்பிறர்கட் செய்யற்க நோய்ப்பால**
**தன்னை யடல்வேண்டா தான்.**

**(இ-ரை.)** நோய்ப்பால தன்னை அடல் வேண்டாதான் - துன்புறுத்துந் திறத்தனவாகிய குற்றங்கள் தன்னைப் பின் வந்து வருத்துதலை விரும் பாதவன்; தீப்பால தான் பிறர்கண் செய்யற்க - தீமை செய்யுந் திறத்தனவாகிய வினைகளைத் தான் பிறரிடத்துச் செய்யாதிருக்க.

தன்னலம்பற்றியேனும் பிறர்க்குத் தீமை செய்யாதிருக்க என்றவாறு.

**207. எனைப்பகை யுற்றாரு முய்வர் வினைப்பகை**
**வீயாது பின்சென் றடும்.**

**(இ-ரை.)** எனைப் பகை உற்றாரும் உய்வர் - எத்துணைப் பெரிய பகையுடையாரும் அதனின்று ஒருவகையால் தப்புவர்; வினைப்பகை வீயாது பின் சென்று அடும் - ஆயின், தீவினையாகிய பகையோ நீங்காது தொடர்ந்து சென்றவிடமெல்லாஞ் சென்று வருத்தும்.

தீவினைப் பயனுக்குத் தப்ப முடியா தென்பதாம்.

**208. தீயவை செய்தார் கெடுத னிழறன்னை**
**வீயா தடியுறைந் தற்று.**

**(இ-ரை.)** தீயவை செய்தார் கெடுதல் - பிறர்க்குத் தீமையான வற்றைச் செய்தவர் அவற்றின் விளைவால் தப்பாது கெடுதல் எதுபோன்றதெனின்; நிழல் தன்னை வீயாது அடி உறைந்த அற்று - ஒருவனது நிழல் அவன் எங்குச் செல்லினும் உடன் சென்று, இருள் வந்தவிடத்துக் கண்ணிற்கு மறையினும் மீண்டும் ஒளியில் தோன்றுமாறு, என்றும் அவனை விட்டு நீங்காது அவன் காலடியிலேயே தங்கிய தன்மையது.

மேல் 'வீயாது பின்சென் றடும்' என்றதை இங்கு உவமையால் விளக்கினார்.

**209. தன்னைத்தான் காதல னாயி னெனைத்தொன்றுந்**
**துன்னற்க தீவினைப் பால்.**

**(இ-ரை.)** தான் தன்னைக் காதலன் ஆயின் - ஒருவன் உண்மையில் தன்னைக் காதலிப்பவனாயின்; தீவினைப்பால் எனைத்து ஒன்றும் துன்னற்க - பிறர்க்குத் தீமை செய்யும் பகுதியொடு எத்துணைச் சிறிதும் பொருந்தற்க.

பிறர்க்குச் செய்த தீவினை தப்பாது தனக்குத் துன்பம் விளைத்தலால், 'தன்னைத்தான் காதலனாயின்', என்றார். காதல் என்றது அறிவோடு கூடிய காதலை. தீவினைப் பகுதியொடு பொருந்தாமை யாவது 'தீவினை செய்யா' திருத்தலே. ஒன்று என்னும் எண்ணுப் பெயர் இங்குச் சிற்றளவுப் பொருளினது.

**210. அருங்கேட னென்ப தறிக மருங்கோடித்**
**தீவினை செய்யா னெனின்.**

**(இ-ரை.)** மருங்கு ஓடித் தீவினை செய்யான் எனின் - ஒருவன் செந் நெறியினின்றும் ஒருபக்கமாக விலகிச் சென்று பிறர்க்குத் தீமை செய்யா னாயின்; அருங்கேடன் என்பது அறிக - அவன் கேடில்லாதவன் என்பதை அறிந்துகொள்க.

அருமை இங்கு இன்மை குறித்தது. அருங்கேடன் என்பது காலில் லாதவனை இல்லாக் காலன் என்றாற் போல்வது. இது செய்யுள் வழக்கு. மருங்கோடுதல் விரைந்து விலகுதல்.

## அதி. 22 - ஒப்புரவறிதல்

*அதாவது, இல்லறத்தாருட் பெருஞ் செல்வரானவர் செல்வருள் உயர்ந்தோரான வள்ளல்களைப் பின்பற்றி யொழுகுதலின்கண், "வளவ னாயினும் அளவறிந் தழித்துண்" என்ற நெறிமுறைப்படி தத்தம் அளவறிந்து அதற்கேற்ப நடந்துகொள்ளுதல். உயர்ந்தோரான வள்ளல்களை யொத் தொழுகுதலும் அவரவர் செல்வத்தின் அளவறிதலும்பற்றி ஒப்புரவறிதல் எனப்பட்டது. இது பெருஞ்செல்வர்க்குரிய உலக நடையாம்.*

***"இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்***
***அறவிலை வணிகன் ஆயலன் பிறருஞ்***
***சான்றோர் சென்ற நெறியென***
***ஆங்குப்பட் டன்றவன் கைவண் மையே"*** **(புறம். 134)**

*என்று உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் பாடியிருத்தல் காண்க.*

*தீவினைக்கு எதிரானதும் அதைப் போக்க வல்லதும் நல்வினை யாதலானும், நல்வினையிற் சிறந்தது ஈகையாதலானும், ஈகையிற் சிறந்த வகையான ஒப்புரவறிதல் தீவினையச்சத்தின் பின் வைக்கப்பட்டது. தீவினையாகிய மறத்திற்கு மாறும் மாற்றும் அறம். அறத்தின் சிறந்த வகை ஈகை. "ஈதலறம்" என்றார் ஔவையாரும்.*

**211. கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்**
**டென்னாற்றுங் கொல்லோ வுலகு.**

**(இ-ரை.)** உலகு மாரிமாட்டு என் ஆற்றும் - உலகிலுள்ள உயிர்கள் தம் வாழ்க்கைக்கு இன்றியமையாத நீரை யுதவுகின்ற முகிலுக்கு என்ன கைம்மாறு செய்கின்றன; ஒன்றுமில்லையே! கடப்பாடு கைம்மாறு வேண்டா - ஆதலால், அம் முகில் போலும் வள்ளல்கள் செய்யும் ஒப்புரவுகளும் கைம்மாறு வேண்டுவனவல்ல.

'என்னாற்றும்' என்ற வினாவிற்குரிய விடை வருவித் துரைக்கப்பட் டது. 'கடப்பாடு' என்னுஞ் சொல் பெருஞ் செல்வர் வறியார்க்குதவக் கடமைப்பட்டவர் என்பதை யுணர்த்தும். கடப்படுவது கடப்பாடு. இனி, வள்ளல்கள் தம் கடமையாக் கொண்டொழுகுவது கடப்பாடு எனினுமாம்.

"பாரி பாரி யென்றுபல வேத்தி
யொருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி யொருவனு மல்லன்
மாரியு முண்டீண் டுலகுபுரப் பதுவே" (புறம். 107)

என்னுங் கபிலர் பாட்டு இங்குக் கவனிக்கத்தக்கது. செய்வாரது வேண்டாமை அவர் செயலின்மேல் ஏற்றப்பட்டது. 'கொல்', 'ஓ' இரண்டும் அசைநிலைகள்.

**212. தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு**
**வேளாண்மை செய்தற் பொருட்டு.**

**(இ-ரை.)** தாள் ஆற்றித் தந்த பொருள் எல்லாம் - ஒப்புரவாளன் முயற்சி செய்து தொகுத்த செல்வம் முழுவதும்; தக்கார்க்கு வேளாண்மை செய்தற் பொருட்டு - தகுதியுடையார்க்குப் பல்வகையிலும் உதவி செய்தற்பொருட்டே யாம்.

இதனால், இடைவிடாது முயற்சி செய்து மேன்மேலும் பொருளீட்டாது இருந்துண்ணும் சோம்பேறித்தனமும், தகுதியில்லாதவர்க்குச் செய்யும் தவறான வேளாண்மையும் விலக்கப்பட்டன. "குந்தித் தின்றாற் குன்றுங் குன்றும்" ஆதலின், ஒப்புரவாளனுக்கு இடைவிடா முயற்சி வேண்டுமென் பதாம். பொருளுள்ளவரும் தமிழைக் கெடுப்பவரும் தகுதியற்றவராவர். ஒப்புரவாளன் என்னும் எழுவாய் அதிகாரத்தால் வந்தது.

**213. புத்தே ளுலகத்து மீண்டும் பெறலரிதே**
**யொப்புரவி னல்ல பிற.**

**(இ-ரை.)** ஒப்புரவின் நல்ல - ஒப்புரவு போன்ற நல்ல செயல்களை; புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல் - தேவருலகத்திலும் இவ் வுலகத்திலும் பெறுதல்; அரிதே - அரிதேயாம்.

அரிது என்னும் சொல், தேவருலகத்தை நோக்கின் இன்மைப் பொருளும், இவ் வுலகத்தை நோக்கின் அருமைப் பொருளும் தருவதாம். ஏனெனின், தேவருலகத்தில் ஈவாரும் ஏற்பாருமின்றி எல்லாரும் ஒருதன்மையர். இவ்வுலகத்தில் ஒப்புரவு செய்வார் விரல்விட் டெண்ணவும் வேண்டாத ஒருசிலரே. ஏகாரம் தேற்றம். 'பிற' அசைநிலை.

**214. ஒத்த தறிவா னுயிர்வாழ்வான் மற்றையான்**
**செத்தாருள் வைக்கப் படும்.**

**(இ-ரை.)** ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான் - ஒப்புரவு செய்வானும் செய்யாதானுமாகிய இருவகைச் செல்வருள், செய்பவனே உயிரோடு கூடி வாழ்பவனாவன்; மற்றையான் செத்தாருள் வைக்கப்படும் - மற்றச் செய்யாதவன் செத்தாருள் ஒருவனாகக் கருதப்படுவான்.

உயிருக்குரிய அறிவுஞ் செயலுமின்மையின், நடைப்பிணமென்றுங் கருதப்படாது பிணமென்றே இழித்திடப்படுவான் என்றார்.

**215. ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்**
**பேரறி வாளன் றிரு.**

**(இ-ரை.)** உலகு அவாம் பேரறிவாளன் திரு - உலகிலுள்ள உயிர்களை யெல்லாம் விரும்பி ஒப்புரவு செய்யும் பேரறிவுடையான் செல்வம்; ஊருணி நீர் நிறைந்த அற்றே - ஊர்வாழ்நரின் குடிநீர்க் குளம் நிரம்பினாற் போன்றதே.

பாரி முல்லைக்குத் தேரும், பேகன் மயிலுக்குப் போர்வையும் உதவிய செயல்கள், ஒப்புரவாளர் அஃறிணை யுயிர்களையும் விரும்புவதை அறிவிக்கும். ஊருண்பது ஊருணி. இது பாண்டிநாட்டு வழக்கு. இல்லற நிலையிலேயே இருதிணை யுயிர்களிடத்தும் அன்பு செய்பவனைப் பேரறிவாளன் என்றார். ஊருணி என்ற உவமத்தால் மாபெருஞ் செல்வம் என்பதும், ஒப்புரவாளன் வாழுங் காலமெல்லாம் எல்லார்க்கும் என்றும் எளிதில் உதவும் என்பதும் பெறப்படும். நீர்நிறைதல் ஒருசொற் றன்மையது. ஏகாரம் தேற்றம்.

**216. பயன்மர முள்ளூர்ப் பழுத்தற்றாற் செல்வ**
**நயனுடை யான்கட் படின்.**

**(இ-ரை.)** செல்வம் நயன் உடையான்கண் படின் - செல்வம் ஒப்புரவு செய்யும் நேர்மையாளனிடம் சேருமாயின்; பயன் மரம் உள்ளூர்ப் பழுத்த அற்று - அது பயன்படும் மரம் ஊர் நடுவே பழுத்தாற் போலும்.

ஒப்புரவு நேர்மை மிக்க செயலாதலின் அதை நயன் என்றார். நச்சு மரத்தை விலக்கப் பயன்மரம் என்றார். ஊருள் என்பது உள்ளூர் என முறை மாறியது இலக்கணப் போலி. 'ஆல்' அசைநிலை.

**217. மருந்தாகித் தப்பா மரத்தற்றாற் செல்வம்**
**பெருந்தகை யான்கட் படின்.**

**(இ-ரை.)** செல்வம் பெருந்தகையான்கண் படின் - செல்வம் ஒப்புரவு செய்யும் பெருந்தகையாளனிடம் சேரின்; மருந்து ஆகித் தப்பா மரத்து அற்று - அது வேர்முதல் கொழுந்துவரை எல்லா வுறுப்பும் பல்வேறு நோய்க்கு மருந்தாகித் தப்பாது பயன்படும் மரத்தையொக்கும்.

மரத்தை மருந்தென்றமையால் அதன் உறுப்புகளெல்லாம் மருந் தாதல் அறியப்படும். சில மருந்துகள் சிலருடம்பிற்கு ஏற்காமையானும் சிறிது காலம் பொறுத்து ஆற்றல் கெடுதலானும், எல்லார்க்கும் என்றும் தப்பாது குணந்தரும் என்பதை யுணர்த்தத் 'தப்பா மரம்' என்றார்.

மேற்கூறிய மூவே றுவமங்களுள் ஊருணியென்பது எல்லார்க்கும் பயன்படும் செல்வத்தையும், பழுமரம் என்பது பலர்க்குப் பயன்படும் செல் வத்தையும், மருந்துமரம் என்பது சிலர்க்குப் பயன்படும் செல்வத்தையும் குறிக்குமென்று கொள்ள இடமுண்டு. இங்ஙனம் பயனளவில் வேறுபடுவது செல்வத்தின் அளவையும் ஒப்புரவாளரின் குறிக்கோளையும் பொறுத்த தாகும். 'ஆல்' அசைநிலை.

**218. இடனில் பருவத்து மொப்புரவிற் கொல்கார்**
**கடனறி காட்சி யவர்.**

**(இ-ரை.)** கடன் அறி காட்சியவர் - கடப்பாட்டை யறிந்த அறிவுடை யார்; இடன் இல் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார் - தம் செல்வம் சுருங்கிய காலத்தும் ஒப்புரவு செய்தற்குத் தளரார்.

வடார்க்காட்டு மாவட்டத்தைச் சேர்ந்த செண்டத்தூர் ஐயாத்துரை முதலியார் என்னும் வள்ளல், தம் செல்வம் சுருங்கிய காலத்தும் ஓரிலக்கம் உருபா கடன்கொண்டு ஒப்புரவாற்றியது, இதற்கோ ரெடுத்துக்காட்டாம்.

**219. நயனுடையா னல்கூர்ந்தா னாதல் செயுநீர**
**செய்யா தமைகலா வாறு.**

**(இ-ரை.)** நயன் உடையான் நல்கூர்ந்தான் ஆதல் - ஒப்புரவாளன வறியவனாதலாவது; செயும் நீர செய்யாது அமைகலா ஆறு - தவிராது செய்யுந்

தன்மையவான வேளாண்மைச் செயல்களைச் செய்யவியலாது அமைதி யற்றிருக்கும் நிலைமையே.

அமைதியற்றிருக்கும் நிலைமையாவது வருந்துதல். ஒப்புரவு செய்ய வியலாதவாறு செல்வம் அற்றவிடத்து, பிறரை நுகர்வியாமைபற்றியே யன்றித் தான் நுகராமைபற்றி வருந்துவதில்லை யென்பதாம்.

**220. *ஒப்புரவி னால்வருங் கேடெனி னஃதொருவன்***
***விற்றுக்கோட் டக்க துடைத்து.***

**(இ-ரை.)** ஒப்புரவினால் கேடும் வரும் எனின் - ஒப்புரவினால் ஒரு வனுக்குப் பொருட்கேடு வருமாயின்; அஃது ஒருவன் விற்றுக்கோள் தக்கது உடைத்து - அக் கேடு ஒருவன் தன்னை விற்றாகிலுங் கொள்ளத்தக்க தகுதியை யுடையதாம்.

ஒப்புரவினால் வருங் கேடு, ஒருவராலும் பழிக்கப்படாமல் இவ் வுலகிற் புகழும் மறுமைக்கு அறமும் விளைத்தலால், ஒரு சிறந்த பேறே யன்றி இழப்பன்று என்பதாம். அப் பேற்றின் சிறப்பை மிகுத்துக் காட்டற்கே தன்னை விற்றுங் கொள்ளத்தக்க தென்றார்.

"களங்கனி யன்ன கருங்கோட்டுச் சீறியாழ்ப்
பாடின் பனுவற் பாண ருய்த்தெனக்
களிறில வாகிய புல்லரை நெடுவெளிற்
கான மஞ்ஞை கணனொடு சேப்ப
ஈகை யரிய இழையணி மகளிரொடு
சாயின் றென்ப ஆஅய் கோயில்
சுவைக்கினி தாகிய குய்யுடை யடிசில்
பிறர்க்கீ வின்றித் தம்வயி றருத்தி
உரைசா லோங்குபுக ழொரீஇய
முரைசுகெழு செல்வர் நகர்போ லாதே" (புறம். 127)

என்னும் ஆய்வள்ளல் ஒப்புரவினால் அடைந்த பொருட்கேட்டைத் தெரி விப்பதாம்.

## அதி. 23 - ஈகை

*அதாவது, செல்வர் வறியோரான இல்லார்க் கீதலும் இரப்போர்க் கிடுதலுமாம். மூவகையான ஈதல்வகையுள், ஒப்புரவு முன்னர்க் கூறப்பட்ட*

*மையால் அடுத்த இரண்டையுந் தழுவும் ஈகை அதன்பின் இங்கு வைக்கப் பட்டது.*

*இல்லார் புலவர் உறவினர் முதலியோர்; இரப்போர் குருடர் முடவர் முதலியோர்.*

**221. வறியார்க்கொன் றீவதே யீகைமற் றெல்லாங்**
**குறியெதிர்ப்பை நீர துடைத்து.**

**(இ-ரை.)** வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை - பொருளில்லாதவரும் திருப்பிச் செய்ய இயலாதவருமான ஏழையர்க்கு அவர் வேண்டிய தொன் றைக் கொடுப்பதே ஈகை என்னும் அறச்செயலாம்; மற்று எல்லாம் குறி யெதிர்ப்பை நீரது உடைத்து - மற்றக் கைம்மாறு கருதிய கொடுப்பெல்லாம் அளவுகுறித்துக் கடன் கொடுக்கும் தன்மையதாம்.

குறியெதிர்ப்பையாவது அளவு குறித்துக் கொடுத்து அவ்வளவில் திரும்பப் பெறுங் கடன். நீரது என்பதில் அது என்பது முதனிலைப் பொரு ளீறு. "ஈயென் கிளவி இழிந்தோன் கூற்றே" (128) என்னும் தொல்காப்பிய நெறிப் படி, ஈகை என்னும் சொல் சிறப்பாகத் தாழ்ந்தோர்க்கு ஈதலைக் குறிக்கும்.

**222. நல்லா றெனினுங் கொளறீது மேலுலக**
**மில்லெனினு மீதலே நன்று.**

**(இ-ரை.)** கொளல் நல் ஆறு எனினும் தீது - பிறரிடத்தினின்று வாங்குவது வீட்டுலகத்திற்கு நல்வழியென்று அறநூல் கூறினும் வாங்குவது தீயது; மேல் உலகம் இல் எனினும் ஈதலே நன்று - பிறருக்குக் கொடுப்பதால் அவ் வுலகத்தை அடைய முடியாதென்று அந் நூல் கூறினும், கொடுத்தலே நல்லது.

உம்மை ஈரிடத்தும் எதிர்மறை. கொடுத்தல், தருதல் என்னும் சொற் களினும் ஈதல் என்னும் சொல்லே இவ் வதிகாரத்திற்கு ஏற்றதாம்.

**223. இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்**
**குலனுடையான் கண்ணே யுள.**

**(இ-ரை.)** இலன் என்னும் எவ்வம் உரையாமை - யான் ஏழையென்று இரப்போன் சொல்லும் இழிவுரையைத் தான் பிறனிடத்துச் சொல்லாமையும்;

ஈதல் - அவ் விரப்போன் வேண்டிய தொன்றை இல்லையென்னாது அவ னுக்கு ஈதலும்; குலன் உடையான் கண்ணே உள - ஆகிய இரண்டும் உயர் குடிப் பிறந்தான்கண்ணே உள்ளன.

எவ்வம் துன்பம். அது இங்குத் துன்பந்தரும் இழிவுரையைக் குறித்தது.

இனி, 'இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்' என்னும் தொடருக் குப் பின்வருமாறும் உரைகள் கூறப் பெறும்:

1. யான் பொருளில்லாதவன் என்று இரப்போன் தன் இளிவரவைச் சொல்லுமுன் அவன் குறிப்பறிந்து கொடுத்தல்.
2. அவ் விழிவுரையைப் பின்னும் இன்னொருவனிடம் சென்று உரையா வண்ணம் அவ் விரப்போனுக்கு நிரம்பக் கொடுத்தல்.
3. இல்லத்தான் என்னிடம் இப்பொழுது பொருளில்லையென்று ஈயாதார் சொல்லும் இழிவுரையைச் சொல்லாது கொடுத்தல்.

இம் மூவுரையும் எளிதாய்ப் பொருந்துவன. இனி, வலிந்து பொருத்தும் வேறு மூவுரையுமுள. அவை வருமாறு:

1. அவ் விரப்போனை ஒன்றுமில்லாதவனென்று பிறர் இழித்துரையா வண்ணம் கொடுத்தல்.
2. அவ் விரப்போனுக்கு மறுத்த இல்லறத்தான் அதுபற்றிப் பின்பு வறியனானபின், தானும்.
3. அவனை யிரந்தோனும் பிறரும் இலனென்னும் இளிவரவு கூறா வண்ணங் கொடுத்தல்.

இவ் வுரைகட்கெல்லாம் 'ஈதல்' என்பது 131ஆம் குறளிலுள்ள 'சொலல்' என்பது போலப் பண்மையாம். இக் குறளால், உயர்குடிப் பிறந்தோன் ஈகையாளனே யன்றிப் பிராமணனல்லன் என்பது பெறப்பட்டது.

**224.** ***இன்னா திரக்கப் படுத லிரந்தவ***
***ரின்முகங் காணு மளவு.***

**(இ-ரை.)** இரந்தவர் இன்முகங் காணும் அளவு - ஒரு பொருளை இரந்தவர் அதைப் பெற்றதினால் மலரும் அவரது இனிய முகத்தைக் காணு

மளவும்; இரக்கப்படுதல் இன்னாது - இரத்தலேயன்றி இரக்கப்படுதலும் குடிப்பிறந்தானுக்குத் துன்பந்தருவதாம்.

படுதலும் என்னும் எச்சவும்மையும் அளவும் என்னும் முற்றும்மையுந் தொக்கன. இன்முகங் காணுமளவுந் துன்பமென்றதனால், இரந்த பொருள்களை யெல்லாம் ஈதல் வேண்டுமென்பது பெறப்பட்டது. ஆயினும், தன் மானத்திற்கு இழுக்கு நேராவாறு என்னும் வரையறை பகுத்தறிவாற் கொள்ளப்பெறும்.

**225. *ஆற்றுவா ராற்றல் பசியாற்றல் லப்பசியை***
***மாற்றுவா ராற்றலிற் பின்.***

(இ-ரை.) ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் - தவத்தால் வலிமை யடைந் தாரது வலிமையெல்லாம் தம்மை வருத்தும் பசியைப் பொறுத்துக்கொள்ளு தலே; அப் பசியை மாற்றுவார் ஆற்றலின்பின் - அவ் வலிமையும் அப் பொறுத்தற்கரிய பசியை ஈகையால் ஒழிப்பவரது வலிமைக்குப் பிற்பட்டதே.

தம் பசியையே மாற்ற மாட்டாதவரது வலிமையினும், தம் பசியையும் பிறர் பசியையும் ஒருங்கே மாற்றுவாரது வலிமை சிறந்த தென்பதாம்.

"யான்வாழு நாளும் பண்ணன் வாழிய
பாணர் காண்கிவன் கடும்பின திடும்பை
யாணர்ப் பழுமரம் புள்ளிமிழ்ந் தன்ன
வூணொலி யரவந் தானுங் கேட்கும்
பொய்யா வெழிலி பெய்விட நோக்கி
முட்டை கொண்டு வற்புலஞ் சேருஞ்
சிறுநுண் ணெறும்பின் சில்லொழுக் கேய்ப்பச்
சோறுடைக் கையர் வீறுவீ றியங்கு
மிருங்கிளைச் சிறாஅர்க் காண்டுங் கண்டு
மற்று மற்றும் வினவுதுந் தெற்றெனப்
பசிப்பிணி மருத்துவன் இல்லம்
அணித்தோ சேய்த்தோ கூறுமின் எமக்கே" (புறம். 473)

என்று சிறுகுடிகிழான் பண்ணனின் பசியாற்ற லறத்தைச் சோழன் குளமுற் றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் சிறப்பித்துப் பாடி யிருத்தல் காண்க.

**226.** *அற்றா ரழிபசி தீர்த்த லஃதொருவன்*
*பெற்றான் பொருள்வைப் புழி.*

**(இ-ரை.)** அற்றார் அழிபசி தீர்த்தல் - வறியவரின் கடும்பசியைத் தீர்க்க; அஃது ஒருவன் பொருள் வைப்புழி பெற்றான் - அவ்வறச் செயலால் ஒருவன் தான் தேடிய செல்வத்தை மறுமையில் தனக்குப் பயன்படுமாறு சேமித்து வைக்கும் ஏம வைப்பகத்தைப் (Savings Bank) பெற்றானாவன்.

கொல்வது போல வருத்துவதனாலும், குடிப்பிறப்பு கல்வி மானம் அறிவுடைமை முதலிய பேறுகளையும் பண்புகளையும் அழிப்பதனாலும், கடும்பசி 'அழிபசி' யெனப்பட்டது. வறியவரின் பசியைத் தீர்த்தற்குச் செல விட்ட பொருள் பின்பு தனக்கே வந்துதவுதலால், அருள்நோக்கிச் செய்யா விடினும் தனக்குப் பயன்படும் அறம்நோக்கியேனும் அதைச் செய்க என்றவாறு.

'தீர்த்தல்' தல்லீற்று வியங்கோள், பெற்றான் என்பது தேற்றம்பற்றிய காலவழுவமைதி. அஃதொருவன் என்பது அதுவொருவன் என்றும் இருக் கலாம். அடுத்த அதிகார முதற் குறளில் 'வாழ்த லதுவல்லது' என வருதல் காண்க.

**227.** *பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னுந்*
*தீப்பிணி தீண்ட லரிது.*

**(இ-ரை.)** பாத்து ஊண் மரீஇ யவனை - எப்போதும் பலரொடும் பகிர்ந்துண்டு பயின்றவனை; பசி என்னும் தீப்பிணி தீண்டல் அரிது - பசியென்று சொல்லப்படும் கொடிய நோய் தாக்குதலில்லை.

நாள்தோறும் வந்து வருத்துவதாலும், நல்லார் வல்லாருட்பட எல்லா ரையுந் தாக்குவதாலும், எம்மருந்தாலும் அறவே நீக்கப்படாமையாலும், பிற நோய்கள் அழிக்காதவற்றையும் அழித்து மறுமையிலுந் துன்புற வழிகோலு வதாலும், பசி தீப்பிணி யெனப்பட்டது. "இறைக்க ஊறும் மணற்கேணி; ஈயப் பெருகும் பெருஞ்செல்வம்." ஆதலின், பாத்துண்டு பயின்றவனைப் பசிப்பிணி தீண்டுவதில்லை. தீண்டுவதுமில்லை யெனவே வருத்தாமையைச் சொல்ல வேண்டுவதில்லை. 'மரீஇ' (மருவி) சொல்லிசை யளபெடை. அரிது என்பது இங்கு இன்மைப் பொருளது.

**228.** *ஈத்துவக்கு மின்ப மறியார்கொ றாமுடைமை*
*வைத்திழக்கும் வன்க ணவர்.*

**(இ-ரை.)** தாம் உடைமை வைத்து இழக்கும் வன்கணவர் - தாம் உடைய பொருளை ஈயாது வைத்திருந்து பின்பு கள்வராலும் கொள்ளைக்காரராலும் இழக்கும் கன்னெஞ்சர்; ஈத்து உவக்கும் இன்பம் அறியார் கொல் - வறியார்க்கு வேண்டியவற்றைக் கொடுத்து மகிழும் இன்பத்தை அறியாரோ?

அறிந்தாராயின், தாம் வைத்திழந்து வருந்தாது வறியார்க்கீந்து மகிழ்ந்து மறுமையிலும் இன்புறுவர் என்பது கருத்து. 'கொல்' ஐயம்.

**229. இரத்தலி னின்னாது மன்ற நிரப்பிய**
**தாமே தமிய ருணல்.**

**(இ-ரை.)** நிரப்பிய தாமே தமியர் உணல் - தாம் ஈட்டக் கருதிய பொருட் குறையை நிரப்பவேண்டி வறியார்க்கொன் றீயாது தாமே தமித்துண்டல்; மன்ற - திண்ணமாக; இரத்தலின் இன்னாது - இரத்தலினும் தீயதாம்.

ஆசைக்கோ ரளவில்லை யாதலின், ஈயாத கஞ்சர் மேன்மேலும் பொருளீட்டற் பொருட்டு இடைவிடாது உடலையும் உள்ளத்தையும் வருத்தி, எத்துணைப் பொருளீட்டினும் எள்ளளவும் பொந்திகை (திருப்தி) யின்மை யால் உண்மையிற் செல்வராயினும் உள்ளத்தில் வறியராய், இன்பமும் அறப் பயனும் ஒருங்கே தரும் பாத்துண்டலின்றி நடைப்பிணமாய் உழல்வதினும்: ஆசையுங் கவலையுமில்லாத இரப்போர் உடல் வருத்தமின்றித் தாம் பெற் றதைக் கொண்டு மகிழ்வதோடு, தாம் இரப்பெடுத்ததையும் பகிர்ந்துண்ணும் வாழ்க்கை மேலாதலின்; 'இரத்தலி னின்னாது' என்றார். 'மன்ற' தேற்றப்பொரு ளிடைச்சொல். 'நிரப்பிய' செய்பிய என்னும் வாய்பாட்டு எதிர்கால வினையெச்சம்.

**230. சாதலி னின்னாத தில்லை யினிததூஉ**
**மீத லியையாக் கடை.**

**(இ-ரை.)** சாதலின் இன்னாதது இல்லை - ஒருவனுக்கு இறத்தலைப் போலத் துன்பந் தருவது வேறொன்றுமில்லை; அதுவும் ஈதல் இயையாக் கடை இனிது - அவ் விறப்பும் வறியார்க்கொன்றீதல் இயலாவிடத்து இன்பந் தருவதாம்.

ஈகையாளனுக்கு இறப்புத் துன்பத்தினும் ஈயாத்துன்பம் பெரியதும் பொறுத்தற்கரியது மாதலின், சாதல் அவனுக்கு இனிதென்றார். இது வெளிப் படை. இனி, ஈயாத கஞ்சர் உலகத்திலிருத்தல் தகாது என்பது குறிப்பு. "ஈயாத

புல்ல ரிருந்தென்ன போயென்ன எட்டிமரம். காயா திருந்தென்ன காய்த்துப் பயனென்ன" என்று படிக்காசுப் புலவரும் பாடியமை காண்க. 'இனிததூஉம்' இன்னிசை யளபெடை.

## அதி. 24 - புகழ்

*அதாவது, ஒருவர்க்கு உலகமுள்ள அளவும் அழியாது நிற்குங் கீர்த்தி. இது ஈகையால் நிகழ்வதால் அதன்பின் வைக்கப்பட்டது.*

**231. ஈத லிசைபட வாழ்த லதுவல்ல**
**ஊதிய மில்லை யுயிர்க்கு.**

**(இ-ரை.)** ஈதல் - வறியார்க்கு வேண்டியவற்றை இயன்றவரை ஈக; இசைபட வாழ்தல் - அதனாற் புகழுண்டாக வாழ்க; அது அல்லது உயிர்க்கு ஊதியம் இல்லை - அப் புகழன்றி மக்களுக்கு இவ் வுலகத்திற் பெறக்கூடிய நிலையான பேறு வேறு ஒன்றுமில்லை.

இடத்தில் வறியார்க்கு நிலமும், கருவியில் வறியார்க்குப் பொறியும், நலத்தில் வறியார்க்கு மருந்தும், அறிவில் வறியார்க்கு நூலும், காப்பில் வறியார்க்குப் பாதுகாப்பும் அளிப்பதும் ஈதல் வகைகளேயாயினும்,

"உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே
உண்டி முதற்றே யுணவின் பிண்டம்" (புறம். 18)

என்று குடபுலவியனாரும்,

"உடம்பா ரழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்" (திருமந். 724)

என்று திருமூலரும் கூறுவதால், பொருளில் வறியார்க்கு, உணவேனும் அதற்குரிய பொருளேனும் ஈதலே முன்மையும்(priority) முதன்மையும் பெறுவதாம். 'ஈதல்', 'வாழ்தல்' இரண்டும் தல்லீற்று வியங்கோள். ஈதல் வேறுயிரினங்கட்கு இன்மையின், இங்கு உயிரென்றது மக்களுயிரை.

**232. உரைப்பா ருரைப்பவை யெல்லா மிரப்பார்க்கொன்**
**றீவார்மே னிற்கும் புகழ்.**

**(இ-ரை.)** உரைப்பார் உரைப்பவை எல்லாம் - உலகத்தில் ஒருவரைப் பற்றிச் சிறப்பாகச் சொல்பவர் சொல்வதெல்லாம்; இரப்பார்க்கு ஒன்று ஈவார்மேல் நிற்கும் புகழ் - வறுமையால் இரப்பவர்க்கு அவர் வேண்டிய தொன்றை ஈவார்மேல் நிற்கும் புகழே.

உரைத்தல் உரைநடையுஞ் செய்யுளுமாகிய இருவடிவிலும் நிகழு மாதலின், இங்கு உரைத்தலென்பது அவ் விருவடிவிற்கும் பொதுவாம். மேற்குறளிற் குறிப்பாகச் சொன்ன ஈதல்வகை இங்கு வெளிப்படையாகக் கூறப்பட்டது.

**233.** *ஒன்றா வுலகத் துயர்ந்த புகழல்லாற்*
*பொன்றாது நிற்பதொன் றில்.*

**(இ-ரை.)** ஒன்றா உயர்ந்த புகழ் அல்லால் - தனக்கு இணையில்லாத வாறு உயர்ந்த புகழல்லாமல்; உலகத்துப் பொன்றாது நிற்பது ஒன்று இல் - இவ் வுலகத்து அழியாது நிற்பது வேறொன்றும் இல்லை.

ஓர் உயிரைக் காத்தற்கு உணவும் பொருளும் மட்டுமன்றி உறுப்பும் உடம்பும் உதவ நேருமாதலின், இணையின்றி 'யுயர்ந்த புகழ்' என்றார். ஒன்றா என்பது ஒன்றாக என்பதன் ஈறு தொகல்.

**234.** *நிலவரை நீள்புக ழாற்றிற் புலவரைப்*
*போற்றாது புத்தே ளுலகு.*

**(இ-ரை.)** நிலவரை நீள்புகழ் ஆற்றின் - ஒருவன் ஈகையால் நிலவுல கத்தின்கண் நிலையான புகழைச் செய்வானாயின்; புத்தேள் உலகு புலவரைப் போற்றாது - தேவருலகம் அவனையன்றி அறிவால்மட்டுஞ் சிறந்தவரை விரும்பாது. இக் கொள்கையை,

"புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்
வலவ னேவா வான வூர்தி
யெய்துப வென்பதஞ் செய்வினை முடித்தெனக்
கேட்ப லெந்தை சேட்சென்னி நலங்கிள்ளி
…………
வருந்தி வந்தோர் மருங்கு நோக்கி
யருள வல்லை யாகுமதி யருளிலா

கொடாமை வல்ல ராகுக
கெடாத துப்பினின் பகையெதிந் தோரே" (புறம். 27)

என்னும் புறப்பாட்டுப் பகுதியாலும் அறிக. இதனால் வேள்வி செய்தவர் விண்ணுல கடைவர் என்னும் ஆரியக் கொள்கை மறுக்கப்பட்டமை காண்க.

**235. நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்**
**வித்தகர்க் கல்லா லரிது.**

**(இ-ரை.)** நத்தம் போல் கேடும் - புகழுடம்பின் கரு வளர்ச்சியடைவதுபோல் (முழுவளர்ச்சியுற்ற) பூதவுடம்பு தளர்ச்சியடைவதும்; உளது ஆகும் சாக்காடும் - அப் புகழுடம்பின் பிறப்பாகிய பூதவுடம்பின் இறப்பும்; வித்தகர்க்கு அல்லால் அரிது - திறப்பாடுடையவர்க்கன்றி ஆகாவாம்.

பொதுவாக, ஒருவன் வாழ்க்கைப் பொறுப்பேற்ற பின்பே புகழுக் கேற்ற ஈகை வினைகளையும் தொண்டுகளையுஞ் செய்ய முடியும். அதற்குள் அவன் உடம்பு முழு வளர்ச்சி யடைந்திருக்கும். புகழ்த்தொண்டி லீடுபட்டுக் காலஞ் செல்லச் செல்ல, மூப்பினால் உடம்பு தளர்ந்து வருகின்றது. இறுதியில் சாக்காடு நேர்கின்றது. அதுவரை பொதுநலத் தொண்டைத் தொடர்ந்து செய்து வந்ததினால், புகழும் படிப்படியாக வளர்ந்து அவன் சாக்காட்டுச் சமையத்தில் முழுவளர்ச்சி யடைந்து, பூதவுடம்பு மறைந்தபின் தானே விளங்கித் தோன்றுகின்றது.

புகழை ஓர் உடம்பாக உருவகிப்பது இலக்கிய மரபு. பூதவுடம்பு தாய் வயிற்றிற் கருவாகத் தொடங்கிப் படிப்படியாக வளர்ந்து பத்தாம் மாதம் முழுவளர்ச்சி யடைந்து குழவியாகப் பிறக்கின்றது. இந் நிலைமையைப் புகழுடம்பிற்கும் பொருத்திக் கூறியுள்ளார் ஆசிரியர் வள்ளுவனார். தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன் பொதுநல ஊழியத்தைத் தொடங்கும்போது, புகழுடம்பு கருக்கொள்கின்றது. ஊழியம் நீட நீடப் புகழுடம்பு வளர்கின்றது, பூதவுடம்பு தளர்கின்றது. சாக்காட்டிற் புகழுடம்பு பிறக்கின்றது; பூதவுடம்பு இறக்கின்றது. இதையே 'நத்தம்போற் கேடும் உளதாகும் சாக்காடும்' என்றார். போல் என்பது வளர்ச்சிக்கும் தளர்ச்சிக்கும் ஒப்புமை கூறிய உவமையுருபு. இது குழவி வளர்ந்தது போலக் கிழவி தளர்ந்தாள் என்பது போன்றது. ஆதலால், போல் என்பது பரிமேலழகர் கூறுவதுபோல் உரையசையன்று. நந்துதல் வளர்தல். நத்தம் வளர்ச்சி; முதனிலை வலித்து ஈறுபெற்ற தொழிற்பெயர். 'அம்'

முதனிலைப் பொருளீறு (பகுதிப்பொருள் விகுதி) அன்று. வாழ்நாள் முழுதும் பொதுநலத் தொண்டாற்றுவது திறப்பாடான செயலே.

**236. தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்**
**தோன்றலிற் றோன்றாமை நன்று.**

**(இ-ரை.)** தோன்றின் புகழொடு தோன்றுக - ஒருவர் இவ் வுலகத்திற் பிறக்கின் புகழ்க் கேதுவான குணத்தொடு பிறக்க; அஃது இலார் தோன்றலின் தோன்றாமை நன்று - அக் குணமில்லாதார் பிறத்தலைவிடப் பிறவா திருத்தலே நல்லது.

பிறத்தலும் பிறவாமையும் இறைவன் ஏற்பாட்டின்படி அல்லது ஊழின் அமைப்புப்படியே நிகழ்வதால், அவை பிறப்பவரின் உணர்ச்சியொடு கூடியனவும் விருப்பிற்கு அடங்கியனவுமல்ல. ஆதலால், இங்குத் 'தோன்றுக', 'தோன்றற்க' என்று கூறியதெல்லாம், புகழுக் கேற்ற நல்வினை செய்வானைப் பாராட்டியதும் அது செய்யாதானைப் பழித்ததுமேயன்றி வேறல்ல என அறிக. புகழ் என்பது இங்கு ஆகுபொருளது.

**237. புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை**
**யிகழ்வாரை நோவ தெவன்.**

**(இ-ரை.)** புகழ்பட வாழாதார் - தமக்குப் புகழுண்டாக வாழாதவர்; தம் நோவார் - அதுபற்றிப் பிறர் தம்மை யிகழ்ந்தவிடத்து அதற்குக் கரணியமான தம்மையே நொந்துகொள்ளாது; தம்மை இகழ்வாரை நோவது எவன் - தம்மை யிகழ்ந்தவரை நோவது எதற்கு?

புகழ்பட வாழாமையின் தீய விளைவு இங்குக் கூறப்பட்டது.

**238. வசையென்ப வையத்தார்க் கெல்லா மிசையென்னு**
**மெச்சம் பெறாஅ விடின்.**

**(இ-ரை.)** இசை என்னும் எச்சம் பெறா விடின் - ஒருவன் புகழைத் தனக்குப் பின் நிறுத்தாவிடின்; வையத்தார்க்கு எல்லாம் வசை என்ப - அது உலகத்திலுள்ள மக்கட்கெல்லாம் பழிப்பாகுமென்று கூறுவர் நல்லோர்.

புகழ் மக்களைப் போல எஞ்சி நிற்பது என்னுங் கருத்துப்பட 'எச்சம் பெறாஅ விடின்' என்றார். மக்களெல்லாரும் ஓரினத்தாராதலானும், புகழ்பட வாழ்தலே உயர்திணைப் பண்பாதலானும், ஒருவன் பழி அவன் இனத்தை

யும் சாரும் என்னும் நெறிமுறைபற்றி வையத்தார்க் கெல்லாம் வசை யென்றார். 'பெறாஅ' இசைநிறை யளபெடை.

## 239. வசையிலா வண்பயன் குன்று மிசையிலா
யாக்கை பொறுத்த நிலம்.

**(இ-ரை.)** இசை இலா யாக்கை பொறுத்த நிலம் - புகழைச் செய்யாத வுடம்பைச் சுமந்த நிலம்; வசை இலா வண்பயன் குன்றும் - பழிப்பில்லாத வளமுள்ள விளைச்சல் குறையும்.

உயிரோடு கூடியிருந்தும் அதனாற் பயன் பெறாமையின் 'யாக்கை' என்றார். மக்களின் தன்மைக் கேற்ப அவர் வாழும் நிலமுமிருக்கும் என்பது,

"எவ்வழி நல்லவ ராடவ
ரவ்வழி நல்லை வாழிய நிலனே" (புறம். 187)

என்னும் ஒளவையார் கூற்றானும் அறியப்படும். இனி, உடம்பு பெரும்பாலும் நிலத்தின் கூறாதலின், தன்னைப்போற் பயன்படாத தன் கூற்றைச் சுமப்பது தனக்கிழி வென்னும் வெறுப்பினால் நிலம் தன் வளங்குன்றும் எனவும் ஒரு கருத்துத் தோன்ற நின்றது. பயன் குன்றும் என்பது பயன்படும் என்பது போல ஒருசொற் றன்மைப்பட்டதாகும்.

## 240. வசையொழிய வாழ்வாரே வாழ்வா ரிசையொழிய
வாழ்வாரே வாழா தவர்.

**(இ-ரை.)** வசை ஒழிய வாழ்வாரே வாழ்வார் - தமக்குப் பழிப்பில்லாமல் வாழ்பவரே உயிர் வாழ்பவராவர்; இசை ஒழிய வாழ்வாரே வாழாதவர் - புகழின்றி வாழ்பவரே உயிரோடிருந்தும் இறந்தவராவர்.

இனி, புகழொடு வாழ்பவரே சிறப்பாகவும் செழிப்பாகவும் வாழ்பவராவர்; அஃதிலார் இழிவாகவும் வறுமையிலுங் காலங் கழிப்பார் போன்றவரே என்று உரைகூறினும் அமையும். கூறும் பொருள் வலியுறற்பொருட்டு உடன்பாட்டு வடிவிலும் எதிர்மறை வடிவிலுங் கூறினார்.

இதனால் இல்லற வாழ்க்கையின் சிறந்த இம்மைப் பயன் புகழே என்பது கூறப்பட்டது. இதைக் குறித்தற்கே இவ் வதிகாரமும் இல்லறவியலின் இறுதியில் வைக்கப்பட்டது. இக் குறளும் இவ் வதிகாரத்தின் இறுதியதாயிற்று.

இல்லற வாழ்க்கையின் பொதுவான மறுமைப் பயன் விண்ணுலக வின்பம் என்பது, ஏற்கெனவே 50ஆம் 58ஆம் 75ஆம் 234ஆம் குறள்களில் கூறப்பட்டுள்ளது. இனி,

"அறத்தாற்றின் இல்வாழ்க்கை யாற்றின் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன்", (46)

"இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாரு ளெல்லாந் தலை", (47)

"ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை யுடைத்து", (48)

"அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை", (49)

"துறந்தாரின் தூய்மை யுடையர் இறந்தார்வாய்
இன்னாச்சொல் நோற்கிற் பவர்", (156)

"உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்
இன்னாச்சொல் நோற்பாரின் பின்" (160)

"ஆற்றுவா ராற்றல் பசியாற்றல் அப்பசியை
மாற்றுவா ராற்றலின் பின்" (225)

என்று வள்ளுவரே கூறியிருப்பதனாலும், அன்புடைமை முதல், ஈகைவரை கூறப்பட்டுள்ள பதினாறறங்களையும் கடைப்பிடித்தல் துறவறத்திற் கொப் பான தூய்மையைத் தருமாதலானும்,

"மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்", (3)

"பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்" (4)

என்பன இல்லறம் துறவறம் என்னும் இருவகை யறத்திற்கும் பொதுவாகவே இருத்தலானும், இல்லறத்தினின்றும் இறைவன் திருவடியடைந்த பலர் வரலாறுகள் கூறப்படுதலானும், வழிபாடு, ஒழுக்கம், தொண்டு, ஈகம் (தியாகம்) என்னும் நால் வாயிலால் இல்லறத்தாரும் வீட்டை யடையலாம் என்பதே வள்ளுவர் கூறும் தமிழறச் சிறப்பாம். இதனால், துறவறத்தால்மட்டும் வீடு

பேறுண்டா மென்பது ஆரியக் கொள்கையே என அறிக. அது அன்பிற்கும் தொண்டிற்கும் தப்பிக்கொள்ளும் சூழ்ச்சியே யன்றி வேறன்று.

இனி, நல்வினையுந் தீவினைபோற் பிறவிக் கேதுவா மென்றும் அதனால் இருவினையும் முறையே பொன்விலங்கும் இருப்புவிலங்கும் போலாமென்றும், கொண்முடிபு (சித்தாந்த) நூல்கள் கூறுவதும் பிற்காலக் கொள்கையே யென்று தெரிகின்றது. நல்வினையுந் தீவினையுங் கலந்து செய்தவனே நல்வினைப் பயனைத் தேவருலகத்திலும் தீவினைப் பயனைத் தீயுழியிலும் நுகர்ந்து மாறிமாறிப் பிறப்பானென்பதும், தீவினையின்றி நல் வினையே செய்தவன் இறைவன் திருவருளாற் பேரின்ப வீட்டைப் பெறு தலுங் கூடுமென்பதுமே, பண்டைத் தமிழர் கொள்கையாம். இதை,

"செய்குவங் கொல்லோ நல்வினை யெனவே
ஐய மறாஅர் கசடீண்டு காட்சி
நீங்கா நெஞ்சத்துத் துணிவில் லோரே
யானை வேட்டுவன் யானையும் பெறுமே
குறும்பூழ் வேட்டுவன் வறுங்கையும் வருமே
அதனால், உயர்ந்த வேட்டத் துயர்ந்திசி னோர்க்குச்
செய்வினை மருங்கி னெய்த லுண்டெனின்
தொய்யா வுலகத்து நுகர்ச்சியுங் கூடும்
தொய்யா வுலகத்து நுகர்ச்சி யில்லெனின்
மாறிப் பிறப்பி னின்மையும் கூடும்
மாறிப் பிறவா ராயினு மிமயத்துக்
கோடுயர்ந் தன்ன தம்மிசை நட்டுத்
தீதில் யாக்கை மாய்தறவத் தலையே" (புறம். 214)

என்னுங் கோப்பெருஞ் சோழன் பாட்டாலும் இளையான்குடி மாற நாயனார் வரலாற்றாலும் அறிக.

*இல்லறவியல் முற்றிற்று.*

த. சத்தியராஜ் (நேயக்கோ)
முனைவா பட்ட ஆய்வாளர்,
இந்திய மொழிகள் பள்ளி,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்-613 010.

③

# துறவறவியல்

இல்லற வின்பத்தைத் துய்த்தறியாதும் துய்த்தும் உலக வாழ்க்கையில் அல்லது பிறவித் துன்பத்தில் வெறுப்பும் வீடுபேற்றில் அல்லது பேரின்பத் துய்ப்பில் வேட்கையுங் கொண்டு, மாணிய (பிரமசரியப் பருவத்திலேனும் மனையற நிலையிலேனும் முறியன் (தபுதாரன்) நிலையிலேனும் மூப்பி லேனும் துறவு பூண்டு அதற்குரிய அறங்களைக் கடைப்பிடித்து, நான் எனது என்னும் இருவகைப் பற்றையும் விட்டுப் பிறவியினின்று விடுதலை பெறு தலைக் கூறும் சிறு பகுதி, துறவறவியல் எனப்பட்டது.

இல்லறத்தாலும் வீடுபேறுண்டாமேனும், அதற்குரிய பொறுப்பு மிகுதி யாதலானும், அது ஆசை வளர்தற்கு இடந்தரலானும், அப் பொறுப்பைத் தாங்கவும் ஆசையை அடக்கவும் ஆற்றலில்லார் தனிவாழ்க்கையை விரும்பித் துறவறத்தை மேற்கொள்வர் என அறிக.

துறவறத்திற் குரியனவாகத் திருக்குறளிற் சொல்லப்பட்டுள்ள அறங் கள் அருளுடைமை, புலால் மறுத்தல், கூடா ஒழுக்கம், கள்ளாமை, வாய்மை, வெகுளாமை, இன்னா செய்யாமை, கொல்லாமை, துறவு, அவாவறுத்தல் என்பனவாம்; பயிற்சிகள் தவம், மெய்யுணர்தல் என்பனவாம். இவையெல் லாம் அருள், தவம், துறவு, ஓகம் (யோகம்) என்னும் நான்கனுள் அடங்கும் ஆதலால் இவற்றை நால்வாயில் எனலாம்.

அருளுடைமை, புலால் மறுத்தல், கள்ளாமை, வாய்மை, வெகுளாமை, இன்னா செய்யாமை, கொல்லாமை என்னும் அறங்களும் தவம் என்னும் பயிற்சியும், இல்லறத்திற்கும் ஏற்குமேனும்; அவற்றை முற்றக் கைக்கொள் வதும் நெடுகக் கடைப்பிடிப்பதும் இல்லறத்தில் இயலாமையின், அவை துறவறத்திற்கே முற்றளவாக வுரியனவும் இன்றியமையாதனவுமாகக் கொள்ளப்பட்டன.

ஊர்காவலர் மாறுகோலம் பூண்டு மறைவாகச் சென்று குற்றவாளி யரைப் பிடிப்பதும், ஒற்றர் வேறு கோலத்திற் சென்று பகைவர் நிலைமை

யையும் மருமங்களையும் அறிவதும், அரசன் உருமாறிச் சென்று நகர நோட்டம் செய்வதும், காதலர் தொடக்க நிலையில் மறைவாக ஒழுகுவதும், தற்கொலை செய்யத் துணிந்த ஒருவர் உண்ண வைத்திருந்த நஞ்சை மறைவாக நீக்குவதும், அரசியலிலும் இல்வாழ்க்கையிலும் குற்றமாகாத களவு வினைகளாம்.

போரிற் பகைவரையும் செங்கோலாட்சியிற் கொலைஞரையும் கொல்வது, அரசனுக்குக் கடமை மட்டுமன்றி அறவினையுமாம்.

இங்ஙனமே ஏனையவற்றையும் உணர்ந்து கொள்க.

நீண்ட காலமாகப் பிள்ளைப் பேறில்லாத கணவன் மனைவியர் இறைவனை நோக்கித் தவங்கிடப்பினும், வாழ்நாள் முழுதும் அதைத் தொடர்வது மரபன்மை காண்க. இதை,

"மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
என்னோற்றான் கொல்லெனுஞ் சொல்" (70)

என்னும் குறளை நோக்கி யுணர்க.

தமிழர் வாழ்க்கைமுறை இல்லறம் துறவறம் என இருவகைப்பட்டதே. இல்லறம் போன்றே துறவறமும் எல்லார்க்கும் பொதுவாம். அதற்குப் பருவ வரம்போ அகவை வரம்போ இல்லை. ஆயின், ஆடவனாயினும் பெண்டிராயினும் தனியாகவே அல்லது தன் பாலார் இருக்குமிடத்திலேயே தங்கல் வேண்டும். ஆரியர் மனைவியோடு கூடி மேற்கொள்ளும் காடுறைவு (வானப் பிரத்தம்) என்னும் மூன்றாம் நிலையும், தம்மை முனிவர் என்று கூறிக் கொண்டே இல்லற இன்பத்தை நுகர்ந்து மனைவி மக்களொடு கூடி வாழும் வீடுறைவும், தமிழரும் திரவிடருமான பழங்குடி மக்களை ஏமாற்றித் தாம் என்றும் இன்பமாய் வாழ வகுத்த சூழ்ச்சியாதலால், கூடாவொழுக்கத்தின் பாற்பட்ட போலித் துறவே யென வுணர்க.

இனி, வீடுபேறு இறைவனை வழிபட்டு அவன் திருவருளாலேயே அடையக் கூடியதாயிருப்பதால், கடவுட் கொள்கையில்லா மதத்தினர் துறவறம் ஒழுகுவதும் பயனில் முயற்சியும், அவர் வீடு பெறுவது கானல்நீர் குடிப்பதும் ஆகும். (கானல் - பேய்த்தேர்).

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்" (குறள். 10)

என்று திருவள்ளுவரும்,

"ஈதலறந் தீவினைவிட் டீட்டல் பொருளென்றும்
காத லிருவர் கருத்தொருமித் – தாதரவு
பட்டதே யின்பம் பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு"

என்று ஔவையாருங் கூறியிருத்தல் காண்க.

இனி, கடவுட்கொள்கை யுடையாரும் செல்வத் தொடர்பு கொண்டவ ராயின் துறவியராகார்.

"மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க
லுற்றார்க் குடம்பு மிகை." (குறள். 345)

செல்வத் தொடர்பால் ஊட்டம் மிகும். அது கூடாவொழுக்கத்திற்குத் தூண்டும். அதனால் ஒரு பற்றுந் துறக்க முடியாது. ஆசையும் அறாது மிகும். கூடாவொழுக்க மின்றேனும், செல்வத் தொடர்பினர் மணமிலியர் Celibates) அல்லது மணத் துறவியரே யன்றி முழுத் துறவியராகார். ஆதலால் அடியார் அல்லது நாயனார் என்றே அழைக்கப்படற்குரியர். இனி மண வெறுப் பாளரும் Misogamists), பெண்வெறுப்பாளரும் (Misogynists) உளர்.

முற்றத் துறந்தவரே துறவியர் என்றும், முனிவர் என்றும், அடிகள் என்றும் சொல்லப்படத் தக்கவர்.

செல்வத் தொடர்பிருந்தும் சிறிதும் பற்றின்றிச் செல்வத்தைத் திருத் தொண்டிற்கும் பொதுநலத்திற்கும் பயன்படுத்தி, தவத்திருக் குன்றக்குடி யடிகள் போல் இடையறாது எழுத்தாலும் சொல்லாலும் மக்கட்கு அறிவுறுத்தி வரும் துறவியர் ஒருசிலரே.

துவராடை யணிந்து இரந்து பிழைப்பவர் ஆண்டியரே யன்றித் துறவியராகார்.

வீடுபேறு தீவினை யொன்றுமின்றி நல்வினையே செய்யும் இல்லறத் தாலும், கண்ணப்ப நாயனார் கண்ணப்பியது போன்ற சிறப்புப் பத்திவினை யாலும், துறவறத்தினாலும் கிட்டுவதாம். அவற்றுள் இறுதியது இனி இங்குக் கூறப்பெறும்.

## அதி. 25 - அருளுடைமை

*அதாவது, தொடர்பு கருதாது அறுவகைப்பட்ட எல்லா வுயிர்களிடத்தும் ஒப்பக் கொள்ளும் இரக்கம். இல்லறத்திற்கு அன்புடைமைபோல் துறவறத்திற்கு அருளுடைமை அடிப்படை யறமாம். அதனால் இது முதற் கண் கூறப்பட்டது. இதனால், அன்பு போன்றே அடைக்குந் தாழின்றிச் செயலாக வெளிப்படும் அருளறம் வீடுபேற்றிற்கு இன்றியமையாத தென் பதும், அறிவுமட்டும் போதா தென்பதும் பெறப்படும்.*

**241. அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்**
**பூரியார் கண்ணு முள.**

**(இ-ரை.)** செல்வத்துள் செல்வம் அருள் செல்வம் - செல்வங்களெல்லா வற்றுள்ளுஞ் சிறந்தது அருளாகிய செல்வமே; பொருள் செல்வம் பூரியார் கண்ணும் உள - மற்றப் பொருளாகிய செல்வங்கள் கீழ்மக்களிடத்திலும் உள்ளன.

செல்வம் போன்ற பண்பைச் செல்வ மென்றார். உம்மை இழிவுசிறப்பு.

**242. நல்லாற்றா னாடி யருளாள்க பல்லாற்றாற்**
**றேரினு மஃதே துணை.**

**(இ-ரை.)** நல் ஆற்றான் நாடி அருள் ஆள்க - உத்திக்குப் பொருத்த மான நல்ல அளவைகளால் ஆராய்ந்து பார்த்து அருளை மேற்கொள்க; பல் ஆற்றால் தேரினும் அஃதே துணை - பல்வேறு சமயநெறிகளால் ஆராய்ந்தாலும் இறுதியில் அவ் வருளே துணையாக முடியும்.

**காட்சி, கருத்து, ஒப்பு, உரை, இன்மை, எதிர்நிலை** (அருத்தாபத்தி), **சார்பு**(இயல்பு), **உலகுரை, ஒழிபு, உண்மை** என அளவைகள் மொத்தம் பத்தென்பர். அவை யாவும் முதல் நான்கனுள் அடங்கும். அன்பின் முதிர்ச்சி யாகிய அருள் எல்லார்க்கும் ஒப்ப முடிந்த அறப்பண் பாதலானும், இம்மை மறுமை வீடாகிய மும்மைக்கும் உதவுதலானும், அஃதே துணை என்றார். உத்தியாவது பகுத்தறிவிற்குப் பொருந்து முறை. உத்தல் = பொருந்துதல். உத்தி யென்பது வடமொழியில் யுக்தி எனத் திரியும்.

**243. அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை யிருள்சேர்ந்த**
**வின்னா வுலகம் புகல்.**

(இ-ரை.) இருள் சேர்ந்த இன்னா உலகம் புகல் - இருள் திணிந்த துன்பவுலகமாகிய நரகத்துட் புகுதல்; அருள் சேர்ந்த நெஞ்சினார்க்கு இல்லை - அருள் நிறைந்த நெஞ்சையுடைய துறவியருக்கில்லை.

தீயுழியும் அளறும் போல இருளுலகமும் நரக வகையாம்.

***244. மன்னுயி ரோம்பி யருளாள்வாற் கில்லென்ப***
***தன்னுயி ரஞ்சும் வினை.***

(இ-ரை.) மன் உயிர் ஓம்பி அருள் ஆள்வாற்கு - மற்ற உயிர்களை யெல்லாம் பேணி அவற்றினிடத்து அருள் பூண்பவனுக்கு; தன் உயிர் அஞ்சும் வினை இல் என்ப - தன்னுயிர் அஞ்சுவதற் கேதுவான தீவினைகள் இரா என்று கூறுவர் அறிந்தோர்.

"தன்னுயிர் போல் மன்னுயிரையும் எண்ண வேண்டும்" என்னும் பழமொழியில், மன் என்னுஞ் சொல் மற்ற என்று பொருள்படுதலால், அதை யொத்த இவ்விடத்தும் அப் பொருள் உரைக்கப்பட்டது. அஞ்சும் வினை தன்னதாகவும் பிறரதாகவு மிருக்கலாம். தன் வினையாயின் மறுமைத் துன்பமும் பிறர் வினையாயின் இம்மைத் துன்பமும் நோக்கிய அச்சமாகும். உயர்ந்த அருளறம் பூண்டோன் தீவினை செய்யான் என்பதும், அவனால் அருள் செய்யப் பெற்றவனும் நன்மைக்குத் தீமை செய்யான் என்பதும் கருத்து.

***245. அல்ல லருளாள்வார்க் கில்லை வளிவழங்கு***
***மல்லன்மா ஞாலங் கரி.***

(இ-ரை.) அருள் ஆள்வார்க்கு அல்லல் இல்லை - அருள் பூண்டவர்க்கு இம்மையிலும் ஒரு துன்பமுமில்லை; வளி வழங்கும் மல்லல் மா ஞாலம் கரி - இதற்குக் காற்று இயங்குகின்ற வளமுள்ள பெரிய மாநிலத் திலுள்ள மக்களெல்லாரும் சான்றாளராவர்.

அருளுடையார் துன்பப்பட்டதை ஒருவரும் கண்டறியாமையின், எல்லாருஞ் சான்றாளராவர் என்றார். ஞாலத்தார் சான்றாளரெனவே, இம்மை யிலென்பது பெறப்பட்டது. 'ஞாலம்' இடவாகுபெயர். ஞாலத்தின் மேற் பரப்பிற் காற்று வழங்காத இடமே யின்மையால், ஞாலம் முழுவதையுங் குறிக்க 'வளி வழங்கும்' என்னும் அடை கொடுத்தார் என்று கொள்ளலாம்.

இனி, அனந்தநாத நயினார் சமணச்சார்பாக இக் குறட்குக் கூறும் உரை வருமாறு:

"அருளாள்வார்க்கு - அருளையுடையவருக்கு, அல்லல் - துன்பம்., இல்லை - எப்போதுமில்லை, (அதற்கு) வளி - (கனோகதி, கனவாத, தனுவாத மென்னும் மூன்று) மகா காற்றுகளால் சூழப்பெற்று, மல்லல் - வலிபொருந்தி, வழங்கும் - நிலைபெற்றிருக்கும், மா - பெரிய, ஞாலம் - உலகம், கரி - சாக்ஷி" என்பதாம்.

"இதன் கருத்து; வலிபொருந்திய மூன்று மகா காற்றுகளின் ஆதாரங் களால் நிலைபெற்றிருக்கும் உலகத்திற்கு அபாய மில்லாததுபோல, அருளை ஆளுகின்றவருக்கு யாதொரு துன்பமுமில்லை என்பதாம்." - திருக்குறள் ஆராய்ச்சியும் ஜைந சமய சித்தாந்த விளக்கமும், பக். 43 - 4.

"வளிமிகின் வலியு மில்லை" (புறம். 51) என்று ஐயூர் முடவனார் பாடி யிருப்பதனால், சமணச் சார்பின்றியும் இத்தகைய வுரை கூறலாமென அறிக.

**246. பொருணீங்கிப் பொச்சாந்தா ரென்ப ரருணீங்கி**
**யல்லவை செய்தொழுகு வார்.**

**(இ-ரை.)** அருள் நீங்கி அல்லவை செய்து ஒழுகுவார் - உயிர்களிடத்து அருள் செய்யாது அதற்கு மாறான கொடுமைகளைச் செய்து ஒழுகுபவர்; பொருள் நீங்கிப் பொச்சாந்தார் என்பர் - முற்பிறப்பில் அறமாகிய உறுதிப் பொருளைத் தேடாது இப் பிறப்பிலும் அதை மறந்தவர் என்பர் அறிவுடையோர்.

**247. அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க்**
**கிவ்வுலக மில்லாகி யாங்கு.**

**(இ-ரை.)** பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல் ஆகிய ஆங்கு - பொருட்செல்வம் இல்லாதவர்க்கு இவ்வுலக வின்பம் இல்லாததுபோல; அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை - அருட்செல்வம் இல்லாதவர்க்கு வீட்டுலக இன்பமில்லை.

அவ்வுலகம் இவ்வுலகம் என்பன சேய்மையும் அண்மையும் வந்த பெயர்கள். உலகம் என்பது ஈரிடத்தும் ஆகுபெயர்.

**248. பொருளற்றார் பூப்ப ரொருகா லருளற்றா**
**ரற்றார்மற் றாத லரிது.**

**(இ-ரை.)** பொருள் அற்றார் ஒருகால் பூப்பர் - ஏதேனும் ஒருவகையிற் செல்வத்தை யிழந்தவர், முயற்சியால் மீண்டும் ஒருகால் அதைப் பெற்றுப் பொலிவடைவர்; அருள் அற்றார் மற்று ஆதல் அரிது - ஆயின், அருட் பண்பை யிழந்தவரோ ஒரேயடியாய் அழிந்தவராவர்; பின்பு ஒருகாலும் ஆக்கம் பெறார்.

செல்வத்தை யிழந்தவர் மீண்டும் செல்வம் பெற்று இவ்வுலக இன் பத்தை நுகரலாம்; ஆயின் அருளைக் கைவிட்டவர் மறுமையில் வீட்டின்பம் நுகர்வதற்கு மீண்டும் இம்மையில் முயற்சி செய்ய முடியாது என்பது கருத்து. 'மற்று' பின்மைப் பொருளது.

**249.** ***தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றாற் றேரி***
***னருளாதான் செய்யு மறம்.***

**(இ-ரை.)** அருளாதான் செய்யும் அறம் தேரின் - உயிர்களிடத்து அருள் செய்யாதவன் செய்யும் அறத்தின் தன்மையை ஆராயின்; தெருளாதான் மெய்ப்பொருள் கண்ட அற்று - தெளிந்த அறிவில்லாதவன் மெய்ப்பொருள் உணர்ந்தாற்போலும்.

தெளிந்த அறிவில்லாதவன் மெய்ப்பொரு ளுணரமுடியாது. அது போல் அருளில்லாதவன் அறஞ்செய்ய முடியாது என்பது கருத்து. மெய்ப் பொருள் (தத்துவம்) என்பது, என்றும் நுண்வடிவாகவேனும் பருவடிவாக வேனும் மறைந்தோ வெளிப்பட்டோ அழியாதிருக்கும் தனிப் பொருள் அல்லது அத்தகைய பொருட்டொகுதி. இல்லறங்கட்கு அன்புபோல் துறவறங் கட்கு அருள் மூலம் என்பது கூறப்பட்டது. 'ஆல்' அசைநிலை.

**250.** ***வலியார்முன் றன்னை நினைக்க தான்றன்னின்***
***மெலியார்மேற் செல்லு மிடத்து.***

**(இ-ரை.)** தான் தன்னின் மெலியார்மேல் செல்லுமிடத்து - ஒருவன் அருளில்லாமையால் தன்னினும் எளியவரை வருத்துமாறு அவர்மேற் செல்லும் பொழுது; வலியார் முன் தன்னை நினைக்க - தன்னினும் வலியவர் தன்னை வருத்த வரும்போது தான் அவர் முன் அஞ்சி நிற்கும் நிலையை நினைக்க.

தலைமைபற்றி 'வலியார்', 'மெலியார்' என உயர்திணைமேல் வைத்துக் கூறியது அஃறிணையையுந் தழுவும். தன் குற்றந் தனக்குத் தோன்றாதாகலின்,

அது தோன்றுமாறும் அதனால் அருள் பிறக்குமாறும் ஒரு வழி சொல்லப் பட்டது.

## அதி. 26 - புலான்மறுத்தல்

*அதாவது, அருளுடைமைக்கு மாறானதும் முரட்டுக் குணத்தை உண்டாக்குவதுமான ஊனுணவைத் தவிர்த்தல். ஊனுணவு உயிர்க்கொலை யால் வருவதாலும் கொலைவினை துறவறத்திற்கு மாறானதாதலாலும் கொலையைத் தவிர்க்கக்கூடிய குணம் அருளுடைமையே யாதலாலும், இது அதன்பின் வைக்கப்பட்டது.*

**251. தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பா**
**னெங்ஙன மாளு மருள்.**

**(இ-ரை.)** தன் ஊன் பெருக்கற்குத் தான் பிறிது ஊன் உண்பான் - தன் உடம்பைப் பெரிதாக்குவதற்காகத் தான் வேறோர் உயிரின் உடம்பைக் கொன்று தின்பவன்; எங்ஙனம் அருள் ஆளும் - எங்ஙனந்தான் அருளைக் கையாள்பவன் ஆவன்.

உடம்பைப் பருக்க வைத்தற்குக் கொலையில்லாத உணவு நிரம்ப விருத்தலானும், உடம்பை எங்ஙனம் பேணினும் அது அழிந்து போவதாத லானும், ஊனுணவு பெறுதற்கு ஓர் உயிரை எள்ளளவும் இரக்கமின்றிக் கொல்ல வேண்டியிருத்தலானும், குற்றமற்ற வுயிரிகளை மேன்மேலுங் கொல்வது கொடுமையினுங் கொடுமையாதலானும், 'எங்ஙனம் ஆளும் அருள்' என் றார். ஆளவே ஆளான் என்பது விடை. உயிருள்ளது உயிரி (பிராணி).

**252. பொருளாட்சி போற்றாதார்க் கில்லை யருளாட்சி**
**யாங்கில்லை யூன்றின் பவர்க்கு.**

**(இ-ரை.)** பொருள் ஆட்சி போற்றாதார்க்கு இல்லை - பொருளைக் கையாளுதல் அதைப் பாதுகாவாதார்க்கு இல்லை; ஆங்கு அருள் ஆட்சி ஊன் தின்பவர்க்கு இல்லை - அதுபோல அருளைக் கையாளுதல் ஊன் உண்பவர்க்கு இல்லை.

ஊனுண்பவர்க்கு அருளில்லை யென்பது இங்கு முடிந்த முடிபாகக் கூறப்பட்டது. இம் முடிவிற்கு முந்தின குறள் ஏதுவாம்.

**253. படைகொண்டார் நெஞ்சம்போ னன்றூக்கா தொன்ற**
**னுடல்சுவை யுண்டார் மனம்.**

**(இ-ரை.)** படை கொண்டார் நெஞ்சம் போல் - பகைவரைக் கொல் வதற்குக் கொலைக்கருவியைக் கையிற் கொண்டவரின் மனம் அதனாற் செய்யுங் கொலையை யன்றி அருளை நோக்காதது போல; ஒன்றன் உடல் சுவை உண்டார் மனம் நன்று ஊக்காது - ஓர் உயிரியின் உடலைச் சுவையாக வுண்டவர் மனம் அவ் வூனையன்றி அருளை நோக்காது.

ஊன் சுவையாயிருத்தல் காயச் சரக்கை மட்டுமன்றி உயிரியின் இனத் தையும் பொறுத்ததாம். ஊனுண்பார்க்கு அருளின்மை உவமை வாயிலாகவும் காட்டப்பட்டது.

கதறினும் தொண்டை கீளக் கத்தினும் புள்ளும் மாவும்
பதறினும் நெஞ்ச மெல்லாம் பக்கமுந் தலையுங் காலும்
உதறினும் அங்கு மிங்கும் ஒடினும் அரத்தம் பீறிச்
சிதறினும் இரக்கங் கொள்ளார் சிதைத்துடல் சுவைக்க வுண்டார்.

என்னும் செய்யுள் இங்கு நினைவுகூரத்தக்கது.

**254. அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்**
**பொருளல்ல தவ்வூன் றினல்.**

**(இ-ரை.)** அருள் யாது எனின் கொல்லாமை - அருள் என்பது என்னது எனின் கொல்லாமை; அல்லது (யாது எனின்) கோறல் - அருளல்லாதது எதுவெனின் கொல்லுதல்; அவ் ஊன் தினல் பொருள் அல்லது - ஆதலால், அக் கொல்லுதலால் வந்த ஊனைத் தின்பது கரிசு (பாவம்).

கொல்லாமை, கோறல் ஆகிய கருமகங்களை (காரியங்களை) அருள் அல்லது எனக் கரணகங்களாக (காரணங்களாக)க் கூறியது சார்ச்சி (உபசார) வழக்கு. அறமும் பொருளெனப்படுவதால் அறமல்லாத கரிசைப் பொரு ளல்லது என்றார். அவ் வூன் என்ற சேய்மைச் சுட்டு முன்னின்ற கோறலைத் தழுவியது. மணக்குடவர் முதலடியை நிரனிறையாகப் பகுக்காது ஆற் றொழுக்காகக் கொண்டு "அருளல்லது யாதெனின் கொல்லாமையைச் சிதைத்தல்" என்று பொருள் கூறுவர்.

**255. உண்ணாமை யுள்ள துயிர்நிலை யூனுண்ண**
**வண்ணாத்தல் செய்யா தளறு.**

**(இ-ரை.)** உயிர்நிலை ஊன் உண்ணாமை உள்ளது - ஒருசார் உயிரிகள் உடம்பொடு கூடி நிற்றல் ஊனுண்ணாமையாகிய அறத்தால் நேர்வது; ஊன் உண்ண அளறு அண்ணாத்தல் செய்யாது - ஆதலால், ஒருவன் ஊனுண் பானாயின், அவனை விழுங்கிய நரகம் பின்பு அவனை வெளிப்படுத்தற்கு வாய் திறவாது.

உண்ணப்படும் உயிரிவகைகள் வரவரத் தொகை குறைந்து வருவத னாலும், சில காட்டுயிரிகள் நாளடைவில் அற்றும் போவதனாலும், 'உண் ணாமையுள்ள துயிர்நிலை' என்றார். உயிர்களெல்லாம் நிற்றியம் என்பது கொள்கையாதலின், உண்ணப்படும் உயிரிகள் குறையின் உண்ணப்படா வுயிரிகள் கூடும் என்பதாம். ஊனுண்டவன் நீண்ட காலம் நரகத்தில் துன் புறுவான் என்பது 'அண்ணாத்தல் செய்யா தளறு' என்பதன் கருத்தாம். ஊன் என்பது முன்னும் பின்னுஞ் சென்றிசைதலின் தாப்பிசைப் பொருள்கோளும் இடைநிலை விளக்கணியுமாகும். நிற்றியம் - நித்ய(வ.).

**256. *தினற்பொருட் டாற் கொல்லா துலகெனின் யாரும்***
***விலைப்பொருட் டா லூன்றருவா ரில்.***

**(இ-ரை.)** தினற்பொருட்டு உலகு கொல்லாது எனின் - பேதைமை அல்லது குறும்புத்தனம்பற்றி யல்லது ஊன் தின்பதற்காக உலகத்தார் உயிரி களைக் கொல்லாரெனின்; யாரும் விலைப்பொருட்டு ஊன் தருவார் இல் - பொருள் பெறும் நோக்கத்தோடு ஊன் விற்பவரும் ஒருவரும் இரார்.

ஊன் தின்பதற்காக ஓர் உயிரியைக் கொன்றால், அக் கொலைக்குற்றம் அதைக் கொன்றவனைச் சாருமே யன்றி அதன் ஊனைத் தின்றவரைச் சாராது என்னும் புத்த சமய வுறழியை (வாதியை) நோக்கிக் கூறிய கூற்றாகும் இது. விலைக்கு வாங்கி யுண்பாரும் வீட்டிற் கொன்று உண்பாரும் ஆக ஊனுண்பார் இருதிறத்தார். குற்றத்தைப் பொறுத்த அளவில் இவ் விருதிறத்தாரும் ஒருதிறத்தாரே. ஒருவன் ஓர் உண்ணப்படும் உயிரியைக் கொல்வதற்கு அதன் ஊனுண்பவரும் நேர்வகையிலும் நேரல்லா வகையிலும் தூண்டுபவராயிருத் தலால், அக் கொலைக்குற்றம் கொன்றானையும் தின்றாரையும் ஒக்கச் சாரும் என்பது வள்ளுவர் கருத்தாகும். உலகம் என்பது இங்குப் பெரும்பான்மை பற்றிய ஆகுபெயர். 'ஆல்' ஈரிடத்தும் அசைநிலை.

**257. *உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்***
***புண்ண துணர்வார்ப் பெறின்.***

**(இ-ரை.)** புலால் பிறிது ஒன்றன் புண் - புலால் என்பது வேறோர் உடம்பின் புண்ணே; அது உணர்வார்ப் பெறின் உண்ணாமை வேண்டும் - அவ்வுண்மையை அறியப் பெறின் அதை உண்ணாதிருத்தல் வேண்டும்.

உண்மையை உணர்தலாவது நோய்ப்பட்டதென்றும் துப்புரவற்றதென்றும் அருவருப்பானதென்றும் அறிதல். அங்ஙனம் அறியின் உண்ணாரென்பது கருத்து. 'புலாஅல்' இசை நிறையளபெடை. அது வுணர்வார் என்பதின் வகர வுடம்படுமெய் தொக்கது.

**258.** ***செயிரிற் றலைப்பிரிந்த காட்சியா ருண்ணா***
***ருயிரிற் றலைப்பிரிந்த வூன்.***

**(இ-ரை.)** செயிரின் தலைப்பிரிந்த காட்சியார் - மயக்கம் என்னும் குற்றத்தினின்று நீங்கிய தெள்ளறிவினர்; உயிரின் தலைப்பிரிந்த ஊன் உண்ணார் - ஓர் உயிரினின்று நீ ்கிய வுடம்பை உண்ணார்.

உயிரினின்று நீங்கியது பிணமென்று உணர்தலின் உண்ணாரென்றார். 'தலைப்பிரிதல்' என்பது ஒருசொற் றன்மைப்பட்ட கூட்டுச்சொல். மயக்கம் ஐயமுந் திரிபும்.

**259.** ***அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்ற***
***னுயிர்செகுத் துண்ணாமை நன்று.***

**(இ-ரை.)** அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின் - தீயின்கண் நெய் முதலிய வுணவுகளைச் சொரிந்து ஆயிரம் வேள்வி வேட்டலினும்; ஒன்றன் உயிர் செகுத்து உண்ணாமை நன்று - ஒரு விலங்கின் உயிரைப் போக்கி அதன் உடம்பைத் தின்னாமை நன்றாம்.

ஆரிய வேள்விகள் கொலைவேள்விக ளாதலானும், ஆயிரம் வேள்விப் பயனினும் ஒருயிரியைக் கொல்லாமையின் பயன் பெரியதென்றமையானும், அவை விலக்கப்பட்டனவாம்.

பாட வேறுபாடு.

**அவிசொரிந் தாயிரம் வேட்டலன் றொன்றன்**
**உயிர்செகுத் துண்ணாமை நன்று.**

இப் பாடம், அவிசொரிந்து ஆயிரம் வேட்டலன்று; ஒன்றன் உயிர் செகுத்துண்ணாமையே நன்று என்று பொருள் தருதல் காண்க. இதில் ஏகாரம் தொக்கது.

**260. கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி**
**யெல்லா வுயிருந் தொழும்.**

**(இ-ரை.)** கொல்லான் புலாலை மறுத்தானை - ஒருயிரையுங் கொல்லாதவனாய்ப் புலாலையும் உண்ணாதவனை; எல்லா உயிரும் கைகூப்பித் தொழும் - எல்லா மக்களும் கைகுவித்து வணங்குவர்.

கொல்லாதவன் புலாலுண்பவனாகவும் புலாலுண்ணாதவன் கொல்பவனாகவும் இருக்கலா மாதலால், அவற்றாற் பயனின்மை கருதி ஈரறங்களையும் உடன் கூறினார். கைகூப்பித் தொழுதல் மற்ற வுயிர்கட் கியையாமையின் மக்களுயிர் எனக் கொள்ளப்பட்டது. உயிர் என்பது சொல்லால் அஃறிணை யாதலின், பல்லோர் படர்க்கையிற் செல்லாச் செய்யுமென்னும் முற்று இங்குச் செல்வதாயிற்று. ஈரறங்களையுங் கடைப்பிடிப்பார், மறுமையில் (தேவர் நிலையில்) மட்டுமன்றி இம்மையில் மக்கள் நிலையிலும் பிறரால் தெய்வமாக மதிக்கப்படுவர் என்பது கருத்து.

## அதி. 27 - தவம்

*அதாவது, உடம்பு கொழுத்தால் மனம் ஐம்புல வின்பத்தையே நாடு மாதலாலும், மதயானைபோல் அடங்கா தாதலாலும், அதையடக்கி இறைவன்மேற் செலுத்துவதற்குத் தோதாக உண்ணா நோன்பாலும் தட்பவெப்பம் பொறுத்தல் முதலிய கடும் பயிற்சிகளாலும் உடம்பை வாட்டுதல். உடம்பை யொடுக்கி யடக்குவதில் புலான்மறுத்தல் மென்மையானதாகவும் தவம் வன்மையானதாகவும் மிருத்தலால், இஃது அதன்பின் வைக்கப்பட்டது.*

*தவம் இல்லறத்தார்க் குரியதும் துறவறத்தார்க் குரியதும் என இரு வகைப்படும். அவற்றுள் முன்னது எண்வகை யுறுப்புகளைக் கொண்டு தவம் அல்லது நோன்பு என்று பெயர் பெறுவது; பின்னது ஓகத்தின் (யோகத்தின்) எண்வகை யுறுப்புகளுள் ஒன்றாகக் கொள்ளப்படுவது.*

*இல்லறத்தார் பிள்ளைப்பேறும் உடல்நலமுங் கருதி உண்டி சுருக்கி நாடு நகரங்களிலுள்ள கோவில்களில் வழிபடுவது நோன்பு என்றும், காட்டில் தங்கிக் கடுமையாக வாழ்ந்து சிறிது காலம் வழிபடுவது தவம் என்றும் சொல்லப்படும்.*

கணவனும் மனைவியும் காட்டிலுள்ள முனிவரை யடுத்துத் தொண்டு செய்தபின், அவர் தந்த கனியை யுண்டு மனைவி கருவுற்றுப் பிள்ளை பெற்றதாகச் சொல்லப்படுவதெல்லாம், கூடாவொழுக்கத்தினரான ஆரியர் செய்த சூழ்ச்சிகளே என அறிக.

மறுமையில் விண்ணுலக வின்பம் நுகரும்பொருட்டு இம்மையிற் காட்டில் வாழ்ந்து செய்யும் எண்வகை யுறுப்புத் தவம்,

தவம் என்ற சொற்கே எரித்தல் என்றுதான் பொருள். துலங்குதல் = விளங்குதல். துலங்கு - துளங்கு= திகழ், துள - தள. தளதளத்தல்=திகழ்தல். தள - தழல் - தணல். தழ - தக. தகதகவெனல் = ஒளி வீசுதல். தக - தகம் - தங்கம் = விளங்கும் பொன். தக - திக - திகழ் - திங்கள் = இரவில் ஒளி தரும் சுடர். தகம் = எரிவு, சூடு. தகம் - தவம் = உடலை எரித்தல்போல் வருத்துந் துறவறப் பயிற்சி. க- வ, போலி. ஒ.நோ: குழை - குகை - குவை. தக - தஹ் (வ). தவம் - தபஸ் (வ.). தக - தகை = தாகம். தகம் - தாகம் = உடற் சூட்டால் உண்டாகும் நீர்வேட்கை. தக - தவ - தவி. தவித்தல் = நீர்வேட்கை யுண்டாதல். தாகம் - தாஹ (வ). தவி - தப் (வ). தவம் - தவன் = தவத்தோன். இதற்கு ஒத்த வடிவம் சமற்கிருதத்தில் இல்லை. தபஸ்வின் என்ற வடிவந்தான் உண்டு.

"நீர்பலகான் மூழ்கி நிலத்தசைஇத் தோலுடையாச்
சோர்சடை தாழச் சுடரோம்பி - யூரடையார்
கானகத்த கொண்டு கடவுள் விருந்தோம்பல்
வானகத் துய்க்கும் வழி" (பு.வெ.வாகை. 14)

என்னும் புறப்பொருள் வெண்பா மாலைச் செய்யுளால் அறியப்படும். இதையே "நாலிரு வழக்கிற் றாபதப் பக்கமும்" என்று தொல்காப்பியங் (புறத். 20) கூறும். இது பிறவிக்குட்படுவதால் துறவறமாகாது.

கணவனை யிழந்த கற்புடை மனைவியர் நோற்கும் கைம்மை நோன்பு இல்லறத்தின்பாற்படுவதே. இறைவனல்லாச் சிறுதெய்வங்களை நோக்கிச் செய்யும் தவம் பயனில் முயற்சியாம். அத் தெய்வங்களை நோக்கித் தவஞ் செய்து பலர் பல பேறுகளைப் பெற்றதாகக் கூறும் கதைகளெல்லாங் கட்டுக் கதைகளே. இனி, ஊழினாலும் உழைப்பினாலுமே பெறக்கூடிய கல்வி, அரசப் பதவி முதலிய பேறுகளையும், பகைவரைக் கொல்லும் வலிமை, தெய்வத்தையுங் கொல்லுந்திறம் முதலிய ஈவுகளையும், தவஞ் செய்து பெற்றதாகக் கூறுங் கதைகளும் நம்பத்தக்கனவல்ல.

*துறவறத்திற்குரிய தவம், படிப்படியாக வுண்டி சுருக்கிப் பின்பு காய்கனி கிழங்குகளையே வுண்டு இறுதியில் அவையுமின்றி உதிர்ந்த இலைகளையே உட்கொள்வதும், கடுங்கோடையில் நண்பகல் வெயிலிலும் கூதற் காலத் திலும் பனிக் காலத்திலும் குளிர்ந்த நீர்நிலையிலும் நிற்றலும், முதலில் மரவுரி அல்லது நீர்ச்சீலை யுடுத்து இறுதியில் அதுவு மின்றி யிருப்பதும், உள்ளத் தூய்மையைப் பேணுவதும், ஓரறிவுயிர்க்குந் துன்பஞ் செய்யாமையும், பிறவுமாம். இதனொடு சேர்ந்த ஏனை யேழுறுப்புகளும் மெய்யுணர்தல் என்னும் அதிகாரத்திற் கூறப்படும்.*

*நாற்றிசையும் மூட்டிய விறகுதீயும், தலைக்கு மேற்பட்ட வெயில் தீயுமாகிய ஐந்தீ நாப்பண் நிற்றல் ஆரிய வழக்கமாகத் தோன்றுகின்றது.*

**261. உற்றநோய் நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை
யற்றே தவத்திற் குரு.**

**(இ-ரை.)** உற்ற நோய் நோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை அற்றே - இயற்கையாகவுஞ் செயற்கையாகவும் தமக்கு நேருந் துன்பங்களை யெல்லாம் பொறுத்துக் கொள்ளுதலும், பிறவுயிர்கட்குத் துன்பஞ் செய் யாமையுமாகிய அவ்வளவே; தவத்திற்கு உரு - தவத்தின் வடிவாம். இத் தவ விலக்கணம் தொகுத்துக் கூறல் என்னும் உத்திபற்றியது. ஏகாரம் தேற்றம்.

**262. தவமுந் தவமுடையார்க் காகு மவமதனை
யஃதிலார் மேற்கொள் வது.**

**(இ-ரை.)** தவமும் தவம் உடையார்க்கு ஆகும் - தவப் பயனன்றித் தவ முயற்சியும் முற்பிறப்பில் தவஞ் செய்தவர்க்கே யுண்டாகும்; அதனை அஃது இலார் மேற்கொள்வது அவம் - ஆதலால், அத் தவத்தை முற்பிறப்பில் ஓரளவேனுஞ் செய்யாதார் இப் பிறப்பில் முயல்வது பயனில் முயற்சியாம்.

தவம் பல பிறப்புகளில் தொடர்ந்து செய்ய வேண்டிய அரும்பெரு முயற்சி யாதலாலும், அறிவும் ஆற்றலும் உடையவரே அதை முற்ற முடியச் செய்யத்தக்கவ ராதலாலும், ஒரே பிறப்பில் எல்லாரும் அதை மேற்கொள்ள முடியாதாம்.

**263. துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொன்
மற்றை யவர்க டவம்.**

**(இ-ரை.)** மற்றையவர்கள் - துறவிய ரல்லாத மற்ற இல்லறத்தார்; துறந் தார்க்குத் துப்புரவு வேண்டித் தவம் மறந்தார்கொல் - துறவியர்க்கு ஊணுடை யும் உறையுளும் மருந்தும் முதலியன கொடுத்துதவுதலை விரும்பியே, தாம் தவஞ் செய்தலை மறந்தார் போலும்!

துத்தல் உண்ணுதல் அல்லது நுகர்தல். துப்புரவு நுகரப்படும் பொருள் கள். தவம் சிறந்ததே யாயினும், எல்லாருந் துறவியராயின் தவஞ்செய்வார்க்கு இன்றியமையாதவற்றை உதவுவார் ஒருவருமில்லாது போய்விடுவராதலின், அவ் வுண்மையை ஓர் ஐயந் தழுவிய தற்குறிப்பேற்ற அணியால் உணர்த் தினார். 'கொல்' ஐயம்.

**264. ஒன்னார்த் தெறலு முவந்தாரை யாக்கலு**
**மெண்ணிற் றவத்தான் வரும்.**

**(இ-ரை.)** ஒன்னார்த் தெறலும் - அறியாமையால் தமக்கு மாறாக வந்த வலியோரையுந் தீயோரையும் சாவித்தலும்; உவந்தாரை ஆக்கலும் - அறிந் ததினால் தம்மை விரும்பித் தம் உதவி நாடி வந்த எளியோரை வாழ்வித் தலும்; எண்ணின் தவத்தான் வரும் - தவத்தோர் கருதுவாராயின் அவர் தவ வலிமையால் அவை கூடும்.

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்," (28)

"குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது" (29)

என்று ஏற்கெனவே துறவியரின் ஆக்க வழிப்பாற்றல் கூறப்பட்டிருத்தல் காண்க.

**265. வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவ**
**மீண்டு முயலப் படும்.**

**(இ-ரை.)** வேண்டிய வேண்டிய ஆங்கு எய்தலால் - தவத்தின் பயனாக மறுமையில் தாம் விரும்பிய பேறுகளையெல்லாம் விரும்பியவாறே பெறக் கூடிய நிலைமையிருத்தலால்; செய்தவம் ஈண்டு முயலப்படும் - செய்ய வேண்டிய தவம் இம்மையில் அறிவுடையோரால் முயன்று செய்யப்படும்.

'ஈண்டு முயலப்படும்' என்றதனால் மறுமையிற் பயன்படும் என்பது பெறப்பட்டது. 'வேண்டிய' என்றவை மண்ணின்பமும் விண்ணின்பமும் வீட்டின்பமுமாகிய மூவகை யின்பங்கள்.

இல்லறத்தாலும் இம் மூன்றையும் பெறலாம். இவ் விரு வழிகளுள் ஒன்றைத் தெரிந்துகொள்வது அவரவர் ஆற்றலையும் விருப்பத்தையும் பொறுத்தது. அன்புடைமை, விருந்தோம்பல், நடுநிலைமை, ஒப்புரவறிதல், ஈகை முதலிய அறங்கள் ஆரியர் மேற்கொள்ளுதற்கு அரியனவாகலின், அவர் துறவறத்தையே விரும்புவர். அதனாலேயே, "மேற்கதி வீடுபேறுகள் தவத்தானன்றி எய்தப்படா" என்றார் பரிமேலழகர். கூடாவொழுக்கமும் போலித் துறவும் பூண்டுகொண்டே ஒருவன் மெய்த்துறவிபோல் நடிக்கலாம். இந் நடிப்பு இல்லறத்தில் இயலாது.

**266.** ***தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றல்லா***
***ரவஞ்செய்வா ராசையுட் பட்டு.***

**(இ-ரை.)** தவம் செய்வார் தம் கருமம் செய்வார் - உலகப் பற்றைத் துறந்து தவஞ் செய்வாரே தம் கருமத்தைச் செய்பவராவர்; அல்லார் ஆசையுள் பட்டு அவம் செய்வார் - அவரல்லாதார் பிறவிக் கேதுவான பொருளின்ப ஆசைவலையுள் அகப்பட்டுத் தமக்குக் கேடு செய்பவரே யாவர்.

'கருமம்' என்றது நன்மையான கருமத்தை. தொடக்க மிலியாக (அநாதி யாக)க் கணக்கற்ற பிறவிகளிற் பிறந்திறந் துழன்றுவரும் ஆதன் (ஆன்மா), அப் பிறவித் துன்பத்தினின்று விடுதலை பெற்றுப் பெயராப் பேரின்பந் துய்த் தற்கு, உடலை யொடுக்கி ஆசையை யடக்கி உள்ளத்தை யொருக்கி இறை வனொடு ஒன்றுவிக்கும் தவத்தை மேற்கொள்வதே தகுந்த வழியாதலின், அதைச் செய்பவரைத் 'தங்கருமஞ் செய்வார்' என்றும்; நிலையாது திடுமென்று மாய்வதும் பிணி மூப்பால் நலிவதுமாகிய உடம்பில் நின்று மின்னல்போல் தோன்றி மறையுஞ் சிற்றின்பத்தை நுகர்தற்பொருட்டு எல்லையில்லாது தொடர்ந்து செல்லும் பிறவித் துன்பத்திற்கேதுவான தீவினைகளைச் செய்து கொள்பவரை 'அவஞ் செய்வார்' என்றுங் கூறினார்.

ஆசைக்கோ ரளவில்லை யாதலால், தன்பொருட்டும் மனைவி மக்கள் பொருட்டும் ஆசைக்கடலுள் அழுந்தச் செய்யும் இல்லறத்தினும், தன்னந் தனியாயிருந்து தவத்தின் வாயிலாய் ஆசையறுக்கும் துறவறமே, வீடுபேற் றிற்குச் சிறந்த வழி யென்பது கருத்து.

இல்லறத்தானும் தன் கடமையை அறநூற்படி செய்வானாயின் தவஞ் செய்தவனாவான் என்றும், பகவற்கீதையில் கூறியவாறு பயன் நோக்காது தன் கடமையைச் செய்பவன் கருமயோகி என்றும், இதற்குப் பொருள் கூறுவது பொருந்தாது. தவம் ஈறாத்திற்கும் ஓரளவிற் பொதுவாகுமே யன்றி இல்லற வினை துறவற வினையாகாது.

**267. சுடச்சுடரும் பொன்போ லொளிவிடுந் துன்பஞ்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.**

**(இ-ரை.)** சுடச் சுடரும் பொன்போல் - உருக்கப்படும் பொன் தீத் தன்னைச் சுடச்சுடத் தன் மாசு மறு நீங்கி ஒளி மிகுவது போல; நோற்கிற்பவர்க்குத் துன்பம் சுடச்சுட ஒளிவிடும் - தவஞ் செய்ய வல்லவர்க்கு அதனால் வருந் துன்பம் தம்மை வருத்த வருத்தத் தம் தீவினைத் தன்மையும் நீங்கித் தெள்ளறிவு மிகும்.

தவம் என்னும் சொல்லின் வேர்ப்பொருள் இக் குறளிலுள்ள உவமம் பொருளிரண்டிலும் விளக்கமாயிற்று. 'கில்' ஆற்றலுணர்த்தும் இடைநிலை.

**268. தன்னுயிர் தானறப் பெற்றானை யேனைய
மன்னுயி ரெல்லாந் தொழும்.**

**(இ-ரை.)** தன் உயிர் தான் அறப் பெற்றானை - தன்னுயிரைத் தனக்கு முற்றுரிமையாகப் பெற்றவனை; ஏனைய மன் உயிர் எல்லாம் தொழும் - அங்ஙனம் பெறாத மற்ற மக்களெல்லாம் கைகூப்பி வணங்குவர்.

முற்றுரிமையாகப் பெறுதலாவது தவத்தால் தன் ஐம்புலவாயை முற்றும் அடக்குதல். அறப்பெறுதல் முற்றும் பெறுதல். "மன்னுயிர்க் கெல்லா மினிது" (68) என்னுங் குறளடியிற் போன்றே, இங்கும் மன் என்பது மாந்தனைக் குறித்தது. உயிர் என்னும் அஃறிணை வடிவிற்கேற்பத் தொழும் என்னும் பலவின்பாற் படர்க்கை வந்தது, 'உயிர்' வகுப்பொருமை. தொழுதல் தூய்மையும் ஆக்க வழிப்பாற்றலும்பற்றி. இருவகைப் பற்றுந் துறத்தல் துறவதிகாரத்திற் கூறப்படுதலால், 'தானற' என்பதற்குத் 'தான் என்னும் முனைப்பற' என்று இங்குப் பொருளுரைக்கத் தேவையில்லை.

**269. கூற்றங் குதித்தலுங் கைகூடு நோற்றலி
னாற்ற றலைப்பட் டவர்க்கு.**

**(இ-ரை.)** நோற்றலின் ஆற்றல் தலைப்பட்டவர்க்கு - தவத்தால் வரும் ஆற்றலைப் பெற்றவர்க்கு; கூற்றம் குதித்தலும் கைகூடும் - கூற்றுவனை வெல்வதுங் கூடுவதாம்.

கூற்றுவனை வெல்வதாவது சாவினின்று தப்புதல். அது இங்கு ஒருவர்க்குங் கூடாமையின் உம்மை எதிர்மறை. மார்க்கண்டேயன் இன்று மண்ணுலகில் இல்லாமையாலும், வேறுலகிலுள்ளான் என்பது உண்மைக்கும் உத்திக்கும் பொருந்தாமையாலும், அவனைப்பற்றிய கட்டுக்கதையை இங்கு எடுத்துக்காட்டுவது எள்ளளவும் ஏற்காது, வீட்டுலகி லுள்ளானெனின் அது உரையளவையாற் பொருந்தும். ஆயின், அதற்கும், இறைவனே அவனை என்றும் பதினாறாட்டை யுலக வாழ்வினனாக்கினான் என்பது தடையாகும். இறைவன் முன்பு தீர்மானித்த தொன்றைப் பின்பு மாற்றினா னெனின், அது அவன் இறைமையை நீக்கி மாந்தத் தன்மையையே ஊட்டும். 'ஆற்றல்' 'ஒன்னார்த் தெறலும் உவந்தாரை யாக்கலும்' ஆம்.

**270. *இலர்பல ராகிய காரண நோற்பார்***
***சிலர்பலர் நோலா தவர்.***

**(இ-ரை.)** இலர் பலர் ஆகிய காரணம் - இவ் வுலகத்திற் செல்வர் சில ராகவும் வறியர் பலராகவும் இருத்தற்குக் கரணியம்; நோற்பார் சிலர் நோலாதவர் பலர் - தவஞ் செய்வார் சிலராகவும் அது செய்யாதவர் பல ராகவும் இருத்தலே.

"கேடில் விழுச்செல்வங் கல்வி" (400) என்று ஆசிரியரே கூறுவதால், இங்குக் குறிக்கப்பட்ட செல்வ வறுமைகள் கல்வி, பொருள் என்னும் இரு வகைச் செல்வத்திற்கும் பொதுவாம். 'நோற்பார் சிலர்' என்னும் கரணியத் திற்குரிய கருமியம் கூறப்படாமையால் வருவித்துரைக்கப்பட்டது. இம்மை நிலைமையினின்று முன்னை வினைப்பயனுக்குக் கரணியம் உய்த்துணரப் பட்டன.

## அதி. 28 - கூடாவொழுக்கம்

*அதாவது, துறவறத்தொடும் தவக்கோலத்தொடும் பொருந்தாத தீய வொழுக்கம். அது பெண்ணின்பத்தை மறைவாக நுகர்தலும் அதற்குத்தக ஊட்டம் மிக்க உணவுண்ணுதலுமாம். உள்ளத்தில் உரனில்லாது சுடலை யுணர்ச்சியினாலும் சொற்பொழிவுணர்ச்சியினாலும் திடுமென்று தூண்டப் பட்டுத் துறவுக்கோலம் பூண்டோர், பின்பு அதைக் கடைப்பிடிக்கும் ஆற்ற*

*லின்மையால் தாம் சிறிதுபோழ்து விட்ட சிற்றின்பத்தை மீண்டும் (மறைவாக) நுகர்வர். இது தவத்தொடு பொருந்தாமையின் தவத்தின்பின் வைக்கப்பட்டது.*

*ஊட்டம் மிக்க உணவும் உடலைக் கொழுக்கவைத்துக் கூடாவொழுக் கத்திற்குத் தூண்டுமாதலின், அதுவுந் துறவறத்திற் கடியத்தக்கதே.*

**271. வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்க
ளைந்து மகத்தே நகும்.**

**(இ-ரை.)** வஞ்ச மனத்தான் படிற்று ஒழுக்கம் - பிறரை வஞ்சிக்கும் மனத்தை யுடையவனின் பொய்யொழுக்கத்தை; பூதங்கள் ஐந்தும் அகத்தே நகும் - அவனுடம்பாய்க் கலந்துள்ள ஐம்பூதங்களும் கண்டு தம்முள்ளே எள்ளிச் சிரிக்கும்.

படிறு பொய். பிறர் காணவில்லை யென்று மறைவாகத் திருடும் திருடனின் திருட்டை, குறைந்த பக்கம் எங்கும் நிலைத்துள்ள நிலம் வளி வெளி என்னும் மூன்று பூதங்களேனும் தப்பாமற் காணும். ஆயின், கூடா வொழுக்கத்தானது மனத்தின் பொய்த்தன்மையையும் மறைந்த காம வொழுக்கத்தையும் அவனுடற் கூறாகவும் ஐம்பொறிகளாகவு முள்ள ஐம்பூதங்களும் காணுவதால், 'பூதங்க ளைந்தும்' என்றும், அவை அவனுக்கும் பிறர்க்கும் தெரியாமல் நகுவதால் 'அகத்தே நகும்' என்றும் கூறினார். இது மறைவொழுக்கத்திற்குத் தெய்வச்சான்றும் மனச்சான்றும் மட்டுமன்றிப் பூதச் சான்றும் உள்ளதெனக் கூறியவாறு. பிறரை ஏமாற்றுவதால் 'வஞ்சமனம்' என்றார்.

**272. வானுயர் தோற்ற மெவன்செய்யுந் தன்னெஞ்சந்
தானறி குற்றப் படின்.**

**(இ-ரை.)** தன் நெஞ்சம் அறிகுற்றம் தான் படின் - தன் நெஞ்சமே குற்றமென் றறிந்ததை ஒருவன் செய்வானாயின்; வான் உயர் தோற்றம் எவன் செய்யும் - அவனது வானளாவ வுயர்ந்த தவக்கோலம் பிறரை அச் சுறுத்துவதன்றி வேறு என்ன பயன்படுவதாம்?

வானுயர்வு என்றது காட்சிப்பொருளைக் கருத்துப்பொருளாக மாற்றிய பொருள்வகை மாற்று. தனக்கு நன்மையே செய்யும் தன் சொந்த வுறுப்பு என்பதுபடத் 'தன்னெஞ்சம்' என்றும், நெஞ்சம் குற்றமென்றறிந்ததை நெஞ்சமே காணச் செய்வதால், 'தானறி குற்றம்' என்றும், நெஞ்சாரக் குற்றஞ் செய்யும்

துணிவுக்கடுமையும் அதற்குக் கழுவாயின்மையும் நோக்கிக் 'குற்றப்படின்' என்றுங் கூறினார்.

**273. வலியி னிலைமையான் வல்லுருவம் பெற்றம்**
**புலியின்றோல் போர்த்துமேய்ந் தற்று.**

**(இ-ரை.)** வலி இல் நிலைமையான் வல் உருவம் - மனத்தை யடக்கும் வலிமையில்லாத இயல்பினன் வலிமை மிக்க துறவியரின் தவக்கோலத்தைப் பூண்டு கூடாவொழுக்கம் ஒழுகுதல்; பெற்றம் புலியின் தோல் போர்த்து மேய்ந்த அற்று - ஆவு கொல்லைக் காவலர் துரத்தா வண்ணம் புலியின் தோலைப் போர்த்துப் பயிரை மேய்ந்தாற் போலும்.

அதிகாரத்தாலும் உவமையாலும் கூடாவொழுக்கம் என்பது வருவித் துரைக்கப்பட்டது. ஆவையுடையார் அதற்குப் புலியின் தோலைப் போர்த் துப் பிறர் கொல்லையில் மேய விடுதலுங் கூடுமாதலின், இவ் வுவமை இல் பொருளுவமை யாகாது. "புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது" என்னுங் கருத் தினாலும், "புலியடிக்கு முன் கிலியடிக்கும்" ஆதலாலும், புனங்காப்போர் புலியை அண்டுவதில்லை. அங்ஙனமே, தவத்தோர் தவறு செய்யார் என்னும் நம்பிக்கையினாலும், தவத்தோரை அணுகின் சாவித்துவிடுவர் என்னும் அச்சத்தாலும், மக்கள் தவக்கோலத்தாரிடம் நெருங்குவதில்லை. புலித்தோற் போர்த்த பெற்றம் பிறர் புலங்களில் மறைவாக மேய்வது போல, கூடாவொழுக் கத்தானும் பிறர்க்குரிய பெண்டிரொடு கூடிக் களவாகவும் கள்ளத்தனமாக வும் இன்பம் நுகர்வான் என்பது பெறப்பட்டது.

**274. தவமறைந் தல்லவை செய்தல் புதன்மறைந்து**
**வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று.**

**(இ-ரை.)** தவம் மறைந்து அல்லவை செய்தல் - மனத்தையடக்கும் வலிமையில்லாதவன் தவக்கோலத்தின்கண் மறைந்து நின்று கூடாவொழுக்கம் ஒழுகுதல்; வேட்டுவன் புதல் மறைந்து புள் சிமிழ்த்த அற்று - வேடன் புதரின்கண் மறைந்து நின்று பறவைகளை வலையாற் பிணித்தாற் போலும்.

'தவம்' ஆகுபொருளது.

**275. பற்றற்றே மென்பார் படிற்றொழுக்க மெற்றெற்றென்**
**றேதம் பலவுந் தரும்.**

**(இ-ரை.)** பற்று அற்றேம் என்பார் படிற்று ஒழுக்கம் - பிறர் தம்மைப் பெரிதும் மதிக்குமாறு யாம் இருவகைப் பற்றும் துறந்தேம் என்று சொல் வாரின் மறைவொழுக்கம்; எற்று எற்று என்று ஏதம் பலவும் தரும் - பின்பு தம் தீவினைப் பயனை நுகரும்போது, அந்தோ என் செய்தேம் என் செய்தேம் என்று தனித்தனியே வருந்திப் புலம்புமாறு, அவருக்குப் பல்வகைத் துன்பங்களையும் உண்டாக்கும்.

சொல்லளவிலன்றிச் செயலளவிற் பற்றறாமையின் 'பற்றற்றே மென் பார்' என்றும், தீவினைப்பயன் கடுமை நோக்கி 'எற்றெற்று' என்றும் கூறினார். தவவடிவில் மறைந்து பிறர் மகளிரொடு கூடுதல் இருமடித் தீவினையாதலின், அதன் விளைவும் மிகக் கொடிதாயிற்று. எற்று என்பது கடந்த நிலைமை நோக்கி வருந்துவதைக் குறிக்கும் இடைச்சொல். என்னது - எற்று (என் + து) = எத்தன்மைத்து.

"எற்றென் கிளவி இறந்த பொருட்டே" **(தொல். இடை. 15)**

என்பது தொல்காப்பியம்,

**276. *நெஞ்சிற் றுறவார் துறந்தார்போல் வஞ்சித்து***
***வாழ்வாரின் வன்கணா ரில்.***

**(இ-ரை.)** நெஞ்சில் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து வாழ்வாரின் - உள்ளத்திற் பற்றறாது பற்றற்றவர்போல் நடித்துப் பிறரை யேமாற்றி வாழும் பொய்த் துறவியரைப்போல; வன்கணார் இல் - கொடியவர் இவ் வுலகத்தில் இல்லை.

கன்னியரையும் பிறர் மனைவியரையுங் கற்பழித்தலும், அடைக்கலப் பொருளைக் கவர்தலும், உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்தலும், கொள்ளை யடித்தலும், தம் விருப்பம் நிறைவேறும்பொருட்டு எத்துணை நல்லவரையுங் கொல்லுதலும், ஆகிய தீவினைகளிலெல்லாம் வல்லவரும், கடுகளவும் மனச்சான்று இல்லவருமாதலின் கூடாவொழுக்கத்தினார்போற் கொடியார் பிறரில்லையென்றார். பற்றற்றவர்போல் நடிப்பவரும் நடியாதவருமாகிய இருவகைக் கொடியோருள், நடிப்பவர் மிகக் கொடியவர் என்பது கருத்து.

**277. *புறங்குன்றி கண்டனைய ரேனு மகங்குன்றி***
***மூக்கிற் கரியா ருடைத்து.***

**(இ-ரை.)** குன்றிப் புறம் கண்ட அனையரேனும் - வெளிக்கோலத்தில் குன்றிமணியின் பின்புறம் கண்டாற் போலச் செம்மையுடையவ ரேனும்; அகம் குன்றி மூக்கின் கரியார் உடைத்து - உள்ளத்தில் அதன் மூக்குப் போல இருண்டிருப்பவரை உடையது இவ் வுலகம்.

செம்மை கருமை என்பன குன்றிமணியை நோக்கின் நிறப்பண்பும், கூடா வொழுக்கத்தினரை நோக்கின் குணப்பண்பும் ஆகும். புறம் என்னுஞ் சொல் குன்றிக்கும் கூடாவொழுக்கத்தினர்க்கும் பொதுவாக முன்நின்றது. இங்ஙனம் நில்லாக்கால் பின்னர் வரும் அகம் என்னுஞ் சொற்கு முரணின்மை காண்க. 'குன்றி' ஆகுபெயர்.

## 278. *மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி*
*மறைந்தொழுகு மாந்தர் பலர்.*

**(இ-ரை.)** மனத்தது மாசு ஆக - தம் மனத்தின்கண் குற்ற மிருக்கவும்; மாண்டார் நீராடி - தவத்தால் மாட்சிமைப்பட்டவர்போற் பலகால் குளிர்ந்த நீரில் மூழ்கி; மறைந்து ஒழுகும் மாந்தர் பலர் - அதன்கண்ணே மறைந்தொழுகும் மாந்தர் உலகத்துப் பலர்.

'மாசு' காம வெகுளி மயக்கங்கள். நீராடியதால் உடம்பழுக்கேயன்றி உள்ளத்தழுக்கு நீங்கிற்றிலர் என்பதை யுணர்த்த 'மனத்தது மாசாக' என்றார். 'மாண்டார் நீராடி' என்பதற்கு "மாட்சிமைப்பட்டாரது நீர்மையை யுடைய ராய்" என்று மணக்குடவர் உரைத்ததும் ஓரளவு பொருத்த முடையதே. 'நீராடி' இரட்டுறல்.

## 279. *கணைகொடி தியாழ்கோடு செவ்விதாங் கன்ன*
*வினைபடு பாலாற் கொளல்.*

**(இ-ரை.)** கணை கொடிது - அம்பு வடிவில் நேராயிருந்தாலும் செயலிற் கொடியது; யாழ் கோடு செவ்விது - யாழ் தண்டால் வளைந்ததேனும் செயலால் இனியது; ஆங்கு அன்ன வினைபடுபாலால் கொளல் - அங்ஙனமே தவஞ்செய்வாருள்ளும் யார் கொடியர் யார் நேர்மையர் என்பதை, அவரவர் கோலத்தாற் கொள்ளாது செயல்வகையாலேயே அறிந்துகொள்க.

கொல்லும் அம்பு கொடியது; இசையால் இன்புறுத்தும் யாழ் இனியது. அங்ஙனமே தீயவொழுக்கமுள்ளவர் கொடியவர்; நல்லொழுக்கமுள்ளவர்

நேர்மையர். 'யாழ்கோடு' என்பதால் அம்பின் வடிவு நேர்மை வருவித் துரைக்கப்பட்டது. 'கொளல்' வியங்கோள்.

'யாழ்கோடு செவ்விது' என்றதை ஆராய்ச்சியில்லாரும் ஆரியப் பார்ப்பனரும் பிறழ வுணர்ந்து, இன்றுள்ள வீணை ஆரியர் கண்ட தென்றும், நால்வகை யாழுட் சிறந்த செங்கோட்டியாழும் வில்யாழ் வகையைச் சேர்ந்ததே யென்றும் உரைப்பாராயினர். யாழ்க்கோட்டின் வளைவு முழு வளைவும் கடைவளைவும் என இருதிறப்படும். வில்யாழ் முழு வளைவும் செங்கோட்டியாழ் கடைவளைவும் உடையன. கடைவளைவு வணர் எனப் பெயர் பெறும். அதையே வளைவெனக் குறித்தார் திருவள்ளுவர் என அறிக.

**280. மழித்தலு நீட்டலும் வேண்டா வுலகம்**
**பழித்த தொழித்து விடின்.**

(இ-ரை.) உலகம் பழித்தது ஒழித்து விடின் - உயர்ந்தோர் தவத்திற் காகாதென்று தள்ளிய ஒழுக்கத்தை விட்டுவிடின்; மழித்தலும் நீட்டலும் வேண்டா - தலைமயிரை வறண்டலும் சடையாக்கலும் வேண்டுவதில்லை.

சமணர் கையாளும் பறித்தல் முறையும் மழித்தலுள் அடங்கும். மழித்தல் என்னும் வினையினால் தலைமயிர் என்னும் செயப்படுபொருள் உணரப்படும்.

"மனத்துக்கண் மாசில னாத லனைத்தறன்
ஆகுல நீர பிற" (34)

என்றதற் கேற்ப, கூடா வொழுக்க மில்லார்க்கு எவ்வகைப் புறக்கோலமும் வேண்டுவதில்லையென்பது இக் குறளாற் கூறப்பட்டது.

## அதி. 29 - கள்ளாமை

*அதாவது, பிறர் பொருளை மறைவாகக் கவராமை. இது கவர்தலும் மறைவிற் செய்தலுமாகிய இருமடிக் குற்றம். ஒரு தீவினையை ஆசையோடு கருதுதலும் அதைச் செய்தலோ டொக்குமாதலின், கள்ளாமை என்பது களவு செய்யாமையும் களவுசெயக் கருதாமையும் என இருதிறப்படும். களவு செய்யாமை இல்லறத்திலும் கடியப்படுவதே. ஆயின், துறவறம் தூய்மை நிலையில் இல்லறத்தினும் உயர்ந்ததாதலின், களவு செய்யக் கருதுதலும் அதிற்*

*குற்றமாம். இவ் விரு திறத்தையும் ஒரே யிடத்திற் கூறுவதே தக்கதாகலின், இரண்டையுங் கூறுதற்கேற்ற துறவறவியலிற் கூறினார். ஆயினும், களவு செய்யாமை ஈரறத்திற்கும் பொதுவாம்.*

*களவு செய்தலும் கூடாவொழுக்கத்தைச் சேர்ந்ததினாலும், காமம் பற்றிய கூடாவொழுக்கமும் களவாய் நிகழ்தலானும், இவ்வகை யொற்றுமை பற்றி உயர்திணைப் பொருள்பற்றிய களவை விலக்கும் கூடாவொழுக்கத்தின் பின் அஃறிணைப் பொருள்பற்றிய களவு விலக்கு வைக்கப்பட்டது.*

*கள் என்னும் முதனிலை முதற்காலத்திற் களவு செய்தலைக் குறித்ததே. கள்ளம், கள்ளத்தனம், கள்ளன், கள்வு, களவு என்னும் சொற்களை நோக்குக. பிற்காலத்திற் கள் என்னும் முதனிலை தன் பொருளை யிழந்தபின், தொழிற் பெயரொடு துணைவினை சேர்ந்த களவுசெய் என்னும் கூட்டுச்சொல் முதனிலை தோன்றிற்று. "கட்குவான் பரிக்கில் ஞேலுவான் பரிக்கேணம்" என்னும் மலையாளப் பழமொழியையும் நோக்குக.*

**281. *எள்ளாமை வேண்டுவா னென்பா னெனைத்தொன்றுங்***
***கள்ளாமை காக்கதன் னெஞ்சு.***

**(இ-ரை.)** எள்ளாமை வேண்டுவான் என்பான் - கள்வன் என்று பிறரால் இழித்தெண்ணப் படாமையை விரும்புகின்றவன் என்று சொல்லப்படுவான்; தன் நெஞ்சு எனைத்து ஒன்றும் கள்ளாமை காக்க - தன் மனம் எவ்வகைப் பொருளையும் மறைவிற் கவரக் கருதாவகை காத்துக் கொள்க.

அறிவு போன்ற கருத்துப்பொருளும் அடங்க 'எனைத்தொன்றும்' என்றார். நெஞ்சு கள்ளாமை காக்க என்றதனால், கள்ளுதல் இங்குக் கள்ளக் கருதுதல் என்பது பெறப்படும். 'என்பான்' என்னும் செய்வினை வடிவுச் சொல் செயப்பாட்டுவினைப் பொருள் கொண்டது.

**282. *உள்ளத்தா லுள்ளலுந் தீதே பிறன்பொருளைக்***
***கள்ளத்தாற் கள்வே மெனல்.***

**(இ-ரை.)** உள்ளத்தால் உள்ளலும் தீதே - தீவினைகளைத் தம் நெஞ்சாற் கருதுதலும் துறவறத்தார்க்குக் குற்றமாம்; பிறன் பொருளைக் கள்ளத்தாற் கள்வேம் எனல் - ஆதலால், பிறன் பொருள் எதையேனும் அவனறியாமற் கவர்வேம் என்று கருதற்க.

'உள்ளத்தால்' என்னும் வேண்டாச் சொல் துறவியரின் உள்ளம் தூய்மையாயிருக்க வேண்டும் என்பதை உணர்த்திநின்றது. 'உள்ளலும்' இழிவு சிறப்பும்மை. 'அல்' இங்கு எதிர்மறை வியங்கோளீறு. இனி, கள்வேமெனல் உள்ளலுந் தீதே எனினுமாம்.

**283. *களவினா லாகிய வாக்க மளவிறந்***
***தாவது போலக் கெடும்.***

**(இ-ரை.)** களவினால் ஆகிய ஆக்கம் - களவினால் உண்டான செல்வம்; ஆவது போல அளவு இறந்து கெடும் - வளர்வது போலத் தோன்றி அளவு கடந்து கெடும்.

'ஆக்கம்' தொழிலாகு பெயர். அளவிறந்து கெடுதலாவது, புது வெள்ளம் பழைய வெள்ளத்தை அடித்துக்கொண்டு போவதுபோல், தான் போகும்போது முன்பிருந்த பழஞ் செல்வத்தையும் தன்னொடு சேர்த்துக் கொண்டு போதலும், இம்மைக்குப் பழியையும் மறுமைக்குத் தீவினையையும் உண்டாக்குதலுமாம்.

**284. *களவின்கட் கன்றிய காதல் விளைவின்கண்***
***வீயா விழுமந் தரும்.***

**(இ-ரை.)** களவின்கண் கன்றிய காதல் - பிறர் பொருளைக் கவர்தலின்கண் ஊன்றிய வேட்கை; விளைவின்கண் வீயா விழுமம் தரும் - அற்றைக்கு நலஞ் செய்வதுபோல் தோன்றிப் பின்பு பயன் விளையுங் காலத்தில் தீராத துன்பத்தை யுண்டாக்கும்.

களவாசை வேரூன்றியதினால் மேன்மேலுங் களவிற் பயிற்றி, அதனால் இம்மைக்கும் மறுமைக்கும் தீராத பழியும் தீவினையும் விளைக்குமாதலின், 'வீயா விழுமந் தரும்' என்றார்.

**285. *அருள்கருதி யன்புடைய ராதல் பொருள்கருதிப்***
***பொச்சாப்புப் பார்ப்பார்க ணில்.***

**(இ-ரை.)** அருள் கருதி அன்பு உடையர் ஆதல் - அருளின் அருமை நோக்கிப் பிறரிடத்து அன்புடையரா யொழுகுதல்; பொருள் கருதிப் பொச்சாப்புப் பார்ப்பார்கண் இல் - பிறர் பொருளைக் கவர்ந்து கொள்ளக் கருதி அவரது சோர்வு பார்ப்பாரிடத்தில் உண்டாகாது.

தம் சொந்தப் பொருளைத் தீதென்று விட்டுவிட்டுத் துறவு பூண்டோர், பின்பு மீண்டும் பொருளாசை கொண்டு பிறர் பொருளைக் கவரச் சமையம் பார்ப்பாராயின், நீங்கின நோயின் மறுதாக்கு முன்னினும் வலிதாயிருத்தல் போல அவராசையும் வலிதாயிருக்கு மாதலின்; அவர் கவரக் கருதும் பொரு ளுடையார்மீது அவர்க்கு அருளோ அன்போ பிறவாதென்பது கருத்து.

**286.** *அளவின்க ணின்றொழுக லாற்றார் களவின்கட்*
*கன்றிய காத லவர்.*

**(இ-ரை.)** களவின்கண் கன்றிய காதலவர் - களவின்கண் ஊன்றிய வேட்கை யுடையவர்; அளவின்கண் நின்று ஒழுகல் ஆற்றார் - தமக்குரிய ஒழுக்க வரம்பின்கண் நின்று ஒழுகமாட்டார்.

அளவைகளால் உயிர்க்கு வரும் இன்பதுன்பக் கூறுகளை ஆராய்ந் தறிதல் மெய்யுணர்தல் என்னும் அதிகாரத்திற்கே சிறப்பாக ஏற்குமாதலின், அறவூழ்கம் (தருமத்தியானம்) என்னும் ஆருகத மதக் கொள்கையைப் பரிமேலழகர் இங்குப் புகுத்துவது பொருந்தாது.

**287.** *களவென்னுங் காரறி வாண்மை யளவென்னு*
*மாற்றல் புரிந்தார்க ணில்.*

**(இ-ரை.)** களவு என்னும் கார் அறிவு ஆண்மை - களவாண்மை என்று சொல்லப்படும் இருண்ட அறிவுடைமை; அளவு என்னும் ஆற்றல் புரிந்தார்கண் இல் - எல்லாப் பொருள்களின் இயல்பையும் உள்ளவாறு அளந்தறியும் திறமையை விரும்பினவரிடத்து இல்லை.

இருள் என்பது அகவிருளாகிய மயக்கம், புறவிருளின் கருமை இனம் பற்றி அகவிருட்கும் ஏற்றப்பட்டது. களவையுந் திறம்படச் செய்வதற்கு அறிவு வேண்டியிருப்பதால், அத் தீய அறிவு காரறி வெனப்பட்டது. 'என்னும்' என்பது ஈரிடத்தும் 'ஆகிய' என்னும் பொருளது. ஒளியுடன் இருள் பொருந்தாததுபோலத் துறவறத்திற்குரிய தூய அறிவொடு தீய அறிவு பொருந்தாது என்பது கருத்து.

**288.** *அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்குங்*
*களவறிந்தார் நெஞ்சிற் கரவு.*

**(இ-ரை.)** அளவு அறிந்தார் நெஞ்சத்து அறம்போல - பொருள்களின் இயல்பை உள்ளவாறறிந்தவரின் உள்ளத்தில் அறம் நிலைத்து நிற்றல்போல;

களவு அறிந்தார் நெஞ்சில் கரவு நிற்கும் - களவையே பயின்றவரின் உள்ளத்தில் வஞ்சனை நிலைத்து நிற்கும்.

பழக்கம் நிலைத்து நிற்கும் இயல்பினதென்பதும், பொருள்களின் இயல்பை அளந்தறிதல் துறவறத்திற்கு இன்றியமையாத தென்பதும், இங்குக் கூறப்பட்டன.

**289. *அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல***
***மற்றைய தேற்றா தவர்.***

**(இ-ரை.)** களவு அல்ல மற்றைய் தேற்றாதவர் - களவல்லாத பிறவற்றை அறியாதவர்; அளவு அல்ல செய்து ஆங்கே வீவர் - வரம்பு கடந்த செயல்களைச் செய்து அப்பொழுதே அழிவர்.

வரம்பு கடந்த செயல்கள் பெருங்களவுகள். அப்பொழுதே அழிதல், கையும் மெய்யுமாகக் கண்டுபிடிக்கப்பட்டு அரசனாலும் மக்களாலும் தண்டனை யடைதலும் எரியுலகில் வீழ்தலும். தேற்றாதவர் என்பது தன் வினைப் பொருளில் வந்த பிறவினைச் சொல்.

**290. *கள்வார்க்குத் தள்ளு முயிர்நிலை கள்ளார்க்குத்***
***தள்ளாது புத்தே ளுலகு.***

**(இ-ரை.)** கள்வார்க்கு உயிர்நிலை தள்ளும் - களவு செய்வார்க்குத் தம்முடனேயே யுள்ள தம் சொந்த வுடம்பும் தவறும்; கள்ளார்க்குப் புத்தேள் உலகு தள்ளாது - அது செய்யாதார்க்கு நெடுந்தொலைவிலுள்ள தேவருலகுந் தவறாது கிட்டும்.

உயிர்நிற்பது உயிர்நிலை. தாம் குடியிருக்கும் வீடுபோல்வது என்பதை யுணர்த்த 'உயிர்நிலை' யென்றார். உயிர்நிலை தள்ளுதலாவது அரசனால் தண்டிக்கப்படுதல்.

"கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்." (குறள். 550)

"கள்வனைக் கோறல் கடுங்கோ லன்று
வெள்வேற் கொற்றங் காண்." (சிலப். 20 : 64-5)

## அதி. 30 - வாய்மை

*அதாவது, பொய்ம்மைக்கு மறுதலையான மெய்ம்மை. கூடாவொழுக் கத்திலும் களவிலும் பொய்ம்மை கலந்திருத்தலாலும், பொய்ம்மை நீக்கப் பெறின் அவ் விரண்டும் நிகழா வாதலாலும், இது கூடாவொழுக்கங் கள்ளா மைகளின்பின் வைக்கப்பட்டது.*

**291. வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றுந்**
**தீமை யிலாத சொலல்.**

**(இ-ரை.)** வாய்மை எனப்படுவது யாது எனின் - மெய்ம்மையென்று சொல்லப்படுவது யாதென்று வினவின்; தீமை யாது ஒன்றும் இலாத சொலல் - அது எவ்வகை யுயிர்க்கும் எவ்வகைத் தீங்கும் எட்டுணையும் விளைக்காத சொற்களைச் சொல்லுதலாம்.

வாய்மையின் இலக்கணம் பிறர்க்கும் பிற வுயிர்கட்கும் தீங்கு பயவா மையே யன்றி நிகழ்ந்தது கூறலன்று என்பது கருத்து. இது திருக்குறளை ஒப்புயர்வற்ற உலக அறநூலாக்கும் இயல் வரையறையாம்.

உண்மை, வாய்மை, மெய்ம்மை என்னும் ஒருபொருட்சொல் மூன்றும், முறையே, உள்ளமும் வாயும் உடம்புமாகிய முக்கரணத்தொடு தொடர் புடையனவாகச் சொல்லப்பெறும். இனி, உள்ளது உண்மை, வாய்ப்பது வாய்மை, மெய்(substance) போன்றது மெய்ம்மை எனினுமாம்.

**292. பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த**
**நன்மை பயக்கு மெனின்.**

**(இ-ரை.)** புரை தீர்ந்த நன்மை பயக்கும் எனின் - குற்றமற்ற நன்மை யைப் பிறர்க்கு விளைக்குமாயின்; பொய்ம்மையும் வாய்மை இடத்த - பொய்யான சொற்களும் மெய்யான சொற்களின்பாற் பட்டனவாம்.

குற்றமற்ற நன்மையாவது, எவருக்கும் எவ்வகைத் தீங்கும் இழப்பும் விளைக்காத நற்பயன். அது, வழிச்செல்லும் சிறாரை நோக்கித் தாம் செல்லும் ஊர் மிகத் தொலைவிலிருந்தும் அணியதென்பதும், மருத்துவன் நோயாளியை நோக்கி அவன் நோய் மிகக் கடுமையாயிருந்தும் வரவர நலமாகி வருகின்ற தென்பதும், ஒருவர்க்குத் தொடர்ந்து விக்கலெடுப்பதைத் தடுக்க அவர் திடுக்கிடத்தக்க ஒரு பொய்ச் செய்தியைச் சொல்வதும் போல்வதாம்.

இத்தகைய தீங்கற்ற பொய்யுரைகளால், ஒருவர்க்குப் பெருஞ்செல்வங் கிட்டுவித்தலும் ஒருவரைச் சாவினின்று தப்புவித்தலும் கூடும்.

நன்மை பயக்கும் பொய்யுரையும் வாய்மையின்பாற் படுமெனவே, தீமை பயக்கும் மெய்யுரையும் பொய்ம்மையின்பாற் படும் என்பதாம். ஆகவே, ஓர் உரையின் மெய்ம்மையும் பொய்ம்மையும் அதன் விளைவும் பற்றியல்லது நிகழ்ச்சிமட்டும்பற்றித் துணியப்படுவ தன்றென்பது கருத்தாம்.

**293.** *தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்*
*தன்னெஞ்சே தன்னைச் சுடும்.*

**(இ-ரை.)** தன் நெஞ்சு அறிவது பொய்யற்க - ஒருவன் தன் நெஞ்சு அறிந்ததொன்றைப் பிறர் அறியவில்லை யென்று கருதிப் பொய் சொல்லா தொழிக; பொய்த்தபின் தன் நெஞ்சே தன்னைச் சுடும் - பொய் சொன்னா னாயின், அதனை யறிந்த தன் நெஞ்சே தான் செய்த தீவினைக்குச் சான்றாக நின்று தன்னைக் குற்றஞ் சாட்டித் துன்புறுத்தும்.

"நெஞ்சை யொளித்தொரு வஞ்சக மில்லை" (கொன்றை. 54) முக்கரண வினைக ளெல்லாவற்றையும் நெஞ்சு அறிவதனாலேயே அதற்கு மனச்சான்று என்று பெயர். மனச்சான்று உடனிருந்துரைக்கவும் அதை மறுத்துப் பொய் சொல்வது கொடிய தென்பதை யுணர்த்தவே, "நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டா" என்றார் உலகநாதர். 'சுடும்' என்றதினால், மனச்சான்று குத்தியுணர்த்தி மனநோயை யுண்டுபண்ணுவது மட்டுமன்றி, தெய்வச் சான்றாக நின்று வெளிப்படுத்தி அரசன் தண்டனையையும் அடைவிக்கும் என்பது பெறப்படும்.

**294.** *உள்ளத்தாற் பொய்யா தொழுகி னுலகத்தார்*
*ருள்ளத்து ளெல்லா முளன்.*

**(இ-ரை.)** உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் - ஒருவன் நெஞ்சாரப் பொய் சொல்லாது ஒழுகுவானாயின்; உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன் - அவன் உயர்ந்தோ ருள்ளத்திலெல்லாம் உளனாவன்.

உயர்ந்தோர் உள்ளத்தில் உளனாதலாவது அவரால் மதிக்கப்படுதலும் என்றும் நினைக்கப்படுதலுமாம். 'உள்ளத்தால்' என்பது வேற்றுமை மயக்கம்.

**295. மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு**
**தானஞ்செய் வாரின் றலை.**

**(இ-ரை.)** மனத்தொடு வாய்மை மொழியின் - ஒருவன் தன் உள்ளத்தொடு பொருந்த உண்மையைச் சொல்வானாயின்; தவத்தொடு தானம் செய் வாரின் தலை - அவன் தவமுந் தானமும் செய்தவரினுஞ் சிறந்தவனாவன்.

தவத்தொடு தானஞ் செய்வதினும் உளத்தொடு பொருந்த உண்மை சொல்வது அரிதாதலால், 'தவத்தொடு தானஞ் செய்வாரின் றலை' என்றார்.

**296. பொய்யாமை யன்ன புகழில்லை யெய்யாமை**
**யெல்லா வறமுந் தரும்.**

**(இ-ரை.)** பொய்யாமை அன்ன புகழ் இல்லை - இம்மையில் ஒருவனுக்குப் பொய் சொல்லாமை போன்ற புகழ்க் கரணகம் (காரணம்) வேறில்லை; எய்யாமை எல்லா அறமும் தரும் - உடம்பு வருந்தி எதுவுஞ் செய்யாமலே அது அவனுக்கு மறுமைக்கு வேண்டிய எல்லா அறங்களையுந் தரும்.

இல்லறத்திற் பொருளீட்டுதற்கும் துறவறத்தில் தவஞ் செய்தற்கும் உடம்பை வருத்தும் முயற்சி இன்றியமையாததாகும். அம் முயற்சி யின்றியே அவ் விருவினைப் பயனையுந் தருதலால், 'எய்யாமை யெல்லா வறமுந் தரும்' என்றார். 'புகழ்' ஆகுபெயர். எய்த்தல் உடம்பு வருந்தி யிளைத்தல்.

**297. பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற**
**செய்யாமை செய்யாமை நன்று.**

**(இ-ரை.)** பொய்யாமை பொய்யாமை ஆற்றின் - ஒருவன் வாய்மை யறத்தைத் தொடர்ந்து செய்ய வல்லவனாயின்; பிற அறம் செய்யாமை செய்யாமை நன்று - அவன் பிற அறங்களைச் செய்யாதிருத்தலே நன்றாம்.

அடுக்குத்தொடர் இரண்டனுள் முன்னது தொடர்ச்சிபற்றியது; பின்னது தேற்றம்பற்றியது. வாய்மை யொன்றே எல்லா வறங்களின் பயனையுந் தருவதாலும், எல்லா வறங்களையும் ஒருவன் மேற்கொள்ளுதல் அரிதாதலாலும், பல வறங்களை ஒருங்கே மேற்கொள்ளின் அவற்றுட் சில தவறுவதால், ஏனையவற்றின் பயனையும் ஏனையறங்களின் பயனையும் பெறுவதே சிறந்ததாகும் என்பதை யுணர்த்த 'அறம்பிற செய்யாமை நன்று' என்றார்.

வாய்மையைக் கடைப்பிடிப்பவன் தான் செய்யுந் தீவினைகளை யெல்லாம் பிறருக்கு மறைக்காதிருக்க வேண்டுமாதலானும், அவை பிறரால் அறியப்படின் தான் தண்டனை யடைவது திண்ணமாதலானும், ஒவ்வொன் றாக எல்லாத் தீவினைகளையும் விட்டுவிடுவன் என்பது கருத்து.

மணக்குடவர் ஈரடுக்குத் தொடர்களையும் தழாத்தொடராகக் கொள் ளாது தழுவுதொடராகக் கொண்டு, "பொய்யாமையைப் பொய்யாமல் செலுத் துவனாயின், பிற அறங்களைச் செய்தல் நன்றாம்; அல்லது தீதாம்" என்று இக் குறளுக்குப் பொருள் உரைப்பர்.

**298.** *புறந்தூய்மை நீரா னமையு மகந்தூய்மை*
*வாய்மையாற் காணப் படும்.*

**(இ-ரை.)** புறம் தூய்மை நீரான் அமையும் - ஒருவனது உடம்புத் தூய்மை நீரால் உண்டாகும்; அகம் தூய்மை வாய்மையான் காணப்படும் - உள்ளத் தூய்மை வாய்மையால் அறியப்படும்.

புறத்தூய்மை அழுக்குப் போதல்; அகத்தூய்மை குற்றம் நீங்குதல். காணப்படுதல் அறியப்படுதல். காணுதல் என்றது அகக்கண்ணாற் காணுதலை. புறத்தழுக்கும் நீரும்போல அகக் குற்றமும் வாய்மையும் காட்சிப்பொருளன் மையின், அறியப்படும் என்றார். வாய்மையால் அகத்தூய்மை உண்டாகும் வகை மேற்கூறப்பட்டது. துறவியர்க்குப் புறத்தூய்மையினும் அகத்தூய்மையே சிறந்ததென்பதாம்.

**299.** *எல்லா விளக்கும் விள்க்கல்ல சான்றோர்க்குப்*
*பொய்யா விளக்கே விளக்கு.*

**(இ-ரை.)** சான்றோர்க்கு எல்லா விளக்கும் விளக்கு அல்ல - ஆன்றவிந் தடங்கிய துறவோர்க்குப் புறவிருள் போக்கும் விளக்குகளெல்லாம் விளக் காகா; பொய்யா விளக்கே விளக்கு - அகவிருள் போக்கும் பொய்யாமை யாகிய விளக்கே விளக்காம்.

புறவிருள் போக்கும் விளக்குகள் கதிரவன், நிலா, தீ என்பன. இவை பொய்யாமைபோல் அகவிருள் போக்காமையின், 'பொய்யா விளக்கே விளக்கு' என்றார். அகவிருள் அறியாமை. 'பொய்யா' ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். பொய்யாமையாகிய விளக்கு என்பது உருவகவணி.

முந்திய குறளில் வாய்மை அகத்தழுக்கைப் போக்குவதென்ற கருத் துட்கொண்டு, அதற்கேற்ப வாய்மையை விளக்காக உருவகித்தார்.

**300. யாமெய்யாக் கண்டவற்று ளில்லை யெனைத்தொன்றும்**
**வாய்மையி னல்ல பிற.**

**(இ-ரை.)** யாம் மெய்யாக் கண்டவற்றுள் - யாம் உண்மையான அறங் களாகக் கண்டவற்றுள்; எனைத்து ஒன்றும் - எவ்வகையிலும்; வாய்மையின் நல்ல பிற இல்லை - மெய்ம்மைபோலச் சிறந்த வேறு அறங்கள் இல்லை.

'மெய்யா' என்பதில் ஆக என்னும் வினையெச்ச வீறு 'ஆ' எனக் கடைக்குறைந்து நின்றது. வாய்மை தலைமையான அறமாகச் சொல்லப் பட்டிருப்பதால், 'வாய்மையின்' என்பதிலுள்ள 5ஆம் வேற்றுமையுருபு தனக்குரிய உறழ்ச்சிப் பொருளில் வராது 2ஆம் வேற்றுமைக்குரிய ஒப்புப் பொருளில் வந்ததாகக் கொள்க.

## அதி. 31 - வெகுளாமை

*அதாவது, ஒருவன்மேற் சினங்கொள்வதற்குக் கரணகம் (காரணம்) இருப்பினும் அதைக் கொள்ளாமை. "உள்ளதைச் சொன்னால் உடம்பெரிச்சல்" என்னும் பழமொழிப்படி, வெகுளி பொய்ம்மைபற்றியும் நிகழ்வதால், வெகுளாமை வாய்மையின்பின் வைக்கப்பட்டது.*

**301. செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பா னல்லிடத்துக்**
**காக்கினென் காவாக்கா லென்.**

**(இ-ரை.)** சினம் செல் இடத்துக் காப்பான் காப்பான் - சினம் தாக்கக் கூடிய எளிய இடத்தில் அது எழாதவாறு அருளால் அல்லது அன்பால் தடுப் பவனே உண்மையில் அதைத் தடுப்பவனாவன்; அல் இடத்துக் காக்கின் என் காவாக்கால் என் -அல்லாத வலிய இடத்தில் அது தானே எழாது அடங்குதலால் அதைத் தடுத்தாலென், தடுக்காவிட்டா லென்? இரண்டும் ஒன்றுதானே!

'செல்லிடம்' தவத்தில் தாழ்ந்தவரும் வறியவரும் அதிகாரமில்லாத வருமாம். அல்லிடம் தவத்தில் உயர்ந்தவரும் செல்வரும் அதிகாரத்திற் சிறந்தவருமாம். வலிய இடத்திற் சினங்கொள்வதால் தனக்கே கேடாதலானும், அதை யடக்குவது அறமன்மையானும், 'காக்கினென் காவாக்காலென்' என்றார்.

**302. செல்லா விடத்துச் சினந்தீது செல்லிடத்து**
**மில்லதனிற் றீய பிற.**

**(இ-ரை.)** சினம் செல்லா இடத்துத் தீது - ஒருவனது சினம் அது தாக்க முடியாத வலியார்மேல் எழின் தனக்கே தீங்காம்; செல் இடத்தும் அதனின் தீய பிற இல் - அது தாக்கக்கூடிய எளியார்மேல் எழினும் அதைவிடத் தீயவை வேறில்லை.

செல்லிடத்துச் சினத்தால் விளைவது இம்மைத் துன்பமே. ஆயின், செல்லாவிடத்துச் சினத்தால் விளைவன இம்மைப்பழியும் மறுமைத் துன்ப முமாம். அதனால் அதனினுந் தீயன வேறில்லை யென்றார்.

**303. மறத்தல் வெகுளியை யார்மாட்டுந் தீய**
**பிறத்த லதனான் வரும்.**

**(இ-ரை.)** யார் மாட்டும் வெகுளியை மறத்தல் - எத்தகையோரிடத்தும் சினங்கொள்ளுதலைக் கருதுவதுஞ் செய்யற்க; அதனான் தீய பிறத்தல் வரும் - அதனால் பல்வகையான தீமைகள் உண்டாகும்.

வலியார், ஒப்பார், எளியார் என்னும் முத்திறத்தாரும் அடங்க 'யார் மாட்டும்' என்றார். உடனேயும் வெளிப்படையாகவும் தீங்கு செய்ய இயலாத எளியோரும் உள்ளத்தில் வயிரங்கொள்ளின், உறக்க நிலையிலும் மயக்க நிலையிலும் தனித்த நிலையிலும் வலியார்க்குத் தீங்கு செய்யத் துணிவா ராதலானும், சினங்கொள்ளுதலும் அதனால் தீயன செய்யக் கருதுதலும் தூயவுள்ளத்தரா யிருக்க வேண்டிய துறவியார்க்குப் பொருந்தாமையானும், 'தீய பிறத்த லதனான் வரும்' என்றார். 'மறத்தல்' தல்லீற்று வியங்கோள்.

**304. நகையு முவகையுங் கொல்லுஞ் சினத்திற்**
**பகையு முளவோ பிற.**

**(இ-ரை.)** நகையும் உவகையும் கொல்லும் சினத்தின் - இல்லறத்தார்க்கு அன்பாலும் துறவறத்தார்க்கு அருளாலும் முகத்தின்கண் தோன்றும் மலர்ச் சியையும் மனத்தின்கண் உண்டாகும் மகிழ்ச்சியையும் கெடுத்தெழுகின்ற சினமல்லாது; பிற பகையும் உளவோ - வேறுபகைகளும் உண்டோ? இல்லை.

சினத்தின் நீட்சியே பகையாதலானும், புறப்பகையில்லாத துறவி யார்க்கும் சினம் அகப்பகையாய் அமைந்து பிறவித்துன்பத்தைப் பயத்தலா னும், சினத்தின் வேறான பகை யில்லையாயிற்று.

**305. தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்காற்
றன்னையே கொல்லுஞ் சினம்.**

**(இ-ரை.)** தான் தன்னைக் காக்கின் சினம் காக்க - ஒருவன் தனக்குத் துன்பம் நேராமற் காக்க விரும்பினனாயின் தன் மனத்திற் சினம் வராமற் காக்க; காவாக்கால் சினம் தன்னையே கொல்லும் - காவானாயின் அச் சினம் தன்னையே கெடுக்குங் கடுந்துன்பங்களை வருவிக்கும்.

இல்லறத்தார்க்குச் சினக்கப்பட்டவரால் தீங்கு நேர்தலாலும், துறவறத் தார்க்கு அவர் சினம் அவர் தவப்பயனைக் கெடுத்துப் பிறவித் துன்பத்தையும் அடைவித்தலாலும், 'தன்னையே கொல்லும் சினம்' என்றார். கொல்லுதல் இங்குக் கொல்லுதல்போல் துன்புறுத்துதல். "கரும்புபோற் கொல்லப் பயன்படுங் கீழ்" (குறள். 1068) என்பதிற் போல.

**306. சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி யினமென்னு
மேமப் புணையைச் சுடும்.**

**(இ-ரை.)** சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி - சினம் என்னும் நெருப்பு; இனம் என்னும் ஏமப்புணையைச் சுடும் - தன்னைச் சேர்ந்தவரை மட்டுமன்றி, அவருக்குத் துன்பக்காலத்தில் ஏமப்புணைபோல் உதவும் இனத்தாராகிய தன்னைச் சேராதவரையுஞ் சுடும்.

சேர்ந்தாரைக் கொல்லி என்னும் பெயரிலுள்ள பலர்பா லீறு ஏனை நான்கு பாலையுந் தழுவும். இத் துறவறவியலிற் கூறப்பட்டுள்ள அறங்களுட் சில இருவகை யறத்திற்கும் பொதுவென்பது முன்னரே கூறப்பட்டது. அவற்றுள் வெகுளாமை என்பது ஒன்று. இருவகை யறத்தார்க்கும் இனமாக வுள்ளவர் துன்பக்காலத்தில் உதவித் தூக்கியெடுத்தலால், அவரை ஏமப் புணையாக உருவகித்தார். ஏமப்புணையாவது, நடுக்கடலிற் கப்பல் மூழ்கும் போது கலவர் ஏறித் தப்பும் ஏமப்படகு (life boat). வாழ்க்கைக் கடலைக் கடக்கும் இல்லறத்தார்க்கு இடுக்கட் காலத்தில் உதவிக் காக்கும் இனத்தார் ஏமப்புணையார்; பிறவிக்கடலைக் கடக்கும் துறவு பயில்வார்க்குத் தவவோகங்களில் தவறு நேர்ந்து அவர் கெடும் நிலையில் அவரைத் திருத்தி ஆற்றுப்படுத்தும் முழுத்துறவியர் ஏமப்புணையார். 'சேர்ந்தாரைக் கொல்லி' தீக்கு ஒரு பெயர்.

சுடுதல் சேர்ந்தவரை வருத்துதலும் சேர்ந்தவரைச் சேர்ந்தாரைத் தாக்குதலும். கனல்தீ உடல்தொடர்பு கொண்டாரை மட்டும் வருத்த, சினத்தீ

உடல் தொடர்பு கொண்டாரொடு உளத்தொடர்பு கொண்டாரையும் வருத்தும் என்பதாம். புணையையும் என்னும் எச்சவும்மை தொக்கது. வெகுளி என்னுஞ் சொல்லின் வேர்ப்பொருளே எரிவது என்பதாம். வேகு-வெகுள்-வெகுளி.

**307. *சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு***
***நிலத்தறைந்தான் கைபிழையா தற்று.***

**(இ-ரை.)** சினத்தைப் பொருள் என்று கொண்டவன் கேடு - சினத்தைத் தன் ஆற்றலுணர்த்தும் சிறந்த பண்பென்று பொருட்படுத்தி அதைக் கொண் டவன் கெடுதல்; நிலத்து அறைந்தான் கை பிழையாத அற்று - நிலத்தின்கண் அறைந்தவன் கை தப்பாது நோவுறுதல் போன்றதாம்.

இங்குப் பொருள் என்றதைப் "பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்" (761) என்பதிற்போலக் கொள்க.

**308. *இணரெரி தோய்வன்ன வின்னா செயினும்***
***புணரின் வெகுளாமை நன்று.***

**(இ-ரை.)** இணர் எரி தோய்வு அன்ன இன்னா செயினும் - கொத்தான நாவுகளுள்ள பெருந்தீ வந்து சுட்டாற் போன்ற தீங்குகளை ஒருவன் தொடர்ந்து செய்தானாயினும்; வெகுளாமை புணரின் நன்று - அவனைச் சினவாமை கூடுமாயின் நன்றாம்.

தீமையின் மிகுதிதோன்ற 'இணரெரி' என்றும், தீவினைப் பன்மை தோன்ற 'இன்னா' என்றும், முற்றத்துறந்தவரும் பொறுத்தலருமை தோன்றப் 'புணரின்' என்றுங் கூறினார். சினத்தீ, கனல்தீயினுங் கொடியது என்பது கருத்து.

**309. *உள்ளிய தெல்லா முடனெய்து முள்ளத்தா***
***லுள்ளான் வெகுளி யெனின்.***

**(இ-ரை.)** உள்ளத்தால் வெகுளி உள்ளான் எனின் - தவஞ் செய்வான் தன் மனத்தாற் சினத்தை ஒருபோதுஞ் கருதானெனின்; உள்ளியது எல்லாம் உடன் எய்தும் - அவன் பெறக்கருதிய பேற்றையெல்லாம் ஒருங்கே பெறுவான்.

'உள்ளத்தால்' என்னும் மிகைச்சொல் அருள்பயின்ற வுள்ளம் என்பதை யுணர்த்தும். இம்மை மறுமை வீடென்னும் மூன்றும் அடங்க 'உள்ளிய தெல்லாம்' என்றார். சினம் கருத்து வடிவில் இல்லையெனின், சொற் செயல் வடிவிலும் இராதென்பது கருத்து.

**310. இறந்தா ரிறந்தா ரனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை.**

**(இ-ரை.)** இறந்தார் இறந்தார் அனையர் - சினத்தின்கண் அளவுகடந்தவர் உயிரோடிருப்பினும் செத்தவரை யொப்பர்; சினத்தைத் துறந்தார் துறந்தார் துணை - சினத்தை முற்றும் விட்டவர் இருவகைப் பற்றையும் முற்றத் துறந்தா ரளவினராவர்.

'சினத்தை.... துணை' என்பதற்கு, "சினத்தைத் துறந்தார் சாதற் றன்மையராயினும் அதனை யொழிந்தா ரளவினர்... சினத்தை விட்டார்க்குச் சாக்காடெய்துதற்குரிய யாக்கை நின்றதாயினும், ஞானத்தான் வீடு பெறுதல் ஒருதலையாகலின் அவரை வீடு பெற்றாரோ டொப்ப ரென்றுங் கூறினார்" என்று பரிமேலழகர் உரைத்திருப்பது உயர்வாய்த் தோன்றினும் சற்று வலிந்து பொருள் கொண்டதாகும். 'சினத்தை' என்பது முன்னும் பின்னும் இசையும் தாப்பிசைப் பொருள்கோளும் இடைநிலை விளக்கணியுமாகும்.

## அதி. 32 - இன்னாசெய்யாமை

*அதாவது, பகைபற்றியாவது ஒரு பயனோக்கியாவது விளையாட்டாகவாவது கவனமின்மையாலாவது ஒருயிர்க்கும் ஒரு தீங்கும் செய்யாமை. சினமில்லாத போதும் இன்னாசெய்தல் நிகழுமாயினும், பகைபற்றி நிகழ்வதே பெரும்பான்மை யாதலாலும், பகை வெகுளியின் நீட்சியாதலாலும், அதை விலக்குதற்கு இது வெகுளாமையின் பின் வைக்கப்பட்டது.*

*இன்னுதல் இனித்தல் அல்லது இன்பமாதல். இன் - இன்பு - இன்பம். இன்-இனி. 'இன்னா' இனிய என்பதன் எதிர்மறையான பலவின்பால் வினையாலணையும் பெயர்.*

**311. சிறப்பீனுஞ் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா
செய்யாமை மாசற்றார் கோள்.**

**(இ-ரை.)** சிறப்பு ஈனும் செல்வம் பெறினும் - சிறப்பைத் தரும் பெருஞ் செல்வம் பிறரை வருத்திப் பெறக் கூடுமாயினும்; பிறர்க்கு இன்னா செய்யாமை மாசு அற்றார் கோள் - அதைப் பெறுதற்குப் பிறர்க்குத் தீங்கு செய்யாமை குற்றமற்ற பெரியோர் கொள்கையாம்.

இதனாற் பெரும்பய னோக்கியும் இன்னா செய்தல் விலக்கப்பட்டது.

312. கறுத்தின்னா செய்தவக் கண்ணு மறுத்தின்னா
செய்யாமை மாசற்றார் கோள்.

(இ-ரை.) கறுத்து இன்னா செய்த அக்கண்ணும் - ஒருவன் தம்மேற் கறுவுகொண்டு தீயவற்றைச் செய்தவிடத்தும்; மறுத்து இன்னா செய்யாமை மாசு அற்றார் கோள் - திருப்பித் தாம் அவனுக்குத் தீயவை செய்யாமையும் குற்றமற்ற பெரியோர் கொள்கையாம்.

இறந்தது தழுவிய எச்சவும்மை தொக்கது. இதனாற் பழிக்குப் பழி செய்யும் பகைமைபற்றி இன்னா செய்தல் விலக்கப்பட்டது.

313. செய்யாமற் செற்றார்க்கு மின்னாத செய்தபி
னுய்யா விழுமந் தரும்.

(இ-ரை.) செய்யாமல் செற்றார்க்கும் இன்னாத செய்த பின் - தான் ஒரு தீங்கும் செய்யாதிருக்கவும் தன்மேற் பகைமை கொண்டு தீங்கு செய்தவர்க்கும் துறவுபூண்டவன் தீயவற்றைச் செய்வானாயின்; உய்யா விழுமம் தரும் - அச் செயல் அவனுக்குத் தப்ப முடியாத துன்பத்தைத் தரும்.

துன்பமாவது தவமிழத்தலும் கரிசு (பாவம்) அடைதலும். துறவறத்தில் தீமைக்குத் தீமை செய்தலும் தீவினையாம்.

314. இன்னாசெய் தாரை யொறுத்த லவர்நாண
நன்னயஞ் செய்து விடல்.

(இ-ரை.) இன்னா செய்தாரை ஒறுத்தல் - தமக்குத் தீயவை செய்தாரைத் துறந்தார் தண்டிக்கும் முறையாவது; அவர் நாண நல் நயம் செய்து விடல் - அவர் வெட்குமாறு அவர்க்குப் பெரு நன்மைகளைச் செய்து அவ் விரண்டையும் மறந்துவிடுதலாம்.

பிறர் செய்த தீமையையும் தாம் செய்த நன்மையையும் நினைப்பின் மீண்டுந் தளிர்க்கு மாதலின் முற்றும் மறக்கற்பாலன வாயின.

315. அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போற் போற்றாக் கடை.

(இ-ரை.) பிறிதின் நோய் தம் நோய்போல் போற்றாக்கடை - பிறிதோருயிர்க்கு வந்த துன்பங்களைத் தமக்கு வந்தன போலக் கருதிக் காவா விடத்து;

அறிவினான் ஆகுவது உண்டோ - உயிர்களின் இயல்பைப்பற்றி அறிந்த அறிவினால் ஏதேனும் ஒரு பயனுண்டோ? இல்லை யென்றவாறு.

உயிர்களைப்பற்றி அறிந்த அறிவாவது; உயிர்கள் எழுவகைப்பட்டன என்பதும், அவை தொடக்கமிலியாகத் தத்தம் நல்வினை தீவினைக் கேற்ப நால்வகுப்பிற் பிறந்திறந்து துன்புற்று வருகின்றன என்பதும், அப் பிறவித் துன்பத்திற்கு இயல்பாக எல்லையில்லை யென்பதும், அத் துன்பத்தினின்று விடுதலை பெறும் வழி இறைவன் திருவருளைத் துணைக்கொண்டு இரு வகை யறங்களுள் ஒன்றைத் தூய்மையாகக் கடைப்பிடித்தலே என்பதுமாம்.

இனி, பிறவுயிர்க்குத் துன்பம் வராமற் காத்தலாவது, அஃறிணையில் இயங்குதிணையைச் சேர்ந்த நீர்வாழி, ஊரி, பறவை என்னும் மூவகை யுயிர் களுள், கூர்ந்து நோக்கினாலொழியக் கண்ணிற்குப் புலனாகாத நுண்ணுயிரிகளு மிருப்பதால் நடத்தல், நிற்றல், இருத்தல், கிடத்தல் முதலிய நிலைகளிலும், உண்டல் பருகல் முதலிய வினைகளிலும், கருவிகள் கொண்டு செய்யும் பல்வேறு தொழில்களிலும் அந் நுண்ணுயிரிகட்குச் சேதம் நேராவாறு கவனித்து ஒழுகுதலாம். இதனாற் கவனமின்மையால் நேரும் இன்னாச் செயல் விலக்கப்பட்டது.

பருவுடம்புள்ள பிறவுயிரிகள் தம்மைத் தாமே காத்துக்கொள்ளு மென்பதும், நுண்ணுயிரிகள் போல் எளிதாய்ச் சேதத்திற் குள்ளாகா என்பதும் கருத்தாம்.

***316. இன்னா வெனத்தா னுணர்ந்தவை துன்னாமை***
***வேண்டும் பிறன்கட் செயல்.***

**(இ-ரை.)** இன்னா எனத் தான் உணர்ந்தவை - இவை மக்கட்குத் தீங்கு விளைப்பன என நால்வகை அளவைகளாலும் தான் அளந்து அறிந்தவற்றை; பிறன்கண் செயல் துன்னாமை வேண்டும் - பிறனிடத்துச் செய்தலைப் பொருந்தாமை துறந்தவனுக்கு வேண்டும்.

பட்டறிவாலும் உணர்ச்சியாலும் உண்மையென் றறிந்தவற்றை 'உணர்ந்தவை' என்றார்.

***317. எனைத்தானு மெஞ்ஞான்றும் யார்க்கு மனத்தானா***
***மாணாசெய் யாமை தலை.***

**(இ-ரை.)** மனத்தான் ஆம் மாணா - மனத்தோடு கூடிய தீய செயல் களை; எஞ்ஞான்றும் யார்க்கும் எனைத்தானும் செய்யாமை தலை - எக்காலத்தும் எவர்க்கும் எத்துணைச் சிறிதும் செய்யாதிருத்தல் தலைமையான அறமாம்.

மனத்தோடு கூடிய செயலாவது அறிந்து செய்யுஞ் செயல். மாணுதல் நன்றாதல். 'மாணா' பலவின்பால் எதிர்மறை வினையாலணையும் பெயர். வலிமையுள்ள காலத்தையும் உட்படுத்த 'எஞ்ஞான்றும்' என்றும், எளியாரை யும் விலக்க 'யார்க்கும்' என்றும், 'சிறுபொறி பெருந்தீ' யாதலானும், சிறுநஞ்சும் பெருந்தீங்கு செய்தலானும், சிறு வினையும் தீயது தீவினையே என்று கருதி 'எனைத்தானும்' என்றும் கூறினார்.

*318. தன்னுயிர்க் கின்னாமை தானறிவா னென்கொலோ*
*மன்னுயிர்க் கின்னா செயல்.*

**(இ-ரை.)** தன் உயிர்க்கு இன்னாமை தான் அறிவான் - பிறர் செய்யுந் தீயவை தனக்குத் தீயனவாயிருக்குந் தன்மையைப் பட்டறிகின்றவன்; மன் உயிர்க்கு இன்னா செயல் என்கொல் - தான் மட்டும் மற்றவர்கட்குத் தீயவை செய்தல் என்ன கரணியம் (காரணம்) பற்றியோ!

இன்ப துன்ப நுகர்ச்சித்திறம் எல்லாவுயிர்க்கும் ஒன்றே யாதலால், தன்னுயிர்க்குத் தீங்கானது மற்றவுயிர்க்கும் தீங்காகுமென்று அறிந்து அதை விலக்க வேண்டியவன் என்னும் கருத்துத் தோன்றத் 'தானறிவான்' என்றும், பகுத்தறிவுள்ள உயர்திணையைச் சேர்ந்தவன் இங்ஙனஞ் செய்வது மயக் கத்திற்கிடமானது என்பது தோன்ற 'என்கொலோ' என்றும் கூறினார். 'கொல்' ஐயம். 'ஓ' அசைநிலை; மயக்கம் எனினுமாம். 'மன்' மற்று என்னும் இடைச் சொல்லின் மூலம், மற்ற என்னும் பொருளது.

*319. பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா*
*பிற்பகற் றாமே வரும்.*

**(இ-ரை.)** பிறர்க்கு இன்னா முற்பகல் செய்யின் - ஒருவர் பிறருக்குத் தீயவற்றை ஒரு பகலின் முற்பகுதியிற் செய்வாராயின்; தமக்கு இன்னா பிற்பகல் தாமே வரும் - அதன் விளைவாகத் தமக்குத் தீயவை அப் பகலின் பிற்பகுதியில் அவர் செய்யாமல் தாமே வரும்.

பகலின் முன்பின்னைக் குறிக்கும் 'முற்பகல்', 'பிற்பகல்' என்பன, பின்முன்னாகத் தொக்க ஆறாம் வேற்றுமைத் தொகை. இலக்கணப்போலி

என்பதும் இதுவே. விரைந்து வருதலை யுணர்த்தப் 'பிற்பகல்' என்றும், தீமை செய்யப்பட்டவ ரல்லாத பிறரிடத்தினின்றும் வருமாதலால் 'தாமே வரும்' என்றும் கூறினார். அத்தகைய வினைகளைச் செய்யற்க என்பது கருத்து.

"முற்பகற் செய்தான் பிறன்கேடு தன்கேடு
பிற்பகற் காண்குறூஉம் பெற்றிய காண்" (சிலப். 21: 3–4)

என்று கண்ணகி கூற்றாக, நெடுஞ்செழியன் முடிவை இக் குறட்கு இளங் கோவடிகள் எடுத்துக்காட்டியிருத்தல் காண்க.

இனி, "தான் வெட்டின குழியில் தானே விழுவான்" என்பதற்கேற்ப, ஒருவன் பிறருக்கு முற்பகல் செய்த தீமைகளே பிற்பகலில் தனக்குத் தீமையாகத் திரும்பி வரும் என்று பொருளுரைப்பினுமாம்.

**320. நோயெல்லா நோய்செய்தார் மேலவா நோய்செய்யார்**
**நோயின்மை வேண்டு பவர்.**

(இ–ரை.) நோய் எல்லாம் நோய் செய்தார் மேலவாம் - துன்பங்க ளெல்லாம் முற்பிறப்பினும் இப்பிறப்பினும் பிறவுயிர்கட்குத் துன்பஞ் செய் தாரையே சார்வனவாம்; நோய் இன்மை வேண்டுபவர் நோய் செய்யார் - ஆதலால், தம்முயிர்க்குத் துன்பம் வேண்டாதவர் பிறிதோர் உயிர்க்குந் துன்பஞ் செய்யார்.

"தன்வினை தன்னைச் சுடும்", "வினை விதைத்தவன் வினையறுப்பான்" ஆதலால், தன்னலம் பற்றியேனும் பிறருக்குத் தீமை செய்யாதிருக்க என்று படர்க்கையில் வைத்துக் கூறினார். இதில் அமைந்துள்ள அணி சொற்பொருட் பின்வருநிலை.

## அதி. 33 - கொல்லாமை

*அதாவது, இல்லறத்தில் அரசன் கொலைத் தண்டனையும் போர்த் தொழிலுந் தவிர மற்ற வகைகளில் ஈரறிவுயிர் முதல் ஆறறிவுயிர் வரை எவ்வுயிரையுங் கொல்லாமையும், துறவறத்தில், சிறப்பாக இறுதிநிலையில், ஓரறிவுயிரையுங் கொல்லாமையும் ஆம்.*

*இன்னாதவற்றுள் மிகக் கொடியது கொலையாதலாலும், ஓரறி வுயிர்க் கொலை துறவறத்தின் இறுதிநிலையிலேயே ஒழிக்கக் கூடிய தாதலாலும், இது இன்னா செய்யாமையின் பின் வைக்கப்பட்டது.*

*மரக்கறியுணவும் ஓரறி வுயிர்க்கொலையால் வருவதாலும், முளைக் கவுந் துளிர்க்கவும் கூடிய ஒவ்வொரு விதையும் நிலைத்திணை யுறுப்பும் முட்டைபோன் றிருத்தலாலும், பிறர் சமைத்த மரக்கறி யுணவுண்பதும், பிறர் கொன்ற வுயிரியின் ஊனைத் தின்பது போலா மாதலாலும், துறவியர் விரும் புவது வீட்டுலக வாழ்க்கையேயன்றி இவ்வுலக வாழ்க்கையன் றாதலாலும், முற்றத் துறந்த முழு முனிவர்,*

*"கனியேனும் வறியசெங் காயேனு முதிர்சருகு*
*கந்தமூ லங்களேனும்*
*கனல்வாதை வந்தெய்தி னள்ளிப் புசித்துப்"*

*பின்பு இலை சருகுகளையே யுண்டு, இறுதியில் அதுவுமின்றி ஒகத்தி லமர்ந்து உடம்பு துறப்பர் என அறிக.*

**321. அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல்**
**பிறவினை யெல்லாந் தரும்.**

**(இ-ரை.)** அறவினை யாது எனின் கொல்லாமை - முழுநிறைவான அறச்செயல் எதுவென்று வினவின், அது ஒருயிரையுங் கொல்லாமையாம்; கோறல் பிறவினை எல்லாம் தரும் - கொலைவினை பிற தீவினைக ளெல்லாவற்றின் பயனையும் ஒருங்கே தரும்.

கொல்லாமை எதிர்மறை யறவினை. கொல்லுதல் உடன்பாட்டுத் தீவினை. இரண்டும் தன் தன் தன்மையில் முழுநிறைவானவாம். கொல்லுதல் கொல்லாமையின் மறுதலையாதலால், பிற தீவினைப் பயனையெல்லாந் தருவதொடு நல்வினைப் பயனை யெல்லாம் அழித்துவிடு மென்பதும் பெறப் படும். ஆகவே, அத்தகைய மாபெருங் கொடுவினையைச் செய்யற்க என்பதாம்.

**322. பகுத்துண்டு பல்லுயி ரோம்புத னூலோர்**
**தொகுத்தவற்று ளெல்லாந் தலை.**

**(இ-ரை.)** பகுத்து உண்டு பல் உயிர் ஓம்புதல் - கிடைத்த வுணவை இயன்றவரை பசித்த வுயிர்கட்குப் பகுத்துக் கொடுத்துண்டு பல்வகை யுயிர் களையும் பாதுகாத்தல்; நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை - அற நூலோர் இருவகை யறத்தார்க்குந் தொகுத்த அறங்க ளெல்லாவற்றுள்ளும் தலையாயதாம்.

கொல்லாவறத்தைக் கடைப்பிடித்தல் கொலையை நீக்குதல். கொலை உடல் சிதைத்துக் கொல்லுதலும் உணவளியாமற் கொல்லுதலும் என இரு வகை. இரண்டும் விளைவளவில் ஒன்றே. உண்ணாத வுயிரி இறக்குமாதலால் வாழ்நாள் முழுதும் உணவளித்துக் காத்தல் வேண்டு மென்பது தோன்ற 'ஓம்புதல்' என்றார். நூலோர் என்று பொதுப்படக் கூறியது இயல் நோக்கி அறநூலோரைக் குறித்தது. உணவளித்துக் காத்தல்போற் சிறந்த நன்மை வேறின்மையின் 'தலை' என்றார்.

**323. *ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்***
***பின்சாரப் பொய்யாமை நன்று.***

**(இ-ரை.)** ஒன்றாக நல்லது கொல்லாமை - முதற்படியாக நல்லற மாவது கொல்லாமையே; அதன் பின்சார நன்று பொய்யாமை - அதற்கு அடுத்த படியாக நல்லது வாய்மையாம்.

கொல்லாமையைப்பற்றிக் கூறவந்த விடத்துப் பொய்யாமையை ஏன் உடன் கூறினாரெனின், முன்பு வாய்மை யதிகாரத்தில் "பொய்யாமை.... தரும்", "பொய்யாமை.....நன்று", "யாமெய்யா.....பிற" என்று வாய்மையைத் தலை மையாகக் கூறியது இங்குக் கொல்லாமையைத் தலைமையாகக் கூறியதொடு முரணுமாகலின், முற்கூறியதை மட்டுப்படுத்தி இரண்டாந் தலைமையாக வரையறுத்தற்கென்க. அங்ஙனமாயின் வாய்மை யதிகாரத்திற் கூறியது பொய்யாகாதோ வெனின், ஆகாது; அங்குச் சொல்வடிவான அறங்களுள் வாய்மையையும் இங்குச் செயல் வடிவான அறங்களுள் கொல்லாமையை யும் தலைமையாகக் கூறி அவ் விரண்டையும் ஒப்பு நோக்கியவிடத்து மண்ணுலகில் மக்கட்குமட்டு முரிய வாய்மையினும் அறுவகை யுயிர்கட்கு முரியதும் உயிரைக் காப்பதுமான கொல்லாமையைச் சிறந்ததாகக் கண்ட மையின் என்க. இனி, கொலையும் செங்கோல் தண்டனையால் நன்மை யாவ தால் வாய்மை என்பது நன்மை செய்யும் பொய்யையுந் தழுவுவதாலும், தீமை செய்யின் பொய்யாக மாறுவதாலும், திரிபுள்ளதென்பது பொருந்தாது.

**324. *நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றுங்***
***கொல்லாமை சூழு நெறி.***

**(இ-ரை.)** நல் ஆறு எனப்படுவது யாது எனின் - பேரின்ப வீடுபேற்றிற்கு நல்ல வழியென்று சொல்லப்படுவது எது என வினவின்; யாது ஒன்றும்

கொல்லாமை சூழும் நெறி - அது எவ்வுயிரையும் கொல்லாமையைக் கருதும் நெறியாகும்.

'யாதொன்றும்' என்றது துறந்தாரை நோக்கி ஓரறி வுயிரையும் உட்படுத்தற்கு.

**325. நிலையஞ்சி நீத்தாரு ளெல்லாங் கொலையஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் றலை.**

**(இ-ரை.)** நிலை அஞ்சி நீத்தாருள் எல்லாம் - பிறவி நிலைமைக்கு அஞ்சி அதனின்று விடுதலை பெறும்பொருட்டு உலகப்பற்றைத் துறந்த வருளெல்லாம்; கொலை அஞ்சிக் கொல்லாமை சூழ்வான் தலை - கொலை வினைக் கஞ்சிக் கொல்லாவறத்தைக் கடைப்பிடிப்பவன் தலையாவான்.

பிறவி நிலைமையாவது, எல்லா வுயிர்களும் இருதிணைப் பிறப்பிலும் எல்லையில்லாது பிறந்திறந்து, பிறப்புப் பிணி மூப்புச் சாக்காட்டொடு வறுமை யும் பசியும் பகையும் உடல் வருத்தமுங் கொண்டு வருந்துதல்.

**326. கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாண்மேற்
செல்லா துயிருண்ணுங் கூற்று.**

**(இ-ரை.)** கொல்லாமை மேற்கொண்டு ஒழுகுவான் வாழ்நாள்மேல் - கொல்லாமையைக் கடைப்பிடித்து ஒழுகுபவனின் வாழ்நாள்மேல்; உயிர் உண்ணும் கூற்றுச் செல்லாது - உயிரைக் கவரும் கூற்றுவன் செல்லமாட்டான்.

"இழைத்தநா ளெல்லை யிகவா பிழைத்தொரீ இக்
கூற்றங் குதித்துய்ந்தா ரீங்கில்லை" (நாலடி. 6)

என்பதே உண்மையாதலால், உயிருண்ணுங் கூற்று வாழ்நாள்மேற் செல்லா தென்பது வாழ்நாள் நீடிக்கும் என்பதைக் குறிக்குமேயன்றி வேறன்று. வாழ் நாள் நீடிப்பதற்குக் கரணியம் (காரணம்) மரக்கறியுணவும் மனவமைதியும் மக்கள் நல்லெண்ணமும் இருக்கை வளிநிலைப் பயிற்சியும் அறவினைப் பயனும் இறைவன் திருவருளுமாம். வாழ்நாள் நீடிப்பதனால் துறவறத்திற் குரிய மெய்ப்பொரு ளாராய்ச்சியும் ஓகப்பயிற்சியும் முதிர்ச்சி பெறும்.

"உடம்பா ரழியின் உயிரா ரழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்

உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே" (திருமந். 724)

என்று திருமூலர் கூறியதுங் காண்க. இனி,

"நெடுநா ளிருந்தபேரும்
நிலையாக வேயினுங் காயகற் பந்தேடி
நெஞ்சுபுண்ணாவர்"

என்று தாயுமானவர் கூறுதலால், காயகற்பத்தினால் வாழ்நாள் நீடித்தலுமாம்.

**327. தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை.**

**(இ-ரை.)** தன் உயிர் நீப்பினும் - ஓர் உயிரியைக் கொல்லாதவழித் தன்னுயிர் தன்னுடம்பினின்று நீங்கிவிடு மாயினும்; தான் பிறிது இன்னுயிர் நீக்கும் வினை செய்யற்க - தான் பிறிதோர் உயிரியின் இனிய வுயிரை அதன் உடம்பினின்று நீக்கும் செயலைச் செய்யற்க.

தன்னுயிரைக் காத்தற்குப் பிறிதோ ருயிரியைக் கொல்லும் நிலைமை மூன்றாம். அவை, தன்னைக் கொல்ல வந்த வுயிரியைக் கொல்லுதல், தன் நோய்க்கு மருந்தாக ஓர் உயிரியைக் கொன்று தின்னுதல், தன்னைக் கொன்று விடுமென்று நம்பி அதைத் தடுத்தற்பொருட்டு ஒரு பேய்த் தெய்வத்திற்குக் காவு கொடுத்தல் என்பன. இம் முந்நிலைமையிலும் கொல்லா திருக்க என்றார் திருவள்ளுவர். கொலை செய்தவழியும் உயிர் உலகத்தில் நிலையாதாகலானும், கொலையாற் கரிசும் கொல்லாமையால் அறமும் வளர்தலானும், கொல்வதினுங் கொலையுண்ணுதலே சிறந்ததென்பது கருத்து, 'பிறிதின்னுயிர்' என்றது இருதிணைக்கும் பொதுவாம்.

**328. நன்றாகு மாக்கம் பெரிதெனினுஞ் சான்றோர்க்குக்
கொன்றாகு மாக்கங் கடை.**

**(இ-ரை.)** நன்று ஆகும் ஆக்கம் பெரிது எனினும் - தேவரை நோக்கிச் செய்யும் வேள்வியிற் கொன்றால் இன்பமாகுஞ் செல்வம் பெரிதாமென்று ஆரியர் கூறினும்; சான்றோர்க்குக் கொன்று ஆகும் ஆக்கம் கடை - தமிழ்ச் சான்றோர்க்குக் கொல்வதினால் வரும் செல்வம் மிக இழிவானதாம்.

'எனினும்' என்னுஞ் சொல்லை "நல்லா றெனினுங் கொளல்தீது" (குறள். 222) என்பதிற்போற் கொள்க. நன்றாகும் ஆக்கமாவது விண்ணுல

கத்தில் தேவராகத் தோன்றி நுகரும் இன்பம். வேள்வி வேட்டல் ஆரியர் வழக்கமேயாதலாலும், அதை எதிர்ப்பவர் தமிழரேயாதலாலும், ஆரியர் தமிழர் என்னுஞ் சொற்கள் வருவித்துரைக்கப்பட்டன.

கடைக்கழகக் காலத்திலும் பின்பும் தமிழ வேந்தரும் ஆரிய வேள்வி வேட்டனரேயெனின், அவர் ஆரியப் பார்ப்பனரை நிலத்தேவ ரென்று நம்பித் தம் அறியாமையாலும் ஏமாற்றப்பட்ட நிலையிலும் செய்தமையால், அது தமிழ அறிஞரால் ஒப்புக்கொள்ளப்பட்ட தன்றென்று கூறி விடுக்க.

**329. கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவா ரகத்து.**

(இ-ரை.) கொலை வினையர் ஆகிய மாக்கள் - வேள்வியிலும் பிறவிடத்தும் கொலைத்தொழிலைச் செய்யும் பகுத்தறிவில்லா மாந்தர்; புன்மை தெரிவார் அகத்துப் புலைவினையர் - தம்மை மக்களுள் உயர்ந்தோராகச் சொல்லிக் கொள்ளினும் அத் தொழிலின் கீழ்மையை அறியும் அறிவுடையோர் நெஞ்சத்துப் புலைத்தொழிலோ ராவர்.

திருவள்ளுவர் கொலைத்தொழிற்கு எவ்வகைத் தவிர்ப்பும் (exemption) கொடாமையானும், "அவிசொரிந் தாயிரம் வேட்டலின்... - நன்று" (256) என்று ஆரிய வேள்வியைக் கண்டித்திருத்தலானும், இங்குக் 'கொலைவினை' என்பது வேள்வியையும் உளப்படுத்தியதேயாகும். கொலை வினையர் மக்கட் பண்பில்லாதவ ரென்று கருதி அவரை 'மாக்கள்' என்றார். பிறவிடங்கள் காளிக்கோட்டம் போன்ற கோயில்களும் பேய்த்தெய்வங்கட்குக் காவுகொடுக்கும் இடங்களும் ஆம். கொலைவினையைத் தொழிலாகக் கொண்டிருக்கும் பூசாரியரைக் 'கொலை வினையர்' என்றார்.

> "உப்பிலிப் புழுக்கல் காட்டுட் புலைமக னுகுப்ப வேகக்
> கைப்பலி யுண்டி யானும் வெள்ளின்மேற் கவிழ நீரும்" (சீவக. 2684)

என்னும் சீவகசிந்தாமணிச் செய்யுட் பகுதியின் உரையில்,

"புலைமகனென்றார், புரோகிதனை; அவன் தன் குலத்திற்குரியன செய்யாது அரசன் குலத்திற்குரிய தொழில்களை மேற்கொண்டு நிற்றலின்; "புலைய னேவப் புன்மே லமர்ந்துண்டு" (புறம். 360) என்றும், "இழிபிறப் பினோ னீயப்பெற்று" (புறம். 336) என்றும், பிறருங் கூறினார்" என்று நச்சினார்க்கினியர் கூறியிருப்பது ஆராயத்தக்கது.

**330. உயிருடம்பி னீக்கியா ரென்ப செயிருடம்பிற்**
**செல்லாத்தீ வாழ்க்கை யவர்.**

**(இ-ரை.)** செயிர் உடம்பின் செல்லாத் தீ வாழ்க்கையவர் - அருவருப்பான நோயுடம்புடன் வறுமை கூர்ந்து இழிதொழில் செய்து உயிர் வாழ்பவரை; உயிர் உடம்பின் நீக்கியார் என்ப - முற்பிறப்பில் உண்ணும் பொருட்டு உயிர்களை அவை நின்ற உடம்பினின்று நீக்கியவர் என்று சொல்வர் வினைப்பயன் அறிந்தோர்.

செல்லாமை - வாழ்க்கை நடவா வறுமை. இழிதொழில் இரந்து பிழைத்தல்.

"அக்கேபோ லங்கை யொழிய விரலழுகித்
துக்கத் தொழுநோ யெழுபவே – யக்கால்
அலவனைக் காதலித்துக் கான்முறித்துத் தின்ற
பழவினை வந்தடைந்தக் கால்" (நாலடி.123)

என்பது செயிருடம்பிற்குக் கரணியம் (காரணம்) கூறிற்று.

## அதி. 34 - நிலையாமை

*அதாவது, நிலவுலகத்தில் தோன்றும் அறுவகை யுயிர்களும் பிறிதோருயிராற் கொல்லப்படா விடத்தும், எப்பருவத்தும் பிணியாலும், பிணியில்லாது வாழ்நாள் நீடினும் தத்தம் இனத்திற்குரிய காலவெல்லையில் மூப்பாலும், ஒருவகையானும் தடுக்கப்பெறாது தம்முடம்பினின்று நீங்கி நிலையாமற் போதல்.*

*இந் நிலையாமை நொடிப்பொழுதில் ஆயிரக்கணக்கான மறவர் போர்க்களத்திற் கொலையுண்பதால் விளங்கித் தோன்றுவதாலும், கொல்லாமை யில்லாவிடத்தும் தப்பாது நிகழும் என்பதை யுணர்த்தற்கும், கொல்லாமையின் பின் வைக்கப்பட்டது.*

*துன்பமிக்க உலக வாழ்வும் நிலையாது நீங்குவதாலும், அந் நீக்கமும் நிலையாது மீண்டு மீண்டும் எல்லையில்லாது பிறவி தோன்றும் என்னும் அறிவினாலும், அப் பிறவிகளுள் கீழ்ப்பிறவியொடு எரியுலகத் துன்பமும்*

*இடையிடும் என்னும் அச்சத்தாலும், உலகவாழ்க்கையில் வெறுப்புற்று இறைவன் திருவடியடைந்து துன்பமற்றதும் என்று முள்ளதுமான பேரின்பத் தைப் பெறும் முயற்சியை விரைந்து செய்யத் தூண்டுவது, நிலையாமை யுணர்ச்சியே.*

**331.** ***நில்லா தவற்றை நிலையின வென்றுணரும்***
***புல்லறி வாண்மை கடை.***

**(இ-ரை.)** நில்லாதவற்றை நிலையின என்று உணரும் புல்லறிவாண்மை - நிலையில்லாத பொருள்களையும் நிலைமைகளையும் நிலையானவை யென்று கருதும் பேதைமை; கடை - கடைப்பட்ட அறியாமையாம்.

நாள்தொறும் மாந்தர் எல்லாப் பருவத்திலும் இறக்கக்கண்டும், குறிப் பிட்ட அகவைக்கு மேற்பட்டவர் ஒருவரும் உலகத்தில் இல்லாமை யறிந்தும், இளைஞர் முதியராகவும் செல்வர் வறியராகவும் மாறுவதைப் பார்த்தும், யாக்கையும் இளமையும் செல்வமும் தமக்கு நிலைக்குமென்று கருதுவது பேதைமை யாதலால் 'புல்லறிவாண்மை' என்றும், இறுதிவரை ஒருபோதும் அறிவுபெறாமையாற் 'கடை' யென்றுங் கூறினார்.

**332.** ***கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்***
***போக்கு மதுவிளிந் தற்று.***

**(இ-ரை.)** பெருஞ்செல்வம் கூத்தாட்டு அவைக்குழாத்து அற்றே - ஒருவனுக்குப் பெருஞ்செல்வஞ் சேர்வது ஆடலரங்கிற்குக் காண்போர் கூட்டம் வந்து கூடுவது போன்றதே; போக்கும் அது விளிந்த அற்று - அச் செல்வங் கெடுவதும் அவ் வாடல் முடிந்தபின் அக் கூட்டங் கலைவது போன்றதே.

எத்துணைச் செல்வமும் கெடுமென்றற்குப் 'பெருஞ்செல்வம்' என்றார். 'போக்கும்' என்னும் எச்சவும்மை வருகையைத் தழுவிற்று. பல்வேறிடங் களிலிருந்து பல்வகை மக்கள் வந்து ஆடல் முடிந்தபின் போய்விடுவது போல, பல்வேறு வழிகளில் திரண்ட பல்வகைச் செல்வமும் நல்வினைப் பயன் நீங்கினவுடன் போய்விடும் என்பது, உவமைப்பொருள் விரிவாம். ஏகாரம் தேற்றம்.

**333.** ***அற்கா வியல்பிற்றுச் செல்வ மதுபெற்றா***
***லற்குப வாங்கே செயல்.***

**(இ-ரை.)** செல்வம் அற்கா இயல்பிற்று - செல்வம் யாரிடத்தும் நிலைக்காத தன்மையுடையது; அது பெற்றால் அற்குப ஆங்கே செயல் - ஆதலால், அத்தகைய செல்வத்தை ஒருவன் பெற்றால் நிலையான பயனுள்ள அறங் களை அப்பொழுதே செய்துகொள்க.

அல்குதல் தங்குதல் அல்லது நிலைபெறுதல். அல்கா என்பது ஓசை நயம்பற்றி வலித்தது. இவ் வதிகாரமும் ஈரறத்திற்கும் பொதுவாதலால், இல்லறத்தான் செல்வம் பெறின் தனக்கு மிஞ்சியதை விருந்தோம்பல், ஒப்புரவொழுகல் முதலிய வழிகளிலும், துறவறத்தான் செல்வம் பெறின் முழுவதையும் கோயில் வழிபாடு, இலவசக் கல்வி முதலிய வழிகளிலும் செலவிட வேண்டுமென்பது கருத்து. செல்வம் பெறுவது அரிதாதலின் 'பெறின்' என்றும், யாக்கையும் செல்வமும் நிலையாதன வாதலின் செல்வத்தை உடனே பயன்படுத்த வேண்டு மென்பார் 'ஆங்கே'யென்றுங் கூறினார்.

**334. நாளென வொன்றுபோற் காட்டி யுயிரீரும்**
**வாள துணர்வார்ப் பெறின்.**

**(இ-ரை.)** உயிர் - உயிரானது; நாள் என ஒன்று போல் காட்டி ஈரும் வாள் - நாள் என்று அளவிடுவதாகிய ஒரு கால அளவுபோல் தன்னைக் காட்டி வாழ்நாளைச் சமவளவான சிறுசிறு பகுதியாக அறுத்துச் செல்லும் வாளின் வாய்ப்பட்டிருப்பதாகத் தெரியும்; அது உணர்வார்ப்பெறின் - அதைக் கூர்ந் தறியும் அறிஞிருப்பாராயின் அவருக்கு.

ஒன்றாய் நித்தமாய் மாறாததா யிருக்கும் காலம் என்னும் கருத்துப் பொருள், தானாகவன்றிக் கதிரவன் தோற்ற மறைவுகளாலேயே நாட்கூறு படுவதால், 'நாளென வொன்றுபோல்' என்றும், அது தம் வாழ்நாளை யறுக் கும் வாளென்று உணரமாட்டாதார் நமக்கு நாள் நன்றாய்க் கழிகின்ற தென்று மகிழுமாறு மயக்கலின் 'காட்டி' யென்றும், இடைவிடாது அறுத்துச் செல்லு தலின் வாளின் வாயதென்றும், அதை உணர்வார் அரியராகலின் 'பெறின்' என்றுங் கூறினார்.

"வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார்
வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்
வைகலும் வைகற்றம் வாழ்நாண்மேல் வைகுதல்
வைகலை வைத்துணரா தார்" (நாலடி. 49)

என்னும் வெண்பாவையும் நோக்குக.

**335. நாச்செற்று விக்குண்மேல் வாராமுன் நல்வினை**
**மேற்சென்று செய்யப் படும்.**

**(இ-ரை.)** நாச் செற்று விக்குள் மேல் வாராமுன் - பேசமுடியாவாறு நாவையடக்கி விக்கல் எழுவதற்கு முன்; நல்வினை மேற்சென்று செய்யப் படும் - இல்லறத்தாரால் விண்ணிற்கும் துறவறத்தாரால் வீட்டிற்கும் ஏற்ற அறவினைகள் விரைந்து செய்யப்படல் வேண்டும்.

நாச்சென்று விக்குள்மேல் வருதல் உயிர்போதற் கடையாளமாம். அன்று செய்தலேயன்றிச் சொல்லுதலும் கூடாமையின் 'வாராமுன்' என்றும், "ஆறிலுஞ் சாவு நூறிலுஞ் சாவு" ஆதலால் 'மேற்சென்று' என்றுங் கூறினார். நிலையாமை நோக்கி நல்வினை விரைந்து செய்யத் தூண்டியவாறு.

**336. நெருந லுளனொருவ னின்றில்லை யென்னும்**
**பெருமை யுடைத்திவ் வுலகு.**

**(இ-ரை.)** ஒருவன் நெருநல் உளன் இன்று இல்லை - ஒருவன் நேற் றிருந்தான், இன்றில்லை; என்னும் பெருமை உடைத்து இவ் வுலகு - என்று சொல்லும் பெருமையை உடையது இவ் வுலகம்!

உண்மை உடம்போ டிருத்தலையும் இன்மை இறத்தலையுங் குறிக்கும். இரட்டுறலால் உண்மை பிறத்தலையுங் குறிக்குமேனும், குழவிப் பருவத் திறப்பு மிகச் சிறுபான்மையாதலானும், குழவியை அஃறிணைச் சொல்லாலன்றி 'ஒருவன்' என்று உயர்திணைச் சொல்லாற் குறிப்பது மரபன்மையாலும்,

"வீற்றிருந் தாளன்னை வீதி தனிலிருந்தாள்
நேற்றிருந்தா ளின்றுவெந்து நீறானாள்"

என்று பட்டினத்தடிகள் பாடியது போல், "நேற்றிருந்தான், இன்றில்லை" என்று இளைஞரையும் முதியோரையும்பற்றிக் கூறுவதே வழக்கமாதலாலும், அவ் வுரை சிறப்புள்ளதன்றாம். 'ஒருவன்' என்னும் ஆண்பால் தலைமைபற்றிப் பெண்பால் ஒன்றன்பாலையுந் தழுவும். 'பெருமை' என்றது எதிர் பொருளணி(Irony) யாதலால், 'நிலையாமை மிகுதி' என்று கொள்ளத் தேவையில்லை.

**337. ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப**
**கோடியு மல்ல பல.**

**(இ-ரை.)** ஒருபொழுதும் வாழ்வது அறியார் - ஒரு நொடிப்பொழு தேனும் தம் உடம்போடு கூடியிருத்தலை உறுதியாக அறியவியலாத மாந்தர்; கோடியும் அல்ல பல கருதுப - கோடிமட்டுமன்று, அதற்கு மேலும் பல எண்ணங் கொள்வர்.

'பொழுதும்' இழிவுசிறப்பும்மை. இறைவனருள் பெற்ற ஒரோவொரு வரன்றி ஏனையோர் தம் வாழ்நா ளெல்லையை அறியமாட்டாமையின், 'ஒருபொழுதும் வாழ்வ தறியார்' என்றார். கருதுங் கோடியின் மிக்க பல எண்ணங்களாவன: தாம் பல்வேறு வகையிற் செல்வம் ஈட்டுவதும், அச் செல்வத்தைக் கொண்டு வளமனைகள் கட்டுவதும், அவற்றின் அமைப்பு வடிவுகளை எண்ணி வகுப்பதும், நன்செய் புன்செய்கள் வாங்குவதும், அவை வாங்கவேண்டிய இடங்களையும் அவற்றில் விளைவிக்கும் பயிர்களையும் அவற்றிற்கு அமர்த்த வேண்டிய வினையாள்களையும்பற்றித் தீர்மானிப் பதும், மேன்மேலும் தம் வருவாயைப் பெருக்கும் வழிகளை வகுப்பதும், ஐம்புல இன்பங்களையும் நுகர்வதும், அறத்திற்கும் புகழுக்கும் செய்ய வேண்டியவற்றைக் கருதுவதும், மெய்காவற்கும் குற்றேவற்கும் மல்லரையும் மழவரையும் அமர்த்துவதும், விரையூர்திகளில் ஊர்வதும், பல்வேறு நாடுகளையும் நகரங்களையுஞ் சென்று காண்பதும், தம் மக்களை உயர்நிலைக் கல்வி கற்கவைப்பதும், அவரை உயர்ந்த பதவிகளில் அமர்த்துவதும், அவருக்குச் சிறந்த குடும்பத்துப் பெண்களை மணஞ்செய்துவைப்பதும், தம் பேரப்பிள்ளைகளைக் கண்டு களிப்பதும், அவருக்குச் செய்ய வேண்டிய வற்றைச் செய்வதும், பிறவுமாம். இதனாலேயே,

"உண்பது நாழி உடுப்பது நான்குமுழம்
எண்பது கோடிநினைந் தெண்ணுவன"

என்றார் ஔவையார்.

**338. குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
யுடம்பொ டுயிரிடை நட்பு.**

**(இ-ரை.)** உடம்பொடு உயிரிடை நட்பு - உடம்போடு உயிருக்குள்ள உறவு; குடம்பை தனித்து ஒழியப் புள் பறந்த அற்றே - முன் தனியாது உடனிருந்த முட்டைக்கூடு பின்பு பிரிந்து தனித்துக் கிடக்க, அதனுள் ளிருந்த பறவைக் குஞ்சு (வெளிவந்து இறக்கை முளைத்த பின்) பறந்து போன தன்மைத்தே.

குடம்பை என்னும் சொற்குச் சேக்கை (பறவைக்கூடு), முட்டைக்கூடு, புழுக்கூடு என முப்பொருள்கள் உள.

"வரியுடல் சூழக் குடம்பைநூல் தெற்றி" எனக் கல்லாடம் (கணபதி துதி, 29ஆம் வரி) புழுக்கூட்டைக் குறித்தது. "குடம்பை முட்டையுங் கூடு மாகும்" என்பது பிங்கலம் (10: 353).

குறளிலுள்ள குடம்பையென்னும் சொற்குப் பறவைக்கூடு என்று மணக்குடவ பரிதி காலிங்கரும், முட்டைக்கூடு என்று பரிமேலழகரும் பொருள் கொண்டனர். இவர் இங்ஙனம் வேறுபடக் கரணியம் இரண்டிற்கும் குடம்பை, கூடு என்பன பொதுப்பெயரா யிருப்பதும், உயிர் உடம்பினின்று பிரிந்துபோவதற்குப் பறவை தன் கூட்டை விட்டுப் பிரிந்து போய்விடுவதை நாலடியார்ச் செய்யுளொன்று உவமங் கூறியிருப்பதுமாம். ஆயின், திருக்குறள் மாந்தனுயிரையே சிறப்பாகக் கருதினாலும், தாய்ப்பாலுண்ணிகட் கெல்லாம் (mammalia) பொதுவான உயிரையும் அதன் உடம்பையுமேபற்றிக் கூறியிருக்க, நாலடியார்ச் செய்யுள் மாந்தனுயிரையும் அவனுடம்பையுமேபற்றிக் கூறிய துடன், அவன் பிறந்த குடும்பத்தையுஞ் சேர்த்துக் கூறியுள்ளது. இதுவே உவம வேறுபாட்டிற்குக் கரணியாம்.

"கேளாதே வந்து கிளைஞரா யிற்றோன்றி
வாளாதே போவரான் மாந்தர்கள் – வாளாதே
சேக்கை மரனொழியச் சேணீங்கு புட்போல
யாக்கை தமர்க்கொழிய நீத்து" (நாலடி. 30)

என்பது அந் நாலடியார்ச் செய்யுள்.

இதன் பொருள்: மாந்தர் ஒரு குடும்பத்தில் ஒருவரை யொருவர் கேளாமலே உறவினராக வந்து பிறந்து, பின்பு தாம் இறக்கும் போதும், பறவை மரத்தில் தான் கட்டிய கூட்டை விட்டுவிட்டு அம் மரத்திற்குச் சொல்லாமலே நெடுந்தொலைவு நீங்கிச் சென்றுவிடுவதுபோல, தம் உறவினருக்குச் சொல்லாமலே தம் உடலை அவரிடம் விட்டுவிட்டுச் சென்றுவிடுவர் என்பதாம்.

பறவை மரத்தைக் கேளாமலே வந்து அதில் தான் முட்டையிட்டுக் குஞ்சுபொரித்தற்குக் கட்டிய கூட்டை, அவ் வினை முடிந்தபின் விட்டுவிட்டு அம் மரத்திற்குச் சொல்லாமலே நீங்கிப் போய்விடுவதுபோல, மாந்தரும் தம் பழவினையின் ஒரு பகுதியான இருவினைப் பயனை நுகர்தற்குத் தாம் எடுத்த

வுடம்பை, அந் நுகர்ச்சி முடிந்தவுடன் தம் உறவினரிடம் விட்டுவிட்டு அவருக்குச் சொல்லாமலே நீங்கிவிடுவர் என்பது, உவமை விளக்கமாம். இதில், குடும்பத்திற்கு மரமும், மாந்தன் உயிர்க்குப் பறவையும், அவ னுடம்பிற்குக் கூடும் உவமமாம்.

திருவள்ளுவர் பாலுண்ணிகளின் அல்லது மாந்தரின் உயிரும் அதன் உடம்பும் உடன்தோன்றிப் பின்பு உயிர் பிரிவதையே கூறுவதால், உடம்பிற்கு முட்டைக் கூட்டை உவமங்கொள்வதே பொருத்தமாம். ஆயினும், குஞ்சு முட்டைக் கூட்டினின்று வெளிவந்தவுடன் பறவாமையால், 'வெளிவந்து இறக்கை முளைத்தபின்' என்று ஒரு தொடரை இடைச் செருக வேண்டுவ தாயிற்று. எங்கேனும் பொரித்தவுடன் பறந்துபோகும் பறவையின மிருப்பின், அது முழுநிறைவாகப் பொருந்தும் உவமமாம்.

தனித்தொழிய' என்றதனால், முன்பு தனியாமை பெறப்பட்டது. அதாவது, முட்டைக்கூடு முதலில் நொய்ய வுறையாகவும் பின்பு சவ்வாகவும் இறுதியில் தோடாகவும் கருவொடு கூடியிருந்து, குஞ்சு பொரிக்கும்வரை அதற்கு நிலைக்களமாய் நின்றமை. அதனால், அது மாந்தனுயிர் நீங்கும்வரை அதற்கு நிலைக்களமாக உடன்நிற்கும். உடம்பிற்கு உவமமாயிற்று முட்டைத்தோட்டிற்கும் உடம்பிற்கும், கூடு என்பது பொதுப்பெயராயிருப் பதும், உவமைக்குத் துணையாயிற்று. பறவைக்குஞ்சு முட்டையினின்று வெளிவந்தபின் அதற்குள் மீளப் புகாமையால், உடம்பினின்று நீங்கினபின் அதற்குள் மீளப்புகாத உயிருக்கு உவமமாயிற்று. முட்டைப் பிறவிகளுள் மீன், ஊரி(reptile) முதலிய பிறவினங்களு மிருப்பினும், வான்வெளியிற் செல்லும் உயிருக்கு வான்வெளியிற் பறக்கும் பறவையே சிறந்த வுவமமாகக் கொள்ளப்பட்டது. அறிவதும் உருவில்லாததும் நித்தமானதுமான உடம்பும், ஒன்றற்கொன்று நேர்மாறாக வேறுபட்டிருப்பதனாலும், வினைவயத்தால் ஒன்று கூடியதல்லது வேறு தொடர்பொன்று மில்லாதன வாதலாலும், உயிருக்கும் உடம்பிற்கும் இடைப்பட்ட வுறவை நட்பென்றது எதிர்மறைக் குறிப்பாம் (Irony). ஒழிதல் வினை ஒரேயடியாய் நீங்குதலையும், பறத்தல் வினை விரைந்து செல்லுதலையும் குறித்தன. ஏகாரம் தேற்றம்.

***339. உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு.***

**(இ-ரை.)** சாக்காடு உறங்குவது போலும் - ஒருவனுக்குச் சாவு வருதல் உறக்கம் வருதலை யொக்கும்; பிறப்பு உறங்கி விழிப்பது போலும் - அதன் பின் அவன் மீண்டும் பிறத்தல் உறங்கினவன் திரும்ப விழிப்பதை யொக்கும்.

உயிரிகட்கு ஒரு தனித்த பிறவியில் உறக்கமும் விழிப்பும் மாறி மாறி வருவது போன்றே, தொடக்கமிலியாக வரும் பொது நிலைமையில் இறப்பும் பிறப்பும் மாறி மாறி வருவதும் இயல்பாம் என்பது கருத்து. ஆகவே வீடுபெறாத நிலையில், ஒரு பிறவியால் மட்டுமன்றிப் பல பிறவியாலும் நிலையாமை தோன்றி நிலைப்பதாம்.

**340. புக்கி லமைந்தின்று கொல்லோ வுடம்பினுட்**
**டுச்சி லிருந்த வுயிர்க்கு.**

**(இ-ரை.)** உடம்பினுள் துச்சில் இருந்த உயிர்க்கு - பலவேறு நோய்கட்கும் பல்வகைப் புழுக்கட்கும் வாழிடமாகிய உடம்புகளுள் நெடுகலும் ஒண்டுக் குடியிருந்தே வந்த உயிருக்கு; புக்கில் அமைந்தின்று கொல் - நிலையாக வதியத்தக்க ஓர் உறையுங் இதுகாறும் அமையவில்லை போலும்!

துஞ்சு + இல் - துச்சில் = ஒதுக்கிடம். புகு + இல் - புக்கில் = புகுந்து பின் நீங்காத நிலையான இருப்பிடம். புக்கில் அமைந்ததாயின் வெளியேறியிரா தென்பதாம். ஆகவே, உயிர் நிற்கக்கூடிய உடம்பு ஒன்றுமில்லை யென்பது பெறப்பட்டது. இங்ஙனம் இவ் வதிகாரத்தில், அரிதாய்க் கிடைத்தும் நிலை யாத செல்வத்தின் நிலையாமையும் குழவிப்பருவம் முதல் கிழப்பருவம் வரை எந்நொடியிலும் திடுமென இறக்கும் யாக்கையின் நிலையாமையும், இறந்த பின்பும் எல்லையில்லாது துன்பமாலை தொடரும் பிறப்பிறப்பின் நிலை யாமையுங் கூறித் துறவதிகாரத்திற்குத் தோற்றுவாய் செய்து வைத்தார். 'ஓ' அசைநிலை; இரக்குமுமாம்.

## அதி. 35 - துறவு

*அதாவது இளமை, செல்வம், உடல்நலம், யாக்கை முதலியவற்றின் நிலையாமையும், எல்லையில்லாது தொடரும் பிறவித்துன்பமும் நோக்கி, துன்பமற்ற நிலையான வீடுபெறும்பொருட்டு, புறமாகிய செல்வம் என்னும் பிறிதின்கிழமைப் பொருளின்கண்ணும் அகமாகிய உடம்பு என்னும் தற்கிழமைப் பொருளின்கண்ணும் உள்ள பற்றை விடுதல். அதிகார முறையும் இதனான் விளங்கும்.*

**341. யாதனின் யாதனி னீங்கியா னோத**
**லதனி னதனி னிலன்.**

**(இ-ரை.)** யாதனின் யாதனின் நீங்கியான் - ஒருவன் எவ்வெப் பொருளினின்று நீங்கினானோ; அதனின் அதனின் நோதல் இலன் - அவ்வப் பொருளால் துன்பமுறுத வில்லை.

அடுக்குத்தொடர்கள் பன்மை குறித்தன. நீங்குதல் மனத்தால் நீங்குதல், அதாவது பற்று விடுதல். பொருள்களால் வரும் இம்மைத் துன்பங்கள்,

"ஈட்டலுந் துன்பமற் றீட்டிய வொண்பொருளைக்
காத்தலு மாங்கே கடுந்துன்பம் – காத்தல்
குறைபடின் துன்பம் கெடின்துன்பம் துன்பக்
குறைபதி மற்றைப் பொருள்" (நாலடி. 280)

என்பதனா லுணர்க. மறுமைத் துன்பங்கள் ஈயாமையாலும் செல்வச் செருக் காற் செய்யும் தீவினைகளாலும் வருவன. எல்லாப் பொருள்களையும் ஒருங்கே துறக்க இயலாதார் அவற்றை ஒவ்வொன்றாகத் துறக்கலா மென்றும், அவற்றைத் துறந்ததினால் இம்மையிலும் நன்மை யுண்டென்றும் கூறியவாறு.

**342. வேண்டினுண் டாகத் துறக்க துறந்தபி**
**னீண்டியற் பால பல.**

**(இ-ரை.)** துறந்தபின் ஈண்டு இயல்பால பல - எல்லாப் பொருள்களை யுந் துறந்தபின் ஒருவர்க்கு இம்மையில் உண்டாகக் கூடிய நன்மைகளும் பலவாம்; வேண்டின் உண்டாகத் துறக்க - அவற்றை விரும்பின் காலம் இருக்கும்படி விரைவில் துறக்க.

நன்மைகள் மனவமைதியும் நன்னெறிச்செலவும் முதலியன. நீண்ட காலத்திற்கு முன் துறந்தவன் நீண்டகாலம் அந் நன்மைகளைப் பெறுவா னாதலின், 'உண்டாகத் துறக்க' என்றார். நன்மைகள் என்பதும் காலம் என் பதும் வருவிக்கப்பட்டன. துறவால் துன்பமின்மை மட்டுமன்றி இன்பமுண் மையும் உண்டாம் என்றவாறு.

**343. அடல்வேண்டு மைந்தன் புலத்தை விடல்வேண்டும்**
**வேண்டிய வெல்லா மொருங்கு.**

**(இ-ரை.)** ஐந்தன் புலத்தை அடல் வேண்டும் - வீடுபெற விரும்பு கின்றவன் ஐம்புல இன்ப நுகர்ச்சியையுங் கெடுத்தல் வேண்டும்; வேண்டிய எல்லாம் ஒருங்கு விடல்வேண்டும் - அதன்பின் அந் நுகர்ச்சியின்பொருட்டுத்

தான் தேடிவைத்திருந்த பொருள்களை யெல்லாம் ஒருங்கே விட்டுவிடுதல் வேண்டும்.

புலஇன்ப நுகர்ச்சி வீடுபேற்று முயற்சியில் மனத்தைச் செலுத்துதற்குத் தடையாதலின் அதனை 'அடல் வேண்டும்' என்றும், அந் நுகர்ச்சிக்குரிய பொருள்கள் தன்னிடமிருப்பின் அதை விட்ட மனம் மீண்டும் அவற்றின் மேற் செல்லுமாதலின் 'ஒருங்கே விடல் வேண்டும்' என்றுங் கூறினார். இதனாற் புறப்பற்று விடுதல் கூறப்பட்டது.

***344. இயல்பாகு நோன்பிறகொன் றின்மை யுடைமை***
***மயலாகு மற்றும் பெயர்த்து.***

**(இ-ரை.)** ஒன்று இன்மை நோன்பிற்கு இயல்பு ஆகும் - பற்றுவைத் தற்குரிய ஒருபொருளு மில்லாமை வீடுபேற்றுத் தவத்திற்குரிய இயல்பாம்; உடைமை பெயர்த்து மயல் ஆகும் - அஃதன்றி ஏதேனும் ஒரு பொருளுடை மையும் அத் தவத்தைப் போக்கி அதனால் மீண்டும் உலக ஆசையில் மயங்குதற் கிடனாம்.

'ஒன்றும்' என்னும் இழிவுசிறப்பும்மை தொக்கது. 'மயல்' ஆகுபொரு ளது. ஒரேயொரு பொருளை மட்டும் வைத்துக்கொண்டு மற்றெல்லாப் பொருள்களையும் விட்டுவிடினும், விடாத பொருளின் தொடர்பால் விட்ட பொருள்கள்மேலும் ஆசை திரும்பவுண்டாகிச் செய்த தவத்தைக் கெடுத்து மனக்கலக்க முண்டாக்கும் என்பது கருத்து. முந்தின குறளில் ஒருங்கு விடல்வேண்டும் என்றதற்குக் கரணியம் (காரணம்) கூறியவாறு.

***345. மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க***
***லுற்றார்க் குடம்பு மிகை.***

**(இ-ரை.)** பிறப்பு அறுக்கல் உற்றார்க்கு உடம்பும் மிகை - பிறப்பு நீக்கும் முயற்சியை மேற்கொண்டவர்க்கு அதை நீக்கும்வரை கருவியாக நின்று உதவும் உடம்பும் அதிகப்படியாம்; மற்றும் தொடர்ப்பாடு எவன் - அங்ஙனமிருக்கவும் அதற்கு மேலும் சில வேண்டாத பொருள்களின் தொடர்பு எதற்காம்?

பிறப்பு நீக்க முயற்சிக்கு உடம்பின் துணை இன்றியமையாத தேனும், அதனால் இடையறாது பல வீழ்குழிகளும் அமைதலானும், அவற்றாற்

கைக்கெட்டியதும் வாய்க்கெட்டாது போய்விடுமோ வென்னும் அச்சம் பிறத்தலானும்; இறுதிநிலையில் உடம்பும் துறந்தார்க்கு வேண்டாததாகத் தோன்றுவதாம். அதனாலும், விரைந்து வீடுபெறல் வேண்டுமென்னும் பேராவலினாலும் உடம்பின்மேலுள்ள பற்று முற்றும் நீக்கப்படும். இது அகப்பற்று விடுதலாம். 'உடம்பும்' என்ற உம்மை உயர்வுசிறப்பு. 'கொல்' அசைநிலை.

உடம்பு பருவுடம்பும் நுண்ணுடம்பும் ஆக இருவகைப்படும். இங்கு உடம்பென்றது பருவுடம்பை. நிலம் முதலிய பூதங்கள் ஐந்தும், செவி முதலிய அறிவுப் பொறிகள் ஐந்தும், வாய் முதலிய கருமப் பொறிகள் ஐந்தும் ஆகப் பதினைந்தும் சேர்ந்தது பருவுடம்பாம். நுண்ணுடம்பு ஐம்புலனும் பதின்காற்றும் வினைவிளைவுங் கூடிய மனம்.

***346. யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்***
***குயர்ந்த வுலகம் புகும்.***

**(இ-ரை.)** யான் எனது என்னும் செருக்கு அறுப்பான் - தானல்லாத வுடம்பை நானென்றும், தனக்குப் புறம்பான பொருளை எனதென்றும் கருதி அவற்றின்மேற் பற்று வைத்தற்கு ஏதுவான மயக்கத்தைக் கெடுப்பவன்; வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும் - விண்ணவர்க்குங் கிட்டாது மேற்பட்ட வீட்டுலகத்தை அடைவான்.

மேற்கூறிய இருவகைப் பற்றுந் துறப்பான் பெறும் பேறு இங்குக் கூறப்பட்டது. ஒருவன் இவ் வுலகில் இன்பம் நுகர்தற்கு நுகரும் உடம்பும் நுகரப்படும் பொருள்களும் வேண்டும். உடம்பு தன்னொடு சேர்ந்திருத்தலால் அகம் என்றும், அதற்குப் புறம்பான மற்றப் பொருள்களெல்லாம் புறம் என்றும் சொல்லப்படும். இன்பதுன்ப வுணர்ச்சி யொற்றுமையாலும் ஒன்றெனக் கலந்த தோற்றத்தாலும் முக்கரணத் தொழிற்கருவியாதலாலும், ஒருவன் தன்னுடம்பைத் தானாக மயங்கி நானென்று சொல்வதால் அகப்பற்று 'நான்' என்னும் சொல்லாலும், தனக்குச் சொந்தமான பிற பொருள்களை யெல்லாம் தனித்தனி எனது என்று சொல்வதால், புறப்பற்று 'எனது' என்னும் சொல்லாலும் குறிக்கப்படும். உடம்பு மேற்கூறிய மூவகையில் உயிரோடு ஒன்றியிருப்பதுடன், உடம்பின் நீடிப்பே உயிர்வாழ்க்கையும் உடம்பின் வலிமையே உயிர்வலிமையு மாதலால், ஒருவனுக்குப் புறப்பற்றினும் அகப்பற்றே விஞ்சியிருக்கும். நிலையாமையாற் சிறிது பொழுதே நுகரும்

புறப்பொருளையும் நிலையான வுடைமையாகக் கருதுவதால், அதுவும் மயக்கத்தின் பாற்பட்டதே. 'வானோர்க்கும்' என்னும் சிறப்பும்மை தொக்கது. வீட்டுலகத்தின் உயர்ச்சிபற்றியே அதை 'வரன் என்னும் வைப்பு' என்றார் முன்னும் (24).

### *347. பற்றி விடாஅ விடும்பைகள் பற்றினைப்*
### *பற்றி விடாஅ தவர்க்கு.*

**(இ-ரை.)** பற்றினைப் பற்றி விடாதவர்க்கு - இருவகைப் பற்றையும் இறுகப்பற்றி விடாதவரை; இடும்பைகள் பற்றி விடா - பிறவித் துன்பங்களும் இறுகப் பற்றி விடுவதில்லை.

'விடாஅ' ஈரிடத்தும் இசைநிறை யளபெடை. 'விடாஅ தவர்க்கு' வேற்றுமை மயக்கம். பற்று விடாதார்க்கு வீடில்லை யென்பதாம்.

### *348. தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி*
### *வலைப்பட்டார் மற்றை யவர்.*

**(இ-ரை.)** தீரத் துறந்தார் தலைப்பட்டார் - முற்றத் துறந்தவர் வீட்டை யடைந்து உயர்ந்தார்; மற்றையவர் மயங்கி வலைப்பட்டார் - அங்ஙனந் துறவாதவர் மயங்கிப் பிறவிவலைக்குள் அகப்பட்டார்.

மயங்குதல் நிலையாதவற்றை நிலைத்தனவாகக் கருதுதலும், ஏதேனு மொரு பொருளின்கண் சிறிதேனும் பற்றுவைத்தலும். 'மற்றையவர்' முற்றத் துறவாதாரும் சற்றுந் துறவாதாரும். தலைப்படுதல் அடைதல் அல்லது உயர்தல்.

### *349. பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கு மற்று*
### *நிலையாமை காணப் படும்.*

**(இ-ரை.)** பற்று அற்ற கண்ணே பிறப்பு அறுக்கும் - ஒருவனுக்கு இருவகைப் பற்றும் நீங்கியபொழுதே அப் பற்று நீக்கம் அவன் பிறப்பை ஒழிக்கும்; மற்று நிலையாமை காணப்படும் - அவை நீங்காத பொழுது அவற்றால் மாறிமாறிப் பிறந்திறந்து வருகின்ற நிலையாமையே காணப்படும்.

கரணகம் (காரணம்) நீங்கின் கருமகமும் (காரியமும்) நீங்குமாதலால் 'பற்றற்ற கண்ணே' என்றார். மற்று - மற்றப்படி.

**350. பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.**

**(இ-ரை.)** பற்று அற்றான் பற்றினைப் பற்றுக - எல்லாப் பொருள் களையும் பற்றிநின்றே இயல்பாகப் பற்றில்லாதவனாகிய இறைவனிடத்துப் பத்தி செய்வதை மனத்திற் கொள்க; பற்றுவிடற்கு - விடாது தொடர்ந்து வரும் ஆசைப் பிணிப்பு முற்றும் நீங்குதற்கு; அப் பற்றைப் பற்றுக - அவ் விறை வன் பத்தியையே ஊழ்க ஒன்றுகைகளால் (தியான சமாதிகளால்) இறுகக் கடைப்பிடிக்க.

சார்ந்ததன் வண்ணமாதல் ஆதன் (ஆன்மா) இயல்பாதலால், பற்றற் றானைப் பற்றினவன் தானும் பற்றற்றானவன் என்பது கருத்து. இதில் வந்துள்ளது சொற்பொருட் பின்வருநிலையணி.

## அதி. 36 - மெய்யுணர்தல்

*அதாவது கடவுள், உயிர், தளை ஆகிய மூன்றன் இயல்புகளையும், உயிருக்குக் கடவுளொடும் உலகத்தொடுமுள்ள தொடர்பு வகைகளையும், ஐம்பூதக் கூறுபாடுகளையும், உடலின் அமைப்பையும், பிறப்பும் வீடும் ஆகிய நிலைமைகளையும், இறைவன் திருவருளாலும் ஓகத்தாலும் உண் மையாக உள்ளபடி யுணர்தல். இது, சமயக் கொண்முடிபு (சித்தாந்தம்) கண் டவர் தாமாக வுணர்தலும், பிறர் அவர் உணர்ந்ததை யுணர்தலும் என இரு திறப்படும்.*

*ஆராய்ந்து கண்ட ஒவ்வோர் உண்மைப் பொருளும் மெய்ப்பொருள் (தத்துவம்) எனப்படும். இறைவ னுண்மையை நம்பாத சாங்கியமதம், ஆதமெய்ப்பொருள் (ஆன்ம தத்துவம்) இருபத்து நாலொடு ஆதனை (புருடனை)ச் சேர்த்து, மெய்ப்பொருள் மொத்தம் இருபத்தைந்தெனக் கூறும். திருமாலியம் (வைணவம்) அவற்றொடு பரவாசுதேவன் என்னும் இறைவனைச் சேர்த்து, மெய்ப்பொருள் மொத்தம் இருபத்தாறெனக் கூறும். ஆரியச் சார் பான இற்றைச் சிவனியம், ஆதமெய்ப்பொருளொடு சிவமெய்ப்பொரு ளென்று ஐந்தும், அறிவுமெய்ப்பொருள் (வித்தியா தத்துவம்) என்று ஏழும் சேர்த்து; மெய்ப்பொருள் மொத்தம் முப்பத்தாறெனக் கொள்ளும். உலகி லுள்ள நம்பு(ஆத்திக) மதங்களெல்லாவற்றிற்கும் பொதுவான மெய்ப் பொருள்கள், பூத மெய்ப்பொருள்கள் இருபதுடன் உயிர் மனம் மதி இறைவன்*

என்னும் நான்குஞ் சேர்ந்த இருபத்து நான்காகவே முடியும். சமணம், பவுத்தம் முதலிய நம்பா (நாத்திக) மதங்களைப்பற்றி இங்கு ஆராய்ச்சியில்லை.

திருவள்ளுவர் ஆரியர் வகுத்த முத்திருமேனி (திரிமூர்த்தி)க் கொள்கையைக் கொண்டவரல்லர். அவர் காலத்தில் அது தோன்றியிருக்கலாம். பிற்காலத்திலேயே அது வேரூன்றியதாக,

"தொடங்கற்கட் டோன்றிய முதியவன் முதலாக" (கலித். 3)
"உறித்தாழ்ந்த கரகமு முரைசான்ற முக்கோலும்" (கலித். 9)

முதலிய கடைக்கழக இலக்கியச் சான்றுகளால் தெரியவருகின்றது. இறைவன் முத்தொழிலையும் முன்றயே பிரமன் விட்டுணு உருத்திரன் என்னும் மூவரைக் கொண்டு செய்விக்காமல், தானே செய்கின்றான் என்பதே திருவள்ளுவர் கொள்கை. இனி, இறைவனை அவர் ஐங்கூறாகப் பகுத்திருக்கவும் முடியாது. இதன் விரிவையும் விளக்கத்தையும் என் 'தமிழர் மதம்' என்னும் நூலுட் கண்டுகொள்க. சிவன் என்பதும் திருமால் (மாயோன்) என்பதும் இருசார்த் தமிழர் இறைவனுக்கு இட்ட பெயர்களே.

**ஓகத்தின் (யோகத்தின்) எண்ணுறுப்புகளாவன:**

(1) **ஒழுக்கம்** (இயமம்) - பொய், கொலை, களவு, காமம், பொருளாசை ஆகிய ஐந்தையுங் கடிதல்.

(2) **தவம்** (நியமம்) - உடலை வருத்துதல், உள்ளத் தூய்மை, மெய்ப் பொருளாராய்ச்சி, பொந்திகை (திருப்தி), கடவுள் வழிபாடு ஆகிய வற்றை மேற்கொள்ளல்.

(3) **இருக்கை** (ஆசனம்) - மங்கலம் (சுவஸ்திக), கோமுகம் (கோமுக), தாமரை (பத்ம), மறம் (வீர), மடங்கல் (கேசரி), வீறு (பாத்திர), முத்தம் (முக்த), மயில் (மயூர), ஏமம் (சுக) முதலிய 108 இருக்கை வகைகள்.

(4) **வளிநிலை** (பிராணாயாமம்) - இழுக்கை (பூரகம்), விடுகை (இரேசகம்), நிறுத்தம் (கும்பகம்) என்னும் மூவகையால் மூச்சை யடக்கி யாள்கை.

(5) **ஒருக்கம்** (பிரத்தியாகாரம்) - மனத்தைப் புலன்கள்மேற் செல்லா வாறு மடக்குதல்.

*(6) **நிறை** (தாரணை) - மனத்தை ஒருவழி நிறுத்துகை.*

*(7) **ஊழ்கம்** (தியானம்) - மனத்தை இறைவன்மேற் செலுத்துகை.*

*(8) **ஒன்றுகை** (சமாதி) - மனம் இறைவனொடு ஒன்றாகப் பொருந்துகை.*

*ஒருக்கம், நிறை, ஊழ்கம் என்னும் மூன்றும் முறையே தொகைநிலை, பொறைநிலை, நினைவு என்னும் சொல்லாலும் குறிக்கப்பெறும்.*

*இருவகைப் பற்றையுந் துறந்தபின் இறைவன் பற்றையே இறுகப் பற்றல் வேண்டுமாதலின், இம் மெய்யுணர்தல் துறவின் பின் வைக்கப்பட்டது. இதுபற்றியே, துறவதிகாரத்தின் இறுதியிலும் 'பற்றற்றான் பற்றினைப் பற்றுக' என்று இதற்குத் தோற்றுவாய் செய்யப்பட்டது.*

**351. பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரு**
**மருளானா மாணாப் பிறப்பு.**

**(இ-ரை.)** பொருள் அல்லவற்றைப் பொருள் என்று உணரும் மருளான் - மெய்ப்பொரு ளல்லாதவற்றை மெய்ப்பொரு ளென்றுணரும் மயக்கவுணர் வினால்; மாணாப் பிறப்பு ஆம் - சிறந்த வீடுபேறின்றி இழிந்த பிறவியே உண்டாம்.

மயக்க வுணர்வாவது, இறைவனில்லை யென்றும், உலகம் தானாக இயங்குகின்ற தென்றும், நற்காட்சி, நல்லோதி (நன்ஞானம்), நல்லொழுக்கம் என்னும் மூன்றும் வீடுபேற்றிற்குக் கரணகம் (காரணம்) என்றும், உருவம், நுகர்ச்சி, குறிப்பு, எண்ணம், அறிவு என்னும் ஐங்கந்தமும் கெடுவதே வீடு பேறென்றும், தம் மனம்போனவாறு பிறழவுணரும் திரிபுணர்ச்சியாம். வீட்டையளிப்பவன் இறைவனே யாதலின், அவனருளின்றி எவனும் வீடு பெற வியலாதென்பதாம். வீடுபெறாவிடத்து நரகர், விலங்கு, மக்கள், தேவர் என்னும் நால்வகைப் பிறவிவகுப்பில் முன்போ லுழலுவதே திண்ணம். அப் பிறப்புத் துன்பமேயாதலின் 'மாணாப்பிறப்பு' என்றார். இதனால் திரிபுணர்ச்சி பிறப்பிற்குக் கரணகமாதல் கூறப்பட்டது.

***352. இருணீங்கி யின்பம் பயக்கு மருணீங்கி***
***மாசறு காட்சி யவர்க்கு.***

**(இ-ரை.)** மருள் நீங்கி மாசு அறு காட்சியவர்க்கு - மயக்கம் நீங்கித் தூய அறிவையடைந்தோர்க்கு; இருள் நீங்கி இன்பம் பயக்கும் - அத் தூய அறிவு நரகத்துன்பத்திற்கேதுவான பிறப்பை நீக்கி வீட்டின்பத்தை நல்கும்.

மாசறுகாட்சி, தூய அறிவு, வாலறிவு, மெய்யறிவு என்பன ஒருபொருட் சொற்கள். ஐயந்திரிபற்றது தூய அறிவு. கீழே நீண்டு கிடப்பதொன்றைக் கயிறோ பாம்போ என்று ஐயுறுவது ஐயம். கயிற்றைப் பாம்பென்றும் பாம்பைக் கயிறென்றும் பிறழவுணர்வது திரிபு. கயிற்றைக் கயிறென்றும் பாம்பைப் பாம்பென்றும் உள்ளவாறுணர்வது தூய அறிவு. மருள், மயக்கம், திரிபு, பொய்யறிவு என்பன ஒருபொருட் சொற்கள். நரகத்தைக் குறிக்கும் இருள் என்னுஞ் சொல் இங்கு அதற்கேதுவான பிறப்பைக் குறித்தது. 'நீங்கி' என்பது நீங்கியபின் என்னும் பொருளது.

**353.** ***ஐயத்தி னீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்***
***வான நணிய துடைத்து.***

**(இ-ரை.)** ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு - பல கவர்பட்ட ஐயம் நீங்கி மெய்யறிவு பெற்றார்க்கு; வானம் நணியது உடைத்து - தாம் இருக்கும் நிலவுலகத்தினும் வீட்டுலகம் நெருங்கியதாம்.

ஐயமாவது, கடவுளும் இருவினைப் பயனும் மறுபிறப்பும் விண்ணுலக வீடுகளும் உண்டோ இல்லையோ என ஒருவழியுந் துணிபின்றி நிற்றல். எல்லா மதங்களும் தனித்தனி பிறவற்றொடு மாறுபட்டுத் தன்தன் கொள்கையே மெய்யெனக் கூறுதலால், அவற்றுள் எது மெய் எது பொய்யென்று ஒகப்பயிற்சியில் முதிர்ச்சி பெற்றார் தம் பட்டறிவால் உணர்வராகலின், அவரை 'ஐயத்தினீங்கித் தெளிந்தார்' என்றும், அம் மெய்யறிவு வளர வளர வீடுபேற்றுறுதி மிகுமாதலின் 'வையத்தின் வான நணிய துடைத்து' என்றுங் கூறினார். இதனால், ஐயவுணர்வு பிறப்பிற்குக் காரணமாதலுங் கூறப்பட்டது.

**354.** ***ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே***
***மெய்யுணர் வில்லா தவர்க்கு.***

**(இ-ரை.)** மெய் உணர்வு இல்லாதவர்க்கு - மெய்யறிவைப் பெறாதவர்க்கு; ஐ உணர்வு எய்தியக் கண்ணும் பயம் இன்றே - புலன்களால் ஐந்தாகிய வுணர்வு அவற்றைவிட்டுத் திரும்பித் தமக்கு வயப்பட்ட விடத்தும், அதனாற் பயனில்லையாம்.

ஐந்தாகிய வுணர்வு, ஐம்புலன்மேற் செல்லும் மனம். அதை யெய்துதலாவது புலன்மேற் செல்லாதவாறு மடக்கி ஒருவழி நிறுத்தும் நிறை. சிறப்பும்மை எய்துதற் கருமையை யுணர்த்திற்று. இக் குறளாலும் மெய்யறிவுடையார்க்கே வீடுபேறென்று மெய்யறிவின் இன்றியமையாமை கூறப்பட்டது.

**355. எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.**

**(இ-ரை.)** எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் - காட்சியுங் கருத்து மாகிய எந்தப் பொருள் எந்த இயல்பினதாகத் தோன்றினாலும்; அப் பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு - அந்தப் பொருளின் உண்மையான இயல்பை அல்லது கருத்தை அறிந்துகொள்வதே மெய்யறிவாகும்.

பொருள் என்பது பொருளும் பொருளைப்பற்றிய செய்தியும் என இருவகைப்படும். அவ் விருவகைப் பொருளின் மெய்த்தன்மையும் அறியும் முறை, முறையே, மெய்ப்பொருள் முறையும் உண்மைப் பொருட்பாட்டு முறையும் என இருதிறப்படும்.

மெய்ப்பொருள் முறையாவது, "சேலங் கல்லூரி முதல்வர் அ. இராம சாமிக் கவுண்டர்" என்றவழி, சேலம் என்னும் ஓர் ஊர்த் தொடர்பும், கல்லூரி என்னும் ஒரு தொழில்நிலையத் தொடர்பும், முதல்வர் என்னும் ஒரு பதவித்தொடர்பும் அனுமந்தராயர் என்பவரின் மகன் என்னும் ஓர் உறவு முறைத் தொடர்பும், இராமசாமி என்னும் ஓர் இயற்பெயரும், கவுண்டர் என்னுங் ஒரு குலப்பெயரும், ஓர் உயிர்மெய்ப்பொருட்கு ஒரு பிறப்பில் ஏற்பட்ட நிலையில்லாத நிலைமைகளும் சொற்களுமாதலின், அவற்றைக் கொள்ளாது, அவ் வுயிர்மெய்ப்பொருளை உயிரும் மெய்யுமாக இரண்டாகப் பகுத்து, அவ் விரண்டையும் வெவ்வேறு மெய்ப்பொருட் டொகுதியென வுணர்ந்து அவற்றின் மூலப்பொருள்வரை ஒன்றனுள் ஒன்றாக ஒடுக்கிக் கொண்டு சென்றால், இறுதியில் மூலமின்றி நிற்கும் பொருள்களை உணர்தலாம். 'எப்பொருள்' என்று பொதுப்படக் கூறியதால் அஃறிணைப் பொருள்களும் இவ்வாறே உணரப்படும் என அறிக.

இனி, உண்மைப் பொருட்பாட்டு முறையாவது,

"இம்மென்னு முன்னே எழுநூறு மெண்ணூறும்
அம்மென்றா லாயிரம்பாட் டாகாதோ"

என்றால், மிக விரைந்து பாடமுடியு மென்றும்;

சிவன் கொக்கிறகை அணிந்தான் என்றால், சிவவழிபாடு செய்வா னொருவன் கொக்கிறகுபோற் பூக்கும் பூவைச் சிவவுருவின் தலையிற் செருகி னான் என்றும்;

ஒருவன் மாறிப் பிறந்தாலொழிய வீடுபெற முடியாதெனின், மாறிப் பிறத்தலென்பது மனமாற்றத்தையே குறிக்குமென்றும்;

தேங்காயுடைத்துத் தெய்வ வழிபாடு செய்ய வேண்டுமெனின், தேங்காய் உடைந்து நீர் சிந்தி வெண்மையாய்த் தோன்றுவது போல், வழி படுபவன் தான் செய்த தீவினைபற்றி உள்ளமுடைந்து கண்ணீர் சிந்தித் தூய்மையாக வேண்டுமென்றும்;

"இருட்டறை மூலையி லிருந்த குமரி
குருட்டுக் கிழவனைக் கூடல் குறித்துக்
குருட்டினை நீக்கிக் குணம்பல காட்டி
மருட்டி யவனை மணம்புரிந் தாளே" (திருமந். 1514)

என்றால், தொடக்கமிலியாக அறிவுக் கண்ணின்றி யிருந்த ஆதன் (ஆன்மா), இறைவன் திருவருளால் கண் திறக்கப்பெற்றுப் பேரின்ப வீட்டின் மாண்பையும் பிறவித் துன்பத்தின் கொடுமையையும் உணர்ந்து, இருவகைப் பற்றுந் துறந்து பிறப்பு நீங்கி இறைவன் திருவடியை யடையும் என்றும் உணர்தல்.

***356. கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்***
***மற்றீண்டு வாரா நெறி.***

**(இ-ரை.)** ஈண்டுக் கற்று மெய்ப்பொருள் கண்டார் - இம்மை மக்கட் பிறப்பில் மெய்ப்பொருள் நூல்களைக் கற்றும் பட்டறிவுள்ள மெய்யோதியரால் செவியறிவுறுத்தப் பெற்றும் மெய்ப்பொருளுணர்ந்தவர்; மற்று ஈண்டு வாரா நெறி தலைப்படுவர் - மீண்டு இப் பிறப்பின்கண் வராத வழியைப் பெறுவர்.

உலகநூற் கல்வி போன்றே மெய்ப்பொருட் கல்வியும் பல்வேறு நிலையிற் பல்வேறு ஆசிரியர்பாற் கற்றுங் கேட்டுமறிய வேண்டியிருப்பதால் 'கற்று' என்றும், நிலவுலகிலன்றித் தேவருலகில் வீடுபேற்று முயற்சிக் கிடமின்மையால் 'ஈண்டு' என்றுங் கூறினார். 'ஈண்டு வாரா நெறி' வீட்டுநெறி. வீட்டையளிப்பது இறைவனேயாதலால் அவனை யறிவதற்கு ஆம்புடைகள் (உபாயங்கள்) கல்வி, கேள்வி, தெளிவு, உன்னம் (பாவனை) என நான்காம். கேள்வியும் கல்வியு ளடங்குமாதலின் அவை யிரண்டும் இங்கே ஒருங்கே கூறப்பட்டன.

**357. ஓர்த்துள்ள முள்ள துணரி னொருதலையாப்**
**பேர்த்துள்ள வேண்டா பிறப்பு.**

**(இ-ரை.)** உள்ளம் ஒருதலையா ஓர்த்து உள்ளது உணரின் - மெய் யோதியர்பாற் கேட்ட செவியறிவுறுத்தப் பொருளை ஓர் ஓகியின் உள்ளம் உத்தியானும் அளவைகளானும் தெளியவாராய்ந்து உண்மைப் பொருளை யுணருமாயின்; பேர்த்துப் பிறப்பு உள்ள வேண்டா - அவனுக்கு மீண்டும் பிறப்புள்ளதாக நினைக்க வேண்டுவதில்லை. ஓதியர் = ஞானியர் (வ.). ஓகி = யோகி (வ.).

அளவைகள் முன்னரே 242ஆம் குறளுரையிற் கூறப்பட்டன. இங்குத் தெளிவு கூறப்பட்டது.

**358. பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ்**
**செம்பொருள் காண்ப தறிவு.**

**(இ-ரை.)** பிறப்பு என்னும் பேதைமை நீங்க - பிறப்பிற்கு முதற் கரணக மாகிய அறியாமை கெட; சிறப்பு என்னும் செம்பொருள் காண்பது அறிவு - வீட்டிற்கு வினைமுதற் கரணகம் (நிமித்த காரணம்) ஆகிய செவ்விய பொருளை அறிவதே ஓகியர்க்கு அறிவாவது.

'பிறப்பென்னும் பேதைமை' என்றும், 'சிறப்பென்னுஞ் செம்பொருள்' என்றும் கருமகத்தைக் கரணகமாகச் சார்த்திக் கூறினார். எல்லா இன்பங் களுள்ளுஞ் சிறந்ததாகையால் வீடு 'சிறப்பு' எனப்பட்டது. எத்துணைப் பாகுபாடுமின்றி ஒன்றாய், முதலும் முடிவுமின்றி நித்தமாய், பிறிதொன் றோடும் உண்மையிற் கலவாது தூய்மையாய், ஒருவகையிலும் ஒப்பற்ற தனி நிலையாய் எல்லாப் பொருளையும் பற்றி நின்றும் அவற்றால் தாக்குண்ணாத தாய், எத்துணைக் காலமாகியுந் திரியாததாய், என்றும் ஒரு தன்மையதாக நிற்றல்பற்றிப் பரம்பொருளைச் 'செம்பொருள்' என்றார். 756ஆம் குறளில் 'மெய்ப்பொருள்' என்றும், அடுத்த குறளில் 'உள்ளது' என்றும் கூறியதும் இதுபற்றியே. அப் பொருளைக் காண்கையாவது, ஆதன் தன் அறியாமை நீங்கி அதை இடைவிடாது எண்ணித் தன் உள்ளத்தால் அதனொடு இரண்டறத் கலத்தல். காண்கை யென்றது அகக்கண்ணாற் காண்டல். உயிர் உடம்பினின்று நீங்கும்போது அதன் எண்ணம் எதைப் பற்றியதோ அதுவாய் அது தோன்றுமென்பது சமயநூற் றுணிபாகலின், வீடு பெறுவார்க்கு அக்காலத்துப்

பிறவிக் கேதுவான எண்ணம் இல்லாமைப் பொருட்டு இறைவனையே உன்னுதல் இன்றியமையாததாதலால், இதனை இடைவிடாது பயில வேண்டு மென்பது கருத்து. இதனால் உன்னுகை கூறப்பட்டது.

**359. சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச்**
**சார்தரா சார்தரு நோய்.**

**(இ-ரை.)** சார்பு உணர்ந்து சார்பு கெட ஒழுகின் - வீடுபெற முயல்பவன் எல்லாப் பொருட்குஞ் சார்பான செம்பொருளை யுணர்ந்து இருவகைப் பற்றும் நீங்க ஒழுக வல்லனாயின்; சார்தரும் நோய் அழித்து மற்றுச் சார்தரா - அவனை முன்பு சாரக்கடவனவாய் நின்ற துன்பங்கள் அவ் வுணர் வொழுக்கங்களைக் கெடுத்துப் பின்பு சாரமாட்டா.

'சார்பு' தொழிலாகுபெயர். சாரப்படும் பொருளைச் சார்பு என்றார். சார்பு இரண்டனுள், முன்னது வீட்டிற் கேதுவாகிய நற்சார்பும், பின்னது பிறப்பிற் கேதுவாகிய தீச்சார்புமாம். ஒழுக்கம் என்றது, ஓகநெறி யொழுக்கத்தின் எண்ணுறுப்புகளுட் சிறப்பாக ஒருக்கம், நிறை, ஊழ்கம், ஒன்றுகை என்னும் இறுதி நான்கையும் சாரக்கடவனவாய் நின்ற துன்பங்கள், பிறப்புத் தொடக்க மிலியாய் வருதலின் உயிரால் ஈட்டப்பட்ட அளவில்லா வினைகளுள் இறந்த வுடம்புகளாலும் பிறந்தவுடம்பாலும் நுகர்ந்தன போக இனிமேல் நுகருமாறு எஞ்சிநின்றனவாம். அவை ஒளியின் முன் இருள்போல ஓக வொழுக் கத்தினாலும் இறைவன் திருவருளாலும் கெடுதலால், 'மற்றழித்துச் சார்தரா' என்றார். தீவினையொடு கலந்ததினால் நல்வினைப் பயனும் நோயெனப் பட்டது. பிறப்பு அறும்போதே அதனொடு சேர்ந்த பழந்துன்பங்களுங் கெடுதல் இதனாற் கூறப்பட்டது.

**360. காமம் வெகுளி மயக்க மிவை மூன்ற**
**னாமங் கெடக்கெடு நோய்.**

**(இ-ரை.)** காமம் வெகுளி மயக்கம் மூன்றன் நாமம் கெட - ஓக வொழுக்கத்தில் முதிர்ந்தவர்க்கு விருப்பு, வெறுப்பு, அறியாமை என்னும் இக் குற்றங்கள் மூன்றும் தம் பெயருங்கூடத் தோன்றாவாறு முற்றக் கெடுதலால்; நோய் கெடும் - அவற்றின் விளைவாகிய வினைப் பயன்களும் அறவே கெடும்.

தொடக்கமிலியாகிய அறியாமையும், அதுபற்றி யான் என மதிக்கும் அகப்பற்றும், அதுபற்றி எனக்கிதுவேண்டு மென்னும் அவாவும், அதுபற்றி

அப் பொருட்கண் செல்லும் ஆசையும், அது பெறாவழியெழுஞ் சினமும் என வடநூலார் கூறும் குற்றம் ஐந்தனுள், அகப்பற்றை அறியாமைக்கண்ணும் அவாவை ஆசைக்கண்ணும் திருவள்ளுவர் அடக்கிக் காமவெகுளி மயக்க மென மூன்றாகக் கூறியதாகப் பரிமேலழகர் உரைப்பர். இது பாட்டிக்கு நூல் நூற்கப் பேர்த்தி கற்றுக் கொடுத்தாள் என்பது போன்றதே. வேள்வியொன்றே யியற்றும் ஆரியர் ஓகமுறை கற்றது தமிழரிடத்திலேயேயாதலின், தமிழ்நூலார் கூறும் முக்குற்றங்களையே வடநூலார் ஐந்தாக விரித்தார் என அறிக. வீடு பெறுவானின் முழுத் தூய்மையைக் குறிக்க 'மூன்றன் நாமங்கெட' என்றார். நாமமும் என்னும் இழிவுசிறப்பும்மை தொக்கது. 'நோய்' என்பது வகுப்பொருமை.

'நாமம்' என்பது அச்சம் என்று பொருள்படின் தென்சொல்லும், பெயர் என்று பொருள்படின் வடசொல்லும் ஆகும். பெயர்ப்பொருள் குறிக்கவும் இங்கு வடசொல்லை யாளத் தேவையில்லை. அக்காலத்தில் மொழியாராய்ச் சியும் தென்மொழி - வடமொழிப் போராட்டமும் இன்மையால், திருவள் ளுவர் தம் கருத்தைத் தமிழொழுக்கத்தின் சிறப்பை நிலைநாட்டுவதிற் செலுத்தினாரேயன்றி மொழித்தூய்மை போற்றுவதிற் செலுத்தவில்லை. மேலும், அக்காலத்தில் தமிழர் அயிர்க்குமளவு வடசொற்கள் தமிழிற் பெருவாரியாகக் கலக்கவில்லை. ஒருசில சொற்களே கலந்திருந்ததால் அவை தமிழறிஞர் கண்ணைக் கவர்ந்தில. அல்லாக்கால்,

காமம் வெகுளி மயக்க மிவற்றின்பேர்
தாமுங் கெடக்கெடு நோய்

என்றே திருவள்ளுவர் யாத்திருப்பார்.

## அதி. 37 - அவாவறுத்தல்

*அதாவது,*

*"மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க*
*லுற்றார்க் குடம்பு மிகை"* **(345)**

*என்பதற்கேற்ப, காமவெகுளி மயக்கங்களைக் கெடுத்தார்க்கும் பூதவுடம்பு நிற்கும்வரை முன் துறக்கப்பட்ட புலன்கள்மேற் பயிற்சிவயத்தால் ஒரோவழி நினைவு செல்லுதற்கு இடமிருத்தலால், அங்ஙனம் நேராவாறு பூதவுடம்பு*

*நீங்கும்வரை என்றும் விழிப்பாயிருத்தற் பொருட்டு, எல்லா ஆசைகட்கும் பொது அடிப்படையாகிய அவாவை இடைவிடாது செம்பொரு ளுணர்வால் விலக்குதல். இது காமவெகுளி மயக்கக்கேட்டின் தொடர்ச்சியாம்.*

**361. அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந்
தவாஅப் பிறப்பீனும் வித்து.**

**(இ-ரை.)** எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும் தவாப் பிறப்பு ஈனும் வித்து - எல்லா வுயிர்கட்கும் எக்காலத்தும் கெடாது வருகின்ற பிறப்பை விளை விக்கும் வித்து; அவா என்ப - அவா என்று சொல்வர் மெய்ப்பொருள் நூலார்.

உடம்பு நீங்குங் காலத்து, அடுத்து நுகரவேண்டிய வினையும் அது காட்டும் பிறவி வகுப்புக் குறியும் அவ் வகுப்பின்கண் அவாவும் உயிரின் கண் முறையே தோன்றி, அவ் வுயிரை அவ்வவா, அவ் வகுப்பின்கண் கொண்டு செல்லுமாகலின், அதனைப் 'பிறப்பீனும் வித்து' என்றார். எல்லா வுயிரும் என்றது விலங்கு, நரகர், மக்கள், தேவர் என்னும் நால்வகுப் புயிர் களையும். 'தவாஅ' இசைநிறை யளபடை.

**362. வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்.**

**(இ-ரை.)** வேண்டுங்கால் பிறவாமை வேண்டும் - பிறப்பெல்லாந் துன்பமாதலை யறிந்தவன் ஒன்றை விரும்பின் பிறவாமையைத் தான் விரும்புவான்; அது வேண்டாமை வேண்ட வரும் - அப் பிறவாமை ஒரு பொருளின் மேலும் ஆசைகொள்ளாமையை விரும்பி மேற்கொள்ளின் அவனுக்குத் தானே வந்து சேரும்.

தொடக்கமிலியாகப் பிறப்புப் பிணிமூப்புச் சாக்காட்டால் தொடர்ந்து துன்பமுற்று வருகின்றவனுக்கு, இயல்பாகவே பிறவி நீக்கத்தின்மேல் ஆசையுண்டாகு மாதலால், பிறவாமை வேண்டும் என்றார். 'வேண்டும்' செய்யும் என்னும் வினைமுற்று. 'வேண்ட' என்றது வேண்டி மேற்கொள்ளு தலை. 'மற்று' வினைமாற் றிடைச்சொல். இதில் வந்துள்ளது சொற்பொருட் பின்வருநிலையணி.

**363. வேண்டாமை யன்ன விழுச்செல்வ மீண்டில்லை
யாண்டு மஃதொப்ப தில்.**

**(இ-ரை.)** வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டு இல்லை - ஒரு பொருளின்மேலும் ஆசை கொள்ளாமை யொத்த சிறந்த செல்வம் இம் மண்ணுலகத்தில் இல்லை; ஆண்டும் அஃது ஒப்பது இல் - இனி இதனினுஞ் சிறந்ததாகச் சொல்லப்பெறும் விண்ணுலகத்திலும் அதை யொப்பது ஒன்று மில்லை.

வேண்டாமை வீட்டுலகத்தைத் தருதலின் அதனை விழுச்செல்வ மென்றார். கண்டறிந்த வுலக வுண்மை கேட்டறிந்த வுலக வுண்மையினுந் தெளிவாதலின் முற்கூறப்பட்டது.

**364.** ***தூஉய்மை யென்ப தவாவின்மை மற்றது***
***வாஅய்மை வேண்ட வரும்.***

**(இ-ரை.)** தூய்மை என்பது அவா இன்மை - ஒருவர்க்குத் தூயநிலை மையாகிய வீடென்று சொல்லப்படுவது அவாவில்லாமையாம்; அது வாய்மை வேண்ட வரும் - அவ் வவா வில்லாமை மெய்யான பரம்பொருளை வேண்டத் தானே வரும்.

அறியாமையும் அவாவும் முதலிய மாசுமறுவற்றதினால் வீட்டைத் தூய்மையென்றும், கருமகத்தைக் கரணகமாக்கித் 'தூய்மையென்பது அவாவின்மை' யென்றும், என்றுமுள்ள ஒரே மெய்ப்பொருள் பரம்பொரு ளாதலின் அதை வாய்மையென்றும், பரம்பொருளாற் பெறப்படும் சிறந்த பேரின்பத்தை நோக்கின் இழிந்த பிறவித்துன்பத்திற் கேதுவாகிய ஆசை நீங்குமாதலின் 'வாய்மை வேண்டவரும்' என்றுங் கூறினார். 'வாய்மை' ஆகுபெயர். 'மற்று' வினைமாற் றிடைச்சொல். 'தூஉய்மை', 'வாஅய்மை' இரண்டும் இசைநிறை யளபெடை.

**365.** ***அற்றவ ரென்பா ரவாவற்றார் மற்றையா***
***ரற்றாக வற்ற திலர்.***

**(இ-ரை.)** அற்றவர் என்பார் அவா அற்றார் - பிறவி யற்றவரென்று சொல்லப்படுவார் அதற்கேதுவாகிய அவாவற்றவரே யாவர்; மற்றையார் அற்றாக அற்றது இலர் - அவா முற்றும் அறாது சில பொருள்களின்மேல் மட்டும் ஆசையற்றவர் அவற்றால் வருந் துன்பங்க ளற்றதல்லது பிறவி யற்றவராகார்.

இதனால் அவாவறுத்தலின் சிறப்பு உடன்பாட்டு முகத்தாலும் எதிர்மறை முகத்தாலுங் கூறப்பட்டது.

**366. அஞ்சுவ தோரு மறனே யொருவனை**
**வஞ்சிப்ப தோரு மவா.**

**(இ-ரை.)** ஒருவனை வஞ்சிப்பது அவா - அருளுடைமை முதல் மெய் யுண ர்தல் ஈறாகச் சொல்லப்பட்ட எல்லாத் துறவறங்களையும் கடைப்பிடித்து வீடுபெறும் நிலையிலுள்ள ஒருவனையும், சோர்வு கண்டு புகுந்து மீண்டும் பிறப்பின்கண் வீழ்த்திக் கெடுக்கவல்லது அவாவாம்; அஞ்சுவதே அறன் - ஆதலால் அவ் வவாவிற்கு அஞ்சி அது நேராதவாறு காத்துக் கொள்வதே இறுதியில் மேற்கொள்ள வேண்டிய அறமாம்.

தொடக்கமிலியாக வந்த அவா, முற்றத் துறந்தவன் ஒரோவழிச் செம்பொருள் காண்டலை யொழிந்து கவனக் குறைவால் தன்னைக் காவா னாயின், அது வழியாக அவனறியாமற் புகுந்து மீண்டும் பிறப்பினை யுண் டாக்கு மாதலான், அதனை 'வஞ்சிப்பது' என்றார். அது வராமற் காத்தலாவது இடைவிடாது உள்ளத்தில் ஊன்றுதல். 'ஓரும்' ஈரிடத்தும் அசைநிலை. பிரித்துக் கூட்டப்பட்ட ஏகாரம் பிரிநிலை.

**367. அவாவினை யாற்ற வறுப்பிற் றவாவினை**
**தான்வேண்டு மாற்றான் வரும்.**

**(இ-ரை.)** அவாவினை ஆற்ற அறுப்பின் - ஒருவன் அவாவிற்கு அஞ்சி அதை முற்றுங் கெடுக்க வல்லனாயின்; தவா வினை தான் வேண்டும் ஆற்றான் வரும் - அவன் கெடாமைக் கேதுவாகிய வினை அவன் விரும்பியவாறே உண்டாகும்.

கெடாமை பிறவித்துன்பங்களால் அழியாமை. அதற்கேதுவாகிய வினை மேற்கூறிய துறவறங்கள். 'வினை' வகுப்பொருமை, விரும்பிய வாறாவது துன்பமில்லாதவகை.

**368. அவாவில்லார்க் கில்லாகுந் துன்ப மஃதுண்டேற்**
**றவாஅது மேன்மேல் வரும்.**

**(இ-ரை.)** அவா இல்லார்க்குத் துன்பம் இல்லாகும் - அவா இல்லா தார்க்கு அதனால் வருந் துன்பமுமில்லை; அஃது உண்டேல் தவாஅது மேல்மேல் வரும் - அது இருப்பின் (அது உள்ளவர்க்கு) அதனால் எல்லாத் துன்பங்களும் விடாது வந்து கொண்டேயிருக்கும்.

அவாவுள்ளவர்க்கு வருவன தன்னாலும் பிறவுயிர்களாலும் தெய்வத் தாலும் வரும் மூவகைத் துன்பங்களுமாம். 'தவாஅது' இசைநிறை யளபெடை

**369. இன்ப மிடையறா தீண்டு மவாவென்னுந்
துன்பத்துட் டுன்பங் கெடின்.**

**(இ-ரை.)** அவா என்னும் துன்பத்துள் துன்பம் கெடின் - அவா என்று சொல்லப்படும் கடுந்துன்பம் ஒருவர்க்குக் கெடுமாயின்; இன்பம் இடையறாது ஈண் டும் - அவர் வீடு பெற்ற பின்பு மட்டுமன்றி அதற்கு முன்பு இங்கு உடம்போடு நின்றவிடத்தும் இன்பம் இடைவிடாது தொடரும்.

துன்பத்துள் துன்பமாவது, பிற துன்பங்களெல்லாந் துன்பமாகத் தோன்றாவாறு பொறுக்குந்தன்மையற்ற துன்பம். அவாவினா லுண்டாகுந் துன்பத்தை அவாவென்னுந் துன்பமென்று கரணகத்தைக் கருமகமாகச் சார்த்திக் கூறினார். பரம்பொருளொடு உள்ளத்தாற் கூடுதலே பேரின்பமாக லின், அவாவறுத்து அங்ஙனஞ் செய்தார் உடம்போடு கூடிநின்றவிடத்தும் அவ் வின்பந் துய்ப்பர் என்பது இங்குக் கூறப்பட்டது.

**370. ஆரா வியற்கை யவாநீப்பி னந்நிலையே
பேரா வியற்கை தரும்.**

**(இ-ரை.)** ஆரா இயற்கை அவா நீப்பின் - ஒருபோதும் நிரம்பாத இயல்பையுடைய அவாவை ஒருவன் விடுவானாயின்; அந் நிலையே பேரா இயற்கை தரும் - அவ் விடுகை அப்பொழுதே அவனுக்கு ஒருகாலும் மாறாத இயல்பையுடைய பேரின்பத்தைத் தரும்.

நிரம்பாமையாவது எத்துணைப் பொருள் பெறினும், அவற்றைக் கொண்டு எத்துணைக் காலம் இன்பம் நுகரினும், மனம் பொந்திகை (திருப்தி) யடையாமை.

> "ஆசைக்கோ ரளவில்லை யகிலமெல் லாங்கட்டி
> யாளினுங் கடன்மீதிலே
> ஆணைசெல வேநினைவ ரளகேச னிகராக
> அம்பொன்மிக வைத்தபேரும்
> நேசித்து ரசவாத வித்தைக் கலைந்திடுவர்
> நெடுநா ளிருந்தபேரும்
> நிலையாக வேயினுங் காயகற் பந்தேடி
> நெஞ்சுபுண் ணாவரெல்லாம்"

என்றார் தாயுமானவர். இங்ஙனம் இயல்பாகவுள்ள நிரம்பாத்தன்மை இளமை, யாக்கை, உடல்நலம், செல்வம், உறவு முதலியவற்றின் நிலையாமையாலும்

மேன்மேலும் அதிகரிப்பதாம். இனி, எண்வகை யெச்சப் பிறவிகட்கும், நோயொடும் வறுமையொடும் பிறந்தார்க்கும், இன்பநிலையாமை மட்டு மன்றி வாழ்நாள் முழுதும் இன்பமின்மையும் உண்டாம். அதனால், கடுமை யாக வுழைத்தும் கைக்கெட்டியது வாய்க்கெட்டாதும் வாய்க்கெட்டியது வயிற்றிற்கெட்டாதும், வயிற்றிற்கெட்டியது சிறிதும் பசிதணிக்காதும் போவது போன்ற உலகவின்பம்பற்றிய அவாவை, அறவே நீக்கவேண்டு மென்பது கருத்து. எள்ளளவுந் துன்பங் கலவாததாய், எல்லை யில்லா இன்பந்தருவதாய், என்றும் ஒரே தன்மையதா யுள்ளமையால், வீட்டினைப் 'பேரா வியற்கை' யென்றும், அது அவா நீக்க வுடன்பெறப்படுதல் உறுதியாகலின் 'அந்நிலையே' தரும் என்றுங் கூறினார்.

"வாசியு மூசியும் பேசி வகையினாற்
பேசி யிருந்து பிதற்றிப் பயனில்லை
யாசையு மன்பு மறுமி னறுத்தபி
னீச னிருந்த விடமெளி தாமே." (திருமந். 2613)

"மாடத்து ளானலன் மண்டபத் தானலன்
கூடத்து ளானலன் கோயிலுள் ளானலன்
வேடத்து ளானலன் வேட்கைவிட் டார்நெஞ்சின்
மூடத்து ளேநின்று முத்திதந் தானே" (திருமந். 2614)

என்று திருமூலர் கூறுதலுங் காண்க. இங்ஙனம் உடலோடிருந்தே வீடுபெறுவது உடலிருந்த வீடு (சீவன் முத்தி) என்றும், இறந்தபின் பெறுவது உடலிறந்த வீடு (விதேக முத்தி) என்றும் சொல்லப்பெறும்.

## துறவறவியல் முற்றிற்று.

## 4

# ஊழியல்

## அதி. 38 - ஊழ்

*அதாவது, பழம்பிறப்புகளிற் செய்யப்பட்ட இருவினைப் பயன், செய்தவனையே செய்த முறைப்படி சென்றடையும் இயற்கை யொழுங்கு. இது முறைப்படி வருவதால் முறையென்றும் ஊழ் என்றும், அவரவர்க்குரிய இன்பதுன்பப் பகுதிகளை வகுப்பதால் பால் என்றும் வகுத்தான் என்றும், தெய்வ ஏற்பாடு போலிருப்பதால் தெய்வம் என்றும், பால்வரை தெய்வம் என்றும் பெயர் பெறும். இனி மாறாவியல்பா யிருப்பதால் இயற்கையென் றும் பெயர் பெறுவதாம்.*

*இது அறம்பொரு ளின்பம் மூன்றற்கும் பொதுவேனும், இருவினைப் பயனாயிருப்பதாலும், இனிமேலேனும் நல்லூழைத் தோற்றுவித்தற்கு இன்று முதல் நல்வினையே செய்க என்று ஏவும் வகையிலும், அறத்துப்பாலொடு சேர்க்கப்பட்டு, அதே சமையத்தில் பொருளோ டிதற்குள்ள நெருங்கிய தொடர்பை யுணர்த்தற்குப் பொருட்பாலின் முன்பும் துறவறவியலின் இறுதி யிலும் வைக்கப்ப பெற்றதென அறிக.*

**371. ஆகூழாற் றோன்று மசைவின்மை கைப்பொருள்
போகூழாற் றோன்று மடி.**

(இ-ரை.) கைப்பொருள் ஆகுஊழால் அசைவின்மை தோன்றும் - ஒருவன் கையிற் பொருள் சேர்தற்குக் கரணகமான நல்லூழால் முயற்சி யுண்டாகும்; போகு ஊழால் மடி தோன்றும் - அவன் கையிலுள்ள பொருள் தீர்தற்குக் கரணகமான தீயூழாற் சோம்பலுண்டாகும்.

'ஆகூழ்', 'போகூழ்' என்னும் வினைத்தொகைகள் கரணகப் பொருளன. அசைவு சோம்பல், ஒருவனுக்குச் செல்வம் தன் முயற்சியாலும் வரும்;

முன்னோர் தேட்டாகப் பிறர் முயற்சியாலும் வரும். அங்ஙனமே ஒருவன் செல்வத்திற்கு அழிவு அவன் செயலாலும் வரும்; கள்வர் பகைவர் முதலிய பிறர் செயலாலும் வரும். ஒருவனுக்குச் செல்வத்தின் ஆக்கம் போன்றே அழிவும் பிறரால் மட்டுமன்றித் தன்னாலும் நேருமாறு, ஊழே முயற்சியையும் சோம்பலையும் தோற்றுவிக்கு மென்பது இங்குக் கூறப்பட்டது. 'கைப்பொருள்' என்பது முன்னும் பின்னுஞ் சென்றியைதலால் தாப்பிசைப் பொருள்கோளும் இடைநிலை விளக்கணியுமாகும்.

**372. பேதைப் படுக்கு மிழவூ ழறிவகற்று**
**மாகலூ ழுற்றக் கடை.**

**(இ-ரை.)** இழவு ஊழ் (உற்றக்கடை) பேதைப்படுக்கும் - ஒருவன் தன் செல்வத்தை இழத்தற்குக் கரணகமான தீயூழ் வந்துற்றவிடத்து, அது அவன் எத்துணைப் பேரறிஞனா யிருந்தாலும் அவனைப் பேதையாக்கும்; ஆகல்ஊழ் உற்றக்கடை அறிவு அகற்றும் - இதற்கு மாறாக, அவனுக்குச் செல்வஞ் சேர்வதற்கேற்ற நல்லூழ் வந்துற்றவிடத்து, அது அவன் எத்துணைப் பேதையாயிருந்தாலும் அவனைப் பேரறிஞனாக்கும்.

செல்வம் என்பது அதிகாரத்தால் வந்தது. 'இழவூழ்', 'ஆகலூழ்' என்பன 4ஆம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை. உற்றக்கடை என்பது இறுதிநிலை விளக்கணி. மேற்கூறிய முயற்சிக்கும் சோம்பற்கும் ஏதுவான நிலைமைகள் இங்குக் கூறப்பட்டன.

**373. நுண்ணிய நூல்பல கற்பினு மற்றுந்தன்**
**னுண்மை யறிவே மிகும்.**

**(இ-ரை.)** நுண்ணிய பல நூல் கற்பினும் - பேதைப்படுத்தும் தீயூழுள்ள ஒருவன் நுண்ணிய பொருள்களை யுணர்த்தும் பல நூல்களைக் கற்றாலும்; மற்றும் தன் உண்மை அறிவே மிகும் - அவனுக்குப் பின்னும் அவ் வூழா லாகிய பேதைமை யுணர்வே மேற்படும்.

பொருளின் நுண்மை நூல்மே லேற்றப்பட்டது. மேற்படுதல் நுண் ணூலறிவை முற்றும் மறைத்தல். அதனால் தீயூழினர்க்கு இழப்பைத் தடுக்க நூலறிவு பயன்படா தென்பதாம்.

**374. இருவே றுலகத் தியற்கை திருவேறு**
**தெள்ளிய ராதலும் வேறு.**

**(இ-ரை.)** உலகத்து இயற்கை இருவேறு - உலகத்தில் உடைமைபற்றி ஊழினாலுண்டாகிய இயற்கை இருவேறு நிலைமையதாம்; திருவேறு தெள்ளியர் ஆதலும் வேறு - செல்வராதலும் வேறு; தெள்ளிய அறிஞராதலும் வேறு.

அறிவுடையோர் நல்லவராயும் உலக இன்பம் பொருளாற் பெறக் கூடியதாயு மிருத்தலால், அறிவுடையோரல்லரோ செல்வராயிருத்தல் வேண்டும்! அங்ஙனமன்றி அறிவுடையோர் வறியராயிருந்து துன்புறவும் அல்லாதார் செல்வராயிருந்து இன்புறவுமன்றோ காண்கின்றோம்; இதற்குக் கரணகம் ஊழ்வேறுபாடே யென்பது கருத்தாம்.

அறிவுடையோர் பொதுநலங் கருதிப் பல ஒழுக்க வரம்புகளையும் நெறிமுறைகளையுங் கைக்கொண்டு நேர்மையாக வாழ்க்கை நடத்துவது பொருளீட்டு நெறிக்கு மாறாயிருப்பதால், அவர்களிடத்திற் செல்வஞ் சேர்வ தில்லை. என்றுந் தன்னலமாக விருந்து எல்லார்க்கும் நல்லவராக நடித்துப் பொருளீட்டுவதையே குறிக்கோளாகக் கொண்டு, நெறிமுறை யொன்றுங் கடைப்பிடியாதவரிடமே செல்வஞ் சேர்வதாம். இம் மாறுபட்ட நிலைமை யையே,

> "பல்லான்ற கேள்விப் பயனுணர்வார் பாடழிந்
> தல்ல லுழப்ப தறிதிரேல் – தொல்சிறப்பின்
> நாவின் கிழத்தி யுறைதலாற் சேராளே
> பூவின் கிழத்தி புலந்து"

என்று நகைச்சுவைக் கரணகங் காட்டிப் பாடினார் பண்டைப் புலவரொருவர்.

**375.** நல்லவை யெல்லாஅந் தீயவாந் தீயவு
நல்லவாஞ் செல்வஞ் செயற்கு.

**(இ-ரை.)** செல்வம் செயற்கு - செல்வத்தைத் தேடுதற்கு; நல்லவை எல்லாம் தீய ஆம் - தீயூழுற்றவிடத்து நல்ல நிலைமைகளெல்லாம் தீயன வாகிப் பயன்படாது போம்; தீயவும் நல்ல ஆம் - நல்லூழுற்ற விடத்துத் தீய நிலைமைகளும் நல்லனவாகிப் பயன்படும்.

நல்லவும் தீயவுமான நிலைமைகள் காலமும் இடமும் கருவியும் முயற்சியும் துணையாள்களும்பற்றியனவாம். நல்லூழ் தீயூழ் என்பன அதி

காரத்தால் வந்தன. பொருளீட்டும் முயற்சிக்குரிய துணைக் கரணங்களுப ஊழால் வேறுபடு மென்பது இங்குக் கூறப்பட்டது.

**376. பரியினு மாகாவாம் பாலல்ல வுய்த்துச்**
**சொரியினும் போகா தம.**

**(இரை.)** பால் அல்ல பரியினும் ஆகாவாம் - ஊழால் தமக்கு உரிய வல்லாத பொருள்கள் வருந்திக் காப்பினும் தம்மிடத்து நில்லாவாம்; தம உய்த்துச் சொரியினும் போகா - ஊழால் தமக்குரிய பொருள்கள் வெளியே கொண்டுபோய்க் கொட்டினும் தம்மைவிட்டு நீங்கா.

பொருள்களின் இருப்பும் போக்கும் ஊழாலன்றிக் காப்பாலும் காவாமையாலும் நிகழா என்பதாம்.

**377. வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி**
**தொகுத்தார்க்குந் துய்த்த லரிது.**

**(இ-ரை.)** வகுத்தான் வகுத்த வகை அல்லால் - ஊழ்த் தெய்வம் அவரவர்க்கு இன்பதுன்பம் வகுத்த வகைப்படி யல்லாமல்; கோடி தொகுத் தார்க்கும் - கோடிக்கணக்கிற் பொருளை வருந்தி யீட்டியவர்க்கும்; துய்த்தல் அரிது - அப் பொருளால் இன்பம் நுகர்தல் உண்டாகாது.

தீயூழுடையான் செல்வந் தேடுவதற்கு நல்ல நிலைமைகளும் தீயன வாக முடியுமென்று மேற்கூறினார். இனி, நல்ல நிலைமைகள் நல்லனவாகவே முடிந்து செல்வஞ் சேரினும் அச் செல்வத்தை அவன் நுகரக் கொடுத்து வைக்கப்பெறான் என்று இங்குக் கூறினார். ஒருவன் தான் தேடினதைத் தான் நுகராமை நோய், மூப்பு, சாக்காடு, கருமித்தனம், களவு, கவர்வு இயற்கைச்சேதம் முதலிய பல கரணகங்களால் நேர்வதாம்.

"பால்வரை தெய்வம் வினையே பூதம்
..........................................................
பால்பிரிந் திசையா வுயர்திணை மேன." **(கிளவி. 58)**

"நின்றாங் கிசைத்தல் இவணியல் பின்றே" **(கிளவி. 56)**

"இசைத்தலு முரிய வேறிடத் தான" **(கிளவி. 60)**

என்னும் தொல்காப்பிய நெறிப்படி 'வகுத்தது' என்று சொல்லால் அஃறிணை யாயிருப்பது 'வகுத்தான்' என்று உயர்திணையாயிற்று. 'கோடி' என்பது பால்

பகா வஃறிணைப் பெயராகக் கொள்ளப்படும். அவ் வெண் இங்குப் பொருள் களை மட்டுமன்றி உயர்ந்த காசையுங் குறிக்கும். ஒருவன் செல்வத்தைக் காசுவகையில் மதிப்பதே வழக்கமாதலாலும், காசைக்கொண்டு எல்லா நுகர்பொருள்களையும் என்றும் பெறலாமாதலாலும், பொருள்களை விளைப்போரும் தொகுப்போரும் பெறுவோரும் தம் நுகர்ச்சிக்கு மிஞ்சிய வற்றைக் காசாக மாற்றிவிடுவ ராதலாலும், இட்டுவைக்க இடமில்லாவாறும் நாட்பட்டுக் கெடுமாறும் முன்பின் வேண்டிய பொருள்களை யெல்லாம் ஒருங்கே வாங்குவா ரின்மையாலும், கோடியென்பது பொருட்டொகை யென்பதினுங் காசுத்தொகை யென்பதே பொருத்தமாம். கோடி யென்னும் பெருந்தொகை தொகுத்தார்க்கும் என்னும் சிறப்பும்மை தொக்கது.

**378.** *துறப்பார்மற் றுப்புர வில்லா ருறற்பால*
*வூட்டா கழியு மெனின்.*

**(இ-ரை.)** உறல் பால ஊட்டா கழியும் எனின் - அடைய வேண்டிய துன்பங்களை அடைவிக்காது தீயூழ்கள் நீங்குமாயின்; துப்புரவு இல்லார் மன் துறப்பார் - நுகர்ச்சி யில்லாத வறியர் பெரும்பாலும் துறவியராவர்.

பரிமேலழகர் ஒழியிசைப் பொருளாகக் கூறுவது பாவிலேயே அடங்கி யிருத்தலால், மன்னிடைச் சொற்கு மிகுதிப்பொருள் கொள்ளப்பெற்றது. துன்பங்களின் பன்மைபற்றி அவற்றை யூட்டும் ஊழையும் பன்மையாகக் கொண்டார். வலிமிகாமையால் 'ஊட்டா' எதிர்மறை முற்றெச்சம். துறவுநிலை இயற்கையாக அமைந்திருந்தும் அதை வீடுபேற்றிற்குப் பயன்படுத்தாவாறு ஊழ்கெடுக்குமென்பது இங்குக் கூறப்பட்டது.

**379.** *நன்றாங்கா னல்லவாக் காண்பவ ரன்றாங்கா*
*லல்லற் படுவ தெவன்.*

**(இ-ரை.)** நன்று ஆம்கால் நல்லவாக் காண்பவர் - நல்வினைப் பயன் களாகிய இன்பங்கள் நேருங்கால் அவற்றை நல்லவையென்று முழு மனத்துடன் ஏற்று நுகர்பவர்; அன்று ஆம் கால் அல்லல் படுவது எவன் - மற்றத் தீவினைப் பயன்களாகிய துன்பங்கள் நேருங்கால் அவற்றையும் அவ்வாறே ஏற்று நுகராது துன்புறுவது ஏனோ?

இருவினையுந் தாமே செய்தவையாதலாலும், வினைப்பயன் எவரை யும் விடாமையாலும், அவற்றுள் ஒன்றன் பயனைமட்டும் ஏற்று நுகர்ந்துவிட்டு இன்னொன்றன் பயனை ஏற்காது வருந்துவது அறிவன் றெனப்பதாம்.

**380. ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று**
**சூழினுந் தான்முந் துறும்.**

(இ-ரை.) ஊழின் பெருவலி யா உள - ஊழைப்போல மிகுந்த வலிமையுள்ளவை வேறு எவையிருக்கின்றன? மற்று ஒன்று சூழினும் தான் முந்து உறும் - அதை விலக்குதற்கு வேறொரு வழியை ஆய்ந்து எண்ணினும், அவ் வழியையே தனக்கும் வழியாகக் கொண்டு அது அவ் வெண்ணத்தின் முற்பட்டு வந்து நிற்கும். உறுவலி, மதவலி என்பன போலப் பெருவலி என்பது ஆகுபெயர். சூழினும் என்பது எச்சவும்மை. 'சூழினுந் தான்முந் துறும்' என்றமையால் சூழ்ச்சியை நிறைவேற்றுதல் ஒருகாலுங் கூடாதென்பதாம். சூழ்தலாவது நாற்புறமும் வளைந்து முற்றுகையிடுதல் போலப் பகைவர் ஒருவழியாலும் தப்பமுடியாவாறு தீர எண்ணுதல். இங்குப் பகை ஊழ்.

**ஊழியல் முற்றிற்று.**

**அறத்துப்பால் முற்றிற்று.**

# திருக்குறள்
## அருஞ்சொற் பொருள் அகரவரிசை
**(எண், குறள் எண்ணைக் குறிக்கும்)**

அஃகாமை – சுருங்காமை 178
அஃகி – நுண்ணிதாய் 175
அகல் – அகன்ற 25
அகற்றும் – விரிவாக்கும் 372
அகனமர்ந்து – மனமகிழ்ந்து 84
அகன்ற – பரந்த 175
அகன்றார் – பெரியராயினார் 170
அசைவு – மடி 371
அஞ்சுவது – அஞ்சிக் காப்பது 366
அடக்கலாற்றின் – அடக்க வல்லனாயின் 126
அடல் – வருத்துதல், கோறல் 206
அண்ணாத்தல் – வாய் திறத்தல் 255
அமர்ந்த – பொருந்திய 75
அமர்ந்து – மனமகிழ்ந்து 84
அமைகலா ஆறு – வருந்துகின்ற இயல்பு 219
அமைந்தின்று – அமைந்ததில்லை 340
அருங்கேடன் – கேடில்லாதவன் 210
அருளாட்சி – அருளாற் பயன் கோடல் 252
அருளாதான் – உயிர்கள் மாட்டு அருள் செய்யாதவன் 249
அவம் – பயனில் முயற்சி 262
அவாம் – விரும்பும் 215
அவித்தான் – அறுத்தான் 6
அவ்வித்து – பொறாது 167
அவ்விய – பொறாமையுள்ள 169
அழீஇ – அழித்துச்சொல்லி 182
அழுக்கற்று – பொறாமைப்பட்டு 170
அழுக்கறுப்பான் – பொறாமைப்படுபவன் 163
அழுக்காறு – பிறராக்கம் பொறாமை 35
அளைஇ – கலந்து 91
அறத்தாறு – அறத்தின் பயன் 37
அறவாழி – அறக்கடல் 8
அறன்வரையான் – (ஒருவன்) அறத்தைத் தனக்கு உரித்தாகச் செய்யாது 150
அறிவதில்லை – அறிந்ததில்லை 61
அறிவறிந்த – அறியவேண்டுவன அறிதற்குரிய 61
அறுப்பான் – கெடுப்பான் 346
அற்கா – நில்லாத 333
அற்குப – நிலையுள்ள 333
அற்றேம் – இலமாயினேம் 88
ஆகலூழ் – நல்லூழ் 372
ஆகாவாம் – நில்லாவாம் 376
ஆகுலநீர – ஆரவார நீர்மைய 94
ஆகூழ் – ஆதற்குக் காரணமாகிய நல்லூழ் 371
ஆக்கல் – வாழ்வித்தல் 264
ஆங்கால் – விளையுங்கால் 379
ஆட்சி – கையாளுதல் 252
ஆரா – ஒருகாலும் நிரம்பாத 370
ஆராவியற்கை – நிரம்பாத இயல்பு 370
ஆருயிர் – பெறுதற்கரிய மக்களுயிர் 73
ஆர்வம் – விருப்பம் 74
ஆர்வலர் – அன்புசெய்யப்பட்டார் 71
ஆறா – நெறியாக 161
ஆறு – பயன் 37
ஆற்ற – மிக 64
ஆற்ற – முழுதும் 367
ஆன்ற – நிரம்பிய 148
ஆன்று – நிறைந்து 365
இகவாவாம் – நீங்காவாம் 146
இசைபட – புகழுண்டாக 231
இடும்பை – துன்பங்கள் 4
இயலாள் – ஒழுகுபவள் 147
இயன்றது – நடந்தது 35

இடையயாக்கடை – முடியாத வழி 230
இருந்தோம்பி – இருந்து பேணிக் காத்து 81
இருபுனல் – கீழ்நீர் மேல்நீர் 7
இருவினை – நல்வினை தீவினை 5
இருவேறு – இரண்டு கூறு 374
இலம் – வறியம் 174
இலர் – வறிஞர் 270
இல்லல்ல – (யாவர்க்கும் முன்னே)
அமைந்துகிடந்தன 115
இல்லாகியாங்கு – இல்லையாயினாற் போல 247
இல்லிலோர் – மனைவி இல்லாதவர் 59
இழவூழ் – இழத்தற்கேதுவாகிய ஊழ் 372
இழிந்த – தாழ்ந்த 133
இழுக்கம் – ஒழுக்கத்தில் தவறுதல் 133
இழுக்காறு – தீநெறி 164
இறல் – இறுதி 180
இனைத்துணைத்து – இவ்வளவினது 87
இன்சொலினது – இனிய சொற்களைச்
சொல்லுதலின் கண்ணது 93
இன்புறூஉம் – இன்பத்தை மிகுவிக்கும் 94
இன்னாச்சொல் – கடுஞ்சொல் 35
ஈத்துவக்கும் –வறியார்க்கு வேண்டிய வற்றைக் கொடுத்து மகிழும் 228
ஈரம்– அன்பு 91
ஈன்பது – பயப்பது 165
உடற்றும் – வருத்தும் 13
உணரற்பாற்று – உணரும் பான்மையை உடைத்து 11
உண்பதூஉம் –உண்ணும் பொருளும் 166
உரவோர் – அறிவுடையோர் 136
உரியாள் – உரிமையாகியாள் 149
உவமை – நிகர் 7
உள்ளல் – கருதுதல் 282
உள்ளாறும் – மனத்தின்கண் அப்பொழுதே ஆறும் 129
உள்ளூர் – ஊர் நடு 216
உறுகண் – துன்பம் 216
உறூஉம் – மிகுவிக்கும் 94
உற்றக்கடை – வந்துற்ற இடத்து 372
ஊக்காது – நோக்காது 253
ஊட்டா – அடைவிக்காது 378
ஊதியம் – நிலையான பேறு 231
ஊருணி – ஊர்வாழ்நரின் குடிநீர்க்குளம் 215
ஊன் – உடம்பு 251
எச்சம் – வழிமரபு 112
எச்சம் – நன்மக்கள் 114
எத்தன்மைத்தாயினும் – எந்த இயல்பினதாகத் தோன்றினாலும் 355
எவ்வம் – இழிவுரை 223
எழிலி – மேகம் 17
எள்ளப்படும் – இகழப்படும் 191
எனைத்துணையராயினும் – எத்துணைப் பெருமையுடைய ராயினும் 144
ஏதிலார் – அயலார் 188
ஏமாப்பு – வலியாதல், அரண் 112, 126
ஐயுணர்வு – புலன்களால் உணரப்படும் ஐந்தாகிய உணர்வு (மனம்) 354
ஒக்கல் – ஏழை உறவினர் 43
ஒரால் – நீக்குதல் 153
ஒல்கார் –தளரார் 136
ஒழியவிடல் – விட்டுவிடுக 113
ஒழுகலாற்றார் – ஒழுகமாட்டார் 286
ஒழுக்காறா – ஒழுக்கநெறியாக 161
ஒன்றா – இணையின்றாக 233
ஒன்றாக – முதற்படியாக 323
ஒத்து – வேதம் 134
ஓம்பப்படும் – பாதுகாக்கப்படும் 131
ஓம்பல் – பேணிச்செய்தல் 43
ஓம்பி – போற்றி, மிசைவித்து 81
ஓம்புவான் – பேணுவான் 84
ஓர்த்து – ஆராய்ந்து 357
கடப்பாடு – ஒப்புரவு 211
கணை – அம்பு 279
கண்டற்று – உணர்ந்தாற் போலும் 249
கண்ணற – கண்ணோட்டமற 184
கதம் – சினம் 130
கரவு – வஞ்சனை 288
கரி – சான்று 25
கரியார் – இருண்டிருப்பார் 277
கலுழும் – அழும் 117
கவர்ந்தற்று – பறித்து உண்ணலொக்கும் 100
கவ்விது – அலர்தலைப் பெற்றது 114
கள்வார் – களவு செய்வார் 290
கள்வேம் – கவர்வேம் 282

கள்ளாமை – பிறரை வஞ்சிக்கக் கருதாமை 281
கள்ளார் – களவினைப் பயிலாதார் 290
கறுத்து – கறுவுகொண்டு 312
கன்றிய – மிக்க 284
காண்கிற்பின் – காணவல்லராயின் 190
காண்பரிது – காண்பது அரிது 16
காண்பவர் – நுகர்பவர் 379
காண்பு – காண்பது 16
காதலனாயின் – காதல் செய்தலுடைய னாயின் 209
காரறிவாண்மை – இருண்டவறிவினை யுடையராதல் 287
குடம்பை – முட்டை 338
குடிமை – குலனுடைமை 133
குடியோம்பல் – தளர்ந்த குடிகளைப் பேணல் 39
குழாத்தற்று – கூடுவது போன்றது 332
குறியெதிர்ப்பு – அளவுகுறித்து வாங்கி அவ் வாங்கியவாறே எதிர்கொடுப்பது 221
குன்றிக்கால் – குன்றின் 15
கூத்தாட்டு – ஆடலரங்கு 332
கூப்பி – குவித்து 260
கூழ் – சோறு 64
கெடுவல் – கெடக்கடவேன் 116
கேண்மை – உறவாகுந்தன்மை 106
கைகூப்பி – கைகுவித்து 260
கையறியாமை – செய்வதறியாமை 259
கொலை வினையர் – கொலைத் தொழிலையுடையார் 329
கொன்றன்ன – கொன்றாலொத்த 109
கோடியுமல்ல – கோடியளவுமன்றி 337
கோடு – வளைவு 279
கோட்டக்கது உடைத்து – கொள்ளுந் தகுதியை உடைத்து 220
கோட்டம் – கோணுதல் 119
கோளில் – கொள்கையில்லாத 9
கோறல் – கொல்லுதல் 321
சாக்காடு – இறப்பு 235
சார – நின்ற 323
சார்தரா – சாரமாட்டா 239
சாலும் – அமையும் 25
சால்பு – அமைதி 105
சாவாமருந்து – சாவை நீக்கும் மருந்து 82
சிதைவின்றி – அழிவின்றி 112
சிமிழ்த்தற்று – பிணித்தாற் போலும் 274
சிறப்பு – வீடுபேறு 31
சீர்மை – விழுப்பம் 123
சுடரும் – ஒளிமிகும் 267
சூழற்க – எண்ணாதொழிக 204
செகுத்து– விலங்கினுயிரைப் போக்கி 259
செங்கோல் – முறைசெய்தல் 360
செந்தண்மை – செம்மையான குளிர்ந்த அருள் 30
செப்பம் – நிடுவுநிலைமை 112
செயப்பட்டார் – செய்வித்துக்கொண்டவர் 105
செயற்பாலது – செய்யத் தக்கது 40
செயிர் – குற்றம் 258
செயுநீர் – தவிராது செய்யும் தன்மையை யுடைய 219
செய்கலாதார் – செய்யமாட்டாதார் 26
செய்தவக்கண்ணும் – செய்த இடத்தும் 312
செய்தவம் – செய்யவேண்டிய தவம் 265
செய்யவள் – திருமகள் 167
செய்யற்க – செய்யாதொழிக 205
செல்லா – வறுமை கூர்ந்த 330
செல்லாது – நடவாது 18
செல்லும்வாய் – எய்துமிடம் 33
செல்விருந்து – முந்தி வந்த விருந்து 86
செவ்வி – ஏற்றகாலம், இனிய மனநிலை 130
செவ்வியான் – செம்மையுடையவன் 169
செறிவு – அடக்கம் 123
செற்றார் – பகைமைகொண்டார் 313
செற்று – கெடுத்து 168
சொலற்க – சொல்லாதொழிக 184
சொல்லிழுக்குப்பட்டு – சொற்குற்றத்தின் கட்பட்டு 127
சொற்காத்து – உலக மதிப்பையும் காத்து 56
சொற்கோட்டம் – சொல் கோடுதல் 119
சோகாப்பர் – துன்புறுவர் 127
சோர்விலாள் – பிறர்க்குச் செய்யும் அறவினைகளிலும் தளர்ச்சியில்லாதவள் 56
ஞாலம் – நிலவுலகம் 102
தகவு – நடுவுநிலைமை 114
தகுதி – நடுநிலைமை, பொறை 111, 158
தகை – நன்மை 56
தகைசான்ற – நன்மையமைந்த 56
தக்கார் – நடுவுநிலைமையுடையவர் 114

தங்கியான் – தங்கினவன் 117
தடிந்து – குறைந்து 17
தண்மை – குளிர்ந்த அருள் 30
தமியர் – தனியர் 229
தருவாரில் – விற்பாரில்லை 256
தலைப்படுவர் – எய்துவர் 356
தலைப்பிரியா – நீங்காத 97
தவா – கெடாத 367
தவ்வை – தமக்கை 167
தள்ளாது – தவறாது 290
தள்ளும் – தவறும் 290
தாழ்வு – வறுமை 117
தானம் – அறக்கொடை 19
திண்மை – கலங்காநிலைமை 54
திரிந்து – வேறுபட்டு 60
திரு – செல்வம், திருமகள் 168, 176
திருச்செற்று – செல்வத்தைக் கெடுத்து 168
திறனல்ல – செய்யத்தகாத
கொடியவற்றை 157
தினல் – தின்பது 254
தினற்பொருட்டு – ஊன்றின்கை
காரணமாக 256
தீப்பால் – தீமைக் கூற்றவாகிய
வினைகள் 206
தீப்பிணி – தீய நோய் 227
தீர – முற்ற 348
தீர்த்துறந்தார் – முற்றத் துறந்தார் 348
தீர்ந்தார் – நீங்கினார் 170
தீவாழ்க்கையவர் – இழிதொழில்
வாழ்க்கையுடையார் 330
தீவினைப்பால் – தீவினையாகிய பகுதி 209
துச்சில் – ஒதுக்கு இடம் 340
துடைத்தவர் – நீக்கினவர் 107
துணைக்கூறின் – இவ்வளவென்று
எண்ணாற் கூறி அறியலுறின் 22
துணைத்துணை – தகுதியளவே அளவு 87
துப்பாய – நல்ல 12
துப்பாயதூஉம் – உணவாய் நிற்பதும் 12
துப்பார்க்கு – உண்பார்க்கு 12
துப்பு – உணவு 12
துப்பரவு – கொடுத்துதவுதல்,
நுகர்ச்சி 263, 378
துய்த்தல் – நுகர்தல் 377
துவ்வாதவர் – வறியர் 42
துவ்வாமை – நல்குரவு 94
துறந்தார் – இருவகைப்பற்றினையும்
விட்டார் 22, 42
துறவற்க – விடாதொழிக 100
துன்னற்க – செய்யா தொழிக 206
துன்னாமை – மேவாமை 316
தூக்கார் – ஆராய்தலிலராய் 103
தூக்கின் – ஆராயின் 103
தூற்றல் – பலருமறியப்பரப்புதல் 188
தெருளாதான் – ஞானமில்லாதவன் 249
தெள்ளியராதல் அறிவுடையராதல் 374
தெறல் – சாவித்தல் 264
தென்புலத்தார் – இறந்த முன்னோர் 43
தோற்றம் – உயர்ச்சி 124
நடுவிகந்து – நடுவுநிற்றலை ஒழிந்து 113
நயனில – விருப்பமிலவாகிய செயல்,
நீதியொடு படாத 192, 197
நயனுடையான் – ஒப்புரவு செய்வான் 216
நலக்குரியார் – எல்லா நன்மைகளும்
எய்துதற்கு உரியார் 149
நல்லாறு – நல்லொழுக்கநெறி 41
நல்விருந்து – தக்க விருந்தினர் 84
நல்வினை – வீட்டிற்கேதுவாகிய அறம் 335
நன்றல்லது – தீமை 108
நன்றூக்காது – அருளை நோக்காது 253
நன்னயம் – பெரு நன்மை 314
நாச்செற்று – உரையாடா வண்ணம்
நாவையடக்கி 335
நாடாச் சிறப்பு – நல்ல நிலைமை 74
நாமநீர் – அச்சந்தருங் கடல் 149
நிலையஞ்சி – பிறவி நிலைமைக்கு
அஞ்சி 325
நிறை – நெஞ்சைக் கற்பு நெறியில்
நிறுத்தல் 57
நிறையுடைமை – சால்புடைமை 154
நீட்டல் – சடையாக்கல் 280
நீள்புகழ் – பொன்றாது நிற்கும் புகழ் 234
நெஞ்சின் துறவார் – நெஞ்சாற்
பற்றறாது வைத்து 276
நோப்பால – துன்புறுத்தும் திறத்தன
வாகிய குற்றங்கள் 206
நோலாதவர் – தவஞ்செய்யாதார் 270
நோற்கிற்பவர் – பொறுப்பவர் 159
நோன்பு – தவம் 344

நோன்மை – பொறை 48
நோன்றல் – பொறுத்தல் 261
பகச்சொல்லி –பிளவுண்டாகுமாறு
புறங்கூறி 187
படாஅமை – இல்லாவாறு 38
படிறு – வஞ்சனை 91
பதடி – பதர் 196
பயன்சாரா – பயனொடுபொருந்தாத 194
பரிந்தோம்பி – (நிலையாப்பொருளை)
வருந்திக்காத்து 88
பருவந்து – வறுமையால் 83
பல்லாற்றால் – பல்வேறு சமயநெறிகளால்242
பழி பிறங்கா – (பிறராற்) பழிக்கப்படாத 62
பற்றற்றகண்ணே – ஒருவன்
இருவகைப் பற்றும் அற்றபொழுதே 349
பற்றற்றான் – எல்லாப் பொருளையும்
பற்றி நின்றே பற்றற்ற இறைவன் 350
பனுவல் – நூல் 21
பாத்து – பகுத்து 44
பாரித்து – விரித்து 193
பால் – ஊழ் 376
பிழையாதற்று – தப்பாது 307
பிறங்கா – தோன்றாத 62
பிறங்கிற்று – விளங்கித் தோன்றிற்று 23
பிறன் இயலாள் – பிறனுக்குரிமை
பூண்டு அவன்வழி நிற்பவள் 147
பின்சார – அடுத்த படியாக 323
பீடு நடை – பெருமிதநடை 59
புக்கில் – நிலையாக வதியத்தக்க ஓர்
உறையுள் 340
புரிந்தொழுகுவார் – விரும்பியொழுகு
வார் 143
புரை – குற்றம் 292
புலைவினையர் – புலைத்தொழிலினர் 329
புறத்தாறு – துறவுநெறி 46
புறனழீஇ – ஒருவனைக் காணாதவழி
இகழ்ந்துரையால் அழித்துச் சொல்லி182
புன்சொல் – பழித்துரை 189
புன்மை – குற்றம் 174
பூசனை – பூசை 18
பூப்பர் – பொலிவடைவர் 248
பெட்டு – காதலித்து 141
பெருந்தக்க – மேம்பட்ட 54
பேராண்மை – பெரிய ஆண்தகைமை 148
பேரா இயற்கை – ஒருகாலும் மாறாத
இயல்பு 370
பேர்த்து – மீண்டும் 357
பொச்சாந்து – மறந்து 199
பொச்சாப்பு – சோர்வு 285
பொய்யற்க – பொய்யா தொழிக 293
பொருளல்லது – கரிசு (பாவம்) 254
பொருளற்றார் – செல்வத்தை இழந்தவர் 248
பொருளாட்சி – பொருளாற் பயன்கோடல் 252
பொருள் தீர்ந்த – பயனினீங்கிய 169
பொன்றா – அழிவில்லாத 36
பொன்றுங்கால் – இறக்கும் காலத்து 36
போகூழ் – கைப்பொருள் அழிதற்குக்
காரணமாகிய ஊழ் 371
போற்றாக்கடை – குறிக்கொண்டு
காவாஇடத்து 315
மங்கலம் – நெடுநன்மை 60
மயலாகும் – மயங்குதற்கேதுவாம் 344
மரத்தற்று – மரத்தினை யொக்கும் 217
மரீஇயவன் – பயின்றவன் 227
மருங்கோடி – செந்நெறியினின்றும்
ஒரு பக்கமாக விலகிச் சென்று 210
மருள் தீர்ந்த – மயக்கத்தின் நீங்கிய 199
மல்லல் – வளப்பம் 245
மழித்தல் – தலைமயிரை வழித்தல் 280
மறைமொழி – மந்திரம் 28
மனைத்தக்க – மனையறத்திற்குத் தக்க 51
மாக்கள் – பகுத்தறிவில்லா மாந்தர் 329
மாணடி – மாட்சிமைப்பட்ட அடி 9
மாணாக்கடை – நற்பண்பு இல்லாவிட்டால்53
மாணிழை – மாண்ட இழையினை
யுடையாள் 114
மாண்டற்கரிது – நன்றாதல் இல்லை 177
மாண்பு – நற்குண நற்செய்கைகள் 51
மிச்சில் – மிக்கது 85
முகனமர்ந்து – முகம் இனியனாய் 84
முந்துறும் – முற்பட்டு நிற்கும் 380
யாண்டும் – எக்காலத்தும் 4
வகுத்தான் – தெய்வம் 327
வண்பயன் – வளப்பத்தையுடைய
விளையுள் 239
வல்லுருவம் – தவவலியுடையார் கோலம் 273
வழங்காதெனின் – பெய்யாதெனின் 16
வழுக்கி – மறந்து 136

வன்கணவர் – அருளிலாதார் 228
வன்பால் – பாலைநிலம் 78
வாயில் – வழி 6
வாலறிவன் – தூய அறிவையுடைய இறைவன் 2
விசும்புளார் – வானத்துளார் 25
வித்தகர் – திறப்பாடுடையார் 235
விருந்தொரால் – விருந்தினரை ஏற்றுக்கொள்ளாது விடுதல் 153
விளிந்தார் – இறந்தார் 143
விளைவு – பயன் 284
விறல் – வெற்றி 180
விற்றுக்கோட்டக்கது – விற்றாயினுங் கொள்ளத் தக்க தகுதியை யுடைத்து 220
வினைபடுபாலால் – செயல்பட்ட கூற்றானே 271
வீயா – தீராத 284
வெஃகா – விரும்பாத 129
வெஃகாமை – வேண்டாமை 178
வெஃகி – விரும்பி 172
வேளாண்மை – நன்றி செய்தல் 81
வைகல் – நாடோறும் 83
வையகம் – மண்ணுலகம் 101

# திருக்குறள்
## பாட்டு முதற்குறிப்பு அகரவரிசை
### (எண், குறள் எண்ணை குறிக்கும்)


அஃகாமை 178
அஃகி யகன்ற 175
அகர முதல 1
அகழ்வாரைத் 151
அகனமர்ந் தீதலின் 92
அகனமர்ந்து செய்யாள் 84
அஞ்சுவ தோரும் 366
அடக்க மமரருள் 121
அடல்வேண்டும் 343
அந்தண ரென்போர் 30
அமிழ்தினும் 64
அருங்கேடன் 210
அருட்செல்வஞ் 241
அரும்பய னாயும் 198
அருளல்ல தியாதெனிற் 254
அருளில்லார்க் 247
அருள்கருதி 285
அருள்சேர்ந்த 243
அருள்வெஃகி 176
அல்லரருளாள் 245
அல்லவை 96
அவ்வித் தழுக்கா 167
அவ்விய நெஞ்சத்தான் 169
அவாவில்லார்க் 368
அவாவினை 367
அவாவென்ப 361
அவிசொரிந் 259
அழுக்கற் றகன்றாரும் 170
அழுக்கா றவா 35
அழுக்கா றுடையார்க் 165
அழுக்கா றுடையான்கண் 135
அழுக்கா றெனவொரு 168
அழுக்காற்றின் 164
அளவல்ல செய்தாங்கே 289
அளவறிந்தார் 288
அளவின்கண் 286
அற்கா வியல்பிற்றுச் 333
அற்றவ ரென்பார் 365
அற்றாரழிபசி 226
அறங்கூறா னல்ல 181
அறஞ்சொல்லும் 185
அறத்தா றிதுவென 37
அறத்தாற்றின் 46
அறத்தான் வருவதே 39
அறத்திற்கே 76
அறத்தினூஉங் 32
அறவாழி யந்தணன் 8
அறவினை யாதெனின் 321
அறனழீஇ 182
அறனறிந்து வெஃகா 179
அறனாக்கம் 163
அறனியலான் 147
அறன்கடை 142
அறன் வரையா 150
அறனெனப் 49
அறனோக்கி 189
அறிவினானாகுவ 315
அறிவினு ளெல்லாந் 203
அன்பகத் தில்லா 78
அன்பிலாரெல்லாம் 72
அன்பிற்குமுண்டோ 71
அன்பின் வழிய 80
அன்பீனு மார்வம் 74
அன்புமறனும் 45
அன்புற் றமர்ந்த 75
அன்போ டியைந்த 73
அன்றறிவாமென்னா 36
ஆகூழால் 371

| | |
|---|---|
| ஆரா வியற்கை | 370 |
| ஆற்றினொழுக்கி | 48 |
| ஆற்றுவா – ல்பசி | 225 |
| இடனில் பருவத்தும் | 218 |
| இணரெரி | 308 |
| இயல்பாகும் | 344 |
| இயல்பினான் | 47 |
| இரத்தலி னின்னாது | 229 |
| இருணீங்கி | 352 |
| இருந்தோம்பி | 81 |
| இருமை வகைதெரிந் | 23 |
| இருவே றுலகத் | 374 |
| இருள்சேர் இருவினையுஞ் | 5 |
| இல்வாழ்வான் | 41 |
| இல்லதென் | 53 |
| இலமென்று வெஃகுதல் | 174 |
| இலர்பல ராகிய | 270 |
| இலனென்று தீயவை | 205 |
| இலனென்னு மெவ்வ | 223 |
| இறந்தார் | 310 |
| இறலீனும் | 180 |
| இன்சொலா லீரம் | 91 |
| இன்சொ லினிதீன்றல் | 99 |
| இன்பம் | 369 |
| இன்மையு ளின்மை | 153 |
| இன்னாசெய் தாரை | 314 |
| இன்னா திரக்கப் | 224 |
| இன்னா வெனத்தான் | 316 |
| இனிய வுளவாக | 100 |
| இனைத்துணைத் | 87 |
| ஈத்துவக்கும் | 228 |
| ஈத லிசைபட | 231 |
| ஈன்ற பொழுதின் | 69 |
| உடைமையுளின்மை | 89 |
| உண்ணாது | 160 |
| உண்ணாமை யுள்ள | 255 |
| உண்ணாமை வேண்டும் | 257 |
| உதவி வரைத்தன் | 105 |
| உயிருடம்பின் | 330 |
| உரனென்னுந் | 24 |
| உரைப்பாக் | 232 |
| உலகத்தோ | 140 |
| உள்ளத்தாலுள்ளலுந் | 282 |
| உள்ளத்தாற் | 294 |
| உள்ளிய தெல்லாம் | 309 |
| உற்றநோய் நோன்றல் | 261 |
| உறங்குவது | 339 |
| ஊருணி நீர்நிறைந் | 215 |
| ஊழிற் பெருவலி | 380 |
| எந்நன்றி | 110 |
| எப்பொரு ளெத்தன்மை | 355 |
| எல்லார்க்கும் | 125 |
| எல்லா விளக்கும் | 299 |
| எழுபிறப்பும் | 62 |
| எழுமை எழுபிறப்பும் | 107 |
| எள்ளாமை | 281 |
| எளிதென | 145 |
| எனைத்தானும் | 317 |
| எனைத்துணைய | 144 |
| எனைப்பகை | 207 |
| என்பிலதனை | 77 |
| ஏதிலார் குற்றம்போல் | 190 |
| ஏரி னுழாஅர் | 14 |
| ஐந்தவித்தான் | 25 |
| ஐயத்தி னீங்கித் | 353 |
| ஐயுணர் வெய்தியக் | 354 |
| ஒத்த தறிவான் | 214 |
| ஒப்புரவி னால்வருங் | 220 |
| ஒருபொழுதும் | 337 |
| ஒருமையு ளாமைபோல் | 126 |
| ஒல்லும் வகையான் | 33 |
| ஒழுக்கத்தி னெய்துவர் | 137 |
| ஒழுக்கத்தி னொல்கார் | 136 |
| ஒழுக்கத்து | 21 |
| ஒழுக்க முடைமை | 133 |
| ஒழுக்கமுடையவர்க் | 139 |
| ஒழுக்கம் விழுப்பந் | 131 |
| ஒழுக்காறாக் | 161 |
| ஒறுத்தாரை | 155 |
| ஒறுத்தார்க் | 156 |
| ஒன்றாக நல்லது | 323 |
| ஒன்றா வுலகத் | 233 |
| ஒன்றானுந் | 128 |
| ஒன்னார்த் | 264 |
| ஓர்த்துள்ளம் | 357 |
| கண்ணின்று கண்ணறச் | 184 |
| கணை கொடிது | 279 |
| கதங்காத்துக் | 130 |

| | | | |
|---|---|---|---|
| கள்வார்க்குத் | 290 | செயற்பால தோரும் | 40 |
| களவினா லாகிய | 283 | செயிரின் தலைப்பிரிந்த | 258 |
| களவின்கண் | 284 | செல்லா விடத்துச் | 302 |
| களவென்னுங் | 287 | செல்லிடத்துக் | 301 |
| கற்றதனாலாய | 2 | செல்விருந் | 86 |
| கற்றீண்டு | 356 | செறிவறிந்து | 123 |
| கறுத்தின்னா | 312 | சொல்லுக சொல்லிற் | 200 |
| காக்க பொருளா | 122 | சொற்கோட்டம் | 119 |
| காமம் வெகுளி | 360 | தக்கார் தகவிலர் | 114 |
| காலத்தி னாற்செய்த | 102 | தகுதி யெனவொன்று | 111 |
| குடம்பை | 338 | தந்தை மகற்காற்றும் | 67 |
| குணமென்னுங் | 29 | தம்பொருள் | 63 |
| குழலினி தியாழினி | 66 | தம்மிற்றம் | 68 |
| கூத்தாட் டவைக்குழாத் | 332 | தலைப்பட்டார் | 348 |
| கூற்றங் குதித்தலும் | 269 | தவஞ்செய்வார் | 266 |
| கெடுப்பதூஉம் | 15 | தவமறைந் | 274 |
| கெடுவல்யானென்ப | 116 | தவமுந் தவமுடையார்க் | 262 |
| கெடுவாக | 117 | தற்காத்துத் | 56 |
| கேடும் பெருக்கமும் | 115 | தன்னுயிர்க் கின்னாமை | 318 |
| கைம்மாறு வேண்டா | 211 | தன்னுயிர் தானறப் | 268 |
| கொடுப்ப தழுக்கறுப்பான் | 166 | தன்னுயிர் நீப்பினுஞ் | 327 |
| கொல்லாமை | 326 | தன்னூன் பெருக்கற்குத் | 251 |
| கொல்லான் | 260 | தன்நெஞ் சறிவது | 293 |
| கொலைவினைய | 329 | தன்னைத்தான் காக்கின் | 305 |
| கொன்றன்ன | 109 | தன்னைத்தான் காதல | 209 |
| கோளில் | 9 | தனக்குவமை | 7 |
| சமன்செய்து | 118 | தாளாற்றித் | 212 |
| சாதலி னின்னாத | 230 | தானம் தவமிரண்டும் | 19 |
| சார்புணர்ந்து | 359 | திறனல்ல | 157 |
| சிற்றின்பம் | 173 | தினற்பொருட்டால் | 256 |
| சிறப்பீனுஞ் செல்வமும் | 31 | தினைத்துணை நன்றி | 104 |
| சிறப்பீனுஞ் செல்வம் | 311 | தீப்பால தான்பிறர்கண் | 206 |
| சிறப்பொடு | 18 | தீயவை செய்தார் | 208 |
| சிறுமையுணீங்கிய | 98 | தீயவே தீய | 202 |
| சிறைகாக்கும் | 57 | தீயினாற் சுட்டபுண் | 129 |
| சினத்தைப் | 307 | தீவினையா ரஞ்சார் | 201 |
| சினமென்னுஞ் | 306 | துப்பார்க்குத் | 12 |
| சீர்மை சிறப்பொடு | 195 | துறந்தார்க்குத் | 263 |
| சுடச்சுடரும் | 267 | துறந்தார்க்கும் | 42 |
| சுவையொளி | 27 | துறந்தார் பெருமை | 22 |
| செப்பமுடையவன் | 112 | துறந்தாரின் | 159 |
| செய்யாமற் செய்த | 101 | துறப்பார்மன் | 378 |
| செய்யாமற் செற்றார்க்கும் | 313 | துன்புறூஉம் | 94 |
| செயற்கரிய செய்வார் | 26 | துன்னியார் | 188 |

| | |
|---|---|
| தூஉய்மை | 364 |
| தெய்வம் | 55 |
| தெருளாதான் | 249 |
| தென்புலத்தார் | 43 |
| தோன்றின் புக | 236 |
| நகையு முவகையும் | 304 |
| நடுவின்றி | 171 |
| நத்தம்போல் | 235 |
| நயனில சொல்லினுஞ் | 197 |
| நயனில னென்பது | 193 |
| நய னீன்று | 97 |
| நயனுடையான் | 219 |
| நயன்சாரா | 194 |
| நலக்குரியார் | 149 |
| நல்லவை | 375 |
| நல்லா றெனப்படுவ | 324 |
| நல்லா றெனினுங் | 222 |
| நல்லாற்றான் | 242 |
| நன்றாகு மாக்கம் | 328 |
| நன்றாங்கால் | 379 |
| நன்றிக்கு | 138 |
| நன்றி மறப்பது | 108 |
| நன்றே தரினும் | 113 |
| நாச்செற்று | 335 |
| நாளென | 334 |
| நில்லாதவற்றை | 331 |
| நிலவரை நீள்புகழ் | 234 |
| நிலையஞ்சி | 325 |
| நிலையின் றிரியா | 124 |
| நிறைமொழி | 28 |
| நிறையுடைமை | 154 |
| நீரின் றமையா | 20 |
| நுண்ணிய | 373 |
| நெஞ்சின் துறவார் | 276 |
| நெடுங்கடலும் | 17 |
| நெருந லுளனொருவன் | 336 |
| நோயெல்லா | 320 |
| பகச்சொல்லிக் | 187 |
| பகுத்துண்டு | 322 |
| பகைபாவம் | 146 |
| படுபயன் | 172 |
| படைகொண்டார் | 253 |
| பணிவுடையன் | 95 |
| பயன்மரம் | 216 |
| பயன்றூக்கார் | 103 |
| பயனில்சொல் | 196 |
| பயனில பல்லார் | 192 |
| பரிந்தோம்பிக் காக்க | 132 |
| பரிந்தோம்பிப் பற் | 88 |
| பரியினு மாகாவாம் | 376 |
| பல்லார் முனியப் | 191 |
| பழியஞ்சிப் | 44 |
| பற்றற்ற கண்ணே | 349 |
| பற்றற்றேம் | 275 |
| பற்றி விடாஅ | 347 |
| பற்றுக பற்றற்றான் | 350 |
| பாத்தூண் | 227 |
| பிறப்பென்னும் | 358 |
| பிறர்க்கின்னா | 319 |
| பிறவிப் பெருங்கடல் | 10 |
| பிறன்பழி | 186 |
| பிறன்பொருளான் | 141 |
| பிறன்மனை | 148 |
| புகழ்பட | 237 |
| புகழ்புரிந் | 59 |
| புக்கி லமைந்தின்று | 340 |
| புத்தே ளுலகத்தும் | 213 |
| புறங்குன்றி | 277 |
| புறங்கூறிப் | 183 |
| புறத்துறுப் | 79 |
| புறந்தூய்மை | 298 |
| பெண்ணின் | 54 |
| பெற்றான் | 58 |
| பெறுமவற்றுள் | 61 |
| பேதைப் படுக்கும் | 372 |
| பொய்ம்மையும் | 292 |
| பொய்யாமை பொய்யாமை | 297 |
| பொய்யாமை யன்ன | 296 |
| பொருடீர்ந்த | 199 |
| பொருணீங்கிப் | 246 |
| பொருளல்லவற்றைப் | 351 |
| பொருளற்றார் | 248 |
| பொருளாட்சி | 252 |
| பொறிவாயில் | 6 |
| பொறுத்த லிறப்பினை | 152 |
| மகன்றந்தைக் | 70 |
| மக்கண்மெய் | 65 |
| மங்கலமென்ப | 60 |

| | |
|---|---|
| மருந்தாகித் | 217 |
| மலர்மிசை | 3 |
| மழித்தலும் நீட்டலும் | 280 |
| மற்றுந் தொடர்ப்பா | 345 |
| மறத்தல் வெகுளியை | 303 |
| மறந்தும் பிறன்கேடு | 204 |
| மறப்பினும் | 134 |
| மறவற்க மாசற்றார் | 106 |
| மன்னுயி ரோம்பி | 244 |
| மனத்தது மாசாக | 278 |
| மனத்துக்கண் | 34 |
| மனத்தொடு | 295 |
| மனைத்தக்க | 51 |
| மனைமாட்சி | 52 |
| மிகுதியான் | 158 |
| முகத்தானமர்ந்தினிது | 93 |
| மோப்பக் குழையும் | 90 |
| யாகாவா ராயினும் | 127 |
| யாதனின் யாதனின் | 341 |
| யாமெய்யாக் | 300 |
| யானென தென்னுஞ் | 346 |
| வகுத்தான் | 377 |
| வசையிலா | 239 |
| வசையென்ப | 238 |
| வசையொழிய | 240 |
| வஞ்ச மனத்தான் | 271 |
| வருவிருந்து | 83 |
| வலியார்முன் | 250 |
| வலியினிலைமை | 273 |
| வறியார்க்கொன் | 221 |
| வாணிகம் செய் | 120 |
| வாய்மையெனப் | 291 |
| வானின் றுலகம் | 11 |
| வானுயர் தோற்றம் | 272 |
| விசும்பின் றுளிவீழின் | 16 |
| விண் ணின்று | 13 |
| வித்து மிடல்வேண்டுங் | 85 |
| விருந்து புறத்ததாத் | 82 |
| விழுப்பேற்றின் | 162 |
| விளிந்தாரின் | 143 |
| வீழ்நாள் படாஅமை | 38 |
| வேண்டற்க | 177 |
| வேண்டாமை | 363 |
| வேண்டிய | 265 |
| வேண்டினுண் | 342 |
| வேண்டுங்கால் | 362 |
| வேண்டுதல்வேண் | 4 |
| வையத்துள் | 50 |